Y15 (RA15) · W.F.
N33
220877

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்.

ஸ் தி ரீ

# பக்த லீலாம்ருதம்

என்னும் = ஐம்பது

# பதிவிரதைகள்

## சரித்திரம்.

ஸ்ரீமான்: கோரக்கோட்டை,
ப. வடிவேலு செட்டியார்
அவர்களால்
எழுதப்பட்டு,

பூவிருந்தவல்லி,
பி. எஸ். டி. எம். அண்டு, சன்
தமது
சென்னை, சுந்தரவிலாசம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1938

இதன் விலை] ரிஜிஸ்தர் காப்பிரைட். [ரூபா 1-8

715(R415)WX
1133

விலாசம்:—
பூ. து. மாசிலாமணி முதலியார்,
ப்ரொப்ரைட்டர்
சுந்தரவிலாசம் பிரஸ்,
25, வல்லம்பங்காருசெட்டி தெரு,
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

3172
894.8113
220877

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்திரீ பக்த லீலாம்ருதம் என்னும் ஐம்பது பதிவிரதைகள் சரித்திரம்.

## பதிவிரதா துதி.

விளங்க ருந்ததி மேனை சதீயுட்
னெங்கு சாவித் திரிபதா ரூபைநற்
களங்க மற்றதோர் கற்புடை பாவொடு
உளம்பொ ருந்தி யிசர்சொல வொண்ணுமே.

## 1. அருந்ததி சரித்திரம்.

அருந்ததி என்னும் கற்புக்கரசி யாகிய பதிவிரதா சிரோன்மணி என்பவள், மஹா தபசிரேஷ்டராகவும், சப்தரிஷிகளில் ஒருவராகவும், திரிகால ஞான சம்பன்னராகவும், ஸ்ரீராமபிரானுக்கு குரு மூர்த்தியாகவும், எல்லாம் வல்ல இறைவனுக்கு ஒப்பிடக்கூடியவராகவும் விளங்கும் குருமுனி என்னும் வசிஷ்டருடைய பத்னியாகும், இவ்வம்மையாரைப் புகழாதார், போற்றாதார் திரிலோகங்களில் ஒருவருமேயில்லை. இவளது கற்பை சொல்ல

வதற்கு ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் ஆகாது. உலகவாழ்க்கைக்கும் பிறஜோற்பத்திக்கும், இகபர சாதனத்திற்கும் ஏதுவாகிய சதிபதி வாழ்க்கை நிர்தாரணத்திற்கு இந்த சற்பரசியே முதன் சான்றாகும் என்பது உலகின்கண் கரதலா கமலம் போல் விளங்குவதாகும்.

கொழுநனுண்டபின் றானுகர் கொள்கையும்
விழிதுயின்றபின் றுஞ்சலுமென்றுயில்
எழுதற்குமுன் னெழுதலுமேயன்றோ
பழுதில் கற்புடை பாவையர் செய்கையே.
ஏதிலான்றனெழில்கண் டுவப்பவள்
பேதுசெய்துழல் பேயுறு வெய்தவாள்
காதலன்பசிக் கச்சலித் துண்பவள்
பாதகஞ்செயும் பன்றியின் றேன்றுவாள்.

என்ற கற்பிலக்கணத்துக்கு மாறுபடாது தன்னாயகனோடு ஒழுகிவரு நாளில், தனது சதியின் மனத்தை ஆராய வேண்டிக் கருதி, ஒருநாள் வசிஷ்டர் தன்பத்தினியை நோக்கி, பெண்ணரசி! நான் தற்போது மானுஷ்ய சஞ்சாரமில்லாத ஆரண்யம் போக வேண்டுமென்றார். அவ்வார்த்தைக்கு கனவிலும் மறுத்தல் நினைவைக் கொள்ளாத அருந்ததி, நாயகனை வணங்கி, என் ஆருயிர்க் காதலா! என்னை ஆட்கொண்ட அண்ணலே! தேவரீர் சித்தத்தின்படியே என் சித்தமுமாகும் என்று சொல்லி, அவளும் அவருடன் பின் செல்லலாகி, சதிபதி சகிதமாய் ஒரு பெரிய ஆரண்யத்தினுள்ளே நுழைந்தார்கள்.

ஒன்றுமே யில்லாத வெட்டவெளி ஆரண்யத்தின், அருமையாகத் தோன்றிய ஒரு தடாகத்தையும், அருகிலிருந்த ஒரு நாவல் மரத்தையும் கை ஜாடையாக சுட்டிக் காட்டி தான் தவத்தில் அமர்ந்துவிட்டார். உடனே



அருந்ததியார், "கொழுநன் சொற்கடவாதுறை கோள்ளையே" என்ற சத்தியவாக்கியத்தை மனத்திலிருத்தி, நாயகன் கட்டளைப்படி மரத்திலிருக்கும் நாவல் பழத்தைத் தின்பதும், தடாகத்திலுள்ள ஜலத்தை அருந்துவதும், அந்த நாவல் மரத்தடியிலேயே தங்குமிடமாகவும் நல்லாசிரமமாகவும் ஏற்று வீற்றிருந்தாள். இவ்வாறு பன்னிரண்டு வருஷம் பேரானந்த தவத்திலிருந்து எழுந்து, தனது பத்தினியின் நடைநொடி குறைவற இருக்கை சம்பவங்களை மனதாரத் தெரிந்து, சந்தோஷமுண்டாகி, இவளது கற்பின் லக்ஷணமும், பராக்கிரமவெற்றியும், சர்வசக்தியும் உலகில் நீடூழி விளங்கக்கடவதென ஆசீர்வதித்து முன் தேவதேவர்கள் வேண்டுகோட்படி, சப்தரிஷிகளும் சப்த மாதர்களோடு, ஸ்ரீ குமாரஸ்வாமி உற்பவ யாகத்திற்கு வரும் சம்பவத்தில் வந்து சேர்ந்தார்கள்.

அவ்விடத்தில் வஜ்ஜிரபாணி முதலிய யாவரும் அசுரருடைய வருத்தங்களை சகிக்க மாட்டாமல் துயரங்கொண்டிருக்கு நாளில், இந்திரனும் சப்தரிஷிகளும் கூடி சத்ருஜெய சாந்தி யென்றொரு யாகஞ் செய்யும்படி யோசித்துத் துவக்கினார்கள். அக்காலையிற் சகல தேவர்களும் மற்ற யாவர்களும் நெருங்கியிருந்து யாகம் நடாத்தி, சப்தரிஷிகளுடைய பத்தினி மார்கள் கைகளினால் அவிர்ப்பாகம் அக்கினி தேவனுக்குத் திருப்தி செய்து வைக்கும்போது, அவ்வக்கினி தேவன், அந்த ரிஷிபத்தினிகளுடைய சுந்தரங்களை நோக்கி நொந்து, அக்காலத்திலவர்கள் கையைத் தொடப் பயந்திருந்து, பூர்ணாகுதி நிறைவேறியவுடனே விடை பெற்றுக்கொண்டு, ஒரு பூங்காவனத்திற் போயிருந்து, மன்மத விரகத்தினால் வாடி மெலிந்து, வருந்தி இருந்தான்.

அக்குறிப்பை அக்கினிதேவன் மனைவியான சுவாகா தேவியறிந்துக் கொண்டு, சப்த ரிஷிகளின் பத்தினிகளில் ஒருத்தியைப்போல் உருவமெடுத்து வந்து, அவனெதிரில் மறைதலும் காணப்படலும் இப்படியாக யிருந்து மையலூட்டினள். அதைக்கண்ட அக்கினிதேவன் அதிவேகமாக எழுந்து எதிர்நோக்கி, ஏது இவ்வளவுதூரம் தயைபுரிந்து வந்ததென்று வினவினான். அதற்கந்த ஸ்திரீயானவள் சொல்லுகிறாள். ஓ அனற் கடவுளே! யாகத்தில் அவிர்ப்பாகங் கொடுக்கும் போது உம்மைக் கண்டோம், மோகங் கொண்டோம். ஆகையால் உம்மைக் கூடிக் காமந் தீர்த்துக் கொள்ள வேண்டியான் வந்தேன். மற்ற ஸ்திரீகளும் வருவார்கள். நீர் இவ்விடம் விட்டு நீங்காதிரும். என்று சொல்லினவளாய், உடனே அவ்வக்கினி பகவானிடத்திற் தோய்ந்து, விளையாடி, அவனுடைய மோகத்தைத் தீர்த்து, மகிழ்ச்சி கொண்டு, விடை பெற்று சென்று, அந்த வனத்திற்குப் பக்கத்திலிருக்கும் ஓர் நதியினிடத்தில், அந்த வீரியத்தைக் கொண்டு போய்விடுத்து, ஸ்நானஞ் செய்து, மீட்டும் வேறொரு ரிஷி பத்தினி போல் உருவமெடுத்து வந்து கலந்திருந்தாள்.

இந்தப் பிரகாரம் ஆறு ரிஷிபத்தினிகளைப் போலவும் வந்து கூடி, ஏழாவது வசிஷ்டருடைய பத்தினி அருந்ததியைப் போல் வடிவமெடுக்கப் பார்த்தாள். அப்போது அந்த சுவாகா தேவிக்குக் கூடாமையால் வருத்தமுற்று, முதல் வந்த ஸ்திரீயைப் போலவே வந்தாள். அதைக் கண்ட அக்கினிதேவன், என்ன நீதானே மறுபடியும் வந்தாய்? அருந்ததி எங்கே யென்றான் உடனே அவள் நகைத்துப் பாத கமலங்களில் வணங்கி, தன்னுடைய நிஜ உருவத்தைக் காட்டி நின்றாள்.



அப்படி நின்றவளைக் கண்டு அக்கினிதேவன் வெட்கமுற்று, நாம் சப்தரிஷி பத்தினிமார்களின் பேரில் மோகங்கொண்ட செய்தி கேட்டு நமது பத்தினியே மாறுவேடம் பூண்டு வந்தாளோ? என்னமோ? இதற்கெப்படியென்று அக்கினி பகவான் பயந்திருக்கையில், சுவாகா தேவி அக்கினியை நோக்கி, என்னைக் கண்டவுடனே அருந்ததியெங்கே யென்றும், மறுபடியும் நீதானே வந்தாயென்றும், இப்படிக் கேட்ட மதிமயக்கம் என்னவென்றாள். உடனே அக்கினி தேவன் பொய் சொல்லா விரதம் பூண்டானாகையால் உண்மையைச் சொன்னான். தானும் அஃதறிந்து, வேடங் கொண்டு வந்து கூடிய விதங்களைச் சொல்லி, சப்த ரிஷி பத்தினிகளின் பேரில் உத்தமராகிய நீர் இப்படி சத்தியந் தப்பி வித்தியாசம் நினைக்கப்படுமோவென்று சொன்னாள். அதைக் கேட்டு நாண முற்றான். உடனே சுவாகா தேவி அவன் கொண்ட எண்ணத்திற்கு மனம் வருந்தி உபசாரஞ் செய்து, நாயகனை யழைத்துக் கொண்டு தன் மனையிற்குப் போய் மருவி வாழ்ந்திருந்தாள். இதனால் கற்புடைய ஸ்திரீகளின் சக்தியும், வெற்றியும், பழிபாவ மனுசார வண்ணமும், அருந்ததியின் கற்பும், சுவாகா தேவியின் கற்பும் நன்கு விளங்குவதாகும்.

---

## 2 = சாந்திலை சரித்திரம்.

அன்னை தயையு மடியாள் பணிவிடையும்
பொன்னி னொளியும் புவிபொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விரன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

தெய்வ லோகக் கற்பக விருக்ஷத்தி னிழலில் விநோத வேடிக்கை யாகப் பாக்கிய பொக்கிஷ மென்ன வீற்றிருந்த சாந்திலை யென்னும் பதிவிரதா ஸ்திரீ யானவளை, பூமியிற் சிறந்த பொன் மலைப் பக்கத்தில் வாசம் பண்ணுங் கைகை என்கிற கற்புடைய ஸ்திரீயானவள் கண்டு, அந்த சாந்திலையினுடைய நன்னெறியை உட்கொண்டு முன்னடி வணங்கி அம்மா! நீர் புண்ணிய போகம் பெற்று கண்ணியமா யிருப்பது என்னத்தினாலே? அந்த விபரத்தை யெனக்குச் சொல்ல வேண்டு மென்று விளம்பினாள்.

அதற்குச் சாந்திலை கைகையை நோக்கி அம்மா கைகையே! எனக்கு இப்பேர்ப்பட்டகதி எப்படி வந்த தென்றால்? பதிவிரதா தர்மத்தினால் வந்தது. மகத்துவ முள்ள பதிவிரதா தர்மத்தின் வரலாறு எப்படி யெனில், நான் எனது மாமியாருக்கும் மாமனாருக்கும் வழிபட்டு, அன்பு பாராட்டி, நாளுக்கு நாள் அதிக மரியாதை உபசாரங்களை இயற்றி அவர்கள் ஒரு பொருளைக் கேட்கு முன்னமே விரும்பிக் கொடுத்து, அவாளுடைய பாதங்களை விளக்கி, அறுகு-அட்சதை-புஷ்பம் இவை முதலியவற்றால் பூசை செய்து, அர்ச்சித்து, தூப தீபங் காட்டி, பிரதக்ஷண நமஸ் காரம் பண்ணி, ஆசிர் வாதம் பெற்று, பாதங்களிற் சூட்டிய அட்சதை புஷ்பங்களை அவர்கள் கையால் வாங்கி சிரசின்மே லணிந்து, வணக்கம் இணக்கமாய்க் குணக்கேடின்றி யிருந்து, மரியாதை யுடன் பிணக்க மில்லாமற் சொன்னபடி கேட்டு, உண்டி முதலியதும் வேண்டிய மட்டும் பரிந்தளித்து, அவர்கள் கால் கை மேல் இவை முதலிய பக்கங்களில் நேரிட்ட வலியகளைப் பிடித்து, வஸ்திரங்கள் அழுக்கில்லாமல் அளித்து தாம்பூலத்தை நறுக்கிக் கொடுத்து, அரித்தலை-எரித்த



மூதக்கு இவை முதலிய வருத்தங் களைந்து, வயற்றிற் பிறந்த பெண் போல வாஞ்சித்து, எதிர்த்து உத்தரம் பேசாமல் பொருத்துப் புகழ்ந்து, புரா கூறு விரதம் பொருந்தி யிருந்தேன்.

மேலும் சகல புவன கர்த்தாவுக்கும், தென் புலத்தாருக்கும், விருந்து வந்த அதிதிகளுக்கும், சில்லரை யாகிய இல்லற தேவதை கட்கும், பூசை நைவேத்திய முதலிய உபசாரங்கள் பண்ணி, பல பண்ட பதார்த்தங்களும், பக்ஷண விதங்களும், பழவர்க்கங்களும், அறுசுவை உண்டியுடனளித்த, முகமலர்ந்து இனிமையுரைத்து அகமகிழ்ந்தேன். வீட்டு வேலைக்கு மிஞ்சின வேலையில்லை யாதலால் இதுவே பிரதான மென்றெண்ணி தேக வருத்தம் சோம்பல் - தூக்கம் - இளைப்பு - ஆயாசம் - இன்பம் - துன்பம் - எதுவும் பாராமல், இரவும் பகலும் எமாறாமல், என் வீட்டு வேலையை இன்னொருத்தர் கையில் கொடாமல் என்னால் இயன்ற மாத்திரஞ் செய்வேன்.

மேலும், அவ்வீடு - வாசல் - திண்ணை - தெருப்புற முதலிய இடங்களில், எச்சல் - துப்பல் - ஈளை - தூசு - தும்பு - குப்பை - கூள மிராமல் விளக்கி, பசுவின் சாணத்தால் சமமாய் மெழுகி கோல மிட்டு, வாசற் காலுக்கு விபூதி தொட்டு, குங்குமம் பொட்டிட்டு, பூமாலை கோர்த்திட்டு, மாவிலை ஆர்த்திட்டு, பார்த்த பேர் யாவரும் என்ன லக்ஷ்மீகரமா யிருக்கிற தென்று சொல்லும் படிக்குப் பரிசுத்தப் படுத்துவேன்.

வீண் பேச்சுகளும், பிறரேச்சுகளும் பேசேன். விருதா மனிதருடன் உறவாடேன். காலை நீட்டிக் கொண்டு கதை காரணம் பேசி, அம்மனை - கழங்கு -

பண்ணமாங்குழி யாடி, வந்த பேர்களைப் போகிறபேர்களை உட்கார வைத்துக் கொண்டு வின்னுனம் மீட்டி, வீணை யிப் டப்பங் காட்டி, புருஷன் - மாமனார் - மாமியார் - பிள்ளைகள் இவர்கள் செத்தால் அழுகிறதற்கான பாட்டை ஆராய்ந்து கற்று, சுப சோபனாதிகளுக்குச் சொல்லும் படியாகிய மங்கள லாலிகளைக் கூறி புலந்திரன் தூது அல்லியரசாணி மாலை, நல்ல தங்காள் கதை - இப்பேர் பட்ட சில்லரைச் சரித்திரத்தைக் கேட்டு, இந்நீட்டுப் பாட்டுக்கு வீட்டிலுள்ள அரிசி - மிளகு - மிளகாய் - உப்பு புளி - சாறு - சோறு துணி மணிகளைக் கொடுத்து, பாவ லிடத்தும் சிரித்து விளையாடி, ஓகோடியமான வார்த்தைகளாடி, ஒருகு கொண்டை சொருகு கொண்டை போட்டு, அதில் மலர் மாலை சூட்டி, அந்தக் கொண்டை சரிய தன்னொத்த பெண்கள் தோளின் பேரிற் சாய்ந்து, உரிய ஆண் மகனில்லாத போது அலங் கோலமாய் ஆடிப் பாடி புகையிலை - பாக்கு - வெற்றிலை இவைகளை ஒருவருக் கொருவர் மாற்றி பூசி மேலேற்றி எமாற்றி, ஊருப்பேச்சு நாட்டும் பேச்சு ஒருவனைவிட் டொருவனை தொடரும் எச்சு - இவைகளைப் பேசிக் கொண்டு பெருமூச்சு விட்டுத் தூங்கி, வீட்டு வேலையை வேலைக்காரர் - வேலைக் காரிகள் - வெள்ளாட்டிகள்-வேறு யியர்-இவர்களையும் பார்க்கச் சொல்லி, ஆக்கச் சொல்லி, சுசி முதலியவை யில்லாமல், பண்டம் போவது வருவது தெரியாமல், பறவா பண்ணாமல், புருடன் முதலிய பேர்கள் வந்தால் வேலைக்காரியைக் கூவிச் சோறு போறு போட்டு வட்டியென்று சொல்லி, தாங்கள் அண்டை அசலுக்கும் போகிற பெண்களாகிய வண்டர்களைப் போல என்னுயி ரொழிந்தாலும் உடலழிந்தாலும் ஒருக்காலும் இப்படிக் கெல்லாம் நடக்க மாட்டேன்.



எனக்குத் தெய்வ ஸ்தலம், தேவாதிகளுலகம், குருவாச்சிரமம், மோட்ச வீடு யிவை யெல்லாம் நானிருக்குங் குடிசை தான். இதைவிட வேறே யிடம் போயறியேன். சர்வேஸ்வரன் நம்மை இல்லற மங்கையாக ஏர்படுத்தி வீடு தேடி வந்த அதிதி பிதுர்க்கள் இவர்களுக்கு உபசரியென்றும், பத்தாவுக்கு ஊழியப் பணிவிடை புரிந்திருக்க வென்றும், இவ்வாழ்க்கையிலிருந்தே கடைத்தேறென்றும் விதித்தது, அப்பால் மோட்ச வீட்டை யளிப்பதற்கு அடையாளமாக வல்லவோ? ஆதலால் இந்த குடிசை வீட்டைக் கோகனக புரமாயுன்னி, நமக்குக் கோவில் ஸ்தலம்-குளம்-தருமம் இவை யெல்லாம் வீட்டைச் சுத்தி செய்து ஆசாரமாய் வைத்திருந்தால், அதுவே அவை யெல்லாமா யிருக்குமென்றெண்ணிச் சந்தோஷித் திருப்பேன்.

நான் கலியாணஞ் செய்துக் கொண்டு மாமியார் வீட்டுக்கு வந்த பிற்பாடு தெருவாசற்படியிற் போய் நின்றறியேன். என் புருஷனும் என் பெரியோர்களும் தவிர அயல் புருஷருடனும் பூவையருடனும் அண்டிப் பேசியிருக்க மாட்டேன்.

உதயத்திற்கு முன்னெழுந்து மலசலாதிகள் கழித்து தந்த சுத்தி செய்து, நாக்குவழித்து, வாய் கொப்பளித்து, தெருவாசல் வீடெல்லாம் திருத்திப் பெருக்கி, மெழுகி மொக்கிட்டு, பாத்திரம் சுத்திபண்ணி வைத்து, விழுப்பாகிய பாண்டங்களை விலக்கி, ஸ்நான மாடி, நித்திய விதி நேமங்கூடி, சூரிய நமஸ்காரஞ் செய்து, சன்வா பூசை முடித்து, இஷ்ட தெய்வமாகிய நாயகனது படுக்கை வீட்டினிற் புகுந்து, அவரது நித்திரையை நீக்கி, அவருக்கு நடத்த வேண்டிய உபசாரங்களெல்லாம் நிறைவாகச்

செய்து, அவரனுஷ்டிப்பான வுடனே பத்திரம்-புட்பம்-ஜலம்-அறுகு-அச்சதை-தூபதீபம் - நைவேத்தியம் இவைகளை எடுத்துப் போய் மாமி மாமனுரை யெழுப்பி, அவர்களுக் கிருமல வுபாதி நடத்தி, பல் விளக்க வைத்து, ஆசன மமைத்து, அதன் மேலிருத்தி, நான் ஜலம் விடவும், என் புருஷன் அவர்கள் பாதத்தைத் துலக்கிப் பத்திர புஷ்பஞ் சாற்றவும், நான் தூப தீப மேற்றவும், என் புருஷன் நைவேத்தியம் வைத்து நீர் மாற்றவும், பின் நாங்களிருவரும் போற்றவும், அவர்கள் எங்களை வாழ்த்தவுமான பின்பு, ஈசனுற் கிடைத்திருக்கின்ற வஸ்துவைப் பக்குவப் படுத்தி, அவர்கள் வாய்க்கு ருசியாய்க் கொடுத்து விட்டு, பிற்பாடு கணவனுக்குப் போஜன மிட்டுத் தாம்பூலந்தந்து, அவர் வெளியே போகிறவரைக்கும் அவரை விட்டு நீங்காமல் ஆலவட்ட முதலிய ஆதரவை பண்ணிக் கொண்டிருப்பேன்.

இவ்வித உபசாரங்களெல்லாம் முடிந்து எனது நாயகன் அலுவற் காரியத்திற்குப் போன அப்போதே, வந்திருக்கின்ற அதிதிகளுக்குப் பூசை புரிந்து, பணிவிடைப் பற்றி, பால்-தயிர்-பாயசம்-பொரியல்-பற்பல பண்டங்கள் இவைகளை வஞ்சனை நினையாமல் அன்னத்தோடு வைத்து உண்பித்து, பின்பு பசுக்கள் முதலியவற்றிற்குக் குளிர்ப் பாட்டி குங்கும மிட்டு, நீருடன் புல்லருத்தி, ஆலயங்களுக்கு அபிஷேகப் பால் வார்த்து விட்டு, உறவினருக்குபசரித்து, நானும் புசித்து, வேலைக்காரரும் என்னைப் போற் சாப்பிடும்படியாக விதரணையாய் விசாரித்து, வீட்டு வேலைகளை யெல்லாம் நிதானித்து, எந்தெந்த சாமான்க ளில்லையோ? அவைகளை ஆண்பிள்ளைக்கு அறிவிக்காமற் சேகரித்து, வருவாரும் போவாரும் கேட்ட கேள்விக்குத்



திருந்த வார்த்தை யுரைத்து, வம்பு வசனங்களுக்கிடங் கொடுக்காமல் மறந்து, அரைக்கண மேனும் சோம்பலில்லாம லுழந்து, எந்த விதத்தில் விழுப்பு வந்தாலும் உடனே ஆசுச ஸ்நானம் பண்ணுவேன்.

அமுதுக்கு வந்த பெரியோர்களைக் கண்டு அகாலமென்று சொல்லாமல் அப்போதே சமையற் செய்து, அரை நொடிக்குள் பசியாற்றிப் போற்றுவேன். எத்தனை பேர் அமுதுக்கு வந்தாலுஞ் சற்றேனு மனமிளைக்கேன். எனக்கும் என்றுணைவனுக்கும் வேண்டுமென்று ஒரு பதார்த்த மாகிலும் மறைத்து வைக்காமல் எதார்த்தமாய்ப் படைப்பேன். எப்படிக்குயர்ந்த அருமை பெற்ற பழமுதலிய வஸ்துக்களானாலும் மைப்படியுங் கண்ணொத்த நண்பருக்கு வழங்குவேன், என் கணவனே தெய்வமென்று கனவிலும் மறவாமல் வழிபடுவேன். அவருடைய சொல்லுக்கு மல்லுகட்டி வார்த்தையாடேன். அவரது தம்பி-தமையன் முதலிய சுற்றத்தாரு மற்றகத்தத்தாரும் நன்மை கொண்டாடத் தக்கதா யிருப்பேன். அவர்களை தாட்சியில்லாமல் விசாரிப்பேன். முன்முறணி பின்பொறணி கூறேன். இவ்விடத்திற் பேச்சு அவ்விடத்திலும் அவ்விடத்துப் பேச்சு இவ்விடத்திலுமாகக் கோட் சொல்லிக் கலகம் விளைக்கேன். பெற்றாருக்கும் பிறர்தாருக்குஞ் சண்டை யுண்டாக்கேன். பொறாமைப் படேன். பொய் பேசேன். விறுசை கொள்ளேன். வீட்டுடைமை ஒருவருக்கு வீணிற் கொடுக்கேன் செல்விருந்து வருவிருந்து பார்த்துச் சிவன் முத்தரைச் சிந்தித்துக் கொண்டிருப்பேன். சொல்லுவார் பேச்சைக் கேட்டு மல்லுக்குப் போகேன்.

என் சாமிக்கும்-மாமிக்கும் - மாமனுக்கும் - வேண்டிய பதார்த்தங்களை விரும்பித் தேடிக் கொணர்ந்து, பாகமாகச் சமைத்து, பக்குவமாகப் பருப்பேன், அப்படி பருக்கும் போது ருசியான பதார்த்தங்களை வாய்மலர்ந்து கேட்கு முன்னமே தாய் பரிந்தூட்டுந் தன்மைபோலளிப்பேன். என் நாயகனுக்கு ஊழியஞ் செய்கிற பணிவிடையாளரைப் பட்சமுள்ள பிள்ளை போல் ரட்சிப்பேன்.

இவையன்றியும், என் கணவன் வீடு விட்டு வேலை நிமித்தம் வேறூருக்குப் போயிருந்தால், அவர் வருகிற பரியந்தஞ் சந்தன புஷ்ப பரிமளாதிகளை விரும்பேன், மஞ்சள் குங்கும தாம்பூலாதிகளைப் பொருந்தேன். தலை சீவிக் கொண்டையிட்டுக் கொள்ள மாட்டேன், பூஷணாலங்கிருதம் பொருந்தேன். நல்ல வஸ்திரம் முடுக்கேன். ஊருக்குப் போனவர் வந்தபிறகு இத்யாதி அலங்காரத்துடன் எதிர் நின்று, அவர் கண்டு களிக்க கலந்து இன்பம் பெறுவேன்.

உள்ளூரில் வெளியே போயிருந்து வீட்டுக்கு வரும் என் காதலனைக் காணுமளவும் நான் முந்திச் சாப்பிட மாட்டேன். இலையில் அன்னத்தைப் படைத்து விட்டு உப்பில்லை ஊறுகாயில்லை மிளகில்லை - மிளகாயில்லை - புளியில்லை-பூண்டில்லை-அரிசிகட்டை விறட்டி ஒன்றுமில்லையென்று முன்னின்று, மிடற்றைப் பிடிக்கின்றாற் போற் சொல்ல மாட்டேன். தாம்பூலம் தரித்துக் கொண்ட சமயம் பார்த்து, நான்கு நாளைக்குச் சாமக்கிரியை இருக்கும் போதே முன்னுடிச் சொல்லிச் சாக்கிரதைப் படுத்திக் கொள்வேன், ஆண்புடையானுடைய சம்பாத்தியத்திற்குத் தக்கச் செலவு தகுந்தபடி செய்வேன்,



தாய்வீட்டுப் பட்சம் வைத்துச் சம்பாத்திய முடிப்புக்கட்டி அடிக்கடி தாய் மனைக்கேகேன். (வாழ்மனைப் பண்டம் தாய்மனைக்கேகில் தாய்மனை பாழ்மனையாகும்) என்ற வாக்கிய மறிவேன். நாயகன் மேல் நாட்டியகண்ணை மற்றொருவர் மேல் நாட்டேன். பெரியவர்களுக்குப் பேரன்புடன் பூசை புரிந்து போஜனமிடுவேன். வீட்டுப் பிரத்யேகம் வந்தால் ஒருவேளை அன்னம் உண்டு கொண்டிருப்பேன். மூன்றுநாள் ஸ்நானம்பண்ணி புறம்பிலிருந்து நான்கா நாள் நதியாதியில் ஸ்நானம் பண்ணி, ஐந்தா நாள் எண்ணெயிட்டு முழுகி, வீட்டைக்கோசல கோமயத்தாற் சுத்தி பண்ணி, பஞ்ச கவ்வியங்கட்டி புண்டு, அப்பாற் புருஷன் முகத்தில் விழிப்பேன். அவருடன் பேசுவேன். மாதருதுவான மூன்று நாளும் மகிழ்நன் முகத்தில் விழித்தாலும் பேசினாலும் மங்கிலியத்திற்குக் குறைவு வரும். வீடு தூரஸ்திரியின் காற்றும். நிழலும் - பேச்சும் - நாயகன் முதலிய நல்லோர்களின் பேரில் படலாகா. பட்டால் புருடனுக்கு ஆயுள் குன்றிப்போம். நல்லோர்களும் சபிப்பார்கள். கைவிலக்கமான காலத்தில் வாக்கினுற் பேசாமல் கைச்சாடைக் காட்டி வேண்டிய காரியம் பெற்றுக் கொள்வேன். ஆறுமுதலிய குளங்களானுல் ஒருவரைத் தண்ணீர் மொண்டுவரச் சொல்லிக் கரைமேலிருந்து ஸ்நானம் பண்ணி, பிற்பாடு கோசல கோமய சுத்தியால் அவற்றிலிறங்கி, மறைத்துவ கங்காநதியை நினைத்து முழுகுவேன். ஒருவர் முகத்திலும் விழியாமல் நாயகன் முகத்தில் விழித்தால், ஆயிச விருத்தியும் ஐஸ்வரியமுமுண்டாம். அருமருந் தன்ன பிள்ளைகளையும் பெற்றுக் கொள்ளலாம். ஒரு வேளை புருஷன் ஊரிலில்லா விட்டால்; நாயகனுடைய ரூபத்தை மனதினில் நாட்டி, சந்திரனை போட்டி, சூரியனைக் குறித்துத் தரிசிக்க வேண்டும்,

அப்பாற் பூஜாவிதிகளிலும், புருஷன் பணிவிடைகளி லிருந்து பொழுது போக்குவேன் வயற்றிற் பிறந்த பிள்ளை யானாலும், எழுவயதிற்கு மேற் பட்டவரை முகா லம்பனம் பண்ணிப் பேச மாட்டேன். முந்தாணியை அக்கினிக் கோட்டைக் காவலாய்க் கொண்டு, முழுமதி யொடுங் கற்புடைமையாகிய பொக்கிஷத்தைக் காப்பேன். பதிவிரதா பூஷண மிருந்தால் திரிமூர்த்திகளும் மதித்துத் துதிப்பார்கள்.

புருஷன் தன்னுடைய சம்பாத்தியத்தைப் பெண்ஜாதி யிடத்திற் கொடுத்து, இருவருங் கலந்து, ஒரு மனதாய்ப் பொருந்தி, சமூக விசார நடத்தி வரும் போது, அந்த ஸ்திரீயானதள் இப்பேர்பட்ட கணவனை தெய்வ மென் றெண்ணாமல் வஞ்சிக்க லாகாது. அவனுக்கு மிஞ்சின தெய்வ மில்லை, மாதா - பிதா - குரு - தெய்வம், என்று சொல்லப் பட்ட பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாம் புரு ஷனே.

ஈஸ்வரன் பேதமையாகிய பெண்களைச் சிருஷ்டித்த தற்குக் காரண மென்ன வெனில், மணவராகிய கணவருக் குப் பணிவிடை செய்யவும், லோக விருத்திக்குச் சந்ததி யுற்பத்தியாகவு மேற்படுத்தியது. பின்னும் இல்லற தரு மத்திற்கும், தென்புலத்தார் - தெய்வம் - விருந்து - ஒக் கல் - அதிதி பூஜை; அக்கினி ஹோத்திரம் - இவை முதலி யன நடத்துவதற்கு முண்டாக்கினர். எந்த வேளையும் காமக் கலவியும், ஆபரண வஸ்திர அலங்காரங்களும் - மேனி மினுக்குதலும் பண்ணிக் கொண்டு, தாம்பூலந் தரித்து, விண்ணணம் பேசி, வேடிக்கையா யிருப்பதற்கு ஏற்படுத்தியதில்லை. ஒரு வேளை புருஷனுக்குக் காமம் பிரதான மாய் விருப்ப மிருந்து ஆசைப்பட்டு ஸ்திரீயுடன்



ஜாடை சரசம் பேசி விளையாடினால், அவன் மனது எந்த மட்டும் விருப்பமோ? அந்த மட்டும் ஏக பரவசமாய்ப் பொருந்தி, ஒரு தலைக் காம மில்லாமல் சமபோக மாக இடங் கொடுத்து, இருவரும் பரவச மடைந்து, கை-கால் வாய் - சுத்தி செய்து, தாகமருந்தி, தாம்பூலம் பொருந்தி, தடையுடன் நித்திரைப் பண்ணி, உதயத்தி லெழுந்து, ஸ்நான முதலிய விதிமுறை புரிந்து, வீட்டு வேலையைப் பார்த்து, சீக்கிரம் சமையற் செய்து காதலனுக்கு அருந்தி வைக்க வேண்டும். இரவில் சரசமா யிருந்ததை நினைத்து இறுமாப் படைந்து, மரியாதை தப்பி இன்ப ரசத்தைப் போக்கடித்துக் கொள்ளலாகாது புருஷனுக்கு காம இச்சை யில்லா திருந்தால் ஸ்திரியானவள் மேல் விழுந்து போராடப் படாது. சொர்ப்பனத்திலுங் காமத்தைக் கருதக் கூடாது. அப்படிக் கில்லாமல், அறத்தின் வழி யில்லாமல், நாயகனை மதியாமல், மனதை போன வழி விட்டு, மகிழ்நனை வஞ்சித்து, மனக்காவல் - முன்தானைக் காவல் - வம்சாசாரக் காவல் - இவைகளை மறந்து, நல்ல வள் போலிருந்து, நடை கொடி பாவனை புரிந்து, ரகஸி யத்திற் சோரத்துவம் பண்ணுவாளாகில், அவள் மகா கொடிய பாவியாவான்.

துஷ்ட நடத்தையுள்ள கெட்டவளாவாள். பகலை யிருளென்ற பழிகாரியாவாள் அவளிருக்கும் வீடு பாளி யிருக்குங்காடு, இருட்டு நிலம், திருட்டு குலம், களர்ப்பூமி, அழற்பாறை, கடுவிஷம், கல்லாக் கயவர் மனம் ஆகிய இவைகளுக்குச் சமானம்.

இவை யெல்லாமலும், மும்மூர்த்திகள் - நவக்கிரகங் கள், வெகுஜனங்கள்-புரோகிதர்-இவர்கள் முன்னிலையில்

அக்கினி - கங்கை - நவதானியம் - ஆல்-அரசு - முருக்கு- திருவிளக்கு - தாம்பூலம் - மஞ்சள் - அட்சதை இவைகள் முதலியனவுஞ் சாட்சியாய், தாய்தந்தை நீர் வார்த்துக் கொடுக்க, அதைப் பிரமாணமாகப் பெற்றுக் கொண்டு, அவன்கழுத்தில் நீ என்னும் பொருளைத் தரும் படியான தாலி என்னும் பெயருடைய முத்திரையைத் தரித்து, கை கொடுத்தெழும்பி, அஷ்டமங்கல மெடுப்பித்து, அக்கினியை வலம் வந்து, பொரி வாரிச் சொரிந்து, பூசுரரைப் பணிந்து, அம்மி மிதித்து, அருந்ததி தரிசித்து, சிறுமனை புகுந்து, தேவரைப் பணிந்து, மணவனு மனைவியு மாகி, மகிழ்ந்து வாழ்ந்து, தேகத்திற் பாதியாளென்று இச்சை வைத்த நாயகனுக்கு சிறிதேனும் பக்தி செலுத்தாமல் இலச்சை யுண்டாக்கி, தன்னுடைய விவேகங் கெட்டு, விரதமும் விட்டு, பதிவிரதா மகத்துவத்தைப் பாழாக்கிப் போட்டு, காமத்தின் வழியே கருத்தைச் செலுத்தி, ஒருவருக்குந் தெரியா தென்றெண்ணி, இரவும் பகலும் பரபுருஷபோக சுகத்திற்றானே பத்தியுஞ் சிரத்தையுஞ் செலுத்தி, மேலுக்குப் புருஷன் பாதத்தை மூன்று காலமும் பூஜை பண்ணுகிறவற் போலிருந்து, உலக மெல்லாம் உத்தமி யென்று கொண்டாடும்படி வேஷங் காட்டி, இல்லறத்திலிருந்து கரும முதலிய தருமங்களைச் செய்யுங் கணவனுக்கு உடந்தையாகி இருவருங் கடைத்தேறுங் கதியிற் புகாமல், இவள் கெட்டதுமன்றி, இவளுக்குரிய கலியாணப் பிள்ளையையுங் கெடுத்து, சத்தியந் தப்பி, மணவாளனை வஞ்சித்து, பல பேரைப் - புணர்ந்து தேடிய பாபத்தைத் தன் மட்டிலு மனுபவியாமல் இவளை நல்லவளென்று நம்பி யிருந்த பாதிக்காரனுக்கும் பங்கிட்டு, அவன் தலைமேலு மேற்றி, இரண்டு விதத்திலும் பிரஷ்டத்துவ மாக்கிய சண்டாளியை, புருஷனுக்கு மான



ஹானி செய்து வஞ்சித்த மாபாவியை, தலைவனை தலையிறக்க வைத்த சவத்தை, கொண்டவனுயிருக்கு எமனுகச் சமைந்த கோரத்தை, இவ்விடத்தில் யாவருக்குஞ் சீ! சீ! சீ! என்றேசிக் காரித் துப்பும்படியாய் அவள் செய்த தீங்கனைத்தும் ஒன்றாய்ச் சேர்ந்து, *கை கால் குறைந்து, புண்ணோய் மிகுந்து, புழுப் புழுத்து, பூமியில் விழுந்து, பூததேகம் போய் சூட்சுமமாகிய யாதனா சரீரம் வந்து, எமபடாளிழுத்துச் சென்று, பாசம் - வேல்-கதை சுடுசரம் - இவை முதலியவற்றால் உபத்திரவம் விளைத்து, வைவச்சுத நரகத்திற்குத் தென் மேற்கிலுள்ள வன்னிக் குளத்தருகில் கொண்டு போய் மன்னிக் கட்டியிறக்கி, ஐயோ! அந்த எமபடாள் செய்யுந் தண்டனையின் கொடுமையைச் சொல்லவும் நாவெழுமோ?

இப்பேர் பட்ட துன்மார்க்கப் பெண்களை நான் கண்ணிலும் பாரேன். அவாள் பேச்சைக் காதிலுங் கேளேன். அவாளைக் கலந்து விளையாடேன். எனக்குத் தகுந்த இஷ்டமுள்ள பதிவிரதைகளுடன் ஒழுகுவேன். பழமை பாராட்டிப் பழகுவேன். இஷ்டங் கொண்டு பேசுவேன் மற்ற வேளைகளில் வீட்டு வேலைகளும் இல்லற தருமமும், பிராணனாகிய புருஷன் பணிவிடையும் பிரதான மென்று பார்ப்பேன்.

பறக்கும் பட்சிகளைக் கூண்டில் வைத்து வளர்க்க மாட்டேன். என் மாமன் - மாமி - கணவன். இவாள் வளர்த்தால் அதுகள் பசித்திருக்கப் பார்த்திரேன். பசு முதலிய மாடு கன்றுகள் பட்டினியிருக்க வொட்டேன். என் நாயகனுக்கு மனங் கோணுதலாக நடந்து எதிர்த்து வாதித்து வார்த்தை யாடேன். அவர் என்னை

அடித்துத் திட்டி உதைத்த போதிலும் அவருடைய கால் லைவாய் நோகுமே யென்று உபசரித்து, உடனே அவர் அழைத்தாலும் அழையாமற் போனாலும் ஏனென்றோடி, அவருக்குண்டான பணி விடைகளைப் பால் மாறிக்கை யில்லாமற் செய்து, என்பேரி லேற்பட்ட கோபந்தீர்ந்து இஷ்டம் வரும்படியாய் நல்ல வார்த்தைப் பேசி, அவர் தயவைத் தேடிக் கொள்ளுவேன்.

ஏழைகளாய் நொந்து போன சம்சாரிகளுக்கு என் அன்பருடன் சொல்லி, உபசாரமும் உபகாரமும் செய்வித்து அவர்களுக்கு இன்பமுண்டுபண்ணி வைப்பேன். அன்னம்-தாகம்-தாம்பூலம் - சுண்ணம் - மருந்து - ஐயம்- காதோலை - தலைக்கெண்ணெய் - இவை முதலாகிய தரும சூட்சுமங்களில் என்னாலியன்ற வரைக்கும் ஏற்பவர்களுக்களித்துப் புண்ணியஞ் சம்பாதிப்பேன். என் பிள்ளைகளுக்குக் கல்வி வருவிக்கும் விஷயத்தில் மெத்த கருத்தாய்ப் பொருத்தி வைப்பேன். இப்பேர்ப்பட்ட சத் கருமங்களெல்லாம் சர்வ ஜாக்கிரதையாகப் பண்ணி நாளுக்கு நாள் அபிவிர்த்தியாகி இந்த பாக்கியத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். இத்தகைய மஹா மஹத்துவம் பொருந்திய பதிவிரதா மகா சக்தி சந்தோஷ வைபவமெல்லாம், தாய்-தந்தை-மாமன்-மாமி-புருஷன் இவர்கள் வார்த்தைகளை கடவாது ஏற்று ஒழுகுவதாலும், ஓய்வு காலங்களில் அருந்ததி-சாவித்திரி-அநசூயா - நளாயனி- தமயந்தி-முதலிய கற்புடைய ஸ்திரீ நாயகங்களின் சரித்திரத்தை வாசித்துணருவதினாலும் நான் அனுபவிக்கப் பெற்றேன், இது போல் ஒழுகு மாதர்கள் யாவரும் பதிவிரதா சிரோமணிகளென்பதற்கு யாதொரு ஐயமில்லை. என்று சாந்திலை சொல்ல, அந்த வார்த்தையை கேட்ட



கைகையானவளுக்கு விவேகமும் ஞானமும் பிறந்து பிரதக்ஷணம் பண்ணி, அம்மா! நீர் சொன்ன எதார்த்த வார்த்தை யனைத்துஞ் சத்தியமே! என்று புகழ்ந்து கொண்டாடி, மஹா லட்சுமிக்குச் சமதையான கைகை செலவு வாங்கிக் கொண்டு, மகமேருகிரிச் சாரலிருக்கின்ற தன் வீட்டிற்குப் போயினாள்.

## 3 = தருமபத்தினிசரித்திரம்.

அருமரைமுனி யாய வத்திரி
வருநல் நாயகி வார்த்தை சொற்படி
கருமமேற்றிய காவலன்றனை
தருமபத்தினி தன்மை கற்பிதே

அத்திரி யென்றொரு பிராமணன் வேதங்களையெல்லாம் குற்றமறக் கற்றுச் சுத்த பவித்திரனாகி, உத்தமத் தருமபத்தினி யுடன் சித்தசலோலனாக வெற்றி மிகுந்த அனேகம் பிள்ளைகளைப் பெற்று, மகிழ்ந்து வாழ்ந்துற்றிருக்குநாளில், பதிசெறிந்து புத்திநிறைந்த அப்பத்தினியானவள், கற்பில் அருந்ததியும் இவளிடத்தில் அடுத்து பழக வேண்டுமென்று சொல்லும் நன் மார்க்கத்தோடு புருடனுக்கு உபசரித்து, ஒரு மொழியும் மறுத்துச் சொல்லாமல் பணிவிடை புரிந்து வருவாள்.

அப்படி வருபவளாகிய அத்தேவியை அப்பிராமணனோக்கி, பெண்ணே! எத்தனை காலம் இவ்வாழ்க்கையில் முறைமை யுற்றாலும் பற்று விடாது; மோகமறாது. மோக்ஷத்தை விரும்புமவர்கள் தவமிருந்து வருந்த வேண்

டிய தாகையால், இது வரையிலும் பெற்ற பிள்ளைகள் போத, இன்னுஞ் சில சுதரை நீ பெற வேண்டி யிருக்கின்றது. அவர்களைப் பெற்றவுடனே நான் தவஞ் செய்ய வனம் போக நாடி யிருக்கின்றேன்: ஆதலால், உன்னுடைய கருத்தென்ன? இவ்விடத்திற் பிள்ளைகளுக்குத் துணையாக இருக்கின்றையோ? அல்லது எனக்கு உபகாரஞ் செய்ய கூட வருகின்றனையோ? என்று கேட்கவே, அவரை சதியாகிய தருமபத்னி நமஸ்கரித்து, சுவாமி! தருமதேவதையே ஒருருவாக எழுந்தருளிய தென்று சொல்லுந் தேவரீரையே நித்திய பூசை - நித்திய விரதம் - நித்திய நோன்பு என்று சொல்லும் படியான இவைகளால் வரும் பயனை நம்பி தமது திருவடித் துணையைப் புணையாகப் பற்றி கரையேறக் காத்திருக்கின்ற அடியாள், இந்த வையக வாழ்வையும், இஞ்சித் போகத்தையும், காதலரையும், ஆதர வென்று நம்பித் தேவரை விட தக்கதல்ல. யாரும் மாதர் கருக்குழியில் அறுகு நுனி பனிபோலமைந்து பத்து மாதமுஞ் சென்று பூமியில் வரும்படி செய்யுங் கடவுள் ஒருவ ருண்டல்லவா? அவ் வையன் பெருமையை யாவரறிகுவார்? எவரையும் உய்யச் செய்வது தெய்வச் செயலே! இதற் கைய மில்லை. ஆதலால், யானதுகளுக்குப் பிணையல்ல. அவைகளெனக்குத் துணையல்ல அணியும் பணியும் அணையும் துணையும் தேவரீர் பொற் பாத கமலமே யன்றி வேறில்லை.

அன்றியுங் கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, தனக் குற்ற நாயகனை உண்டி முதலிய வகைகளினு லுபசரித்து, தங்களிருவ ரிடத்தும் நீங்கா நன்மை யமைந்த புகழைக் காப்பாற்றி, முன் சொல்லிய நற்குண நற் செய்கைகளிலும் மறதியில்லாம லிருப்பவளே



பெண்ணென்று நீதி கூறி யிருக்க, அப்பெண்களாயினோர் பத்தாவை விட்டுப் பிரியக் கூடுமோ? ஆதலால் தேவரீருடன் யானுந் தவசுக்கு வரத்தக்கவளே.

ஆயினும் உலகத்தோ டொத்து வாழ வேண்டு மென்றும், அப்படி யல்லாதவர்கள் பல கற்றிருந்தாலும் பிரயோஜன மில்லை யென்றுங் கூறுகின்றமை யால், தேவரீர் தபசுக்குப் போக, யானுங் கூட வந்து விட்டால், இவ்விடத்திற் பிள்ளைகள் வருந்தி துன்பப் படுவார்கள். அப்போது யாவரும் நம்மை நிந்திப்பார்கள். இப்பேர்ப்பட்ட உத்தமனே தவசுக்குப் போய் விட்ட போது நமக்கென்ன இருக்கின்றதென்று உலகமும் நாடும்.

நாம் அப்படிச் செய்யாமல், பாசபந்தங்களிற் வாழ்ந்தவர்களைப் போற் காட்டிப் பணங்கள் சேகரித்து, இந்தப் பிள்ளைகளுக்கு ஆதாரமாக வைத்துவிட்டுப் போவதே உத்தம மென்று நினைக்கின்றேன். ஆனால் தேவரீர் எங்கே பணம் சம்பாதிப்பதென்று யோசிக்க வேண்டாம், தாங்கள் நினைத்தால் கடவுளருளினால் வேண்டிய திரவியம் வரும். அதெப்படி யெனில், தைரிய மகாராஜன் அசுவமேத யாகஞ் செய்கின்றான்; அந்த ராஜனிடத்திற் சென்று திருவாய் மலர்ந் தருளுவீராகில் வேண்டிய திரவியங் கொடுப்பான். அவைகளைப் பிள்ளைகளிடத்தில் வைத்துவிட்டு, நாமிருவரும் போகலா மென்று சொல்ல, அம்மொழி தனக்கும் சம்மதமாகக் கொண்டு, தயிரிய ராஜனுடைய யாக சாலைக்குச் சென்றனர்.

இவரைக் கண்டவுடனே ராஜனெதிர் கொண்டோடி வந்து வணங்கி, உபசாரத்துட னழைத்துப் போய், உயர்ந்த ஆசனத்தி லிருத்தி, அறுகு - மலர் - அக்ஷதை - சந்தனம் - சுத்தோதங்களினால் அபிஷேகஞ் செய்து,

ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்து, தூப தீப உபசாரமுஞ் செய்து துதித்தான். அவனுக்கு உடனே இந்த அத்திரி மகரிஷியானவர் வேத மந்திரங்களினால் ஆசீர்வாதஞ் சொல்லி, சதமகனும், பிரம தேவனும், துளப மாலை யணிந்த ஸ்ரீஹரியும், வில்வ ஜடா மகுடதாரி யாகிய சிவ பெருமானும், மற்றத் தேவர்களும் ஒருருவாகக் கூடி தேவதா சரீரமாகப் பெற்ற மகா ராஜனாகிய உம்மிடத்திற்குக் கொஞ்சம் பொருள் வரக் கொண்டு வந்தே னென்று தோத்திரஞ் செய்தார்.

அந்த வசனங்களை யாகத்தின் பொருட்டு வந்திருந்த மகா முனிவர்கள், ரிஷீஸ்வரர்க ளெல்லோருங் கேட்டுச் சகிக்க மாட்டாமல், அருவருப்புங் கர்ண கடூரமு மாகி வெறுத்துக் கொள்ள, அந்தச் சமயத்திற் சூரியனைப் போலும் விளங்கிக் கொண்டிருந்த கௌதமர் அவ்வத்திரி முனிவரைப் பார்த்துப் பிரளய காலாக்கினி உருத்திரனைப் போற் கோபங் கொண்டு, இவ்வரசன் செல்வத்திற் சிறந்து பூமியைப் புரந்தாலும் மனிதனே யன்றி வேறல்ல அப்படியாகிய அரசனைக் கைலாசபதி யென்றும், விஷ்ணு வென்றும், பிரம னென்றும், இப்படி யெல்லாந் துதிக்கவும் மதிக்கவும், எந்த வேதத்திற், சொல்லி யிருக்கிறது. பொருளாசை கொண்டு வந்தாய்! அதற்குத் தக்க நியாயங்களைப் பேசி இதங்கள் சொல்லிப் பெற வேண்டுமே யன்றி, இப்படி நரஸ் துதி சொல்லுவார்களுண்டோ! இது வரையிலுங் கேட்டறியேன்: நீர் சொன்ன படி சகல தேவர்களு மிவனானால், நாமெல்லோரும் இவனைக் குறித்தே தவஞ் செய்து தொழுது, வேண்டிய வரங்களைப் பெறலாமே? நம்மை யேன் இவன் பூசித்து விசுவாசிக்க



வேண்டியது? என்று பற்பல வாறாகப் பேசிய போது, எல்லோரும் ஒரே முகமாய் வார்த்தை யாடினார்கள்.

அதைக் கேட்ட அத்திரி மகாரிஷி யானவர் சிறிது நிதானித்து, இப்போது யான் சொன்னது சரிதான். வேதவாக்கியமே அப்படி சொல்லு கின்றது. நீர் - பிரதி பதே விஷ்ணு என்னும் வாக்கியத்தை மறந்து பேசுகிறீர், அதை யுணராதவர் என்னை சங்கிக்க தகா தென்று சொல்லவும், அதைக் கேட்ட கௌதம ரெழுந்து, நீரே தாரதம்மிய முணராமற் பேசியிருக்க, அதை மறுபடியும் ஸ்திரப்படுத்துகிறீரா! என்று இரண்டு பேரும் பெரு வழக்கிட்டு, யாராகிலும் ஒரு பெரியோரிடத்திற் சொல்லிக் கொள்ளுவோம் வாருமென் றெழுந்து, சகல கூட்டத்தாரையும், இராஜனையு மழைத்துக் கொண்டு, பூர்வத்தில் கல்லாலின் கீழ் எழுந்தருளிய பரம சிவனிடத்தில் மௌனோப தேசம் பெற்ற நால்வர்களிற் சனர்க்குமாரர் என்பவரிடத்திற் சென்று சொல்லி நின்றார்கள். அவர் இவர்களுடைய வசனத்தைக் கேட்டு யோசித்து, இருதிறவர்களையும் இருக்கச் செய்து, மனோ மயக்கந் தீரும் படி இதனைச் சொல்லுகிறார்.

கேளுங்கள் மகா ரிஷிகளே! இந்தப் பூமியில் வாழ்கின்ற ஜனங்களுக்குக் கண்ணும், கருத்தும், பிராணாதாரமும், காவலும், நீதியும், நெறியும், இன்பமும், கதியும், இராஜனாக வேண்டியதே: தேவாலயம், விஷ்ணுவாலயம், தீர்த்தம், திரு நாள், இவை யாவும் அரசனாலாகத் தக்கதே: மாத மும்மாரியும், பயிர் விளைதலும், மகா ரிஷிகளுடைய ஜெபங்கள் யாவும் மன்னவனுடைய உதவியினாலாக வேண்டியதே; யாகம், ஓமம், பிதுர் கர்மம், சோபனம், பங்களம், கல்யாணம் இவை யாவுக்கும் எக்

தலே துணை; வர்ணாச்சிரமம் தம்பாமல் நடப்பதும், வந்தன மரியாதையும், ஸ்திரிகளுடைய பதிவிரதா தர்மமும் வேந்தனா லன்றி வேறல்ல. ஆகையால் துஷ்டஜன நிக்கிரகஞ் சிஷ்ட பரிபாலன மென்னும் முறைமையை வழுவாதினாலும், மன்னுயி ரெல்லாந் தன்னுயிர்போல் லோம்புதலினாலும், கடவுளர்க்குச் சரியான பெருமையும் அருமையும் உடையவன் அரசனென்று சனர்க்குமாரர் சொல்லி, அத்திரி மகரிஷி சொல்லிய வாக்கியம் வேத வாக்கியமே யென்று விளம்பினார்

அதைக் கேட்ட மகானுக்க ளெல்லாம் சனர்க்குமாரருடைய பாதங்களில் விழுந்து பணிந்து வாழ்த்தி உபசார விதிகளெல்லாம் நடத்தி, பிற்பாடு அத்திரி மகாரிஷியை கௌதமரும் மற்றப் பெரியோர்களும் பார்த்து, நாங்களிப்படிக் கேட்டோ மென்று கோபஞ் செய்யலாகாது. இன்று உம்மால் எங்களுக்குச் சந்தேக நிவர்த்தியாய் விட்டது: என்று போற்றி புகழ்ந்து, தமிரிய மகாராஜனுடனே யாக சாலைக்கு வந்து, யாகத்தை ஆரம்பஞ் செய்து, தேவர்களுக்குப் பூர்ணாகுதியுங் கொடுத்து, அரசனை யாவரும் வாழ்த்திச் சகல திரவியமும் ஆடையாபரணங்களும் பெற்றார்கள்.

பின்பு அரசன் இந்த அத்திரிமகாரிஷியைப் பணிந்து சுவாமி! கருணைக் கடலாகிய தேவரீர்க்கு அல்பனாகிய யானென்ன உபகாரஞ் செய்யப் போகிறே னென்று வேண்டிய திரவியங்களும், பட்டுப பட்டாவளியும், அணி மணிப் பணியுங் கொடுத்து, அனுப்பிவைக்க, அவைகளை யெல்லாம், அந்த மகாரிஷி வாங்கிக் கொண்டு வந்து மனைவியினிடத்திற் கொடுக்க, மனைவியார் பிள்ளைகளுக்கு ஆஸ்தி ஜாஸ்தியாக வைத்து விட்டு, அவர்களைக் கிரகாச்



சிரம தருமத்திலிருத்தி, பதியுஞ் சதியுங் கதியைக் கருதித் துதியைப் புரிந்து கயிலாசபதியின் திருவடித் தியான பராகத் தவமிழைக்க லானார்களாகி உயர் நிலை பதவியை அடைந்தார்கள்

---

## 4 = சாவித்திரி சரித்திரம்.

—— :*: ——

தேவ தேவசம் தேவ சாவித்ரி
தேவி சாதனத் தேவ வண்மையால்
மேவ லன்னொடு தூய நாயகன்
ஆவி பெற்றநல் லன்னை கற்பிதே.

மந்திர தேசாதிப னென்னும் அசுபதி மகா ராஜனென்றொரு அரசனிருந்தான் அவன் மாளவி யென்னுந் தேவியுடன் கூடிவாழு நாளில், சகல பாக்கியமும் நிறைந்திருந்தும் புத்திர பாக்கியம் இல்லாதிருப்பதினால் அவன் மனமகிழ்ச்சி குறைந்து வருந்துவானாயின்.

அக்காலையில் நாரதமாக முனிவர் அவிடம் எழுந்தருள, அவரை யவன் கண்டு பாத பூசைசெய்து பணிந்து, பத்தினியுந் தானும் புத்திர னில்லாக்குறையைச் சொல்லி பாதவித்தனர், அவர்களுக்கு அம்முனிவர் ஆசீர்வதித்து ஓ புனிதர்களே! நீங்கள் சாவித்திரியை சரண மடைந்து நோன்பிழைத்தால் உங்கள் மனங் களிப்புறும், என்று அதற்குரிய மந்திர உபதேசஞ் சொல்லி, அந் நோன்பிழைக்கும் மார்க்கமுந் தெரிவித்து போயினார்.

அப்பால் இவர்களந்த நெறியின் வண்ணம் நோன்பு நோற்று அன்பு செலுத்து காலையில், அந்த சாவித்திரியார் பிரசன்ன மாக, அது கண்டு அவர்கள் பலவாறாக வணங்கித் துதித்துப் பரவசமாகவும், அச்சாவித்திரி உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்களென்று சொல்லினள் அதற்கவர்கள் அந்த பாரதியாரைப் பணிந்தெழுந்து அம்மணி! எங்கட்குப் புத்திர வரம் வேண்டுமென்று பணிந்தனர். அதற்கச் சாவித்திரியார் உமக்கு ஒரு பெண்ணுண்டாமென்று அருள்புரிய, அதைக் கேட்டு மீட்டும் பணிந்தெழுந்து, தாயே! பெண் சந்ததியில் மோக்ஷம் வருவதற்கும், இராஜ்ஜிய மாளுவதற்கும் போக்கியப் படாதே யென்று வருந்தி கேட்கவும், அந்தப் பெண்ணினாற் சகல வைபவமும் பிள்ளைகளு முண்டாம்: என்று விளம்பி மறைந்து போயினள்.

அப்பாலரசனும் அரசியும் அவ்வம்மனையே ஆன்மார்த்த தெய்வமாக வாழ்த்தித் தொழுது வாழ்ந்து வருநாளில், மாளவி யென்னும் இராஜ பத்தினி கர்ப்பங்கொண்டு, திவ்விய தேஜோ மயமாகிய ஒரு பெண் மகவைப் பெற்று, சாவித்திரி யென்று பெயருமிட்டு, சகல சிறப்புஞ் சீருஞ் செய்து, கணுவிலாக் கரும்பைப்போல் வளர்த்து, மங்கை பருவம் வந்த காலத்தில், நங்கைக்கிசைந்த நாயகன் வேண்டுமே யென்று ஏக்க முடையவர்களாய், எங்கு வாய்க்குமென்று அத்தந்தைதா யிருவரும் ஏங்கி யிருந்தார்கள். அப்படி யிருக்கையில் ஒரு நாள் நாரதமுனிவர் அவிடம் எழுந்தருளி தந்தை தாயிருவருக்கும் சஞ்சல மாற்றி, சாவித்திரியின் மனதையும், அவள் காதலித்த சத்தியவானையும் வெளிப் படுத்தி "விதியுங் கணவனும் சேர்படினுந் தன்தன் விதியின் பயனேபயன்"



என்பதை புகட்டி, அச்சத்தியவானுக்கே சாவித்திரி உரியவள். அவனுக்கே வதுவை செய்து கொடுங்கள் அதனால் அவர்களுக்கும் உமக்கும் சகல நன்மையும் உண்டாகுமென்று சொல்லி, அச்சாவித்திரி அம்மனுக்கு சாவித்திரியின் நோன்பையும் மந்திரத்தையும் உபதேசித்து, தீர்க்க சுபமங்கிலியா யிருப்பா யென்று ஆசீர்வதித்து சென்றார்.

அப்பால் அசுபதி அரசனு மாளவ தேவியும், சாவித்திரியை சகல வைபவ ஆடம்பரத்துடன், கானகத்தில் எதிரியிடம் தேசமும் மற்றவையும் இழந்து ஆரண்யவாசிகளா யிருக்கும் சாலுவ ராஜனிடம், தங்கள் அபிப்பிராயத்தை முழுமையும் தெரியப் படுத்தி சகல வைபவத்துடன் சத்திவானுக்கு சாவித்திரியை கன்னிகா தானமாக கல்யாணம் செய்துக் கொடுத்து, சகல சீரும் நடத்தி மகளுக்கு வேண்டிய நீதி முதலிய வகைகளும் உரைத்து விட்டு தங்கள் இருப்பிடம் சேர்ந்து சத்தியவான் சாவித்திரி மேலேயே சதா ஞாபகமுடையவர்களா யிருந்தார்கள்.

இப்பால் சாவித்திரியும் சத்தியவானும் மகா விசுவாசமுடையவர்களாய் பாலும் நீரும் போல் மன ஒருமையாக வாழ்ந்தும், மாமன் மாமி, புருஷன் முதலியவர்களுக்கும் சர்வோபசாரத்துடன், ஒரு நாள் சாவித்திரிக்கு நாரதரால் உபதேசிக்கப் பெற்ற நோன்பு தினம் வந்து விட்டதால், அம்மூன்று நாளும் விதி முறை அனுஷ்டித்து நாலா நாள் ஆகும் தினம், முன் சொன்னபடி அன்றோடு சத்தியவானுடைய ஆயுளும் முடிவடைவதால், அதனை மனதில் ஞாபகப் படுத்திக் கொண்டு வனம் செல்லும் தன்னாயகனோடு தானும் கூட வருகிறேன் என்று நாயகனுக்குச்

சொல்ல, அவனும் வேண்டாமென, நடித்துக் கேளாது சமாதானம் செய்து, சம்மதிப் படுத்தி, மாமன் மாமியிடமும் விடை பெற்று காட்டுக்குச் செல்ல, இவளும் நாயகனோடு வார்த்தையாடிக் கொண்டு இடை விடாது பருத்துடன் நிழல் செல்வது போலும், உடலுடன் உடற் சாயை செல்வதைப் போலும் பிரியாமல் தொடர்ந்து உலாவி வந்தனள்.

அப்போது சத்தியவான் பற்பல கனிகளை யுடைய ஒரு விருக்ஷத்தைக் கண்டு, அதில் ஏறுவதற்கு விரும்பி, அதற்குத் தன்னால் முடியாமல், தனது பத்தினியை நோக்கி, பெண்ணே! இப்போது என் கைகளுங் கால்களும் சோருகின்றன! சரீர முழுமையும் நடுக்கங் கொள்கிறது! இடை சாய்ந்து போகின்றது! கண்கள் சிவந்து ஒளி மழுங்குகின்றது! சுவாசம் திணறுகின்றது! என்று சொல்லி ஓய்ந்து சாய்ந்தான். அப்படிச் சாய்ந்த காதலனைச் சாவித்திரி தன் மடியின் மீது சிரத்தை நாட்டி, மற்ற உடல் முழுதும் பூமியிற் படிய வஸ்திரத்தை விரித்துப் படுக்க வைத்துக் கொண்டு, நாரதராலும், தந்தையாலும் ஆதியில் தெரியப் படுத்திய தனது நாயகன் ஆயுள் பூரண நாளை முன்னிட்டு, பாசத்தியை உச்சரித்தவளாய், நான்கு திக்கும் நோக்கி ஏங்கியிருப்பவளானாள்.

அச்சமயத்தில் இயமதருமராஜனானவன் சிரத்தினில் முடியும், செவியினிற் குண்டலமும், வெண்டாமரை மலர் போன்ற கண்களும், இருண்ட உடலும், கரத்தில் சூல பாசமும் தண்டாயுதமுங் கொண்டு, திவ்ய கந்த கஸ்தூரி பரிமள மலர் மாலை இலங்க, அநேகம் எம படர்கள் தொடர்ந்து வந்து வணங்கி விலக, எருமைக் கடாவாகனத்தை விட்டிறங்கி, பதிவிரதை யாகிய சாவித்திரி அம்



மையை நெருங்கி, அவ்வம்மன் அருகில் வர உடல் நடுங்கி, சற்று நிதானித்து, மெதுவாக வந்து, தன் அதிகாரத்தைச் செலுத்தும் படியாக நினைத்து, சத்தியவானுடைய பிராணனைக் காந்தம் இரும்பை யிழுக்குந் தன்மை போற் கைக் கொண்டு தன் வாகனத்திலேறி நடந்தான்.

அப்படி நடப்பதைக் கண்ட சாவித்திரி தன் மடியிலிருந்த களேபரத்தின் தலையைப் பூமியில் வைத்து விட்டு எழுந்து, தலைவனை யிழந்து தரணியி லிருப்பது பிணத்திற் கொப்பாகு மல்லவா என்று சிந்தனை செய்து, தன் கண்களுக்கு நேராக காணுகின்ற மகாபுருடனை தொடர்ந்து போயினள். அப்போது மறலி யானவன் திரும்பிப் பார்த்து, நீர் யாரம்மா? வென்று வினவினன். அதற்கவள், சுவாமி! நான் சாவித்திரி யென்னும் பெயரினள். ஆனால் என் பிராண நாயகனுடைய பிராணனைக் கைக் கொண்டு போகின்ற நீர் ஆரையா? வென்று கேட்டனள்.

அதற்கு நமனானவன், பதிவிரதைகளின் மகத்துவத்திற்குச் சந்தோஷங் கொண்டு, அம்மா! நான் சம்ஹாரத் தொழில் செய்கின்ற இயமன். உம்முடைய பதிக்கு இன்று பதினைந்து நாழிகையுடன் ஆயுள்சரியாய் விட்டது ஆயுள் முடிந்தால் எப்பேர்ப்பட்டவர்களையும் இறக்கக்காண் பதல்லாமல், இருக்கக் காண்பதில்லை. ஆனால் பாபிகளாகிய பேர்களை என்னுடைய தூதர்கள் பந்தித்துக் கொண்டு வருவார்கள். புண்ணிய சாலிகளை நான் வந்து கொண்டு போவேன், ஆதலால் இந்த சத்தியவான் உத்தமனாகையாலும், பத்தினியாகிய உனக்கு நாயகனாகையாலும் நானே வந்து கைக்கொண்டேன். பூமியில் நாமரூபங்களாகத் தோன்றிய தெல்லாம் அழிந்து போகு மென்று தேவரீருக்குத் தெரிந்திருக்கும். மேலும் நான் தேவ

நீர் மானுட்டம் உம்முடைய நற்குண நற் சிந்தையினால் என்னைக் காணப் பெற்றீர் உமக்கு நிகராக உரைப்பதற்கு ஒருவரு மில்லை, என்று கொண்டாடியவனைப், நீர் ஏன் கால் வருந்த வருகின்றீர்? இவ்விடத்திற்றானே நில்லும். நான் போகின்றேனென்று சொல்லி செல்லலானான்.

அப்போது சாவித்திரி அம்மனானவள் பின்றொடர்ந்து, ஐயா! நாங்களிருவரும் இகத்தில் உடலுமுயிருமாய் மிக உரிமை யோடுங் காட்டிப் பதியென்றும் பாரியை யென்றும் பெயரில் மாத்திரம் இருபிரிவாயிருந்த எங்களில், உடலை மாத்திரம் விட்டு உயிரைக் கொண்டு போவது ஞாயமல்லவே? என்னையுங் கூடக் கொண்டு போவது உத்தமம். இனி இவ்விடத்தில் யானிருந்து இழைக்குங் காரியம் யாது? என் புருஷப் பிரசாதமாகிய மஞ்சள் - குங்குமம் - மலர் - மணம்-இவை முதலிய வெல்லாம் போய், இனி கைம் பெண்ணென்று சொல்லும் படி இவ்வுலகத்தி லிருப்பது என்னபயன்? என்று இப்பாக் கேட்ட இயமன் அவ்வம்மனைப் பார்த்து, அம்மணீ! ஆயுள் முடியாமல் உம்மை அழைத்துக் கொண்டு போக எனக்கு அதிகார மில்லை. நீர் என்னைத் தொடாதீர். நில்லும்: நில்லும்; ஓ! நல்ல குண முடைய நாயகியாளே! உமக்குமது புருடன் தவிர வேறு வரங்கள் ஏதாகிலும் வேண்டி யிருந்தாற் கேளுந் தருகிறேன்: என்று கூறிய மொழியைச் சாவித்திரிக் கேட்டு, ஆண்டவனே! என் மாமனாராகிய சாலுவ ராஜனுக்கும் மாமியாருக்குங் கண்கள் தெரியும்படியாகக் கடாக்ஷிக்க வேண்டு மென்று கேட்க, அப்படியே கொடுத்தேன் என்று சொல்லி மறலியானவன் மறைந்தான், இந்தப் பெண்ணரசியுங் கூடத் தொடர்ந்தான்.



அப்படி தொடர்ந்து வரும் சாவித்திரியை எமதரும ராஜன் கண்டு, ஏனம்மா மிருகங்கள் நிறைந்த காட்டில் ஒண்டியாக வருகின்றீர்? நீர் மெத்தவும் இளைத்திருக்கின்றீர், வியர்வை பெருக வருந்தி வருவானேன்? நின்று விடு என்று கூறவும், அதைக் கேட்ட சாவித்திரி யானவள், ஓ சூரிய பகவானுக்கும் சாயா தேவிக்கும் தோன்றிய தோன்றலே! நாயகனில்லாத வாழ்வு நட்ட மென்றும், புருஷனை யிழந்தப் பூவை பின்ன மென்றும் எல்லோரும் பழிக்கவும், என்போலொத்தப் பெண்கள் யாவரும் செழித்துக் களிக்கவும், நான் கண்ணீர் சொரிந்து தத்தளிக்கவுஞ் செய்வது உமக் கழகல்ல. உயிர் போன்ற நாயகன் என்னை ஒருக்காலும் வஞ்சகஞ் செய்யார். உத்தமனே! நீர்தா னென்னைப் பிரிந்து விட்டுச் செல்கின்றீர். இது உமக்கு நீதியல்ல. என்னையும் என் புருடனோடு அழைத்துக் கொண்டு போவீராகில் உமக்குக் கோடிபுண்ய முண்டு என்று அடியிணைகளில் அலரி விழுந் தழுதனள். அந்த உத்தம ஸ்திரியை மறலி நோக்கி, அம்மா! அணை கடந்த வெள்ளம் அழைத்தால் வருமோ? சிருஷ்டி - திதி-சம்ஹார மென்னும் மூன்று தொழிலினும் மாறுமோ? தெரிந்துந் தெரியாமல் வருந்து கின்றீர். நான் முடிவறிந்துக் கைக் கொண்ட உன் காதலனுடைய ஆன்மா திரும்ப மாட்டாது. என்னை நீர் வெறுத்துக் கொள்ள வேண்டாம்.

இவ்வுயிர் தவிர உமக்கு வேண்டிய வரம் இன்னும் ஏதாகிலுங் கேள் தருகிறோம் என்று சொல்லவுஞ் சாவித்திரி பணிந்தெழுந்து, ஆண்டவனே! என் மாமன் சாலுவ ராஜனுக்குப் பழைய படி இராஜ்ஜிய சம்பிரமச் செல்வங்களெல்லாம் கிடைக்கும் படியாக அருள் புரிய

வேண்டுமென்று வேண்டினான். அதற்கப்படியே கொடுத்தோமென்று சொல்லித் தென்திசைக் கோனடக்க, சாவித்திரி அவ்வித மனிதனிடத்தில் இரண்டு வித வரம் பெற்ற இனிமையினால் இரக்கமுள்ளவரெனத் தெரிந்து, அவரை மீட்டும் விடாமல் அடர்ந்து நெடுந்தூரம் வரையில் அவனைத் தொடர்ந்து போவதாயினள்.

அது கண்ட காலமூர்த்தி தனது வாகனத்துடன் நின்று, தாயே! ஏனிப்படி வருந்துகின்றீர்? நானொரு உறுதி சொல்லுகிறேன் கேளும், இப்பூமியில் தந்தையின் கர்ப்பத்தில் இரண்டு மாதமும், தாயின் கர்ப்பத்தில் பத்து மாதமிருந்து, இவ்வுலகத்துதயமாகின்ற மானிடர்கட்கும், மற்ற உயிர்கட்கும், ஜன்மிக்கும் போதே ஆயுளிவ்வளவென்று நிச்சயத்திருக்கும்: அது என்னுடைய கணக்கில் வந்து விட்ட பிறகு நான் காலம் பார்த்திருந்து, அவர்களெப்படி துன்புற்ற போதிலுங் கொண்டு வந்து, அவரவர்கள் நன்மை தீமைகட்குத் தக்க தாய் நடத்துவேன். தேவர்களாலும் மற்ற யாவர்களாலும் விதித்தவிதியினைத் தள்ளி நடக்கக் கூடாது. இந்த தேகம் வினை யொழிந்தால் அரை நிமிஷமும் நிற்காதென்று மேலோர்கள் சொல்லு மொழியை நீர் கேள்வியுற்றது மில்லையோ? ஆகையால் எவர்கட்கும் வந்தவேலைதீர்ந்தால் இங்கு என்ன காரியம்? என்னாலாவது ஒன்றுமில்லை; தேவரீர் மனதை திடம் செய்துக் கொண்டு திரும்பும், என்னை நீர் பின் பற்றி வருதல் உத்தமமல்ல? எனக்குச் செல்ல விடை தாருமென்று சொல்லி ஏகலானான்.

அது கேட்ட குணவதி யானவள் தீர்க்க தெண்டஞ் செய்து, தெய்வமே! மலையினுயர்ச்சி மலைக்குத் தெரியாதென்பது போல, தேவரீருடைய வல்லமையைத் தேவ



நீர் தெரியாமல் பேசுகின்றீர்? யான் சிறியவளானாலும் அசுபதி மகாராஜனுடைய புத்திரி; சாவித்திரியென்னும் பெயரினையுடையவள்; என் தந்தையினிடத்திற்கு நித்தியம் வரும்படியாகிய உத்தமர்களைப் பணிந்து, முத்தொழிலின் பிரதாபத் தன்மைகளைச் சற்று உணர்ந்திருக்கின்றேன் அவைகளிற் சாத்துவிக குணத்தைக் கொண்டு பிர்ம தேவர் இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கவும், இராஜத குணத்தைக் கொண்டு மகா விஷ்ணு தேவர் ரட்சிக்கவும், தாமத குணத்தைக் கொண்டு தேவரீர் சம்ஹரிக்கவும் இருக்கின்றமையால், மற்ற இரண்டு குணந் தேவரீரை விட்டு நீங்கின தில்லை; ஆதலால், உமக்கு மேலாகிய தெய்வங்களுமில்லை; இந்த மூன்று தொழிலும் உம்மால் நடக்குமென்று உயர்ந்தோருரைக்க உணர்ந்திருக்கும் யான், சம்பத்து முதலிய வற்றை விரும்பாமல், என் புருஷனுடன் என்னையுங் கொண்டு போகும் படியாய் உம்மைச் சரண மடைந்தேன்; ஓ கருணைக் கடவுளே! உன்னிஷ்டப் படி நிறைவேற்ற வேண்டுமென்று வணங்கினள்.

அப்படி வணங்கிய சாவித்திரியை அந்தகன் நோக்கி, தாயே! உம்மைக் கொண்டு போகுங் காலம் இன்னும் பின்னால் இருக்கின்றது; இப்போது கொண்டுபோவதற்கு என்னால் இல்லை; ஆதலால், உமக்கு வேண்டிய வரம் இன்னும் ஏதாகிலு மிருந்தால் கேட்டுக் கொள்ளும்; தடையில்லாமல் தருகின்றேன்; என்று கூறக் கேட்ட அப்பொன்னனையாள் அவனைப் போற்றி செய்து, சுவாமி! என் தந்தைக்குச் சிந்தை குளிரும் படியாக நூறு மைந்தரைத் தந்தருள வேண்டுமென்று கேட்டனள். அதற்கு மவன் தந்தேன்; தந்தேன்; என்று மொழிந்து, இந்திரஜாலத்தைப் போல் அந்தரத்தில் மறைந்து போயினான்.

அப்பால் சாவித்திரி யானவள் சிந்தை கலங்கி, வந்த வழி தெரியாமல் மயங்கி, தரும மூர்த்தி எந்தவழி மறைந்தார் என்று ஏங்கி, தென்திசையை நாடி, ஓட்டமும் நடையு மாக ஓடி வருவதாயினள். அதை தரும தேவன் கண்டு மனந் தாளாமல், முன் மார்க்கண்டேயரால் தனக்கு நேரிட்ட விபத்தை யாலோசித்து, தன்னுடைய வாகனமும் காலெழாமல் நிற்பதையுங் கண்டு, மகா பதிவிரதைகள் மனம் நொந்தால் ஏதாமோ? எப்படி விளையுமோ? என்று நைந்து அச்சாவித்திரி கண்ணுக்குத் தோன்றினன். அப்படித் தோன்றலும் அப் புண்ணிய சாவித்திரி கண்டு தெண்டனிட்டு நிற்க, அவளைப் பார்த்து எமதரும ராஜன், ஓ புண்ணிய ஸ்வரூபியே! இவ்வுலகத்தில் எத்தனை பேர் வைதாலும், வயிறெரிந்தாலும், பயப்படாத நான் உனக்குப் பயப்பட்டேன். ஏனென்றால், கற்புடைய தேவியான நீர் சிங்கங்கள் - புலிகள் - யானைகள் - கரடிகள் - செந்நாய்கள் - இவைகளோடு துஷ்ட வேடுவரும் நிறைந்திருக்குங் காட்டில் ஒன்டியாய் வருவது ஞாயம் அல்ல? உம்மை நான் விட்டுப் போவதும் தருமமல்ல! மேலும் நீர் கேட்டுக் கொண்ட வரங்களெல்லாம் கொடுத்தும், இன்னமும் என்னைத் தொடர்ந்து வருவது முறைமை யன்று. தாயே! மலரைக் கசக்கி மணங் கொள்வாருண்டோ? அதிக ஆசை அதிக நஷ்டம். இதை யறியாமல் பேராசைக் கொண்டு என் பின்னால் வருவது தரும விருத்தம். வீணாலோசனை வேண்டாம்; என்று சிறிது கடிந்து சொல்லவுஞ் சாவித்திரி நமஸ்கரித்து, ஸ்வாமி! இப்போது தான் எனக்கு நல்ல காலம் பிறந்தது. என் பேரில் கோபம் வாராத வரையிலும் நான் பிழைத் திருந்தேன். என் பேரில் கோபம் வந்தபடியால்



நானும் என் புருஷனுடன் கூட வந்து கூடி வாழ்வேன் என்றனள். அவ்வார்த்தையைக் கேட்ட கருணைக் கடல் குலுங்க நகைத்து, என்னம்மணி! உன்னுடையக் கருத்து என்ன சொல்? என்று வினவினான்.

அதற்குச் சாவித்திரி எமனைத் தொழுது, ஐயா! உத்தமர்களைக் கண்டு தெரிசித்தாற் சகல வினையுந்தீர்ந்து சௌக்கியத்தை யநுபவிப் பார்களென்று வேத புராணாதிகள் முறையிடும் போது, எவர்களுக்குந் தெரிசன மாகாத நீர் எனக்குத் தரிசன மானது மல்லாமல், உம்முடன் வார்த்தையு மாடி வரமுங் கொடுத்திருக்கின்றீர்! அப்படியிருக்க, நான் அமங்கலமாக இருந்தால் பெரியோர்கள் சொல்லிய தரும நூல்களும், வேத புராணங்களும் பூமியில் நிலைக்காதே? அவைகள் நிலைக்கும் படிச் செய்து பெருமை யடைவதே புண்ணியம். ஓ தேவ தேவனே! எனக்கு வேண்டிய வரங் கொடுத்தோம் என்று திருவாய் மலர்ந்தீர் தேவரீர் எனக்கு முன்பு கொடுத்தருளிய மூன்று வரத்தை விட இன்னும் மேலான பாக்கியங்களைக் கொடுத்தாலும், பிரேதத்திற்குப் பூமாலை யோடு பொன்னாபரணங்களைப் பூட்டிப் பார்ப்பது போலிருக்குமே தவிர என்ன பலனைக்கொடுக்கும்? ஓ இறைவனே! என்னுடைய புருஷனையும் தயவு செய்து விடுப்பீராகில், நீர் கொடுத்த பாக்கிய மெல்லாம் பிரயோஜனப் படும். ஆனதால் என் நாயகனும் நானும் எப்போதும் எவ்வுலகத்திலும் பிரியா விடையாய் இருக்கும் படி எனக்கு மாங்கிலியப் பிக்ஷை அருள் புரிந்து இரட்சிக்க வேண்டும். ஓ ஜீவ காருண்ய முடைய தெய்வமே! என்று வாழ்த்தி ஏத்திப் பணிந்தனள்.

அப்பெண்ணரசியை எமதரும மூர்த்தி பார்த்துப் பூரித்து, அனலைக் கண்ட மெழுகு போல் உருகி, பருவத ராஜ குமாரியான பராபரையே இவளென்று கருணை கூர்ந்து, இவர்களாற் பூலோகத்தில் தான தரும பரோபகார முதலியவை பெருக்கி, இல்லறம் துறவறம் என்னுமிவையிண்டும் விளங்கி விருத்தியாகு மென்று கருதி, அகத்தில் அன்பு கொண்டு, சாவித்திரியாரைப் பார்த்து, தாயே! நீர் சிறந்த உத்தமி! ஆதலால் உமது எண்ணத்தை நிறை வேற்றிக் கொண்டீர்! மெத்தவு மகிழ்ந்தேன். இப்பவும் உன்னுடைய நாயகன் பிழைக்கவும் நானிலம் வாழ்த்தவும், சகல நலங்களையும் நீர் பெற்று வாழும் படியாகவும் வரமளித்தேன்: இருவருங் கூடியிசையுடன் வாழக் கடவது. என்று சொல்லி ஆசீர்வதித்தனன். அது கேட்ட சாவித்திரியம்மன் அகமகிழ்ந்து சாஷ்டாங்க மாகத் தெண்டஞ் செய்து விடை பெற்றுக் கொண்டு திரும்பி, அதிக விரைவாக வந்து, முன்னிருந்த இடத்தில் உட்கார்ந்து, புருஷனுடைய சிரத்தை யெடுத்து மடிமீது வைத்து முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது சத்தியவான் நித்திரை நீங்கி எழுந்தவனைப்போ லெழுந்து, தன்னுடைய நாயகியினுடைய முகத்தைப் பார்த்து, ஓ பெண்ணே! நான் அயர்ந்து நித்திரை செய்து விட்டேன். நீ யேன் எழுப்பாமற் போனாய்? பகற் பொழுதும் போய் விட்டதே! தாய் தந்தை வருந்துவார்களே! ஓ அருந்ததிக்குச் சமான மாகிய பெண்ணே! ஒரு திவ்ய புருஷன் என்னைக் கொண்டு போகவும், ஒரு ஸ்திரியானவள் பின் தொடர்ந்து பிரிய வசனஞ் சொல்லி மீட்டுக் கொண்டு வரவும் சொப்பனங் கண்டு விழித்துக் கொண்டேன்.



இஃதென்ன குறிக்கோ தெரிய வில்லை! என்று சொல்லினன். அம்மொழியைக் கேட்ட சாவித்திரியானவள், நாயகன் முகத்தை நோக்கி நகைத்து, நீர் கண்டது கனவு அல்ல: நிஜமான காரியம்: நாளைக்கே உம்முடைய நகரஞ் சேர்ந்து இராஜரீகம் செய்யப் போகின்றீர்! குறைவு ஒன்று மில்லை எழுந்து வாரு மென்று சொல்லி அழைத்துக் கொண்டு இருவரும் வேகமாக நடந்து வரும் போது, இந்நேரம் அந்த முதியோர் நம்மைத் தேடுவார்களே! இருவருக்குங் கண்கள் தெரியாதே! அவர்களை உபசரிக்க நம் இருவரில் ஒருவராகிலும் அவ்விடத்திலிராமல் வந்து விட்டோமே! பசியினால் வருந்து வார்களே,! விடை நாயகனும் விடை ஸ்திரியும் ஆதலால் வனங்களிற் சம்பிரம சந்தோஷமாக இருந்து விட்டார்களோ? நம்மை மறந்து விட்டார்களோ? என்று நாடுவார்களே! இது வரையிலும் கட்டிக் காத்திருந்து நாம் பாடு பட்டதெல்லாம் இன்று வீணாகப் போய் விட்டதே! பாழாகிய நித்திரை பகையாக நேரிட்டதே! என்று புலம்பிக் கொண்டு வருவதானார்கள்.

இவர்கள் செயல் இவ்வாறாக, வனத்திலிருந்த தந்தை தாயிருவரும் மனம் நொந்து வாடி, தாங்கள் இருக்கும் இடத்தில் நிழல் சாய்வதை நாடி, ஐயோ! பொழுது போய் விட்டதே! எம் புத்திரனையும் மருமகளையும் இது வரையிலும் வரக்காணோமே! மிருகங்களினாற் பயமுண்டோ? ஸ்திரியையுங் கூடக் கூட்டிக்கொண்டு போனதினால் அபாய முண்டோ? யாதேனு மோர் மனவெறுப்பினாலகன்றார்களோ! நாமிருவரும் வேடிக்கையாய் வாழ்வோ மென்று சென்றாரோ? மரங்களேறி விழுந்து வருந்தினாரோ? கனி முதலிய கிழங்குகள் அகப்படாமற்

பொருந்தினர்களோ? வழி தெரியாமல் மயங்கினரோ? மலைப் பாம்புகளினாற் றியங்கினரோ? மற்றெதினால் வருந்துகின்றனரோ? இன்னும் வரக்காண்கிலோமே! எங்களுக்கு ஏதோ தற்செயலாய்க் கண்கள் தெரிகின்றனவே? இதென்ன ஆச்சரியம்! என்று மயங்கி இருவருங் கூவிக் கொண்டு வழி தெரிந்து நடந்து, தங்கட்கெதிர் வருவோர்களைக் கண்டு கேட்டு, இப்படியாக வருந்திவாடி வருஞ் சமயத்தில், மகனும் மருமகளும் வந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு, தாய் தந்தையார்க்குக் கண்கள் தெரிவதைக் கண்டு சந்தோஷங் கொண்டார்கள். கண்ட உடனே அத்தாய் தந்தையார், மைந்தனையும் மருமகளையும் வாரி அணைத்து, மடி மீது இருத்தி முத்தமிட்டு, காலமே போன நீங்கள் இது வரையிலும் வாராமலிருந்த காரணம் என்ன? வென்று கேட்டனர்.

அதற்குச் சாவித்திரியானவள், ஓ மாமா! ஓ மாமி! நான் அசுவதி மஹாராஜனுக்கும் மாளவ தேவியாருக்கும் வரத்திற் பிறந்து வளரும் போது, குதிரையின் மீது வந்த உங்கள் புத்திரனாகிய இச்சத்தியவானைக் கண்டு, இவரே நமக்கு நாயகனென்று எண்ணமிட்டிருந்தேன். அது காலையில் எங்கள் தந்தை தாய் இருவரும் விவாகஞ் செய்ய எத்தனித்த போது, நாரத மகாமுனி சாட்சியிற் சத்தியவானே நாயகனென்று சித்தமாகச் சொன்னேன். அப்போது நாரத பகவான் என் தந்தையைப் பார்த்து, இன்னும் ஒரு வருஷமிருக்கின்றது அந்தப் பிள்ளைக்கு ஆயுள் அப்பால் இறந்து போய் விடுவானென்று சொல்லினர். அப்படிச் சொல்லக்கேட்ட என் தந்தையுந் தாயும் என்னை வேறே புருஷனை நேமித்துக் கொள்ளச் சொன்னார்கள் அதற்கு நான் சம்மதிக்காமல், அவரே நாயகன் நானே



நாயகி என்று சொல்லினேன். அப்போது என் தந்தை தாயார் கோபங் கொண்டு, பந்துக்களுடன் கானகத்திற்கு வந்து, உங்களைச் சம்மதப் படுத்திக் கலியாணஞ் செய்து வைத்தார்கள்.

இப்படியிருக்க, அன்று முதல் இன்று வரையிலும் முன்னூற்றைம்பத்தாறு நாளுங்கழிந்து, மூன்று நாள் கௌரியை நோக்கி விரதமிருந்து, இன்று கடைசியாகிய நான்காவது நாளாகையால், உங்கள் உத்தரவின் பேரில் காட்டுக்குப் போகும் கணவனுடன் கூடப் போய், என் புருஷனுடைய பிராணனை வாங்கிக் கொண்டு போகின்ற எமதரும ராஜனைக் கண்டு வணங்கி, என்னையுங் கொண்டு போ ஐயனே என்று வருந்தினேன், வருந்திய எனக்கு அவர் மூன்று வரமுங் கொடுத்து, என் நாயகன் உயிரையும் அருளிச் செய்து, அப்பால் மறைந்து போயினர். பின்பு யான் அவர் சென்ற திக்கை நோக்கி தெண்டனிட்டுத் திரும்பி, என் கணவனுடன் கூடி வருவதற்குப் பொழுது போய் விட்டது. தேவரீர்கள் கோபங்கொள்ள வேண்டாம் என்று பணிந்தனள்.

பணிந்த மருமகளாகிய திருமகளை மார்போடணைத்து மகிழ்ந்தார்கள் அந்தக் காட்டில் வாசஞ் செய்யும் ரிஷிகள் ரிஷிபத்தினிமார் யாவரும் அச்சாவித்திரி மஹத்துவங் கேட்டு, நடு நடுங்கி, அற்புதம்! அற்புதம்! என்று ஆச்சரியங்கொண்டு, இப்படியும் புண்ணியவதிகளுண்டோ வென்று தங்களைத் தாங்களே இகழ்ந்து கொண்டார்கள். அக்காலையில் மாமனாரும் மாமியாரும் மருமகளுடைய மகத்துவங்களை நினைந்து நினைந்து உருகி, ஓ அம்மணி! ஓ மனோன்மணி! ஓ உருக்மணி! ஓ தெய்வ சிகாமணி!

ஓ சிரோமணீ! ஓ சிந்தாமணீ! ஓ மாசிலாமணீ! நீ எங்களுக்கு மருமகளாக வாய்த்த போதே இனி ஏதொரு குறைவு மில்லை எங்கட்குக் கெட்டுப் போய் விட்ட கண்ணை வரும்படி செய்த கேடு படாத கண்மணியே! நீங்கிப் போன பாக்கியமும் ஓங்கச் செய்த சத்திய வாக்கியமே! என்று மகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தி, மஹா ரிஷிகளுக்கு அன்ன தானஞ் செய்து, மருமகளையும் பாரணை செய்யச் சொல்லி, பேரானந்த மென்னும் பெருக்கத்தினால் அவ்விராப் பொழுதைக் கழித்து, விடியற் காலத்திலெழுந்து நித்திய விதி கருமங்களை முடித்துக் கொண்டனர். அப்போது பெரியோர் முதலிய யாவர்களும் வந்து வந்து, சாவித்திரியினுடைய சரித்திரங்களைக் கேட்டு மன மகிழ்ந்து ஆசீர் வதித்து வாழ்தவும், அவர்களை இவர்கள் போற்றவும், அவ்வனங்களி லிருக்கும் மரங்கள் யாவும் மலர்ந்து மணங்கள் வீசவும், மிருகங்கள் முதலாகிய பட்சிகள் ஒன்றுக்கொன்று பகையில்லாமல் உலாவவும், தேவர்கள் புஷ்பமாரி தூவவும், இத்தன்மையாகிய சம்பிரமங்களை அனுபவித்துக் கொண்டு மகா சந்தோஷத்துடன் அவ்வனத்திற்றானே சில நாள் வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கு நாளையில் சாளுவ தேசத்தைச் சண்டையிட்டுச் செயித்த சத்துரு வானவன் இறந்து போய், பட்டினத்திற்கு அரசனில்லாமை யாற் பழைய மந்திரி மார்கள் யானையை அலங்கரித்துக் கொண்டு வந்து தங்களரசனாகிய சாளுவ தேசாதிபதி யிருக்குங் காட்டிற்கு வந்து, அவ்வரசனைக் கண்டு அடி வணங்கி, சத்துருவுக்கு நேர்ந்த சம்பவத்தைக் கூறி, உடனே அவ்வரசனை யானையின் பேரில் எடுப்பித்துக் கொண்டு, இராசபத்தினி - புத்திரன் - சாவித்திரி - இவர்களை வாகனங்களி லேற்றி,



இராஜ சின்னங்களெல்லாம் புடை சூழ்ந்து வரும்படியாகக் கொண்டு போய்ப் பட்டினப் பிரவேசஞ் செய்து வைத்து, அரண்மனையை அலங்கரிப்பித்துப், பட்டாபிஷேகமுஞ் செய்து, முன் போற் சிங்காசனத்தி லிருந்து, துரைத்தனஞ் செலுத்தும் படியாகச் செய்தார்கள் அந்தக் காலத்தில் அரசனும் தேவியும், கஷ்ட திசையை நீக்கிய மருமகளை இஷ்ட தெய்வத்தைப் போற் சிந்தித்து வந்தார்கள்

இந்தச் சாவித்திரியினுடைய தந்தை அசுபதி ராஜன் நூறு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு, செல்வங்களிற் சிறந்து மகிழ்ந்து வாழ்ந்தனர். அக்காலத்தில் அரிய தவத்திற் பிறந்த நமது பெண்ணரசி யானவள் என்ன வருத்தமடைகின்றாளோ? ஏது நினைந்து அழுகின்றாளோ? என்று மனம் வருந்தி, மந்திரியாரை விசாரிக்குங் காலத்தில், சகல செல்வமும் பெற்று அரசு புரிந்து தங்கள் சுதேசத்தில் வாழ்கின்றார்களென்று சொல்லக் கேட்டு, அசுபதி ராஜன் ஆச்சர்யங் கொண்டு, நால்வகைச் சேனையும்; மந்திரி மாரும், புத்திர வர்க்கமும், தனது பத்தினியுஞ் சூழ்ந்து வரப் பிரயாணமாகி வந்து, சாளுவ தேசத்திற் சேர்ந்து, அரசனைக் கண்டு பிரிய வசனங்களைப் பேசி, மருமகனும் மகளும் வந்து பாதங்களிற் றொழவும், அவர்களை வாழ்த்தி யணைந்து, அங்கு யாவரோடும் மன மகிழ்வுடனே யிருந்தார்கள்.

அக்காலையில் சாளுவ ராஜன் அசுபதி அரசனை நோக்கி, ஐயனே! இவ்வரசு உம்முடைய தவத்தினால் வந்த சாவித்திரி யளித்தது, இந்த கண்கள் அந்த உத்தமியினால் கொடுக்கப் பட்டன என்னுடைய புத்திரன் பிராணன் அந்த அம்மான் தயை செய்து கொடுத்தப்

பிச்சை. உமக்குண்டான நூறு புத்திரரும் அந்த மகாலக்ஷுமியினுடைய வரப்பிரசாதமே! இங்குள்ள செல்வமெல்லாம் அந்தப் பதிவிரதா சிரோன்மணியினால் உண்டான காரியமே! என்று நடந்த சரித்திரங்களையெல்லாஞ் சொல்லக் கேட்ட அசுபதி ராஜனும் மாளவி தேவியும் அகமு முகமு மலர்ந்தனர், மற்ற யாவருங் களித்தார்கள். அசுபதி ராஜன் வேண்டிய வண்மை வரிசைகள் இயாவுங் கொடுத்து, இகபர மிரண்டிற்கும் இந்தப் பெண்ணினால் நலத்தைப் பெற்றோமென்று விருந்து போஜனமுண்டு, தன்னகரத்திற்குப் போகப் பயணங் கொண்டு, புத்திரர் மருவச் சென்று, பட்டினஞ் சேர்ந்து வாழ்ந்திருந்தாள். இவ்விடத்திற் சாவித்திரியும் நாயகனுஞ் சுகத்தைப் பெற்று, மாமியும் மாமனும் மகிழ்ச்சியுறப் புத்திர பாக்கியத் துடன் வாழ்ந்திருந்தார்கள்.

---

# 5 - அனுசூயை சரித்திரம்.

—*°*—

லோக தாணியம் வேக வைத்ததும்
ஏக மாமுனி பேற்று விண்டதும்
பாக மூவர்கள் பால ரானதும்
வேக கற்புடை விந்தையின் விந்தையே.

ஒரு காலத்தில் பிர்மலோகத்தி லிருக்கும் சரஸ்வதியும், விஷ்ணுலோகத்தி லிருக்கும் ஸ்ரீ மஹா லக்ஷுமியும், கைலைமலையி லிருக்கும் உமாதேவியாரும் ஒருங்கே சேர்ந்தவர்களாகி, தங்கள் தங்கள் வல்லமைகளை பேசிக் கொண்டிருந்தார்கள், அம்மூவர்களில் ஒவ்வொருவரும் தான்



களே உயர்வென்றும், மற்ற இகபர லோகத்தி லுள்ள யாவரும் தனக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும், மனத்தின் கண்ணே இறுமாப் புடையவர்களாயிருந்தார்கள்.

அம்மூன்று சத்திகளும் இவ்வாறு கருதியிருக்கும் சமயத்தில், திரிலோக சஞ்சாரியாகவும், நாவில் ரசம் பொருந்தப் பாடப்பட்டவரும், திரிகால ஞானியுமாகிய நாரதர் இவர்களுடைய இறுமாப்பை விலக்கவும், மானிட ஜெனன சம்பந்த மங்கையர்கள் கற்பின் பிரக்கியாதி மூன்று தேவிகளிலும் மேம்பட்டதென்றும், ஆன்மகோடிகளுக்கு விளக்குவான் வேண்டி, ஒரு நாள் ஆலோசித்து, காற்படி முழுக் கடலை போல் எஃகுவினால் கடலை செய்து எடுத்துக் கொண்டு முதல் பிர்ம லோகத்திற்கு வந்து, சரஸ்வதி தேவியாரை விதிப்படி வணங்கி, தோத்தரித்து எதிரே நின்றார். அப்போது பூவுறைச் செல்வி, நாரதரை நோக்கி, ஓ முனி புங்கவா! தாங்கள் இவ்வளவு தூரம் நாடி தேடி ஓடி வந்தது யாது காரணத்தைப் பற்றியென்றாள். கேட்ட நாரத மகா முனிவர், அம்மா நாவுறைச் செல்வியே! அடியேன் கொஞ்சம் எஃகு கடலை இருக்கிறது. அதனை பொரித்து யோசிப்பதற்கு ஆவலுள்ளவனாயிருக்கிறேன்: ஆனதால், அதனைப் பொரிப்பதற்கு யாரும் துரியவர்களாகக் காணப்படவில்லை; மேலும் இது மகா மகத்துவம் பொருந்திய கடலையாகும். இதனை யாரும் பொரித்துக் கொடுப்பதற்குச் சக்தியுடையவர்களில்லையென்றும், இதனைப் பொரித்துக் கொடுப்பவர்கள் கலங்காத கற்பு நிலைமையுடையவர்களென்றும் கேள்விப் பட்டு இங்கு தங்களை நாடி வந்தேன் தயைகூர்ந்து இதனைப் பொரித்துத் தரல் வேண்டுமம்மா! என்று வேண்டினர்.

கேட்ட சரஸ்வதியானவள், ஐயா நாரத முனிவரே! நீர் சர்வமுந் தெரிந்த திரிகாலக் ஞானியாகும். உமக்குத் தெரியாத சுருதி-யுக்தி-அநுபவம் உலகத்திலுமே கிடையாது. தானியாதி வர்க்கங்களில் சேர்ந்த உண்மைக் கடலை யல்லவோ யார் பொரித்தாலும் பொரியும். இரும்பினால் செய்யப்பட்ட கடலை வேகுமா? பொரியுமா? இது சிறு குழந்தைக்கும் தெரியு மல்லவா? நீர் விளையாட்டுப் பிள்ளைகள் பேசுவது போல் பேசுகின்றீர். இரும்புக் கடலைப் பொரியுமா? போ! போ போ வென்று சொல்லி விட்டனள்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட நாரதர், அம்மா! நான்முகன் பாரியே! சர்வ சக்தியாகிய நீங்களே தங்களால் முடியாத காரியமென்று சொல்லி விட்டால் வேறு யாரால் தான் நடை பெறும்? என்று சொல்லி பணிந்து, விடை பெற்று வைகுந்தம் வந்து, அங்கு மஹா விஷ்ணு இருதய கமல ஸ்தானத்துக் கரசி யாகிய மஹா லக்ஷ்மி யாரை வணங்கி தெண்டனிட்டு தோத்தரித்தார்.

அப்போது லக்ஷ்மீ தேவியார், நாரத முனிவரை ஆசீர்வதித்து, நீர் வந்த காரியம் யாது? என்று கேட்க, அவரும் அம்மா திருநிறை தெய்வமே! என்னிடம் கொஞ்சம் கடலை யிருக்கிறது இதனைப் பொரித்துப் புசிக்க வேண்டு மென்ற பேராவலைக் கொண்டேன்; ஆயினும் இக் கடலை கலங்காத கற்பு நிலைமை யுடையவர்களே இதனைப் பொரிக்க சக்தி யுடையவர்களாகும்! ஆனதால், முன்னம் பிர்ம பத்தினியிடம் கொண்டு போய்க் கொடுத்துப் பொரித்துக் கொடுக்கச் சொன்னேன். அச்சக்தியார் தம்மால் ஆகா தென்றுக் கூறி விட்டார். அதன்மேல் அதை தங்களிட மாவது பொரித்துக் கொண்டு



போகலா மென்று வந்தேன். இவ்வளவே காரிய விஷயமாகும் ஆனதால் தேவரீர் தயவைத்து இதனைப் பொரித்துக் கொடுக்க வேண்டு மென்று வேண்டினர்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட பத்மாக்ஷி, ஓ நாரதரே! நீர் சொல்லுவ தெல்லாம் சரியே. இதில் ஏதோ கொஞ்சம் சூதான விஷயமாக இருக்கிறது. இரும்புக் கடலை பொரிய வேண்டு மென்றால். யாரால் வருத்துப் பொரிக்கத் தக்கது, என்னு நடை பெறாத காரியம் வேறு யாரை யாவது கொண்டு பொரித்துக் கொள்ளு மென்று சொல்லி விட்டாள். அம்மா விஷ்ணு பத்னியே! நீரும் இப்படித் தான் சொல்லி விட்டீரா? சரி யிருக்கட்டும்: பார்க்கலா மென்று, லக்ஷ்மியை வணங்கி விடை பெற்றுக் கொண்டு கைலயங்கிரியில் பார்வதி தேவியார் வீற்றிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார்.

வந்து சேர்ந்து பணிந்து எழுந்த நாரதரை பார்வதியார் கிருபா நோக்கத்துடன் ஆசீர்வதித்து, முனிவரே! நீர் வந்த காரியம் யாது? என்று வினவ, நாரதரும், அம்மா உமா மஹேஸ்வரி! என்னிடத்தில் கொஞ்சம் கடலை யிருக்கிறது, அதனைப் போசிப் பதற்குப் பொரித்துக் கொடுக்க வேண்டு மென்று வேண்டி அம்மன் கையில் கொடுத்து, நடந்த விஷயங்களையும் சொல்லினர், கேட்ட பார்வதியார், அப்பா இசைக் கொழுந்தே! நீர் சொல்லியது சரியே! என்னென்றாலும் இரும்பினால் இருக்கும் கடலை வேகுமா? பொரியுமா? நடவாத காரியத்தை பிரமாதமாகக் கொண்டு வந்தீர்! மற்றவர்களால் ஆகாத காரியம் என்னால் மாத்திரம் முடியக் கூடியதா? கூடாத காரிய மாகும் என்று சொல்லி விட்டாள்.

கேட்ட நாரதர், அம்மா ஜெகதீஸ்வரீ! உங்கள் மூவ ராலுமே நடவாத காரியம் வேறு யாரால் நடை பெறப் போகிறது? அப்போது கற்புடைய ஸ்திரீகள் இகத்திலும் பரத்திலும் இல்லை யென்பதா? மாதர்கள் புடை மங்கை யர்க்கோர் மழை என்பதும் பொய் வார்த்தை தானோ? வேறு யார்தான் இதனைப் பொரித்துக் கொடுக்கப் போகி றார்கள்? என் பாக்கியம் எப்படியோ? பார்க்கலா மென்று சொல்லி, வணங்கி விடை பெற்றுக் கொண்டு பூவுலகத்திற்கு வருவாராயினர்.

உலகின் கண் ரிஷிபத்தினியாகிய அநசூயா தேவி யார் மகா பதிவிரதை யாகும். அருந்ததியும் நாணத் தக்க சற்புக் களஞ்சிய மென்றும் உலகமும் திரிமூர்த்தி களும் மற்ற யெல்லோரும் புகழத்தக்க பெண்ணரசியாகும் அவ்வம்மையார் மாதரி லக்கண விதி விலக்குப்படி ஒழு குந் தன்மை யுடையவள், நாடோறும் தனக்குரிய கற்பு விரதப்படி புருஷன் மனத்தக்கு மாறாது சதிபதியோடு வாழ்ந்து வந்தார்கள். ஆயினும் அநசூயா அம்மை யாருக்கு மாத்திரம் புத்திர செல்வத்தை யடைய வேண்டு மென்ற எண்ணம் மாத்திரம் இடை விடாது சிந்திப்பாளா யினள். இது அவளது உள்ளத்தின் கொள்கை யாகும்.

அநசூயா மனோ நிலைமை இவ்வாறிருக்க, அஃ தென்னை முணர்ந்த நாயகன், தனது பத்தினியின் புத்திர ஆவல் தீருவதற்கு வேண்டி சில போது அகத்திற் கருகே தபசு செய்வாராயினர். அப்போது நாரதர் எங்கு முலாவி முடிவில் அநசூயா தேவியிடம் வந்தார். அத்தேவியார், வந்த நாரதரை வந்தனை உபசாரத்துடன் வணங்கி, அப்பா முனி புங்கவரே! தேவரீர் இவண் எழுந்தருளியது அடியேங்கள் செய்த பெரும் பாக்கிய மாகும். இவ்வளவு



தூரம் தேவரீர் எழுந்தருளிய விஷயார்த்த மென்ன? வென்ன, நாரத முனிவரும், அம்மா ரிஷி பத்தினியா! நின்புகழும் பெருமையும் நெடுந் தூரத்தி லிருந்து கேள்வி யுற்று வந்தேன்; என்னிடம் கொஞ்சம் கடலை இருக் கிறது அதனைப் பொரித்துக் கொடுக்க வேண்டு மென்று வேண்டி எடுத்துக் கொடுத்தார்.

நாரதர் பொரித்துக் கொடுக்கச் சொல்லிக் கொடுத் தக் கடலையை அநசூயா வாங்கிப் பார்க்க, அது எஃகி னால் செய்யப் பட்டக் கடலையாக இருக்கக் கண்டு ஆதெய் வமே! பிராண நாயகா! இது என்ன விபரீதமா யிருக் கிறது? என்ன சூதோ? இது எப்படிப் பொரியும்? இத் தகைய சூட்சி யாகிய காரியத்திற்கு யார் இன்னது இப் படித்தா னென்று அறியக் கூடும்? என்று திகைத்துப் பயந்தவளாயும், தடுத்துரை கூறுவதற்கு தோன்றாதவ ளாயும், நாரத முனிவரிடம் வாங்கிய கடலையை எரி யடுப் பின் மேல் இருப்புச் சட்டியில் போட்டு, முன் பிராண பகனை மனத்தி லுண்ணி, அப்பால் முக்குணமும், முத் தீயும், முச்சத்தியு மாகிய சர்வ சக்தியை,

பாண்டியனீன்ற மீனாக்ஷி
பார்வதிகௌரி காமாக்ஷி
தாண்டவதரிசன ஸ்ரீயாக்ஷி
தாரகமந்திர கனகாக்ஷி

அலைகடல்வந்திடு திருமகளே
ஹரிஓம்காரண மார்மகளே
கலைபுணர்ஞான நாமகளே
கருணைமீனாக்ஷி பூமகளே.

என்று தியானம் செய்வாளாயினள். அப்போது அவளது பதிவிரதாதர்மத்தால் அந்தஎஃகுகடலை நவதானியக் கடலையைப்போல் பளபள வென்று அழகாகவும், ருசியாகவும் பொரிந்து விட்டது.

அழகாகவும், ருசிகர மாகவும், பொரிந்த கடலையை பய பக்தியுடன் கொண்டு வந்து நாரதரிடம் கொடுத்தாள். மூன்று சத்திகளாலும் முடியாதெனத் திருப்பிக்கொடுத்த எஃகு கடலையை ஒரு சிறு நேரத்திலேயே அட்டியின்றி பொரித்துக் கொடுத்த கற்பின் வல்லமையும், பதிபக்தியையும், அவளது சர்வ சக்தியையும், மனதாரப் புகழ்ந்தும், பயந்தும் வாங்கப் பெற்று, மங்கள வார்த்தையாய் ஆசிர்வதித்து விட்டு தான் திரும்பி விட்டார்,

அப்பால் பிர்மா - விஷ்ணு - பரமேஸ்வரன் இம்மூவரும் தங்கள் தங்கள் சக்திகளோடு ஏகாந்த மாக இருக்கும் சமயங்களில் அவ்விடம் நாரதர் எழுந்தருளினார். அவரை சரஸ்வதி, லக்ஷ்மி - பார்வதி இம்மூவரும் தங்கள் தங்கள் பதிகளோடு மிக்க உபசாரத்துடன் அழைத்து, ஐயா! நாரதமுனி புங்கவா! திரிலோக வர்த்தமான மெல்லாம் தெரிந்து நன்மையையபக்கு மாறு விளக்கு வான் வேண்டி விளங்கும் விளக்கே! இப்போது நிகழும் விசேஷ வர்த்தமானம் என்ன வென்று தெரிவிக்க வேண்டு மென்றார்கள்.

அவ்வார்த்தையை மாசற்ற மாமுனிவர் கேட்டு, மூன்று தேவிகளையும், திரிமூர்த்திகளையும் வணங்கி, முத்தொழிற்கும் காரண காரிய மாகிய அன்னைகாள்! அடியேன் உங்களுக்குத் தெரியாத விஷயங்கள் உலகின் கண் என்ன விருக்கின்றது! அதைக் காட்டிலும் அதிக மாக



எனக்கென்னத்தெரியக் கூடும்? ஏதோ பொரித்த கடலை கொண்டு வந்தேன் இந்தாரு மென்று அவர்களிடம் கொடுத்தார். அக்கடலையை வாங்கிய மூன்று தேவிகளும், ஓ நாரதரே! இது ஒரு சாமான்ய மாகிய நவதானிய வர்க்கக் கடலை யாகும், ஆனால், இதன் சுபாவத்தைப் பார்த்தால், அழகும், மணமும், மகத்துவ முள்ள தாகவும் தோன்றுகிறது இதன் விசேஷ மென்ன? இதனை இவண் கொண்டு வந்த விசேஷ மென்ன வென்று கேட்டார்கள்.

அம் மூவர்களது வார்த்தையைக் கேட்ட நாரத மாமுனிவர், ஓ எனது ஆருயிர்த் தாய்மார்களே! அடியேன் எதார்த்த வாதி யென்று தங்களுக்கும் மற்றவர்கட்கும், இன்னும் சுவர்க்க - மத்திய - பாதள மூன்று லோகமும் உள்ளங்கை நெல்லிக் கனியைப் போல் தெரிந்ததே யாகும். நான் உண்மையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்! நான் முன்னொரு சமயம், பதிவிரதா வல்லமை யால் பொரிக்குந் தன்மை புடைய எஃகு கடலையை. பொரித்துண்ண ஆசை யுள்ளவனாய் தங்களிடம் கொண்டு வந்து கொடுத்து வேண்டினேன். நீங்கள் மூவரும் தங்களால் பொரித்துக் கொடுக்க சக்தி யில்லை யென்று சொல்லித் திருப்பிக் கொடுத்து விட்டீர்கள். உங்கள் மூவராலே முடியா தென்று சொல்லி விட்ட பிறகு மற்ற யாரால் இது பொரித்துக் கொடுக்க முடியுமென்று ஆலோசித்தவனாய் திரிலோகமும் சஞ்சரித்து வரும் போது, பூலோகத்திற்கு வந்தேன். அங்கு அத்திரி மகா ரிஷி யென்னொரு மகா தப சிரேஷ்டரிருக்கிறார். இவர் வல்லமை யெல்லாம் அவருடைய பத்தினியாகிய அநசூயா என்னும் கலங்காத கற்பு நிலைமை புடைய பதிவிரதா சக்தியே யாகும். அவளது கற்பின் புகழ்ச்சியையும், வல்லமையும் திரி மூர்த்தி

தத்துவங்களாகிய உங்களாலும் சொல்லுவதற்கு இயலாதென என் கருத்தி லுதிப்பதால் என்னால் சொல்லுவதற்கு என்ன தரமாகும்? அவ்வுத்தமியோ கற்பில் அருந்ததியென்னலாம்; ஒருக்கால் அவளினும் உயர்தர முடையவளென்றும் சொல்லலாம். அவள் புருஷனையே தெய்வமென்று திரிகாலமும் வழிபட்டு வாழ்க்கை நடாத்தும் பதிபக்தி யுடையவளாகும். அவளுக்கு ஆலயமும், தீர்த்தமும், தெய்வமும், பக்தியும், அருளும், செல்வமும், மோக்ஷமும், தன்னாயகனே யென்று நடக்குந் தன்மை யுடையவளாகும்! அவ்வம்மையாரிடம் இந்தக் கடலையைக் கொடுத்துப் பொரித்துக் கொடுக்க வேண்டினேன். அப்படிக் கொடுக்கும்போது இருவித சந்தேக முடையவனானேன். அதாவது, பொரித்துக் கொடுப்பளோ! அல்லது சாப மிடுவளோ வென அஞ்சினேன்! அப்படிக்கெல்லாம் ஒரு தீங்கும் நேரா வண்ணம் அவள் இதனை வாங்கிப் பொரித்துக் கொடுத்தாள். அதனைப் பெற்று இதோ கொண்டு வந்தேன். நீங்களும் பொசி புங்களென்று எதிரே வைத்து வணங்கினர்.

திரிசக்திகள் மும்மூர்த்திகள் முன்னிலையில் எதிரே நாரதரால் வைக்கப்பெற்ற எஃகு கடலை பொரித்திருப்பதை கண்டு, மூன்று சக்திகளும் நாணங் கொண்டவர்களாகி, தங்கள் தங்கள் பதிகளை விளித்து, நீங்கள் எல்லாம் வல்ல கடவுள் தத்துவ முடையவர்களாகும்! உங்களுக்கு வாய்த்த நாயகிகளாகும் நாங்கள். எங்களுக்கும் உங்களுக்குமுடைய மகத்துவம் - கீர்த்தி - வல்லமை முதலியவைகள் உண்டென்பது உலக மறிந்த விஷயம். இவ்வாறிருக்க இந்த எஃகு கடலையினாலும், இதற்குக் காரண காரிய நாரத முனிவராலும், அநசூயா தேவியே உலகின் கண்



கற்புடையவளென்றால், அதனைப் பொரித்துத் தரவல்லமை யில்லாமையால் நாங்களெல்லாம் கற்பு நிலை யில்லாதாரென்றும் விளங்குவதால் இகத்திலும் பரத்திலும் எங்களுக்குப் பரத்துவ மில்லாமற் போவதாலும், எங்களுக்கு இதைக் காட்டிலும் வேறு நாணமும் பங்கமும் வேண்டுமோ? நீங்களிருந்து என்ன பயன்? இனி எங்கட்கு உத்தம ஸ்திரீ யென்ற நாமமும் கீர்த்தியும் எங்கிருக்கிறது என்று மனம் நொந்து வருந்தலானார்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட திரிமூர்த்திகளும், மூன்று சக்திகளின் வேண்டு கோட்கும், நாரதருடைய விபரீதத்திற்கும், அநசூயா தேவியின் கற்பு நிலையை இகபர மிரண்டிலும் விளக்குவதற்கும், அத்திரி மகாரிஷி அநசூயா இவர்களின் அந்தரங்க எண்ணம் நிறைவேறுதற்கும் உடன் பட்ட மனத்தினராய், குற்ற மற்ற மூவரும் இதோ இக்ஷணமே போய் அவளது கற்பை யழித்து உங்களுக்கே பதிவிரதா பட்டத்தை அளிக்கிறோமென உறுதி சொல்லி விட்டுப் புறப்பட்டு, மூன்று வாலிப பிராமண கோலங் கொண்டு பூலோகத்திற்குள் வந்து, அநசூயாதேவி வீட்டுக்குள் நுழைந்து, அம்மா! பிக்ஷாந் தேஹி என்றார்கள்.

அத்திரி மகாரிஷி பத்தினியாகிய அநசூயை அம்மன், அருகாமை தபநிலையிலிருக்கும் தனது ஆருயிர் தேவதையாகிய பதியின் ஆத்ம பூஜையை சிந்தித்துக் கொண்டிருக்கையில், யாரோ அதிதிகள் அமுதுக்கு வந்திருக்கின்றார்கள் என்று தெரிந்தெழுந்து விதி முறைப்படி அமுது கொண்டு படைக்கலானாள் அப்போது கன்ன மில்லா வுள்ளத்தில் நடனமிடும் வள்ளல்களாகிய

இம் மூன்று கள்ளர்களும் அவ்வம்மனை நோக்கி, ஹே! அன்னபூரணீ! நீர் இவ்விதமாக எமக்கு அமுது படைத்தால் நாங்க ளருந்தோம். நாங்கள் பற்றுத லுடையோர்க ளிடம் அமுது கொள்ளோம். தங்கள் மீது ஆடை யென்னும் பற்றிருப்பதால் நாங்கள் அருந்துவதற் காகாது. ஆனதால் ஆடையின்றி நிர்வாண கோல மாய் அமுது படைத்தால் அருந்து வோம் என்றார்கள்.

கேட்ட அநசூயா மனம் திடுக்கிட்டு, மெய் நடுங்கி, சிந்தங்-கலங்கி, ஆ தெய்வமே! இது வென்ன விபரீத மாக நேர்ந்ததே! அதிதிகள் அமுது கொள்ளும் லக்ஷணம் இது வல்லவே! இல்லை யென்பதும், நாயகனிடம் புகலாததும், பர்த்தாவின் சொல் அபசாரமாய் நேருமே! தவத்தி லிருப்பவரையும் கலைத்து கேட்கில் அதுவும் அபசார மல்லவோ! நாயகன் சொற்கும் மறுத்து நடப்பது அதுவும் அபசார மல்லவோ! என்ன தான் செய்வ தென்று திகைப் புடையவளாய் சித்தந் தெளிந்து பத்தாவை நினைந்து, சக்தியைப் பணிந்து, நித்திய தனது பதியின் பாத பூஜா தீர்த்தத்தை தன் சிரசில் புரோஷிக்க, தன் சரீரம் ஆடை யில்லாத நிர்வாண ரூபம் போலும், அம்மெய் முழுதும் அவளது அளக பாரத்தால் மெய்யினி லோர் எள் மூக்குப் பிரமாணமும் தெரியாமற் படி மறைந் திருப்பது போலவும் தோற்ற முண்டாயிற்று; அந்த கோலத்துடன் அமுது கொண்டு வந்து முன்னே படைத்து, சுவாமி! தேவரீர் திருவுள்ளப் படியே அமுது கொள்ளு மென்று சொல்லி, தனது நாயகன் பாத பூஜா தீர்த்தத்தைப் புரோக்ஷித்து வணங்க, சர்வசக்தி அநசூயா பதி பக்தி கற்பின் வல்லமையால், அந்த கபட நாடக திரி மூர்த்தி மூவர்களும் சிறு குழந்தை உருவாகி விட்டார்கள்.



அப்போது அநசூயாவின் கோலம் முன் கோலம் போல் விளங்கியது. அம் மூன்று குழந்தைகளும் இவ்வம்மனை நோக்கி, அம்மா! அம்மா! வென வாய் விட்டலறி பசியால் வருந்தி அழுவது போலழுதார்கள்.

இந்த மூவித விந்தையைக் கண்ணுற்ற அநசூயா தேவிக்கு தன்னை மறந்து உள்ள முருகி தெளிந்து, இது தேவப் பிரசாதமே யெனக்கருதி, அக்குழந்தைகள் மீது அன்பு பாராட்டி, கருணை கூர்ந்து, தொட்டிலிற் கிடத்தி, அம் முக்குழந்தை கட்கும், பொற் கிண்ணத்தில் பாலமுது ஊட்டினாள் அப்போது அவ்வம்மனுக்கு தன்னுபகனால் தன் கருப்பத்தில் பத்து திங்கள் சுமந்து பெற்று, நாடோறும் வளர்த்து வந்த பிள்ளைகள் மீது சகசமாக எவ்வளவு பக்ஷம் பாராட்டு வார்களோ, அவ்வளவு பக்ஷம் பாராட்டவும், அது போல் பழகி வருகும் பிள்ளைகள் போலவும் அந்த சமயம் கற்பு லீலா நாடகம் நடந்து வருவது போல் நடந்து வருகிறது, இது கதை யல்ல கருத்து.

இஃதிப்படி யிருக்க, திரிலோகத்திலும் சிருஷ்டி - திதி - சம்மாரம் என்னும் முத்தொழிலும் நிறுத்த முண்டாய் விட்டது. தேவ தேவர்களும் மற்று முன்னோரும் திகைத்து ஒன்றுந் தோன்றாதாகி ஆலோசனை யாகி விட்டார்கள். இது நிகழ்வது திரிலோக சஞ்சாரியாய் நாரத மாமுனிவர் தெரிந்து, அநசூயாவால் நிகழ்ந்திருப்பதையு மறிந்து, இதற் கேது செய்வதென ஆலோசித்து, சரஸ்வதி தேவியிடம் வந்து, மற்ற இருவர்களையு மழைத்து, திரி மூர்த்திகளும் அநசூயா வீட்டில் குழந்தைகளாக அகப்பட் டிருப்பதையும் அறிவித்து, அவளது கலங்கா மனக் கற்பு நிலைமையையும், அவளது சர்வ சக்தியையும்,

அவற்றினது வெற்றியும் அறிவித்து, அதற்கு நீங்களே போய் முந்தானை பிக்ஷையாக அவ்வம்மனை வேண்டி, அதனால் கொண்டு வர முடியுமேயன்றி, வேறு எவ்விதத்திலும் உங்கள் நாயகன்மார்கள் மீண்டு வர மாட்டார்களென்று சொல்லிப் போயினர்.

உடனே சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி இம்மூன்று சக்திகளும் ஒன்று கூடி, என்ன மதிமோசமாய் வந்துவிட்டதே. நாம் மூவரும் இதுகாறும் நாம் மூவருமே கற்பு நிலையில் உயர்ந்தவர்களென்றும், சர்வ சக்தியுள்ளவர்கள் என்றும் அடைந்த இறுமாப்பு இன்றேயொழிந்து, மற்ற மூவுலகிலும் நமக்கு மேல் அதிகமாக இணை சொல்லக் கூடாத கற்புடைய நாயகங்களிருக்கிறார்களென்னுணருதற்கும் வாய்த்ததேயாகும்! நாரதர் சொற்படி நடந்து கொள்ளாவிட்டால் நமது வீட்டில் வர மாட்டாரென்றும் தீர்மானித்து தேவவுலகை விட்டு பூவுலகம் வந்து, அநசூயா தேவி வீட்டில் நுழைந்து பிக்ஷாந்தேஹி என்று கேட்டார்கள்.

அப்போது சர்வசக்தி மூன்று பிள்ளைகளையும் தொட்டிலில் தாலாட்டிக் கொண்டிருந்த அநசூயா தேவி, பிக்ஷாந்தேஹி என்ற சத்தத்தை செவியில் கேட்டதும், யாரோ அதிதிகள் வந்திருக்கிறார்களெனத் தெரிந்து அமுது கொண்டு படைக்க வந்ததும், இந்த மூன்று ஸ்திரீரத்தினங்களும், அநசூயா தேவியை நோக்கி, அம்மா கலங்கா நெறியையுடைய கற்புக் களஞ்சியமே! எங்களுக்கு இந்த அமுது பிச்சை வேண்டாம்; உங்களால் கொடுக்கக் கூடிய முந்தானை பிக்ஷை வேண்டுமென்றும் இரண்டு கைகளிலும் முந்தானையைப் பற்றி வேண்டினார்கள்.



அநசூயா தேவி அவர்களைப் பார்த்து, சேதி விசாரித்து, இதற்குத் தம்முடைய அதிகாரமும் வல்லமையுமில்லை இதற்கதிகாரம் தம் நாயகனைக் கேட்டுத் தெரியுமென, அதற்குள் அத்திரி மஹா ரிஷியும் தனது தபசு முடிந்து அவ்விடம் சேர்ந்து விட்டார். இதற்குள் மூன்று சக்திகளும் அத்திரி முனிவரை வேண்டலும், அநசூயா தன் பதியை அடிவணங்கி தெண்டனிட்டு எழுந்து நிற்கலும், அத்திரி முனிவர் கருணையினால், அநசூயா தேவி கற்பின் வல்லமையினால், அந்த மூன்று குழந்தைகளும் இயற்கையாகிய பிர்ம - விஷ்ணு - பரமேஸ்வர பூர்வ உருவங்களையடைந்து, அநசூயா தேவியையும், அத்திரியரையும் ஆசீர்வதித்து, அநசூயையை நோக்கி, ஓ கண்யயிருந்த புண்ணியவதியே! நீ நெடுநாளாக புத்திர செல்வத்தை விரும்பியிருந்தாய், அதை முன்னிட்டு உத்தம புருஷனாகிய உன் நாயகனும் நின் கருத்தையுன்னி தபசு செய்வதை முன்னிட்டும், அதற்காக உங்களுக்கு பந்த பாச மணுகா வண்ணம் நாங்களே வந்து குழந்தை களி தீர்ப்பதற்கும், உனது கற்பின் மஹத்துவம் திரிலோகத்திலும் விளங்கும் படிக்கும் உன் மீது கருணை வைத்து நிகழ்ந்தவையிவையாகுமென்று சொல்லி இருவருக்கும் ஆசி கூறி காக்ஷி தந்து தத்தமதுலகம் சென்றார்கள்.

## 6 = வண்டோதரி சரித்திரம்.

பண்டு கூறிய வன்றில் வார்த்தையால்
கண்ட மாமலை சாண மேகிட
கொண்ட நாயகன் கூடி கதிபெற
வண்டு தரிமா வஞ்சி கற்பிதே.

இலங்கா புரியை அரசு புரியும் இராவணேஸ்வரனுடைய மனையாட்டியாகிய வண்டோதரி என்பவள், ஒரு நாள் மாலை நேரத்தில் தன் தோழிகளுடன் சிங்கார வனத்திற்குச் சென்று உல்லாசமாக உலாவிக் கொண்டிருந் தான் அங்குள்ள மா - பலா - புன்னை - முதலிய விருக்ஷங்களுடைய சிங்காரத்தையும், மல்லி - முல்லை - இருவாக்ஷி முதலிய சுகந்த வாசங்களையும், அன்னம் - மயில் - குயில் - கிளி - அன்றில் முதலிய பக்ஷிகளின் இன்னிசையையும் கேட்டு மனோ சந்தோஷங் கொண்டிருக்கும் வேளையில், சதிபதியாகிய இரண்டு அன்றில் பக்ஷி தன் சிரசிற்கு நேரே ஒரு விருக்ஷத்தின் கிளை மேலே உட்கார்ந்துக் கொண்டு, இரண்டு பக்ஷிகளும் சரச மாக வார்த்தை யாடும் போது, அவ்விருக்ஷத்தி னடியில் தாதிகளோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கும் வண்டோதரிக்கு சர்வ ஜீவ ஜெந்துக்களுடைய பாஷை தெரியு மாகையால், ஆ! இது வென்ன! பக்ஷி ஜாதிகளில் அறிவுடைமை யோடு வார்த்தை யாடுகின்றதே? அவ்விரண்டு பக்ஷியும் என்ன வார்த்தை யாடுகின்றது? பார்ப்போ மென்று கவனித்து கேட்கலானாள்.

இமைப் பொழுதும் இணைப் பிரியாத ஆண் பெண் அன்றில் பக்ஷி யிரண்டும் சரசமாக வார்த்தை யாடிக் கொண்டிருக்கும் போது, காம மீறிய ஆண் அன்றில் பெண் அன்றிலை இணங்கு வதற்காக முயற்சிக் கையில், அக்குறிப்பறிந்த பெண்பக்ஷி நளன் மீது சத்தியமாக என்னைத் தொடாதே? என்றது அம்மொழியைச் செவியில் கேட்ட வண்டோதரி யானவள், சத்திய மாகிய உத்தம தெய்வமே? நமக்குத்தான் பகுத்தறிவு உடைய தென நாம் கருதுகிறோம். கேவலம் பக்ஷிகளுக்குக் கூட சத்தியம் அசத்தியம் என்று உணர்ந்து, அதற்குக் கட்டுப் பட்டு நடக்கிற தல்லவா? இன்னும் என்ன வார்த்தை யாடுகிறதென கவனிப்போ மென்று மேலே பக்ஷிகளை உற்று நோக்கிப் பார்க்கலானாள் பார்வைக் குறியறிந்த பக்ஷிகளிரண்டும் கிவ்வென்று பறந்து போய் விட்டது.



பறப்பன வினமாகிய பக்ஷிகள், நடப்பன வினமாகிய மானிடன் மீது சத்தியம் கூறியதே தவிர, அதனது சித்தின் கருத்து என்ன விளங்க வில்லையே! முற்றும் மொழியாமல் சிட்டுகள் பறந்து விட்டதே! இந்த சங்கையை நாம் எவ்வாறு தெரிவதென வியசன முடையவளாய், ஆலோசனை மனத்தோடு தன் மாளிகைக்குத் திரும்பி விட்டாள். சங்கை தெளியு மட்டும் மனம் திடப்பட வில்லை. இதற் கென்ன விதமாகத் தெரிவதென யோசித்து, அன்றிரவு தன் நாயகனாகிய இராவணேஸ்வரன், தன்னோடு சரச மாக அணைய வரும் போது, நளன் மீது சத்திய மாக என்னைத் தொடாதே என்றாள். கேட்ட இராவணனுக்கு இரு கண்களுஞ் சிவக்கக் கோப முண்டாகி, ஓ பெண்கள் நாயகமே! இப்போது காதல் மீறிய காமத்தைத் தடுப்பதும், சத்திய வாக்குக் கூறுவதும் எனக்குப் பெரிதல்ல. தேவர்கள் முதல் மனிதர்கள் யாவரும் அடங்கி யாளும் படி அரசு புரியும் இலங்கா புரிக்கு இறைவனாகிய இராவணேஸ்வரன் மீது சத்தியமாக என்று சொல்லாமற் படி, கேவலமான நரனாகிய நளன் மீது சத்திய மாக என்று சொல்லியதே எனக்கு வருத்தமும் சங்கையு மாக இருக்கிறது, இவ்வாறு நீ கூறியதற்குக் காரண மென்ன? வென்று கேட்க அவளும், ஓ பிராண நாயகா! எனது சங்கையை உன்னிட மறிவித்தேன். என்னையே திரும்பிக் கேட்டா லெப்படி? என்றாள்.

உடனே இராவணனுக்குக் கோபமும் சங்கையு முண்டாகி, பெண்ணே! கேவல மாகிய நளன் என்ன, என்னினும் மேம்பாடுடையவனோ? அவனது சேதியை இதோ அரை நொடியில் தெரிந்து வருகிறேனென்று சொல்லி புறப்பட்டு, நளனுடைய தேசத்திற்கு வந்து, அங்கு அரசியலில் விசாரிக்க, அங்குள்ளவர்கள், ஐயா! எமது நளபூபதி நாடோறு மாதம் காடோறு மாதம் வாசம் செய்வது, இப்போது காடோறு மாதம் நடப்பதால் அவர் இப்போது அதோ தெரியும் ஆரண்யத்தி லிருப்பார் என்று சொல்ல, அவனும் காட்டில் நுழைந்து தேடி பார்க்கலானான். அப்போது நளன் ஒரு மரத்தடியில் மண் புல் மீது உட்கார்ந்துக் கொண்டு ஊர்வன - நடப்பன - பறப்பன - முதலிய ஜீவ ஜெந்துக்களுக்கு புல் முதலிய ஆகாராதிகள் கொடுத்துக் கொண்டிருக்க, கண்ட இராவணன் இது சமயம் நாம் அவனை சந்தித்தால் நமக்கென்ன மரியாதை யளிக்கப் போவான்? அவனோடு நாமும் மண்ணில் கேவல நிலையில் உட்காரத்தானே உபசரிப்பான். வேறு என்ன செய்வான்? சரி! சரி! இப்போது சந்திப்பது சரியன்று இவ்விடமே கொஞ்சம் தூரமாக இருக்கலாம், அவன் காலவரை முடிந்ததும் கொலுவிற் போய் யமருவான்; அப்போது சந்தித்தால் சகல உபசார மரியாதைகள் செய்வான். ஆனதால் இப்போது போகப் படாதென்று கொஞ்சம் தூரத்திலேயே நின்று விட்டான்.

இராவணன் இவ்வாறிருக்க, இவன் வந்த சங்கையும், நிகழ்ந்த விஷயமும் திரிகால ஞானத்தா லுணர்ந்த நளன், தானும் இது விஷயங்களைத் தெரியாதவனைப் போலிருந்து தன் காரியங்களை முடித்துக் கொண்டு, வளமைப் படி [illegible] இராஜ சிம்மாசனத்தில் வந்து வீற்றிருந்



தான், அது சமயம் முன்னமே எதிர் பார்த்திருந்த இராவணன் இராஜ சமூகம் வந்து சேர்ந்தான் வருகையைக் கண்ட நளன், இராவணனுக்கு வந்தனை உபசாரம் செய்து ஒரு உயரிய ஆசனத்தி லமரச் செய்து, க்ஷேம லாபம் விசாரித்து, சில நன் மார்க்க விஷயங்களை சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நளன் இராவணனை நோக்கி, ஓ இராவணேஸ்வரா! உன்னுடைய ஈஸ்வரத் தத்துவமும், பராக்கிரமும் என்னால் சொல்லத் தரமல்ல: அஷ்டதிக்கும் நன்கு தெரியும். ஆனால் எனக்கு ஒரு பேராவல் நெடுநாளாக இருக்கிறது அதாவது கைலாயத்திற்குப்போய் சாக்ஷாத் சிவபெருமானை தரிசிக்க வேண்டுமென்பதே. அப்படிப் போவதற்கு என்னாலியலாத காரியம்; நீர் அடிக்கடி கைலாயம் போகப் பட்டவர்; உன்னோடு வந்தால் சுலபமாகக் கொடு போய் காண்பிப்பீர். எனது பூர்வ புண்ய பலனும் தேவரீர் கோரியதெய்வம் குறுக்கே வந்து விட்டீர் என்றான். கேட்ட இராவணன், ஆனால் அதற்கென்ன ஆட்சேபனை இதோ இப்போதே போகலாம் வாருமென நளனை அழைத்துக் கொண்டு கைலாயத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்.

இருவரும் சம்பாஷித்துக்கொண்டே நடந்து வருகையில் வழியில் அனேக பேய்கணங்கள் பூதகணங்கள் பெருபெரு கூடையில் இடை விடாது சாணங்களைக் கொண்டுவந்து பெருமலை போல் குவித்துக் கொண்டிருந்தது அதைக் கண்ணுற்ற இராவணன் நளனை நோக்கி, அப்பா நளனே! இது என்ன இவ்வாறு சாணங்களை மலை போல குவிக்கின்றதே யென்றான். நளனும் இராவணேஸ்வரா!

இது காறும் யான் இவ்வழி வந்தறியாதவன் எனக்கென்னத் தெரியும்? நீரே விசாரியுமே உள்ளது தெரிந்து விடுகிறதென, ராவணனும் அப்பேய் பூதகணங்களை வினவ, அதுகள் ஐயா! இலங்காபுரியில் இராவணனென்றொரு மகா பாதகன் இருக்கிறானாம். அவன் தேவர்கட்கும் மற்றவர்கட்கும் கொடிய இடுக்கணைச் செய்து வருகிறானாம். அந்த மகாபாதகன் இறந்தால் இங்கு வந்து இந்த சாணத்தையே தின்று, இம்மலையிலேயே புரளவேண்டுமென்றும் அதற்காக அவன் இறந்து வருவதற்குள் இவ்வாறு குவித்தாக வேணுமென்று ஈஸ்வர கட்டளையென்றதுகள்.

அது கேட்ட ராவணன் ஒன்றும் பேசாது மவுனமாக வழிநடந்துக் கொண்டே வர, இன்னும் சிறிதுதூரம் சென்றதும் அனேக தெய்வகணங்கள் பெரு பெரு கூடைகளில் புஷ்பங்களை கொண்டு வந்து மலைப்போராக குவித்துக் கொண்டிருந்தன. அதனைப் பார்த்த ராவணன் நளனை நோக்கி, ஐயா நள பூபதியே! முன் சாண மலை மலையைக் கண்டோம்; இப்போது புஷ்ப மலையைக் கண்டோம் இதன் வரலாறு இன்னதென்று தெரியவில்லையே யென, நளனும் அதனையே விசாரித்தால் நன்கு தெரியுமென, அவ்வாறே கேட்க, அதுகள், ஐயா! பூவுலகின்கண் நளன் நளன் என்றொரு திரிகாலக் ஞான புண்ணிய புருஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் அந்திய காலமாகி வந்தால் இந்த புஷ்ப மலை மீதே சயனித்து, சந்தோஷ ஆனந்தமா யிருக்கும் இந்த புஷ்ப மலையைக் குவிக்கும்படி எங்களுக்கு ஈஸ்வர ஆக்ஞை யென்றதுகள், அதையுங் கேட்ட ராவணன் முன்போலவே ஒன்றும் பேசாது மவுனமாக வழி நடந்து வரலாகி இருவரும் கைலை மலைக்குப் போய், உமா மகேஸ்வரரை தரிசனம் செய்து விட்டுத்



திரும்பி நளனுடைய சுதேச கொலு மண்டபம் வந்து சேர்ந்தார்கள்.

அப்பால் இராவணன் தன் சுதேச லங்கைக்குப்போக வேண்டிய தாகையால், புறப்பட எத்தனித்து சிறிது மயக்கங் கொண்டு திகைக்க, அக்குறிப்பை யுணர்ந்த நளன், என் இராவணா! மயக்கங் கொள்ளுகிறீரென, இராவணனும், ஐயா நள பூபதியே! நாமிருவரும் கைலைக்குப் போகும்போது இடையில் கண்ட இரண்டு மலைகளில் எனக்காக நியமித்து நடந்தேறி வரும் சாணமலையை நான் நிவர்த்தித்து மோக்ஷ பூமியை அடைவதெனக் கேட்க, நளனும் ராவணனை நோக்கி, அதை முன்னிட்டு நான் ஒரு உபாயம் சொல்கிறேன் கேளும்! நீர் இதுகாறும் செய்து வரும் தேவரிடுக்க பாபக் கிருத்தியங்களுக்கு தேவர்கள் சகிக்கக் கூடாமையால், அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும் லக்ஷ்மீ தேவியும் அயோத்தியில் தசரத சக்கிரவர்த்தியால் ஸ்ரீராம மூர்த்தியாகவும், ஜனக மகா ராஜாவிடம் ஜானகி யம்மனாகவும் திருவவதாரம் செய்யப் போகிறார்கள். அந்த ஸ்ரீராமபிரானுடைய ராமாயணம் உனது சிரசைக் கொய்தால் அதனால் உனது கொடிய பாபங்களெல்லாம் நிவர்த்தியாகி, சாணமலை யகன்று மோக்ஷ மடைவாய்! இல்லையேல் நீ அந்த சாணமலையைத் தான் அனுபவிக்க வேண்டும், என்றான். அதற்கு ராவணன், நான் இலங்கையில் இருக்க அயோத்தியிலிருக்கும் ஸ்ரீராமபிரானுடைய பாணம் என் சிரசை எதைப் பற்று எவ்வாறு கொல்லுமென, அதற்கு நளன் ராவணனை நோக்கி, அதை முன்னிட்டு நீ அஞ்சேல். அவ்வாறு திருவவதாரமாகும் ஸ்ரீராமருக்கு மகுடாபிஷேக மென்று ஓர் நாள் குரு மூர்த்தியாகிய

இது காறும் யான் இவ்வழி வந்தறியாதவன் எனக்கென்
னத் தெரியும்? நீரே விசாரியுமே உள்ளது தெரிந்து விடு
கிறதென, ராவணனும் அப்பேய் பூதகணங்களை வினவ,
அதுகள் ஐயா! இலங்காபுரியில் இராவண னென்றொரு
மகா பாதகன் இருக்கிறானும். அவன் தேவர் கட்கும்
மற்றவர்கட்கும் கொடிய இடுக்கண்களைச் செய்து வருகிறானும்.
அந்த மகாபாதகன் இறந்தால் இங்கு வந்து இந்த சாணத்
தையே தின்று, இம்மலையிலேயே புரளவேண்டுமென்றும்
அதற்காக அவன் இறந்து வருவதற்குள் இவ்வாறு குவித்
தாக வேணுமென்று ஈஸ்வர கட்டளை யென்றதுகள்.

அது கேட்ட ராவணன் ஒன்றும் பேசாது மவுன
மாக வழிநடந்துக் கொண்டே வர, இன்னும் சிறிது தூரம்
சென்றதும் அனேக தெய்வ கணங்கள் பெரு பெரு கூடை
களில் புஷ்பங்களை கொண்டு வந்து மலைப்போராக குவித்
துக் கொண்டிருந்தன. அதனைப் பார்த்த ராவணன்
நளனை நோக்கி, ஐயா நள பூபதியே! முன் சாண மலை
மலையைக் கண்டோம்: இப்போது புஷ்ப மலையைக் கண்
டோம் இதன் வரலாறு இன்னதென்று தெரியவில்லையே
யென, நளனும் அதனையே விசாரித்தால் நன்கு தெரியு
மென, அவ்வாறே கேட்க, அதுகள், ஐயா! பூவுலகின்
கண் நளன் நளன் என்றொரு திரிகாலக் ஞான புண்ணி
புருஷன் ஒருவர் இருக்கிறாராம்; அவர் அந்திய காலமாகி
வந்தால் இந்த புஷ்ப மலை மீதே சயனித்து, சந்தோஷ
ஆனந்தமா யிருக்கும் இந்த புஷ்ப மலையைக் குவிக்கும்படி
எங்களுக்கு ஈஸ்வர ஆக்ஞை யென்றதுகள், அதையுங்
கேட்ட ராவணன் முன்போலவே ஒன்றும் பேசாது மவுன
மாக வழி நடந்து வரலானி இருவரும் கைலை மலைக்குப்
போய், உமா மகேஸ்வரரை தரிசனம் செய்து விட்டுத்



திரும்பி நளனுடைய சுதேச கொலு மண்டபம் வந்து
சேர்ந்தார்கள்.

அப்பால் இராவணன் தன் சுதேச லங்கைக்குப்போக
வேண்டிய தாகையால், புறப்பட எத்தனித்து சிறிது
மயக்கங் கொண்டு திகைக்க, அக்குறிப்பை யுணர்ந்த
நளன், ஏன் இராவணா! மயக்கங் கொள்ளுகிறீரென,
இராவணனும், ஐயா நள பூபதியே! நாமிருவரும் கைலைக்
குப் போகும்போது இடையில் கண்ட இரண்டு மலைகளில்
எனக்காக நியமித்து நடந்தேறி வரும் சாணமலையை நான்
நிவர்த்தித்து மோக்ஷ பூமியை அடைவதெனக் கேட்க,
நளனும் ராவணனை நோக்கி, அதை முன்னிட்டு நான் ஒரு
உபாயம் சொல்லுகிறேன் கேளும்! நீர் இது காறும் செய்து
வரும் தேவரிடுக்க பாபக் கிருத்தியங்களுக்கு தேவர்கள்
சகிக்கக் கூடாமையால், அவர்கள் வேண்டு கோளுக்
கிணங்கி, ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும் லக்ஷ்மீ தேவியும்
அயோத்தியில் தசரத சக்கிரவர்த்தியால் ஸ்ரீராம மூர்த்தி
யாகவும், ஜனக மகா ராஜாவிடம் ஜானகி யம்மனாகவும்
திருவவதாரம் செய்யப் போகிறார்கள். அந்த ஸ்ரீராம
பிரானுடைய ராமாயணம் உனது சிரசைக் கொய்தால்
அதனால் உனது கொடிய பாபங்க ளெல்லாம் நிவர்த்தி
யாகி, சாணமலை யகன்று மோக்ஷ மடைவாய்! இல்லை
யேல் நீ அந்த சாணமலையைத் தான் அநுபவிக்க வேண்
டும், என்றான். அதற்கு ராவணன், நான் இலங்கையில்
இருக்க அயோத்தி யிருக்கும் ஸ்ரீராமபிரானுடைய பாணம்
என் சிரசை எதைப் பற்று எவ்வாறு கொல்லுமென,
அதற்கு நளன் ராவணனை நோக்கி, அதை முன்னிட்டு நீ
அஞ்சேல். அவ்வாறு திருவவதார மாகும் ஸ்ரீராமருக்கு
மகுடாபிஷேக மென்று ஓர் நாள் குரு மூர்த்தியாகிய

ஸ்ரீ வசிஷ்ட முனிவர் நியமிப்பார்; அந்நாள் பட்டாபிஷேகத்திற் கல்ல, அவ்வேளையில் விவகாரத்தை முன்னிட்டு அவரது பாதங்களை எடுத்து வைத்து வெளிவரவும், உனது சிரம் அறுந்துவிழவும் தான் நியமிப்பார். அது போலவே ஸ்ரீராமரும் தனது சீதா பிராட்டியோடு ஆரண்ய வாசம் வருவார்கள், அப்போது உன் தங்கையால் கானகத்தில் லோக மாதாவாகிய சீதாதேவி வந்த சேதி யுனக்குத் தெரியவரும், அப்போது அந்த சீதா தேவியை எந்த விதத்திலாவது களவாடி உன் அடைக்கல மாக கொண்டு வந்து வைத்துக் கொண்டால் அதை முன்னி ராமமூர்த்தி உன்னைக் கொல்லுவார் அப்போது உன்பாபம் விமோசன மோக்ஷ மடைவாய், அப்போதும் நீ பிடித்த பிடி ஒரே பிடிவாத மாக சீதையை விடாம லிருந்தால் தான், சத்தியத்திற்குக் கட்டுப் பட்ட ஸ்ரீராம பிரான் உன்னைக் கொல்லுவார். அப்படிக் கில்லாமல் அவர்கள் வேண்டும் வேண்டலுக்கும், மற்றவர்கள் சொல்லும் நியாயத்திற்கும் சமாதானத்திற்கும் சம்மதமாகி சீதாங்கனியை விட்டு விட்டால் அந்த ராம பிரான் உன்னை எப்படியுங் கொல்ல மாட்டார். விட்டுப் போடுவார். இதுவே இரகசிய விஷயங்களாகும், இவ்விஷயங்களை உன் மனதில் பூரண ஞாபகமாக வைப்பாய், என்று சொல்ல, கேட்ட ராவணேஸ்வரன் சங்கை தெளிந்து, விடை பெற்று, தன்னகரம் வந்து, நிகழ்ந்தவை யெல்லாம் மனைவியாகிய வண்டோதரிக்கு விளக்கமாக தான் கூறிய முழுதும் தெரியப் படுத்தி விட்டு, தானும் அவ்விஷயங்களைப் பிறர்க்குத் தெரியா வண்ணம் மனதிலேயே அதே விரதம் பூண்டவனாக இருந்தான்.

இது வரையிலும் இராவணன் செய்து வரும் பாபக் கர்மங்களும், அதற்காக ஏற்ப் பட்டிருக்கும் சாணமலையை



யும், அவைகள் நிவர்த்தியாகி மோக்ஷ மடையும் சூட்சுமங்க ளுபதேசமும் கேட்டு மனம் நொந்தவளாகி, தன்னுடைய பதி விரதா தர்மத்தையே பக்தி ஞான வைராக்கிய மாகக் கொண்டு, அன்று முதல் இரவும் பகலும் இடைவிடாது அந்தர்முக மாகவே, ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை மனதில் நிறுத்தி, ஓ பக்த வச்சலா! பரம தயாளா! அகில லோக சராசர ஆன்ம பூஜிதா! புருஷோத்தமா! நெஞ்சை யொளித் தொரு வஞ்சக மில்லை யென்பதாய் என் மனதில் வியாபாரஞ் செய்யும் விஷயங்க ளெல்லாம் உனக்குத் தெரியாதது ஒன்று மில்லை! ஏதோ என் புருஷன் இது காறும் செய்து வந்த தெல்லாம் அநியாய கிருத்தியங்களே யென்பது நன்கு தெரிந்த விஷயங்களே! நான் எவ்வளவு உத்தம விரதானுஷ்டானங்க ளோடு இருந்த போதிலும், சர்வ காரியங்களிலும் மனோசாக்ஷிக்கு விரோத மில்லாமல் நடந்து வந்த போதிலும், கற்பில் அருந்ததிக்குச் சமான மாகிய வண்டோதரி யென திரிலோகமும் புகழ்ந்த போதிலும், தன்னுபகன் நரகத்தி லின்ன லுற நான் மாத்திரம் மோக்ஷத்தி லின்புற்றிருப்பது பதிவிரதா தர்ம மல்லவே? இதுவும் கடவுளாகிய தேவரீருக்குத் தெரிந்த விஷயமே! என் புருஷன் சாணமலைக்குச் செல்லாமல் நானும் என் புருஷனுமாக மோக்ஷ பூமியை அடைய வேண்டும் இதற்கு மூல காரண புருஷன் நீரே யன்றி மற்றவர்கள் உரியவர்களல்ல. எல்லாம் தெரிந்த உமக்கு யான் என்னென் றெடுத்துரைக்க மாட்டுவேன் ஏ அந்தரங்க வாசா! சர்வாந்தர்யாமியாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தி எப்போது அயோத்தியில் தசரத சக்கிரவர்த்திக்குத் திருக் குமாராக அவதாரஞ் செய்வாரோ! எப்போது சீதாதேவி யோடு ஆரண்யம் வருவாரோ! எப்போது என்னுபகன் அத்தேவியை

எடுத்து வந்து சிறைப் படுத்துவாரோ! அந்தனல் அந்த ராம பிரானுக்கு கோபமும் வைராக்யமு முண்டாகி, ஏக பத்னி, ஏக வார்த்தை, ஏக பாணம் என்ற வைராக்கிய கோலத்தோடு சீற்றங் கொண்டு என்னுயகன் உயிரைப் பிரிப்பதற்கு பாணப் பிரயோகஞ் செய்வாரோ? அதனால் இது காறும் அடாது செய்து வந்த பாபக் கிருத்தியங்களெல்லாம் விமோசன மாகி, மோக்ஷ பூமிக்கு அதிகாரி யாவாரோ! அப்போது அவருடன் நானும் சதிபதி கோலமாக புண்ணிய பூமியிற் சென்று கன்னிய மாக வாழ்ந்திருப் பேனே! அடியாள் கோரும் ஆத்ம பூஜா விண்ணப்பம் எப்போது நிறை வேறுமோ! வென்று அன்று தொட்டு மானஸ பூஜை செய்வாளாயினள்.

இஃதிப்படி யிருக்க, தேவர்கள் வேண்டு கோளுக்கிணங்கியும், கலங்காத கற்பு நிலைமை வாய்ந்த வண்டோதரியின் மானஸ பூஜை நிறை வேறவும், சேஷ சயன - சங்கு - சக்கர-கதா-கட்க-கோதண்ட - லக்ஷ்மீ நாராயண மூர்த்தி ராம - லக்ஷ்மண - பரத - சத்ருக்க. சீதாவாக திருவதாரஞ் செய்தருளி, வசிஷ்டர் வாக்கியப்படி தாடகை சம்ஹாரஞ் செய்து, அகல்யா சாப விமோசனஞ் செய்து, சீதா தேவியை திருக்கல்யாணஞ் செய்து இன்புற்றிருக்கு நாளில், பூர்வ பிராரத்துவப்படி ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேக மென வசிஷ்ட முனிவர் திரு நாள் நியமிக்க, அம்முகூர்த்த வேளைப்படி கைகேசியால் தூண்டுத லிடப் பட்டு, அதனால் பிதுர் வாக்கிய பரிபாலனத்தை யேற்று, தந்தை தாயையும் குருவையும் போற்றி, பதினன் காண்டு காடுறையுமாறு ஸ்ரீராமர் - லக்ஷ்மணர் - சீதா தேவியோடு வெளியாகி ஆரண்யத்தி லிருக்கும் போது தன் தங்கை சூர்ப்பனகையால், சீதா தேவியின் ரூப லாவண்ய மையலி லாழ்ந்து, சித்த மயக்கங் கொண்டு, மாறு வேடம் பூண்டு சீதையைக் களவாடி அசோக வனத்தில் கொண்டு போய் சிறை படுத்தி வைத்தான். இந்த சீதா தேவியை விட்டு விட இவனுக்கு புத்தி கூறுதார் யாரு மில்லை இத்தனைக்கும் ஒரு போதும் விடத்துணிந்தவனல்ல. தான் பிடித்த பிடி ஒரே வைராக்கிய மாக மனதை நிறுத்தி விட்டான் தெலுங்கு பாஷைக்கும், சாம வேதத்திற்கும், சங்கீதத்திற்கும், சிவ பக்திக்கும் அதிகாரியாயும், திரிகால ஞானமுடையவ னாகவும் விளங்குத்தக்க ஈஸ்வர தத்துவ இராவணேஸ்வரன் தன் காரியக் காரணத்தை முன்னிட்டே இவ்வாறு சிறைச் செய்தானேயொழிய, திரிகால ஞானத்தால் ஸ்ரீராமனே ஸ்ரீமந் நாராயண மூர்த்தி யென்றும், சீதா தேவியே லோக மாதாவாகி ஸ்ரீ மஹா லக்ஷ்மி யென்றுந் தெரிந்த இராவணன் காமாந்த காரத்தால் சீதையின் மீது மோகங் கொண்டவனல்ல.



மாரீசனாகிய பொன் மான் சூட்சியால், இராமலக்ஷ்மணர் பிரிந்த காலத்தில், சீதாவை இராவணன் களவாடிப் போனதை ஜடாயு வால் தெரிந்து, ஆஞ்சநேயரை யேற்று, சுக்ரீபனை நேசித்து, யந்திரத்தை அகற்றி, மரா மரங்களைத் துளைத்து, வாலியை வதைத்து, ஜாம்புவந்தர் அங்கதன் முதலாவரோடு வானர சேனைகளை கூட்டி, சேது பந்தனங் கட்டி, கடல் கடந்து இலங்கையின் எல்லையை மிதித்து, இராவணன் கோட்டையை நோக்கினர்.

அந்த சமயம் வண்டோதரி யானவள் தனது தாதிமார் வர்க்கத்தோடு தனது உப்பரிகையின் மீது உலாவி

கொண்டிருக்க, அப்போது இலங்கைக்குள் வானர சேனை கூட்டங்களோடு வெகு தூரத்தில் வருகும் ஸ்ரீராமருடைய உருவம் தோற்ற முண்டாகியது. அத்தோற்ற மான முதலிலே பிர்ம வெளிச்சம் போல் விளங்கி அதனுள் நிறைந்த வானர சேனைகளும், அதன் மத்தியில் நடு நாயக மாக ஸ்ரீராம மூர்த்தியானவர்; ஸ்ரீமந் நாராயண சொரூப மாக சங்கு - சக்கர - கதா - கட்க - கோதண்டத் தோடு மார்பில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி யோடு தீர்க்க தரிசனங்கொடுத் தார். அப்போது வண்டோதரி, உடல் நடுங்கி, உள்ள முருகி, அன்பு பெருகி, ஆ என் ஆண்டவனே! இன்று தான் என்னுடைய மானஸ பூஜா பலன் நிறை வேறியது. இன்று தான் சதிபதியாகிய நாங்களிருவரும் பாவ விமோ சனமாகி கிருதார்த்தர்களானோம்! இன்றே நரக பூமியை மறந்தோம்! இன்றே மோக்ஷ பூமியை யடைந்தோம்! என் கோரிக்கையைப் போல் இது வரையிலும் நடந்தேறி வந்தது பெரிதல்ல. மற்ற குறையையும் பூர்த்தி செய்து எனது எண்ணத்தை பூர்த்தி செய்ய வேண்டு மென்று சங்கல்பங் கொண்டு,

“சாந்தாகாரம் புஜங்கசயனம் பத்மநாபம் ஸுரேசம்
விஸ்வாகாரம் ககனசத்ருஷம் மேகவர்ணம் சுபாங்கம்
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகிஹிருத்யானகம்யம்
வந்தேஅம்பவபயகரம் சர்வலோக ஐய்க்யநாதம்”

என்று தோத்திரஞ் செய்யலானாள். அவளோடு புடை சூழ்ந்திருந்த அனேக தாதிகளில் சில புண்ணிய சீலர்களுக் கெல்லாம் ஒவ்வொருத்தர்களில், ஒருவள் கால் தெரிகிற தென்றாள்; ஒருவள் கை தெரிகிற தென்றாள்; ஒருவள் முகம் தெரிகிற தென்றாள்; இவ்வாறு ஒவ்வொரு



வருக்கும் ஒவ்வொரு அவயவங்கள் தங்கள் தங்கள் புண் ணியவசத்திற் கேற்றாய் பிராப்தப்படி தரிசனமாக, பஞ்ச தேவியில் ஒருவளாகிய வண்டோதரிக்கு மாத்திரம் பரி பூரண தரிசனந் தந்தருளினார். இவ்வாறு ஸ்ரீராம பிரா னுக்கு பூர்வக்ஞானமும் தரிசன கோலமும் உண்டாகியது மூன்று விடமாகும், அதாவது, ஜனித்த போது தாயா ராகிய கோசலை தேவிக்குத் தரிசனந் தந்தருளினார். பிறகு மரா மரங்களை துளைத்த போது, அதற்குக் காரண காரிய மாகிய ஆதிசேஷனுடைய அடி முடியும் தெரியலானார். இப்போது வண்டோதரியார் கற்பின் மகத்துவ கருத்து நிறைவேறுதற்கு பஞ்சாயுத லக்ஷ்மி யுடன் காட்சித் தந் தருளினார்.

அப்பால் ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் பெரும் போருண்டாகி, தானும் எவ்வளவு சமாதானஞ் சொல்லி யும் கேளாமற் படி, ஒரே பிடிவாதமாக சீதையை விட மாட்டேனென்று சொல்லி, முடிவில் பிராரத்துவப் படி ஸ்ரீராம பாணத்தைப் பிரயோகப் படுத்த,

“ விடங்கொண்ட மீனைப்போலும்
வெந்தழன் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயில்
பற்றியதேரை போலும்
திடங்கொண்ட ராமபாணம்
செறுகளத்துற்ற போழ்து
கடன்கொண்டார் நெஞ்சம்போல
கலங்கினானிலங்கை வேந்தன்.”

என ஒன்றுந் தோன்றாதவனாகி, ஸ்ரீராம பிரானை நோக்கி, ஓ தேவர்களுக் கெல்லாம் அதிபதி யாகிய தேவ

தேவனே! ஸ்ரீ லக்ஷ்மி சமேதனே! துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலன சத்திய மூர்த்தியே! யான் இது காறும் செய்து வந்த தேவாதி இடுக்கண்களெல்லாம் உமக்குத் தெரிந்த விஷயமே! எனக்காக முன்னமே ஏற்பாடு செய்திருக்கும் சாவையும் சகமும் உமக்குத்தெரிந்த விஷயமே! இது பற்றியே எனதுடைய உபதேச வாக்கியப் படி இவ்வாறெல்லாம் நான் செய்து வந்ததும் உமக்குத் தெரிந்த விஷயமே! இது வரையிலும் நான் செய்த குற்றம் குறைகளை யெல்லாம் மன்னித்தருள வேண்டும். இப்போது நான் மனப்பூர்வமாக அந்தரங்க பூஜா நமஸ்காரம் செய்கிறேன். இப்போது தாங்கள் பிரயோகப் படுத்திய இராம பாணத்தால் என் சிரமறுந்து கீழே விழாமல் ககனமாக எழும்பி தங்களுடைய திருவடிகமலங்களின் மேல் விழுந்து பாபங்களெல்லா மொழிந்து புண்ணிய சரீரம் பெற்று, நானும் என் பத்தினியும் மோக்ஷத்தை யடைய வரம் வேண்டு மென்று பிரார்த்திக்க, எல்லா மறிந்த வல்லவராகிய ஸ்ரீராம பிரான் தெரிந்து, கடைக்கண் கருணை நோக்கம் கொண்டு, மண்டோதரியின் பதி பக்தியை மகிழ்ந்து புகழ்ந்து, அவ்வாறே நிகழும் படி திருவருள் காக்க, அப்போ தந்த ராமபாணம் இராவணனுடைய சிரங்களைக் கொய்து, ராமருடைய பாதாரவிந்தங்களின் மேல் விழ, உள்ளமு வந்து மனத்தின் கண்மணே! இன்றோடு உன்னுடைய பாபங்களெல்லாம் விமோசனமாகி விட்டது; இனிமேல் நீயும் உன் பத்தினியும் மோக்ஷத்தை யடைவீர்க ளென்று திருவுள்ளமு வந்தருளினார். உடனே இராவணேஸ்வரனுடைய ஆன்மா தூல தேகத்தை விட்டு சூட்சம சரீரம் பெற்றது.



படு களத்தில் இராவணன் உயிர் நீங்கினதை கேள்வியுற்ற மண்டோதரி, அடி சாய்ந்த மரம் போல் விழுந்து புரண்டழுது எழுந்து, படுகளத்திற்கு வந்து நாயகனைக் கண்டு புலம்பி, ஸ்ரீராமபிரானையும் ஸ்ரீ சீதாதேவியையும்,

“ காராயவண்ண மணிவண்ணனை
கனசங்கு சக்கரனே
சீராயிலை மலர்வாயதுய
சீராமராமனெனவே
தாராயவாழ்வு தருசெஞ்சகுழ
தாமோதராய நமஓம்
நாராயணாய நமவாமனாய
நமகேசவாய நமவே ”

எனப் பலவாறாகத் தோத்தரித்து, அக்கினிவளர்த்து அதிற் பிரவேசமாகி, பொய்யுடலை நீத்து மெய்யுடலைப் பெற்று, தானும் தனது பதியும் சூட்சம சரீரத்துடன், இகமும் பரமும் புகழவும், தேவர்கள் புஷ்பமாரி சொரியவும், மண்ணாட்டை விட்டு பொன்னாடாகிய புண்ணிய பூமியை அடைந்தார்கள்.

இராவணேஸ்வரன் கைலை மலையை அசக்கச் செய்த வல்லவன். தன் சிரசை வீணையாக மீட்டி சாம வேதம் பொழிந்த ஈஸ்வர பக்தன். யாவருக்கும் அடங்காத சூரன். தேவ தேவர்களும் அடங்கும் படியான ஆக்கினையைச் செலுத்தப் பட்டவன். எல்லோருக்கும் இடுக்கண்களையும், துன்பங்களையும், பாவங்களையும் இடைவிடாது செய்யும் மகா பாதகன். பாபமே ஒரு சரீர உருவாய் அமையப் பெற்ற மகா சண்டாளன். அண்ட சராசரம்

களையும் அடக்கியாளும் லங்கேஸ்வரன், கற்புடையோர்
களைக் கருதும் காமாந்தகார கர்மேஸ்வரன். இத்தகை
யோன் அடைவதற்கு இருபத்தொன்றாகிய ரௌரவாதி
நரகங்களும் போதாதென்றும் சொல்லும் படியான மகா
பாதகன். இப்படிப்பட்ட பாதகங்களெல்லாம், தனது
பத்னியாகிய வண்டோதரியின் பதிவிரதா மகத்துவத்
தால், தான் கோரிய படியே எண்ணங்களெல்லாம் நிறை
வேறி, தன்னாயகனுக் குற்ற பாவங்களெல்லாம் அருண
னைக் கண்ட பனிபோல் அகன்று பரிசுத்த புருஷனாக்கி
தானும் தன்னாயகனும், இகத்திலிருந்தது போல பர
மாகிய மோக்ஷ பூமியிலும் சதிபதி யிருவரும் இன்புற்றிருப்
பதும், மற்றும் அடையத் தக்க ஆனந்தங்களை அடைந்த
தும் மஹா மகத்துவம் பொருந்திய கற்பரசியாகிய வண்
டோதரியின் கற்பின் மகத்துவமே யன்றி வேறல்ல என்ப
தாகும்.

---

# 7 = சீதாதேவி சரித்திரம்.

—*°*—

அயோத்தியை அரசு நடாத்தி வந்த தசரத சக்ரவர்த்
திக்கு நெடுங்காலம் மகப் பேரில்லாமல் வருத்த முற்று
தனது குருவாகிய வசிஷ்டருடைய கருணை வாக்குப் படி



கலைக் கோட்டு மகாரிஷியால் யாகஞ் செய்து, அந்த
யாகத்தில் பூரண ஆகுதி கொடுக்க, அக்காலத்தில் ஒரு
பூதம் பொற் கிண்ணத்தில் பாயசங் கொண்டு வர, அதைக்
கண்டு வாங்கி சரியாகப் பகுத்து ஒரு பாகத்தைக் கௌச
லைக்கும், மற்றொரு பாகத்தைக் கைகேசிக்கும் அளிக்க,
அதைக் கண்டு முகம் வாடி நின்ற சுமித்திரைக்கு அவ்வி
ரண்டிலும் பாதி பெற்றுக் கொடுக்க, அம்மூவரும் நமஸ்
கரித்து வாங்கிப் புசித்துக் கர்ப்பவதிகளாகி, மூத்த
கௌசலை கர்ப்பத்தில் ஸ்ரீராமரும், கைகேசியினிடத்தில்
பரதனும், சுமித்திரை வயிற்றில் இலக்ஷ்மணனுஞ் சத்து
ருக்கனும் சுபமுகூர்த்தத்தில் நான்கு வேதங்களைப் போற்
பிறந்தனர். அப்புத்திரரை அரசன் கண்டு களித்து, ஜாத
கம் முதலிய சட் கருமங்களும் நடாற்றி வளர்த்து வர,
அந்தப் பிள்ளைகள் நால்வரும் சுக்கிலப் பக்ஷ சந்திரனைப்
போல் விர்த்தியடைந்து வளர்ந்து வந்தனர்.

இவர்களிப்படி யிருக்க, மிதிலா புரியை அரசு
நடாத்தி வந்த ஜனகராஜனுக்குப் புத்திரப் பேறில்லாமல்
விசன முற்று தவசு புரிய, முதலில் ஒரு வில்லும் இரண்டாந்
தடவை பேழையில் சீதாங்கனியும் கிடைக்கப் பெற்று,
இதுவே நமக்கு ஈஸ்வரப் பிராப்த மென்று, அக்குழவிக்கு
ஜானகி என்று திரு நாமஞ் சூட்டி, நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமாக வளர்த்து, அவ்வரிய பெண்
மணியாகிய ஜானகி மங்கைப்பருவ மடைந்து இருக்க, இம்
மங்கைக் கரசிக்கு தக்க நாயகன் வேண்டுமே என்று எண்
ணங் கொண்டவனாக இருந்தான்.

அப்போது வசிஷ்ட மகா முனியால் சகல வேதாக
மங்களும் தனுர்வேத சாஸ்திரங்களும், யானை - குதிரை -

இரத முதலியவைகள் செலுத்தலும் - நடத்தலும் - ஆகிய
இவைகளோடு, சாந்தம் - பொறுமை - நற்குணம்-தருமம்
தயை - வீரப் பிரதாபம் - ஊக்கம் இவைக ளெல்லாருந்
தப்புவமையில்லாமல் விளங்கக் கற்றனர் அதைக் கண்
டுங் கேட்ட தசரத மகாராஜன் பரமானந்த சந்தோஷ
மடைந் திருந்தார். அப்போது கௌசிகர் தசரதனை
நோக்கி தன் யாகத்தைப் பூர்த்தி செய்ய ஸ்ரீ ராமரை
வேண்டி, வசிஷ்டரால் மனந் தேறி அனுப்பலானார்.

அப்பால் விஸ்வாமித்திரன் மகிழ்ந்து, தசரத மகா
ராஜனைப் புகழ்ந்து இராமலக்ஷ்மண இருவரையும் அழைத்
துக் கொண்டு போய் ராக்ஷச மாயையும், அவர்கள் செய்
யும் அக்கிரமத்தையுஞ் சொல்லி, மந்திரார்த்தங்களும்
உபதேசித்து, அவ்விருவரையுந் தனதிரண்டு பக்கங்களி
லுங் காவல் வைத்து யாகத்தைச் செய்தனர் அப்போது
தாடகை வந்து மலை மாமுதலியவற்றை யெறிந்து யாகத்தை
யழிக்க, ஸ்ரீராமர் பெண்ணென்றெண்ணி யிளைக்க, அதைக்
கண்டு கௌசிகர் தருமஞ் சொல்லக் கேட்டு, விண்ணின்றி
திரியும் மகம் போற் குன்றென்று பூமியில் விழக்கணை
தொடுத்துத் தாடகையைக் கொன்றார். உடனே அவள்
பிள்ளைகளாகிய சுவாகு - மாரீசன் இவ்விருவரும் வந்து
வளைந்து கொடுமையாகிய யுத்தங்களைச் செய்தார்கள்.
அவர்கள் பேரிலும் திவ்யாஸ்திரங்களைத் தொடுத்து, வெகு
பேர் ராக்ஷதரை யொழித்து, உதிர வெள்ளமாக சுவா
குவை கொன்று, மாரீசன் தலைக்குங் கணைபிடித்தனர்.
அதைக் கண்டு மயங்கி யவன் மறைந்து கடலிடத்தொளித்
தனன் உடனே கௌசிகர் யாகத்தை நிறைவேற்றி,
அவிர்ப்பாகங் கொடுத்து, இவர்களிருவரையும் அழைத்
துக் கொண்டு போகும் போது, வழியில் கருங்கல்லாய்



கிடந்த வொரு பெண்ணை வரக்கண்டு, இதென்ன வென்று
ராமர் வினவ, அதற்குக் கௌசிகர் இம்மாது கௌதமர்
மனைவியாகிய அகலிகை; இவளை இந்திரன் கூடிக் கௌத
மர் சாபத்தால் ஆயிரங் கண்ணுற்றான்; இவள் கல்லானாள்;
என்று சொல்லக் கேட்ட ராமர் கருணை கூர்ந்து கௌதம
ரிடத்தி லொப்பி வைக்க, உடனே கௌசிகர் அவரை
அழைத்துக் கொண்டு மிதிலா புரிக்குச் சென்று, சபா
மண்டபத்தி லிருந்த சனகன் முதலிய வேந்தர் யாவருங்
களிக்க குல முறைகளெல்லாஞ் சொல்லி, இவனது கரத்
தின் திறத்தைத் தாடகை சுவாகு பேரிற் கண்டேன்.
காலின் திறத்தை கௌதமர் பாரியாளாகிய அகலிகை
அளவிற் கண்டேன் இன்று உன்னுடைய வில்லைக் காண
வும் வந்தே னென்று சொல்லினர்.

அதைக் கேட்ட சகலருஞ் சந்தோஷ முற்றார்கள்,
சதானந்தரும் உள்ளம் மகிழ்ந்தார். ஜனகராஜன் அப்
படியே நேரிடு மாகில் என்னுடைய தவப் பயனென்று
மகிழ்ந்து வில்லைக் கொண்டு வந்து சபையிற் போடவும்,
ஸ்ரீராமர் முகத்தை விஸ்வாமித்திரர் நாடவும், அவரவ்
வில்லை வளைத்துப் பேரொலி யுலகத்தை மூடவும், அது
கண்ட சுமங்கலிகள் மங்கள சோபனம் பாடவும்,
உடனே பாங்கிமார்கள் சீதையி னிடத்தி லோடவும்;
அவர்கள லங்கரித்து அழைத்து வந்தவுடன்; அச்சீதா
பிராட்டியாருக்கும் ஸ்ரீராமருக்கும் கலியாணங் கை கூட
வும், வெகு ஜனங்களும் பிராமணர்களும் புகழ்ந்து பாட
வும், வந்திருந்த தந்தை வருக்கத் தாருக்குந் தாய் வருக்
கத்தாருஞ் சந்தோஷத்துடன் கொண்டாட, மற்றத்
தம்பிமார் களுக்கும் விவாகஞ் செய்துக் கொண்டு, ஜனக
மகா ராஜனிடத்தில் விடைபெற்றுச் சதுரங்க சேனை

ளுஞ் சூழ வரும் போது, வழியிற் பரசு ராமர் வந்து தடுச் சிற்சில வார்த்தைகளைப் பேச, அப்போது ஸ்ரீராமர் பயப்படாமல் எதிர் நின்று அவரை வென்று ஓட்டிவிட்டு அவருடைய வில்லை வருணனிடத்தில் ஒப்பி வைத்து யாவரோடும் அயோத்தியா புரி வந்து யாவரும் மகிழ வாழ்ந்து வந்தனர்கள்.

இப்படியிருக்க ஒரு நாள் தசரதசக்கிரவர்த்தி விஸ்வாமித்திரர் முதலானோர்களை வணங்கி, இது வரையில் இந்த பூமியை யான் தாங்கி சுமந்து ஆண்டது போதும். இனி ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேகஞ் சூட்டி விட்டு நான் தபசு புரிய எண்ண முடையவனா யிருக்கிறேனெனவும், அதைக் கேட்ட பெரியோர்களெல்லாம் ஆனந்த முற்று நல்ல காரியமென்று முகூர்த்த நாள் நேமித்து, சகல சாமக்கிரியையும், புண்ணிய தீர்த்தங்களுஞ் சேகரிக்கச் செய்து, நாடு நகரமும் அலங்கரிக்கும் படி பறை யறைவித்து, பட்டினம் பரவும் புகழ் கொண்டாட மறு நாட் காலமே ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகமென்று விதிதப் படுத்தி, அன்றி ராத்திரி யாவருந் தங்கள் தங்களிடத்திற்குச் சென்றார்கள்,

இவை யனைத்திருந்தும் தெரிந்த மந்தரையானவள் பல துர்ப்போதனைகளையும் கைகேசிக்குச் சொல்லி குற்ற மற்ற அவள் மனதைக் கலைத்துத் தூண்டி முன் தசரத மகாராஜன் கொடுத்த இரண்டு வார்த்தை ஞாபக மூட்டி, ஒரு வரம் பரதன் நாடாளவும் ஒரு வரம் ஸ்ரீராமன் காடாளவும் கேட்கச் செய்து, அவளால் ஸ்ரீராமர் பதினான்கு வருஷம் ஆரண்யம் போக நேர்ந்து விடைபெற்று, தந்தையிருக்கும் அந்த புரத்திற்குப் போகாமல் தன் சொந்த



கிரகத்துக்கு வந்து, பட்டாபிஷேகத்திற் குரிய ஆடை ஆபரணங்களை யெல்லாங் களைந்து, சிற்றன்னையா லனுப்பி வைத்த மரவுரியுங் காவி வஸ்திரமுந் தரித்துக் கொண்டு காடே காணியாட்சியாகப் புறப்பட்டனர். அப்போது தேவர்களெல்லாம் புகழ்ந்து பாரிஜாத மலர்களைப் பொழிந்து, எங்கள் குறை யகற்று மேந்தலே! என்று வாழ்த்தினார்கள். அது காலையில் மரவுரியுடன் வருந் தன்மையைக் கண்ட வசிஷ்டர் முதலான மகா ரிஷிகளும் பல மன்னர்களும் மற்றையவர்களும் வாடிக் கலங்கி, ஏதொன்றுந் தோன்றாமல் ஏங்கியிருக்க, அதைக் கண்ட ராமசாமி யானவர் வசிஷ்டரை வணங்கி, தாயாகிய கௌசலையையுந் தொழுது, அந்தம்மாளும் விடைதர நீங்கிச் சீதையினிடத்திற்கு வர, அவ்வம்மன் கண்டு கலங்கிக் கூட வரும்படி யாகிய கொள்கை யோடு கூறி, அவரை யறிந் தழைத்துக் கொண்டு சுமித்திரையைக் கண்டிறைஞ்ச அக்கா லிவ்வார்த்தைகளைச் சொல்லக் கேட்டுத் தம்பி இலக்குமணர் கோபங் கொள்ள, அதை மாற்றி அவரையு மழைத்துக் கொண்டு, தாங்கள் மூவரும் புறப்பட்டு அயோத்தியை நீங்கினர்.

அப்போது துயரங் கொண்ட யாவரையும் நிறுத்தி விட்டு, தாங்கள் மூவருமாய் மூன்று யோசனை தூரஞ் சென்று கங்கையைக் கடந்து, குகப் பெருமானுடைய உறவு கொண்டு, அப்பால் சித்திர கூடம் போய்ச்சேர்ந்து அங்கு சிவனடியார் திருமாலடியார் முதலிய பெரியோர்கள் வந்து ஆசீர்வதிக்க அவர்களுக்கு வணங்கி உபசரித்துக் கொண்டிருக்கையில், ஸ்ரீராமர் வனம் சென்றதைக் கேட்ட தசரதர் ஆவி துறக்க வசிஷ்டரால் பரத சத்ருக் கொண்டு அதற்குரிய கரும விதிகளெல்லாம் புரிந்த பின்,

பரதனுக்கு உறுதி வாக்குக் கூறி பாதுகைக்கு மகுடம் சூட்டி அனுப்பி விட்டு மூவரும் நடக்கலானார்கள்.

இங்கே ஸ்ரீராமர் முன்னும் சீதா தேவியார் மத்தியிலும் லக்ஷ்மணர் பின்னுமாக நடந்து, மகாமுநிக்களைப் பணிந்து அவர்களால் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு வரும் போது விராதனென்னும் ராக்ஷசன் சீதையை எடுத்து தோளில் வைத்துக் கொண்டு போக, கண்ட ராமரும் லக்ஷ்மணரும் பயப்படாதே என்று விராதனைக் கொன்று விட்டு சீதையோடு மூவரும் சரபங்க ராசிரமம் வந்திருந்து, அப்பால் கோதாவரி தீர்த்தம் வந்து, இனி போனு விடும்படி யாகிய பர்ணக சாலையிற் சீதா தேவியும் ஸ்ரீராமரும் எழுந்தருளி யிருக்க, பஞ்சவடி தீரத்திலிருந்தார்கள்.

அப்போது சூர்பனகை யென்பவள் அவ்விடம் வந்து இராம லக்ஷ்மணனைக் கண்டு மோகித்து, அவ்வெண்ணம் நிறைவேருமையாகி, அவர்களால் மூக்கும் முலையும் பங்கமாகி, அவ்வித அபசார தண்டனையை சூதாகத் திருப்பி, அண்ணனாகிய ராவணனை யடுத்து, ஓ அண்ணா! என்ன அழகு! என்ன ஆச்சர்யம்! நான் வெளியே போய் வரும் போது பஞ்சவடி தீர்த்தத்தில் சீதாங்கனி யென்னும் ஓர் அழகிய ஸ்திரீயைக் கண்டேன். அவளது அழகைப் பெண்ணாகிய யானே கண்டு மோகித்தேனென்றால் மற்று வேறு யான் என்ன சொல்லப் போகிறேன். அப்பெண் மணி உனக்கே உரியவளென்று தீர்மானித்து எடுத்து வரப் புகுந்தேன். அவளுக்குரிய ராம லக்ஷ்மணர் என்ற இரண்டு மானிடப் பதர்கள் என்னை இவ்வித பங்கஞ் செய்



தனுப்பினார்களென்று சொல்லி அழுதும் அவளழகைப் புகழ்ந்தும் கூறினள்

கேட்ட இராவணன் காமாந்த காரனாகி உடனே புறப்பட்டு மாரீசனிடம் வந்து சொல்ல, அவனும புத்தி சொல்லிக் கேளாமல், மாரீசனை மாய மானாக நடிக்கச் செய்து, சீதையால் தூண்டப் பட்ட இராமரும், பிறகு லக்ஷ்மணரும் சீதையை தனியேவிட்டு மானைத்தொடர்ந்து சென்ற போது, சீதா தேவியார் ராமரைக் குறித்து ஏங்கி பர்ணக சாலையில் தனிமையாக இருக்குங் காலத்தில், இது நல்ல சமய மென்று இராவணன் விருத்த தவவேடம் பூண்டு பர்ணக சாலையில் வர, அதைக் கண்ட ஜானகி எதிர்க் கொண்டோடி, மஹா ரிஷீஸ்வரரென்று அர்க்கிய பாத்தியம் அளித்து ஆசனங் கொடுத்து உபசரித் தனள். மாய வேடக்காரன் அவ்வாசனத்தி லிருந்து, நீர் யார்? இவ்விடத்தில் தனிமையா யிருக்க வந்த காரணம் யாது? என்றான்.

அப்போது வைதேகியார், ஐயா! அயோததியா புரி யாண்ட தசரதமகாராஜன் பாலர்களாகிய ஸ்ரீராமர் இலக்ஷ்மணர் இவ்விருவரும் பிதுர் வாக்கிய பரிபாலனஞ் செய்யப் பதினான்கு வருஷங்கானகம்வந்தார்கள். நான் கோதண்ட பாணியின் தரும பத்தினி; என் பெயர் சீதை; நான் இவ்விடம் இருக்கிறேன்; அவர்கள் ஒரு மானைத் தொடர்ந்து போயிருக்கிறார்கள்; இதோ வருவார்கள். என்று மொழியவே, அக்கபடசந்நியாசி மிகவு மிறக்கங் கொண்டவனைப் போற் சீதையைப் பார்த்து, ஐயோ! உம்மைப்போலொத்த சௌந்தர்ய வதிக்கு காட்டி லிருக்கும் பஞ்ச குடிசையி லிருக்கவும், அற்ப மனிதர்களுக்கு ஸ்திரீயாக

வும், இளமைப் பருவகாலம் வீணைப் போகவுஞ் செய்து வைத்தானல்லவா பிரமன்? உமக்குத் தகுந்த புஜபல நீர விஜய பராக்கிரம தசக்கிரீபனை ஏற்படுத்தாமற் போனானே அப்படி கிடைத்தால், அடடா! என்ன பாக்கியம்! என்ன பாக்கியம்! என்ன யோக்கியம்! என்ன சிலாக்கியம்! தன்மை வாக்கியம்! இப்பவும் அனுபவிக்கலாமே! என்று சொல்லக் கேட்ட என் தாய் இடி விழுந்த அரவம்போ லேங்கி, இவனை ரிஷி யென்றல்லவோ மரியாதை செய்தோம்! இந்தப் பாவி அரக்கனை யென்று மதித்துத் திடங்கொண்டு, அடா பாதகா! தண்டகாரண்ய வாசிகளுக்கு அபயஸ்தங் கொடுத்து, அசுரர் குலத்தையழிக்க வந்திருக்கும் என் ஆண்டவனை யறியாமல், மாண்ட பிணமென விருந்து வசனித்தாய். தேவர் முதல் யாவரும் நகைக்க நீ மீண்டுறப்பதற்குள்ளே ஓடிப் பிழை யென உத்தாரஞ் சொல்லித் தாயார் பர்ணசாலைக் குள்ளே போகவும், மாயா ரூபத்தை மறைத்துத் தன்னுடைய பயாங்கோர ரூபத்தைத் தெரியப் படுத்திப் பின் தொடர, அதைச் சீதைக் கண்டு தியக்கங் கொண்டு வாதைப் பட, உடனே அப்பாதகன் வலுவினிற் பிடித்துத் தன் தேரி லேற்றி ஆகாய வீதியாய்ச் செலுத்த, அப்போது சீதை புலம்பி யழ, சடாயுகண்டு மறுத்து சண்டையிட, அவனை வெட்டிச் சாய்த்து, லங்கையில் கொண்டு போய் அசோக வனத்தி லிருக்கச் செய்து விட்டான்.

மாயாமானைப் பற்றிச் சென்ற இராமரும் லக்ஷ்மணரும், அம்மானைக் கொன்று விட்டு வரும் வழியில் கவந்தனையும் வாட்டி, பர்ணக சாலையில் வந்து பார்க்க சீதா தேவி யில்லாமையால், மனம்வாடி நொந்தலைந்து, ஜடாயு



வால் இராவணன் சீதையைக் கொண்டு போனதும், அவ ளிருக்கும் ஸ்தான முதலியவைகளும் தெரிந்து, அநுமாரை நேசித்து, துந்துபியை அகற்றி, மராமரங்களைத் துளைத்து, வாலியை வதைத்து, சுக்ரீபனுக்கு பட்டங் கட்டி, விபீஷணருக்கு அபயஸ்தமும் லங்காபுரியின் பட்டாபிஷேக வாக்குறுதியும் கொடுத்து, அவரால் நிகழ் கால எதிர்கால ராவண சம்மாரம் அநுகூல விஷயங்களைத் தெரிந்து, வானர சேனைகளுடன் சேது பந்தனங் கட்டி, இலங்கைக்குள் நுழைந்து, யுத்தங் கொண்டு, இந்திரஜித்து கும்ப கர்ணாதி மூலபல சேனைகளை யெல்லாம் ஒழித்து, ஏகபத்தினி, ஏக வார்த்தை, ஏக பாணம் என்ற சத்திய வாக்குப்படி, இராவணனுடைய சிரசைசங்கரித்து அவன் சிரசுதனது திருவடியில் விழ, அவனுக்கும் அவன் மனைவி மஹா பதிவிரதா சிரோன் மணியாகிய வண்டோதரிக்கும் புண்ணிய பூமியை அளித்து, விபீஷணருக்கு இலங்கையை பட்டாபிஷேகம் சூட்டினார்கள்.

அந்த வேளையில் அனுமார் - அங்கதன் - விபீஷணன் முதலிய யாவரும் தாயாரிருக்கும் அசோக வனம் வந்து ஜெயங் கூறிச் சோபனம் பாடினார்கள்; ஆடினார்கள்; துதித்தார்கள்; கதித்தார்கள். இப்படி யாவரும் ஆனந்த பரவசராய்த் தாயார் பாதங்களிற் சரணஞ் செய்து, ஸ்ரீராமருடைய ஜெயத்தைப் புகழ்ந்து, அம்மணி! தேவரீர் ஸ்வாமியின் உத்திரவு படி தரிசனத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று இறைஞ்சவும், அந்தச் சொல்லை தேவாமிர்தம் போற் சீதா தேவிக் கேட்டு, அவ்விடம் விட்டெழுந்து திரிசடை யுடனே சென்று ஸ்ரீராமர் பாதங்களில் வீழ்ந்து தெண்ட னிட்டுச் சமீபத்தில் நிற்க, அது கண்ட அவ தேவன் சீதையைப் பார்த்து, பெண்ணே! உன்னை

அரக்கன் தொட்டு எடுத்துப் போய் பத்து மாதம் சிறை
யில் வைக்கவும், நீ பிராணனுட னிருந்து நம்மிடத்திற்கு
வரவும், நாம் அங்கீகரிக்கவும், உலகம் பழிக்கவும், உள்
ளார் நகைக்கவும், அதனால் என்னுடல் நடுங்கி இலச்சைப்
படவுமாக விருக்குங் காரியங்களுக்கு உடம்பட்டு உத்தஞ்
செய்தேனும் உன்னை மீட்க வந்தவர்கள் நாங்களல்ல, எங்
கள் ஐயா ஜடாயுவைக் கொண்டோ மன்றி, மறு வில்லாத
சூரிய குலத்திற்கு வடுத்தேடிக் கொள்ள வந்தவர்களல்ல.
ஆகையால் நீ மாசற்றவள் என்னும் வகையைத் தெரிவித்
தால் உன்னை ஒப்புக் கொள்ள லாகும் என்றார்.

இறைவன் மொழியைக் கேட்டும், பக்கத்தில் ஒரு
வரும் ஒன்றுஞ் சொல்லா திருப்பதைப் பார்த்து அம்மன்
சொல்லுகிறாள் ஸ்வாமி! அரக்கன் வஞ்சித்து என்னை
அபகரித்தான். அப்படி அபகரித்தவன் புத்திர மித்திர
களத்திராதிக ளோடு இறக்கக் கண்ட பின் யான் என் சரீ
ரத்தை விட்டு விடுவதே தருமம். ஆனதால் இப்போது
தேவரீர் கைப்பாணத்தால் அவனிறக்கக் கண்டேன். இனி
மேல் நான் பிறந்த குலத்திற்கும் பெருமை யுண்டாகும்
படியாய் அக்கினிப் பிரவேச மாகிறேன். என்று நமஸ்
கரித்துத் திரும்பி, அங்கதன் - அநுமார் - சுக்ரீபன் -
விபீஷணன் இவர்கள் யாவரையும்பார்த்து அருள்புரிந்து,
இளைய பெருமானை நோக்கி, என் வினைவசத்தால் உம்மை
யும் இகழ்ந்து பேசினேன். அந்தக் குற்றத்தை மனதில்
வைக்காமல் அக்கினி விருத்தி பண்ணி கொடுக்க வேண்
டும். என்று கேட்கவும், அண்ணனுடைய மனது அறிந்த
நல்ல தம்பியானவர் ஒரு நொடிப் பொழுதினில் அக்கினி
வளர்த்த, வைதேகியார் அந்த அக்கினியைப் பிரதக்ஷணம்
பண்ணி, எனது வாக்கினாலும். மனத்தினாலும் - காயத்



தினாலும் குற்றங்களுண்டா யிருக்குமாகில், என் சரீரத்
தைக் கொளுத்திச் சாம்பராக்கக் கடவது என்று இரகு
குல புங்கவனையும் இதயத்திற் சிந்தனை செய்து, செங்கால்
அன்ன மானது செந்தாமரைத் தடாகத்தில் இறங்குந்
தன்மை போல் அக்கினிக் குழியிற் பாய்ந்தனள்.

அப்போது அந்த அக்கினி தேவன் தாயாரைக் கரத்
திலேந்தி, ஸ்ரீராம மூர்த்தியை வணங்கி; ஸ்வாமி! உல
கத்திலுள்ள யாவற்றையுஞ் சுடுகின்ற என்னை இந்த சற்
பின் சுவாலை சுடுகின்றது. என்று வைத்து வணங்கவும,
அம்மகா லக்ஷ்மியை ஸ்ரீராமரும் இலக்ஷ்மணரும் கண்டு
மன மகிழ்ச்சி கொள்ள, இவ்வளவு பாடு பட்டும் விறதா
வாய் போய் விட்டதே என்று விசனப் பட வானர வீரர்
கள் முதலிய பேரும் புளகாங்கிதம் பூப்ப, பிரம தேவன்
இந்திரன் முதலிய தேவர்களும் ரிஷீஸ்வரர்களும் ஸ்ரீராம
ரையும் இலக்குமணரையும் வந்து கண்டு, இவர்களுடைய
வீரப் பிரதாப முள்ள தோள்களையும் வில்லுகளையும்
வாழ்த்திப் புகழ்ந்து, தாயாருடைய எண்ணமும் - மன
வுறுதியையும் - தீரமும் - பதிவிரதா பக்தியும் தெரிவித்து,
தசரத தரிசனமும் செய்து வைத்து, அயோத்தியா புரிக்
குப் போய் பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு, சீதா -
லக்ஷ்மண - பரத - சத்ருக்ன - அநுமந்த சமேத ஸ்ரீராமச்
சந்திர மூர்த்தியாய் வாழக் கடவது என்று வாழ்த்தி,
இன்னமும் உமக்கு வேண்டிய வரங்கள் ஏதாகிலும் உண்
டாகில் தருகின்றோம் என்று சொல்லினர். அதைக்
கேட்ட ஸ்ரீராமர், ஓ மகான்களே! என்னுடன் வந்த
எழுபது வெள்ளம் வானரப் படைகளும் பதினெட்டு
வகைப் படைத் தலைவர்களும் குறை வில்லாமல் நிறைந்து
இருக்க வேண்டு மென்று கேட்க, அப்படியே அருள்

புரிந்து வாழி பாடித் தங்கள் தங்கள் இடஞ் சேர்ந்தார்கள். மாதலியும் இந்திர விமானத்தைக் கொண்டு போனான்.

இப்பால் ஸ்ரீராமர் ஜானகியை நோக்கி ஆலிங்கனஞ் செய்துக் கொண்டு, உன்னுடைய பதிவிரதா தருமம் இயாவர்களுக்குந் தெரியும் படி யாகவும், ஆபத்து வந்த காலத்திலும் என்னுடைய நாமத்தையே உச்சரித்துக் கொண்டு இருந்த உன்னுடைய பத்தியின் விசேஷந் தெரியும்படி யாகவும் இப்படி செய்த தல்லாமல் வேறல்ல. நீயுங் கற்புடைய ஸ்திரிகளுக்குக் கணவனே தெய்வ மென்பதை நிலை நிற்க காட்டினை, என்று மிருது வசனங்களைப் பேசித் தம்பியுந் தானும் படைகளும் வீரர்களும் அக மகிழ்ந் திருந்தார்கள்.

இப்படிக்குச் சீதா சமேத ராக எழுந்தருளிய ஸ்ரீராம மூர்த்தியை யாவரும் நெருங்கி வந்து வணங்கி நிற்க, அப்போது தாசரதி விபீஷணைப் பார்த்து, நான் அயோத்தியை விட்டு வனம் வரும்போது என் தம்பி பரதனுக்குப் பதினாலு வருஷமுங் கழிந்துத் தசமியி னன்று வருகிறேனென்று சொல்லிய நாள் இன்று வந்தபடியால்; நான் சென்று அவனைப் பார்க்க வேண்டியது. என்று சொல்லவும், விபீஷணன் புஷ்ப விமானத்தைக் கொண்டு வந்து வைத்தான். அதில் யாவர்களும் ஏறிக் கொண்டு மந்திரத்தைச் செபித்த மாத்திரம் க்ஷணப் பொழுதில் இலங்கைப் பட்டினம் முழுமையுஞ் சுற்றி, திருவணையையுந் தாண்டிச் செல்லுவதாயது.

அப்போது ஸ்ரீராமர் கிஷ்கிந்தை - சப்பா நதி - ஜடாயு இறந்த விடம் - அகஸ்தியர் ஆசிர்மம் - பஞ்சவடி



திரம் - இவை யாவற்றையும் எல்லோருக்குங் காண்பித்துக் கொண்டு, பாரத்து வாசருடைய ஆசிர்மத்தி லிறங்கி, அவர் வேண்டுகோளினால் போஜனத்துக்கு ஒப்புக் கொண்டிருந்தனர். அப்போது ராமர் அனுமானைக் கூவி, குகப் பெருமானையும், பரத சத்ருக்கனையுங் கண்டு என் வருதலை சொல்லி வரக் கடவை யென்று அனுப்ப, அவர் ஸ்ரீராம ஜெயம் என்று அந்தரத்தி லெழுந்து கங்கைக் கரையில் வந்து, ஓரிடத்தில் பந்துக்களுட னிருந்து, ஸ்ரீராமரைக் காணோமே யென்று கங்கையில் ஓடத்தைக் கவிழ்க்கப் போகிற குகப் பெருமானுக்கு ஸ்ரீராமர் இதோ பாரத்து வாசர் ஆசிர்மத்தில் வந்தார் என்று சொல்லி, சஞ்சீவி மருந்து உதவியது போற் குகப் பெருமானை நிலை நிறுத்தி விட்டு நந்திக் கிராமத்திற்கு வந்தார். அப்படி வரும்போது கௌசலை - கைகேசி - சுமித்திரை - இவர் முதலிய பட்டினத்துச் சனங்கள், எல்லோரும் விசனப் பட்ட அக்கினி வளர்த்தி மூன்று சுற்றில் விழ முயன்றிருக்கின்ற பரதனையுஞ் சத்துருக்கனையுங் கண்டு, இதோ வந்தார் ஸ்ரீராமர்! என்று, வானத்திலிருந்து மழைபோற் குதித்து, அக்கினியை யவித்து, அருள்மொழி கொடுத்து ஐயா! உங்களண்ணராகிய ஸ்ரீராமர் இலக்குமணரோடு சீதா சமேதராய் இவ்வயோத்தி நீங்கி ஆரணியஞ் சேர்ந்து சூர்ப்பனகையை மூக்கு முலை யறுத்து, கரதூஷணரைக் காய்ந்து, மாய மானைக் கொன்று, இராவணன் சீதையைக் கொண்டு போக, கிஷ்கிந்தைக்கு வந்து, சுக்ரீவனுக்குப் பட்டந் தந்து, வாலியைக் கொன்று, வானர வெள்ளங்களுடன் திருவணைகட்டி, இலங்கையிற் சென்று, இராவணன் முதல் இயாவர்களையுங் கொன்று, இதோ சீதை யம்மனுடன் பாரத்துவாசர் ஆசிர்மத்தில் வந்திருக்கின்றனர். நான் ராம தூதன்! என் பேர் அனுமான்!

என்று விளம்பி, எழுந்து கிளம்பி, மீட்டும் பரத்துவாசர் ஆசிரமத்திற்கு வந்து, இயாவர்களுடனும் பந்தியிலிருந்து, ஸ்ரீராமருடைய பரிகலம் வாங்கிப் புசித்து, தான் போய் வந்த சமாச்சாரங்களைச் சொல்லினர்.

அது கேட்ட ஸ்ரீராமர், ரிஷிகள் முதலிய பேர்களை நோக்கி, உங்கள் ஆசீர் வசனத்தினாலும், இந்த அனுமானுடைய பேருதவியினாலும், இராவண சம்ஹாரஞ் செய்தேன். என்று புகழ்ந்து வாழ்த்தவும், யாவர்களும் மகிழ்ந்து ஆசீர் வதித்தார்கள். அன்று அவ்விடத்திலிருந்து, மறு நாட் காலமே யாவரும் புஷ்பகத்தி லேறிக் கொண்டு கங்கைக் கரையில் வந்து, குகனை அழைத்துக் கொண்டு, அயோத்தியாபுரி பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது பரதன், சத்துருக்கன், மந்திரி மார்கள் - பட்டினத்துச் சனங்கள் - கோசல தேசாதிபர் - கேகய தேசாதிபர் இன்னு முள்ள சகல ராஜார்களும், வந்து காகுத்தனை நெருங்கி வணங்க, வதிஷ்டாதி மகா முனிவர்களுக்கும், தாய்மார்களுக்கும், தானும், தம்பியும், சீதையும் வணங்கி, சகல செய்திகளையுஞ் சம்பிரமாகப் பேசி யிருந்து, எல்லோருக்கும் விடுதியமைத்து இருக்கச் செய்து, எழுபது வெள்ளம் வானரச் சேனையும், படைத் தலைவர்களும், நிறைந்திருக்கும் படியாக வீற்றிருந்தனர் ஸ்ரீராம சந்திர மூர்த்தி.

அப்போது எந்த லோகமும் இந்த லோகத்திற்கு ஈடு இல்லை யென்று எவர்களும் புகழும்படியாக அவ்வயோத்தியா புரி யானது ஸ்ரீமந் நாராயண னுடைய கர்ப்பம் போல நலம் பெற விருந்தது வதிஷ்டர் முதலிய மகா



முனிவரரும், தாய் மார்களும், தம்பி மார்களும், மந்திரி மார்களும், தந்திரிமார்களும், மற்று முள்ள அளவற்ற பிறமுகாளும், ஒன்றாக கூடி, இம்மண்டல முழுமையும், எண்டிசைப் பாலரும், அண்டர்கள் யாவரும், தொண்டர்கள் பலருங் கண்டு களிக்க, ஸ்ரீராம சந்திரனுக்குக் கவின் முடி சூட்ட இன்று நாள் நன்று என்றனர்.

உடனே ஸ்ரீராமர் தம்பி மாருடனே சடை முடி களைந்து, அம்புவி யெங்கு மருமையா யுள்ள புண்ணிய தீர்த்தம் புனிதமால் மூழ்கி, வண்மை வேதியர் வாழ்த்தி யக்ஷதைகள் எண்ணிலா தளிக்க, மந்திர ஹோமாக்கினி மறை யுளி வளர்க்க, சுந்தரப் பணிகள் துலங்க வணிந்து சீதா சமேதமாய்ச் சீர் பெற வெழுந்து, சிங்கா சனத்தில் ஜெயமுட னிருக்க, எங்கோன் வதிஷ்டர் எடுத்தணி முடியை, திங்கள் மும்மாரி சீர் பெற வழங்க, தருமந் தழைக்க, தான மோங்க, வேதம் வாழ்க, வேதியர் வாழ்க, தேவாலயந் தினந்தோறும் வாழ்க நித்தியமாக சத்திய மோங்கி, மன்னுயிர்யாவையும் தன்னுயிர் போலக் காத்துரக்ஷிக்கக் கடனெனக் கொண்டே, தரித்தனர் வேதஞ் சாற்றினர் புலவர் மங்கல வோசை மழை யென முழக்கினர். விண்ணவர் பூமழை வியந்து பொழிந்தனர் இப்பால் வரிசையா மரசர் வரி இறை கொடுக்க, மந்திரி மார்களும் மறுமுறை கூற பகைவ ரின்றி தொகையிலாச் செல்வம், நாளுக்கு நாள் அபிவிருத்தி யாகி, 'தாரணி புகழ ஜானகி சமேதனாய், பரதர் - சத்துருக்கர் - இலக்குமணருடனே, யாவருங் களிக்க அயோத்தியை ஆண்டனன்: காயாம்பூ வண்ணன்: களங்க ரஹிதன்: இரவி குலோத்துங்கன்: இராமச் சந்திரன்.

# 8. சுகுணாங்கி சரித்திரம்.

———:*:———

காவேரி நகரத்தில் சித்தேசன் என்றொரு முதற்குல பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்து நான்கு கலை ஞானம், தொண்ணூற்றாறு தத்துவ முதலியதுகளை ஐயந்திரிபற உணர்ந்தவன். அவனது பூர்வ *ஜென்மம் பிராப்தப் படி வாய்க்கப் பெற்ற இல் வாழ்க்கைக் கிழத்தியாகிய சுகுணாங்கி யென்பவள் மகா பதிவிரதா சிரோன்மணியாகும். அழகில் மகாலக்ஷ்மி எனவும், கல்வியில் கலைவாணி யெனவும் கற்பில் அருந்ததி யென்னவும் விளங்கப் பட்டவள்.

இவர்களிருவரும் உலக வியற்படி இல்லறம் நடாத்தி வருவதாயினர்கள். இவர்களுடைய பூர்வாம்சப் படியும், மனோ வாஞ்சைப் படியும், நாளுக்கு நாள் பக்தி முயற்சியினால் நகர வாஞ்சையை வெறுத்தவர்களாகி, ஆரண்ய மடைந்து தபநிலை அனுஷ்டான மொழுகுவார்களாயினர்கள். அவ்வாறு சதிபதி இருவரும் நன்மார்க்க சன்மார்க்க பக்தி மார்த்தி லழுந்தினவர்களாகி புருஷன் தபசு புரியவும் தான் அவருக்கு பணிவிடையும் போஜனாதிகளும் செய்துக் கொண்டிருப்பாள். சில சமயங்களில் தானும் தப நிலையி லிருப்பாள்.

இவ்வாறு நடந்து வருங்காலத்தில் ஒரு நாள் அவர்களிருக்கும் பர்ணசாலை பக்கத்தில் அக்கினிப் பிரவேச ஓம குண்டத்திற் கருகாமை சித்தேசனென்பவர் பத்மா



சன மிட்டு, சாந்த நிலையோடு தபநிலையில் இருக்கிறார். அம்மன் தனக்கு அருமையாக வாய்க்கப் பெற்றெடுத்த ஆறுமாத சிறு குழந்தையை விளையாட்டு காண்பித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அக்காட்டு மார்க்கமாக வேட்டையாடி தனித்து வரும் ஒரு அரசன், இவ்வம்மயைக்கண்டு, மனது தடு மாற்றங் கொண்டு, கருத்தில் கபடங் மூண்டு, அங்கேயே சிறிது நேரம் நின்று, ஆருமற்ற இந்த அனுதைக் காட்டில் போகு வாய்ந்த இப்பெண் தனி குடிசையாக இருக்க வேண்டிய காரண மென்ன? இவள் யார்? இவளது நடத்தை யென்ன? இவளைப் பார்த்தாள் அழகில் வெகு ரூப லாவண்யமாக இருக்கின்றாள்! இந்த வயதிளங் கொடியை கண்ட போதே என் கண் மனதினுள் நுழைய மற்ற இந்திரியங்களுக்குந் தெரியப் படுத்தி காமாந்தகாரத்தை எழுப்பி விட்டதே! ஓ! இவள் ஒரு சமயம் வன தேவதையோ! யேதோ ஒன்றுந் தெரிய வில்லையே! இருக்கினு மிருக்கட்டும். இவள் மீது கொண்ட காதலை விடப் படாது எவ்விதத்திலும் கைக் கொள்ளுவதே சமத்து எனத் திட முடையவனாகி, அவ்வம்மனை நெருங்கி, அம்மா! தாகத்திற்கு கொஞ்சம் ஜலம் வேண்டு மென்று கேட்டான்.

கேட்ட சுகுணாங்கியார், யாரோ பாவம் ஆரண்ய வழிப்போக்கராகும், மிகுந்த களைத்தாக முடையவராகும் என்று ஜீவ காருண்ய முடையவளாய் குழந்தை விட்டுப் போட்டு, பாத்திரத்தில் ஜலங் கொண்டு வந்து கொடுத்தாள் அதை வாங்கி யருந்தியதும், அவ்வம்மனை நோக்கி, பெண்ணே! உன்னைப் பார்த்தால் வெகு சுந்தரம் வாய்ந்த

விந்தை பதுமையைப் போலிருக்கிறது. உன்னுடைய ரூபலாவண்யத்திற்கு இந்த ஆரண்யத்தில் சிறு குடிசையி லிருப்பது எவ்வளவு துர் அதிஷ்டமாகும்! கடவுள் உனக்கு எல்லா அழகும் படைத்து அதற்குத் தகுந்த சுகமும் சந்தோஷமும் செல்வமும் படைக்கவில்லையே! நான் யார் தெரியுமா? நான் ஒரு அரசனாகும். எனக்கு எல்லா வைபவ செல்வங்களும் திரண்டதாக இருக்கிறது. எனக்குடைய பூமிகளுக்கு அளவே கிடையாது என்னை வணங்காத ஜனங்கள் அனேகம் யாருமே கிடையாது. என்னை எதிர்ப்பவரும் ஒருவருமில்லை நானே ஒருவரைக் கொல்ல வேண்டுமானாலும் கொன்று விடலாம் நானே ஒருவரைக் காப்பாற்ற வேண்டுமானாலும் காப்பாற்றலாம். என்னால் எல்லாமாகும், என்னாலாகாத காரியங்களொன்று மில்லை, நான் மிக்க புஜபல பராக்கிரமமுடையவன் அழகிலும் விசேஷமுடையவன். உன்னைப் பார்த்ததும் உன்னுடைய நிலைமையைத் தெரிந்து மிகவும் மனது பரிதாபப் படுகிறேன் நீ கௌரவத்தையும், செல்வத்தையும், சந்தோஷ சுகத்தையும் படைவாய் என விரும்புகிறேன். அதோடு உன்மீது பூரண ஆவலுடையவனாகவு மிருக்கிறேன் இது போல் உனக்கும் என் மீது பூர்ண மனோ வாஞ்சை யிருக்குமென நம்புகிறேன். பெண்ணே! என் மனோபீஷ்டத்தை நிறை வேற்றுதற்கு என்ன சொல்லுகிறா யென்றான்

இந்த அடாத வார்த்தைகளைக் கேட்ட சுகுணாங்கி மனந் திடுக்கிட்டு, சரீர நடுக்கங் கொண்டு, பத்தாவை மனதி லுன்னி, ஐயா! பெரியவரே! உம்மைப் பார்த்தால் ஒரு அரசனாகவே தோன்றுகிறது நீர் அரசனாக இருப்பதினால் இல்வாழ்வார்-சந்நியாசர்-வானப் பிரஸ்த



முதலானோர்களுக்கு நீர் ஆதரணை செய்யும் கர்த்தாவாகும் உங்களுக்கு நாங்களெல்லாம் புத்திரி பௌத்திரிகளாகும். நீர் இவ்வித துர் எண்ணங்களெல்லாம் கருதலாகுமா? குடிகள் குற்றம் செய்தால் அரசன் கண்டிக்க வேணும். அரசன் குற்றம் செய்தால் கடவுள் தண்டிப்பார் என்ற நீதி உனக்குத் தெரியாதா? எல்லாந் தெரிந்த அரசகோலமுடையவர்களாயிருந்து கேவல பாமர ஜனங்களைப் போலும், அறிவீனர் போலும், காமாந்த காரத்தினால் வீண் வார்த்தைகள் பேசி யேன் கெட்டுப் போகிறீர். நானோ ஒரு தபசியின் மனைவியாகும். என்னை நீர் இச்சிப்பதும் கொச்சை வார்த்தை மொழிவது நியாயமன்று. இதோ அருகாமை தபசில் இருக்கும் என் பத்தா தபசு நீங்கி யெழுந்தால் உனக்கு யேதேனும் தீங்கு நேரிட்டாலும் நேரிடும். தாகத்திற்குக் கேட்டு தாகமருந்தி மோகங் கொண்டு மாள்வது மகா பாதகரடையும் கதியாகும். இனி அப்படிப் பட்ட வார்த்தைகளாட வேண்டாம் இவ்விடம் விட்டு சீக்கிரம் அகன்று போம் என்றாள்

அவ்வார்த்தைகளைக் கேட்ட ஜெயசேன மகாராஜன் ஒருவாறு நாணமுடையவனாகியும், ஆசை வெட்கமறியாதென்பதாய், இன்னும் காமாந்தகாரத்திலேயே அழிந்தினவனாகி, பெண்ணே! நான் ஒரு விதமாகிய விஷயத்தைக் கூறினால் அதற்கு மாறுதலாக நீ யேதேதோ வார்த்தைகளை யெடுத் துரைக்கிறாய்! உனக்கு இன்னம் லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகவில்லை போலிருக்கிறது. உனக்கு அதிஷ்ட காலம் வந்திருந்தால் இப்போது நான் சொன்ன வார்த்தை யெல்லாம் நீ கவனிப்பாய். அது போல் நடந்து கொள்வாய். இந்நேரம் என்னோடு கூடி ஆனந்திருப்பாய். இப்போதே என்னோடு கூடவே ராஜமாளிக்கு

ளர்திருப்பாய், உனக்கின்னம் நல்லறிவு விளங்க வில்லை போலும். சென்ற வார்த்தைகளெல்லாம் செல்லட்டும். இன்னும் சொல்கிறேன், செவிசாய்த்து கவனமாய்க்கேள் நீ என் மனதை சோதிக்கிறாப்போ லிருக்கிறது. அப்படியெல்லாம் சோதியாதே நான் நல்ல எண்ண முடையவன், ஸ்திரீகளின் மீது ரொம்பவும் ஆசபாச பற்றுதலுடையவன், என் மனது உனக்கிப்போது தெரியாது. எல்லாம் பின்னே தெரியும். நான் உண்மையாகச் சொல்லுகிறேன் கேள். காட்டி லிருந்த உன்னை வீட்டுக்குக் கொண்டு போன பின் உன்னைக் கேவலமாக நினைத்து கவனியாமல் விட்டுவிடுவேனென்று நினைக்காதே. உன்னை இழிவாக வைத்திருப்பேனென்று கவனிக்காதே! உன்னை என் பட்ட ஸ்திரிகளோடு சமானமாக வைக்கிறேன். வேண்டுமானால் உன்னை அவர்களுக்கு எஜமாட்டியாக வைக்கிறேன். இன்னும் உனக்கு சந்தேகமானால் இந்த அக்கினி முன்னிலையில் உனக்கு சத்தியமும் பண்ணிக் கொடுக்கிறேன். என் வார்த்தை இப்போதே பூரணமாய் நம்புவாய். இந்த காட்டையும் சந்நியாசியையும் இக் கானகத்தையும் மறந்து விடு. இப்போதே என்னை அடு, அச்சத்தை விடு. காம இச்சையைத் தொடு. என் மையலைத்தீரு. மகிழ்வுறச் சேரு. என்னோடு இன்புற்றிருக்க நேரு என்றான்.

குற்ற மற்ற புண்ணிய வதியாகிய பெண்ணரசிகேட்டு, அடா பாதகா! நான் உனக்கு இது வரையிலும் எத்தனையோ நன்மையையும் நீதி மார்க்கங்களும் சொல்லியும் கேளாதவனாய் அடாத வார்த்தைகளெல்லாம் வார்த்தையாடுகிறாய். என்னுடைய நாதன் தப நிலையை விட்டு எழுந்திருக்கும் நேரமாய் விட்டது. அவர் எழுந்திருப்பதற்குள்ளே



ஓடிப் போய்விடு நீ ஒரு அரசனாக இருந்தும் அறிவு விளங்காத மூடத் தன்மை யுடையவனா யிருக்கிறாய். உனக்கு எத்தனைத் தடவை யெடுத்துரைத்தும் இன்னும் கொஞ்சமேனும் விவேகம் தெளிய வில்லை. கற்புடைய ஸ்திரிகளைக் கருதுவதும், கற்பழிக்க எண்ணுவதும், கற்பழிக்கத் துணிவதும் மகா பாதகமென்றும், அவர்களை எமபடாள் ரௌரவாதி நரகத்திலும், அக்கினி ஸ்தம்பத்தாலும் தண்டிப்பார்கள் என்று நீதி நூல் படித்தறியாயா? கேட்டு மறியாயா? பூர்வத்தில் இராவணனாகிய இலங்கை யரக்கன் உலக மாதாவாகிய சீதாங்கனியின் மேல்வைத்த இச்சையால் அவனும் அவன் சேனைகளோடு அழிந்து போனானல்லவா? கௌதமர் மனைவி அகல்யா மீது ஆசை வைத் தேவேந்தரனுக்கு ஆயிரம் யோனிக் கண்கள் சரீரமுழுதும் முண்டாக சாபம் பெற்றானல்லவா? கீசகன் திரௌபதையின் மேல் வைத்த மோகத்தால் நடு ராத்திரி காலத்தில் பீமசேனனால் மாளப் பெற்றானல்லவா? பாஞ்சாலியின் மோகாந்த காரத்தினால் திரியோதனன் தன் நூற்றொருவரோடும், பதினெட் டக்ரோணி சேனையோடும் பூண்டொழிய மாண்டானல்லவா? சந்திரன் கலை யிழந்தானல்லவா? இன்னும் எத்தனையோ பேர்கள் ஸ்திரிகளின் மோகத்தால் நாண மடைந்தவர்களாகவும், அகத்தை யொழித்தவர்களாகவும் கதையும், காவியமும், கண் கூடாகவும் நடந்து வருகிறதல்லவா? இவ்வளவும் உனக்கு ஜீவகாருண்ய பரோபகாரமாக எடுத்துரைக்கிறேன். இனியேனும் நன்மையைக் கடைப் பிடி, கொண்ட தீய வெண்ணத்தை மறந்து போடு, என்னை ந்து உன்னகம் மேகி சொந்த மனையை நாடி உயிரைக் காப்பாற்றிக் கொள்ளென்று சீறி கூறினாள்.

அவ்வம்மையார் சொல்லிய நன்மொழிகளைக் கேட்ட அரசன், கெடுமதி கண்ணுக்குத் தோன்றாதவனாகி, இன்னும் காமாந்தகாரனாய், பெண்ணே! நீ சொல்லுவதெல்லாம் வீண் விவகாரமே யாகும். இன்னும் உனக்கெடுத்துரைக்கிறேன், நான் இன்ன நிலைமை யுடையவனென்று நீ தெரிந்துக் கொள்ளவில்லை. உன்னை நான் துராக்கிரமமாகச் சேர வேண்டுமானால் இதோ அரை க்ஷணத்தில் எந்த விதத்திலாகிலுஞ் சேருவேன். எனக்கு அவ்வளவு சக்தியும் வல்லமை யிருக்கிறதென்றறிவாய்! அப்படிக் இல்லாமல் என்னுடைய எண்ணமெல்லாம் ஒற்றுமையாகவும், மனது சம்மதியாகவும் சேருவதே என்னுடைய முழு எண்ணமாகும். அவ்வெண்ணத்தைப் பாழாக்காதே! இனி எனக்கு கோபமுண்டாகும். அப்பால் யாதொன்றும் பாரேன். என் எண்ணப்படி நீ என்னை சேர்ந்தாலாச்சுது; இல்லாவிடில் இதோ இருக்கும் கட்கத்தால் உன்னையும், உன் நாயகனையும், உன் மகவையும் இதோ ஒரே வெட்டாக வெட்டிப் போட்டு விடுவேன், வேண்டாம் அஞ்சுகிறேன். ஓ அஞ்சுகமே! உன்னை நான் பலவாறாக கெஞ்சுகிறேன். அஞ்சேலென்று ஒரு வார்த்தை சொல்லப் படாதா? என்னோடு கொஞ்சி குலாவப் படாதா! ஓ பெண்கள் நாயகமே! என் வார்த்தையைக் கேள். வீணாக யேன் கேட்டுப் போகிறாய்? கோபங் கொள்ளாதே! ஆசையையும், ஆவலையும், அன்பையும் காடுவாய் என்றான்.

வீண் வழக்கிலும், விபரீத சிந்தையிலும் சிக்கிக் கொண்ட சகுணங்கெ, அரசனை நோக்கி, ஏம பாதகா! உனக்கு நான் எத்தனை புத்தி கூறியும் விவேகமும் விளங்கவில்லை. வெட்கமு முண்டாகவில்லை. இன்னும் எத்



னைத் தடவைத் தான் எடுத்துரைப்பேன். நீர் ஒரு பெரிய அரசனாயிருந்தாலெனக்கென்ன? குபேரனுக்குச் சமானமாகிய பொருளுடையவனாயிருந்தாலெனக்கென்ன? அழகில் மிகுந்தவனாயிருந்தாலெனக்கென்ன? புஜபல பராக்கிரம வீரசூர தீரனாயிருந்தாலெனக்கென்ன இன்னும் எப்பேர்பட்ட வல்லமை யுடையவனாயிருந்தாலும் எனக்கென்ன? உன்னுடைய வார்த்தைகளொன்றும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நானோ பதி பக்தி யுடையவளாகும். என்னை நீ கருதுவதும், காமுறுவதும், களவாட நினைப்பதும், அடாத வார்த்தை யாடுவதும், அழைப்பதும், செல்வச் செருக்கைக் கூறுவதும், பயமுறுத்துவதும் சரியல்ல. உன்னுடைய கத்தியும் வாளும் எங்களை ஒன்றும் செய்ய இயலாது. நீர் கொஞ்சமேனும் அறிவில்லாதவனாக இருந்தும் வீண் வார்த்தை யாடி யாரை பயமுறுத்துகிறாய்? நீ என்னை வெட்டினபோதும் தபசிலிருக்கும் என்னையனை வெட்டிய போதும், இச்சிறு குழவியை வெட்டிய போதும் உன் எண்ணம் ஒருக்காலும் நிறைவேறாது. இதனால் இனி உனக்கு தீங்கே விளையுமன்றி நன்மை பயக்காது, கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே என்பதாய் என் வீணாய்க்கெட்டுப் போகாதே. இப்போதே ஓடிப் போ. என்னையன் எழுந்திருப்பதற்குள் உயிர் தப்பித்துக் கொள்ளென்றான்.

அவ்வம்மையார் எவ்விதத்தாலும் நன்மையும் விவேகத்தையுங் கூறியுங் கேளாதவனாகிய கொடுங்கோல் மன்னன், தன் எண்ணம் நிறைவேறாமையும், அவளால் வார்த்தையினாலே யேர்ப்படும் நாணபங்கமும் அவனுக்கு ஒரு பெரிய கோபாக்கினியை மூட்டி விட்டது. இரண்டு கண்களும் கோவைப் பழம் போல சிவந்து விட்டது. மீசை

பட பட வென துடிக்கலானது. கால்கள் வானாயுதத் தைத் தாவுகின்றது. அடங்காச் சினமுடையவனாகி, அடி பெண்ணே! என்னை யாரென்று மதித்தாய்? நான் இப்படிப் பட்டவனென்று இப்போது தான் தெரிந்துக் கொள்ளப் போறாய்! இது வரையிலும் ஆடாத காரியங் களைச் செய்யப் பட்டதெனக் கருதினேன். இனி சற்றே னும் அஞ்சேன். எப்போதும் ஒரு வார்த்தைச் சொல்லு கிறேன். என் இஷ்டப்படி நடந்துக் கொண்டால் நடந் துக்கொள். இல்லா விடில் இதோ இந்தக்குழந்தையை எடுத்து அக்கினி குண்டத்தில் போட்டு விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே கீழே கிடத்தி யிருந்த குழந் தையை எடுத்து அக்கினி குண்டத்தில் போடலானான்.

இத்தகை சிசு ஹத்தி, பிர்ம ஹத்தி, மகா பாதகம் நிகழும் காலத்தில் அவ்வம்மையார் என்ன தான் கருது வாள்? என்ன தான் செய்யத் துணிவாள்? நாயகனை யழைக்கலா மென்றாலோ தபசுக்கு அபசாரம் வந்து நேரி டும்? புருஷனை நினைப்பதா? பத்து மாதம் சுமந்திருந்து சுமந்து பெற்ற ஆசை சிறு மகவை தன்னெதிரிலேயே ஜீவகாருண்ய மின்றி அக்கினியில் போடுவதை நினைப்பதா? கற்பைக் காப்பாற்றுவதா? வென்று ஒன்றுந் தோன்றா தவளாகி, பதியைப் போற்றி, உபாசனா சர்வ சக்தியாகிய பாரதியாளை போற்றி,

"பாரதி வந்தபோது பங்க பிணி துன்ப மேது
சீரிடும் காலனேது செப்பிடு வறுமை யேது
கோரிடு கொள்கை யெல்லாம் கொடுத்தருள் செல்வி நீயே
ஆருயிர் வாலை வாலை வாணி அன்னையே கருணை வாழுவே"



"இடர் படுபகைவரெல்லாம்
பொடி பட நறுக்கு சூலி
அடிமையை காக்குஞ் சீலி
அன்னையே கருணை வாழுவே"

என்று மனத்திலே உறுத்தி சிந்தித்தவளாய் தன்னை மறந்து பிர்மமாய் நின்று விட்டாள். கலங்காத கற்பின் வல்லமை புடைய சுகுணாங்கியின் மனது கலங்கி கதறவே, சக்தி இறைவியாகிய ஜகதன்னை, கோர வேசத் தோடு சூலாயுதங் கொண்டு அக்கினியி லெழுந்து, வலது கரத்தால் குழந்தையை யேந்தி, இடது கரத்தால் சூலா யுதங் கொண்டு அரசனை மாய்த்து, பதிவிரதா பூஷண மாகிய சுகுணாங்கிக்கு தெரிசனங் கொடுத்து, குழந்தை யையும், அவ்வம்மையையும் ஆசீர் வதித்து மறைந்து போயி னள். அவ்வக்கினியிலேயே அரசன் சாம்பரானான்.

அப்பால் தன்னாயகன் தபசு முடிந்து எழுந்து வர, அம்மன் அவரது பாதார விந்தங்களில் பணிந்து, விழுந்து நமஸ்கரித்து, தபசில் உட்கார்ந்த பிறகு நடந்த விஷயங் களை ஆதியோடந்த மாக எடுத்துச் சொல்லி, தங்களை யழையாததனது அபசாரத்தையும் எடுத்துக் கூறி மன் னிக்க வேண்டினாள். அவரும் எல்லாம் ஈஸ்வரன் செயல் என்று ஆசி கூறி, இருவரும் இன்புற்றிருந்தனர்கள். இவை யனைத்தும் கற்பின் மகுத்துவமே யன்றி வேறல்ல. கற்புடைய ஸதிரீகளின் வாக்கிற் திரி மூர்த்திகளும் எதிரில்லை யென்றால் இந்த கேவல அரசனா லென்ன வாகும் கற்புடைய ஸ்திரீகளைக் கருதும் காமுகர்க்கு இவ்வம்மையாரின் சரிதையே ஒரு சான்றாகும்

# 9. சுதாஸனை சரித்திரம்.

———*§*———

யது குலத்திற் பிறந்து கறைதோய்ந்த வேலைக் கையி லேந்திய சுயோதன ராஜ னென்பவன் ஒருவனுளன். அவனை இப்பூமியிற் பிரசித்தமா யிருக்கப்பட்ட நருமதை நதியே ஸ்திரியாக வந்து தனக்குப் பதியாகக் கொண்டு வாழ்ந்து வருகிற காலையில், உலகத்தி லிருக்கப் பட்ட பெண்களுடைய அழகெல்லாந் திரண்டு, அவர்களுடைய புகழாகிய பதிவிரதா தர்ம மெல்லாம் பொருந்தி ஒரு பெண்ணைப் பிறந்ததோ என்னும் படியாய், அந்த ராஜனுடைய பெண்சாதி வயிற்றில் ஒரு பெண்ணுயகம் பிறந்தாள். தாயுந் தந்தையும் அற்புத மடைந்து, பெண் பிறந்த சந்தோஷத்தால் உச்சவாதிகள் நடாத்தி, சுதாசனை யென்று பெயரிட்டு, இராஜ முறையாக வளர்த்து வந்தார்கள் அந்நாளையிற் பேதை பெதும்பை பருவங் கடந்து, பதினன்கு வயதிற்கு மேல் மங்கைப் பருவம் நேரிட்டது.

அப்போது சுதாசனையின் மாதாபிதாக்கள் மகிழ்ந்து உதாசன னென்னும் அக்கினி பகவானைப் பூசிக்கும் படியாய் அவனை வரும்படியாய் உன்னினர்கள்: அவ்வாறே அவன் வந்து அவர்கள் செய்த பூஜை முகத்தி லிருக்கின்றான். அவனுக்கவர்கள் செய்யத்தக்க பூசை யாவு முடித்துப் போயினர்!

இப்படி அவர்கள் போனபின் அந்தப் பெண்ணானவள் தன் காலில் லணிந்த தண்டை - சதங்கை - சிலம்பு இவைகள் கொஞ்சத் தக்கதாகவும், சகலாப்ரணங்களுங்



கல கல வென்று ஒலிக்கத் தக்க தாகவும், இரண்டு பொற் கிரி போற்றிரண்ட தொய்ய லெழுதிப் புரண்ட கொங்கையைச் சுமந்த விடையானது தாள மாட்டாது ஏங்கிச் சிவ்வாடத் தக்கதாகவும், கரத்திற் றரித்திருக்கப் பட்ட வளையல்கள் கல கல வென்று கோஷிக்கவும், மேகலாபரணம் பதினாறு கோவை யுடன் மன்னிப் பின்னும் முன்னும் பார்க்கும் படி யாகவும், செவ்வரி கருவரி படர்ந்த செங் கண்ணானது செவி வரையிலும் பாய்ந்துலவவும், பவளம் போன்ற வாயிற் பற்களாகிய ஆணி முத்துகள் பிரகாசிக்கவும், இன்னும் விசித்திரமான சித்திர ரூபம் பொற் பிரதிமைப் போல் வருகிறாள். அப்படி வருகிற போது புருவ மாகிய வில்லை வளைத்து, சொருவ மாகிய கண்ணம்பு தொடுத்து, முகவுல்லாச நய நகையும் கொடித்து, மிருது சல்லாப சரபதமும் படித்து அக்கினி தேவ னிருக்கு மிடமாய் வந்தாள்.

இவ்விந்தை யிருந்த சுதாசனையின் சௌந்தர்யத்தைப் பார்த்த அக்கினி தேவன் அவள் கண்ணம்புக்குப் பாய்ந்தவனாகி, கால் பதறி, மயங்கி, காமாக்கினி யாற்றியங்கி, சரீர முலர்ந்து, சருகாய்ப் புலர்ந்த, அடக்க மாட்டாத ஆசை கொண்டவனாய், அவளை நோக்கி, ஓ சுமுக மதியே! சுகுணவதியே! ஓ சுசுர் வணியே! ஓ சுதாசனா மணியே! நீ எனக்குப் பெண்ஜாதியா யிரு வென்று வருந்தினான்.

இந்த சொற் கேட்ட அந்தப் பெண் யிருந்த நாணத்துடன் தலையிறங்கி நின்று, தோகை மயிலைப் போற் சாய்ந்து, குயிற் போற் கூவி, கிளி போல் வசனிக்கின்றாள் ஐயா பகவானே! என் தாய் தந்தையார் என்னைப்பெற்று வளர்த்த சந்தோஷந் தீரச் சயம்பரமாய் ஒரு வருக்கு

பாணிக்கிரகணம் பண்ணிக் கொடுப்பதற்கு முன்னமே, என்னிச்சையாய் ஒருவர் பேரி லாசைப்பட் டிணங்குவது அழகோ! எல்லாந் தெரிந்த உமக்கு நான் சொல்ல வேண்டிய தென்னே! உமதிஷ்டப் படிக்கி நடத்திக் கொள்ள வேண்டு மென்றாள். உள்ளத்தில் விளைந்த ஆசையை விருதாவாய்ப் போக்காமல், என் தாய் தகப்ப னிடத்திற் சென்று, அவர்களை சம்மதிக்கக் கொண்டு, தம திஷ்டப்படிக்கு முடித்துக் கொள்ளு மென்று சாற்றி தனது தாய் தந்தை யிருக்கு மிடத்திற்குப் போனாள்.

இப்பால் அக்கினி பகவான் வெட்கப் பட்டு, வேதக் குன்று* வளர்ந்ததுபோல் வேதியன் வடிவங் கொண்டு சுபோதன ராஜ னிடத்திற்குப் போனான். அந்த ராஜன் இந்த பிராமணனைக் கண்டு வணங்கி ஆசீர்வாதம் பெற்று, தேவரீர் யாண்டிருந்து வருகின்றீ ரென்று கேட்டனன். அதற்கு அக்கினி தேவன், ஓ வெற்றி மாலை தரித்த வேந்தனே! உருவத்தில் மிகுந்த அழகைப் படைத்த உம்முடைய குமாரத்தி சுதாசனையை எனக்குக் கலியாணம் பண்ணிக் கொடும்; நான் அதற்காக வந்தே னென்றான். அதற்கு ஒன்றும் பேசாம லிருந்தான். அந்த வேளையிற் பர்வதம் போன்ற தேகமுடைய அக்கினி தேவன் காணி, அப்பாற் போய் தன்னுடைய சுடர்களைச் சுருட் டிக் கொண்டு மறைந்து போய் விட்டான்.

பின்பு மூன்று லோகத்திலும் அக்கினியைக் காணா மல், தேவர் - முனிவர் - பிராமணன் முதலிய பேரும் அலைந்து திரிந்து வருந்தி, திக்கடைக் கோலத் திரிந்தார் கள் அரனிடத்திலாய அக்கினி பிறக்காமற் போனதி னால், சித்தியாக்கினி - தீபம் - யாகம் - சமையல் - பாகம் தீபம் ஒன்று மில்லாமல் உலகம் இருண்டு போயது. இப்



பேர் பட்ட வேலைகளை யெல்லாம் குறைவற நடத்துகின்ற செங்கோலை யுடைய அரசனும் மனம் வேறு பட்டு, சந் தோஷ மில்லாமற் சலித்துக் கொண்டு, நான் செய்த பாவமோ? என்னைச் சேர்ந்தவர்களா லெய்த குற்றமோ? தருமந் தப்பியதோ? ஈதென்ன காரணந் தெரிய வில் லையே? என்னும் பெருங் கலக்க முடையவனாய், அக்கினி பகவான் எப்போதும் போல் ஆவி பெற்றுக் கொள்ளா மல் போன தென்ன அதிசயம்? என்று வெகு விசார மாய் நடுங்கிப் பெருமூச்செறிந்து யோசனை செய்துக் கொண்டிருந்தான்.

அக்காலத்தில் பிராமணன் யாவருந் தவித்து, ஸ்நா னம் ஆசமனீய முதலிய சற்கருமங்க ளில்லாமற் சங் கடப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அக்கினி பகவான் அவ் வேதியருக்கு வெளிப்பட்டு, ஓ ஐயமார்களே! சுதாசனை யிடத்தில் எனக்கு மோக முண்டா யிருக்கிறது. அந்த ஆசையை நீக்கினால் நான் பழயபடி திரிவேன். இல்லாவிட்டால் என் சுடுகையைப் பார்க்கிலும் காமாக் கினி என் மடங் கதிகமா யென்னைக் கொளுத்தி விடுகிறது. அதைச் சகிக்க மாட்டாமல் ஒளித்துக் கொண்டிருக் கின்றே னென்றான். அதைக் கேட்ட பிராமணன் அரச னுக்குத் தெரிவித்தார்கள், அரசன் அப்படியா வென்று மகிழ்ந்து, தன் குமாரத்தியைக் கன்னிகா தான மாக அக்கினியும் மன்மத சொருபங் கொண்டு பெண் கையைப் பிடித்து, அரசு - ஆல் - முருக்கு - இவைகளினாற் கட்டி நாட்டிய அரசாணிக் காலை பிரதக்ஷிணம் வந்து, பெரிய வர்களுக்கு நமஸ்காரம் பண்ணி, [illegible] பெண்ணுடைய கத்தின் இளமையான குது[illegible]யும் போக வாரிதியி லழுந்தி, இன்ப[illegible]ய இரம்பத் [illegible]ருந்தி.

எங்கணும் வடவைக்கனலாகிய பெருந்தீயெனப்பொருந்தி மகிழ்வு மாட்சிமையும் பெற்றிருந்தான்.

---

## 10 - போகவதி சரித்திரம்.

—*:*—

அந்த காலையில் சுதாசனை கர்ப்பத்தில் புண்ணிய உருவம் போல் ஒரு பிள்ளை பிறந்தான். அந்த பிள்ளைக்கு அக்கினிதேவன் தவத்தி லுயர்ந்த தவசிகளும் திரியாக்கினிக் கதிகாரிகளாகிய வேதியர்களும் மங்களாசனஞ் சொல்லி வாழ்த்தும் படியாய், தேவர்கள் புஷ்பமாரி தூற்றும் படியாய், புத்திரோற்சவ முதலிய தருமங்களைத் தாமஸி யில்லாமற் செய்து, ஞான சுதரிசன னென்கிற நாமங் கொடுத்து, குழவிப் பிறை வளருந் தன்மை போல் வளர்ந்து வருகிற குமாரனுக்குப் பூணூற் கலியாணமும் பொருத்தி, வேதாகம சாஸ்திர புராணங்களும் ஐயந்திரி யில்லாமல் அறிவித்து வந்தான்.

பின்பு தன் மகன் உலகத்தில் முயற்சி யடைந்த பிற்பாடு, அன்னபக்ஷி நாணிய நடையும், சொர்ன ஸ்தம்பந் தோற்குந் தொடையும், மின்னற் கொடி வெட்கிய இடையும், பொன்னைப் போற் பிரகாசிக்கும் உடையும், கற்கண்டு பாகினு முயர்ந்த மொழியும், விற் கொண்ட வண்டினுஞ் சிறந்த விழியும், அல்கண்ட கொண்டலைப் போன்ற கொண்டையும், கற்கொண்டு ருண்டு முழங்கிய தண்டையும், களங்கமற் றிலங்கிய முகமும், இளங்கனிச் சுவைத் தல்குலும், இக்கித மனமும், எழிலார் கனமும் அருந்ததிக் கொப்பாகிய கற்பும், ஆசார பூசை ஆகமத்திற் கொப்பும், போகவதி யென்னப் பெயர் செய்யும், ஓர் மகரிஷியின் மகளாகிய பெண்ணரசியைப் பேசி, நல்ல முகூர்த்தத்தில் தன் மகனுக்கு விவாகம் நடத்தினான்.



அப்பால் பெண்ணும் பிள்ளையும் இல்லற வாழ்க்கையிலிருந்து, தருமங்க ளெல்லா வற்றையும் புரிந்து, கிரகஸ்தாஸ்ரமத்திற்குச் சொல்லி யிருக்கிற விதி முறை தப்பாமல் நடந்து, விரத மிருந்து, தரும தாட்சியுங் கரும தாட்சியு மில்லாமல் தவமேலிட வாழு காலையில், இவர்களிருவரும் சண்டனை வென்றிட வேண்டுமென்று உட்கொண்டு, அங்கனிருக்கும் பெரியோர்களிடம் தங்களபிப் பிராயத்தை யுரைத்து, குருக்ஷேத்திரத்திற்குச் சென்று, விசால மான பர்ண சாலை யொன்று ஏற்படுத்திக் கொண்டு, அவ்விடத்தில் தவமாய் நின்று, அங்கே வருகின்ற மாதவர்கள் - மகா ரிஷிகள் - இவர்கள் முதலாகிய பேர்களுக்குப் பாத பூசை அர்க்கிய பாத்திய உபசாரங்கள் பண்ணி, திவ்ய கந்த மூல கனிவர்க்கங்கள் கொடுத்து, வந்தனை வழிபாடு பற்றி வந்தார்கள். இந்த சத்திய நித்திய பத்திய முதலிய சாந்த வேதாந்த விரத தபோ நிதியாகிய சுதெரிசன மகா ரிஷியும், பொற்புடைமை திணிந்த கற்புடைமை யணிந்த காதலியாகிய போகவதி யென்னும் மனைவியி னுடைய மனமு மொன்று பட்டிருந்தமையால், இவர்களுக்கு நாளுக்கு நாள் தவமுயர்ந்து. நான்குதிக்கும் அடர்ந்து வரும விருந்தினராகிய அதிதிகளுக்குப் பரிந்து உபசரித்து வந்தார்கள் இது கண்ட தேவர்களெல்லோரும் பதியுஞ் சதியும் வதியும் விதியிதுவே யென்று கொண்டாடிப் புகழ்ந்து, எல்லா தருமங்களிலும் இல்லற தருமஞ் சொல்லத் தரமல்ல வென்று துதித்தார்கள்.

இப்படி யிருக்கிற காலத்தில் சுதெரிசன ரிஷியானவர் தன் மனதிற் குடி கொண்டிருக்கப்பட்ட விரத முடிவெல்லாந் தனது தரும பத்தினிக்குத் தெரியப்படுத்தினார். அதாவது, ஓ என் கண்ணுக் கினிமையான பெண்ணே! இயாராவதொருத்தர் இந்த ஆசிரமத்தின் வழி வந்தால்; யாவரோ எவரோ வென்றெண்ணாமல் அன்பு பாராட்டி முன்புற வைத்து, அருக்யபாதி பூஜை புரிந்து, அட்சதை தாம்பூல சந்தன மமைத்து, தூபதீபங் கொடுத்து, சுயம் பிரகாசச் சோதியாகவும், ஆதி மூல விஷ்ணு வாகவும், ஆத்மாக்களைப் படைக்கும் பிரம்மாவாகவும் வந்தனை வழிபாடு செய்வை யல்லது, வேறு பாடாய் யாதுபாடு நினையாதே. அவர்களைச் சிவசொரூபம் - விஷ்ணு மயம்-பிரம தேயசு என்று மதித்து, எதிர் பணிந்து துதித்து, அவர்களுடைய உடல் வருத்தந் தீர்த்து, உண வருந்தப் பொருத்தி, ஆலவட்டம் போட்டு அடிமலரை வருடிப் பிடித்து, அறுசுவை யன்னம் வருந்தி யுண்பித்து, அவர்கள் திருப்தி யடைந்து இளைப்பாறி, அவர்களாய்ப் போலும் ஆசீர் வசனம் பெற்று, அவர்களடி மலரை சிரமது முடியுற வணங்கிக் கொள்ள வேண்டியது. இதை விட வேறு தருமமும் - புண்ணியமும் எங்கணுமில்லை. ஓ திங்கள் வதனி! அதிதி பூஜையே பூஜை மற்றப் பூஜை யெல்லாம் வெற்றுப் பூஜை இல்லறந் தேடி வந்த அதிதிகள் எப்பொருளையும் விரும்பார்கள் ஒரு வேளை விருப்புற்றுக் கேட்டாலும் சந்தோஷத்துடன் கொடுக்க வேண்டியதே. இதுவே முக்கிய தருமம். கேட்டோருக் கிட்டோர் பெரியோர். இடாதோர் இழிந்த வாழ்வினை யுடையோர்கள் அவர்கள் ஒரு வேளை ஆனந்தமாய் உன்னை விரும்பினாலும் முகஞ் சுளியாமல், மேனி நெளியாமல், விட்டி லொளியாமல் மேனி விடுவதே மேரா



யெ தருமத்திற்கு வேராகும் இதன்றி, நானில்லாத போது துறந்தோர் முதலிய பேர்கள் வந்தால், இப்போது நான் உனக்குத் தெரிவித்திருப்பதைப் பிரணவப் பொருளாகக் கொண்டு, பூசித்தனுப்புவதே உனக்குக் கடமை; இதுவே தருமம். என்றின்னுஞ் சொல்ல வேண்டிய இயற்கைகள் எல்லாஞ் சொல்லி, இவ்வில்லற தருமத்தைக் கிரமமாக நடத்தின பேர்கள் பெற்ற பேறும், பிரபலப் பெரும் எடுத்துக் காட்டி, இருவரும் மனங் கலந்து வாழ்ந்து வந்தார்கள்.

இப்படி வாழ்ந்து வருகிற காலையிலோர் நாள், சுதெரிசன மகாரிஷியானவர் தன் பெண்ஜாதியைப் பர்ண சாலையில் வைத்து, யாகாதிகட்கு வேண்டிய தருப்பை-சமித்து-மாவிலை-முருக்கிலை-புரசிலை-இவை முதலியவை கொண்டுவரும்படியாகக் காட்டுக்குப் போனார் இந்த பதிவிரதா சிரோமணியானவள் இருந்த விடத்திற்கு எமதருமனானவன் ஒரு பிராமண வடிவங் கொண்டு சரேலென்று வந்தான் வேதாகம புராண முதலிய சகலமுங் கற்றவனும், திடமனம் பெற்றவனுயும், வந்த அவனைப் பார்த்தவுடனே, போகவதி யானவள் தனது தேய்ந்த இடையுடனே மனமுஞ் சோரும்படிக்குப் பயந்து திடுக்கிட்டு, திடீலென்று எழுந்து எதிர் சென்று நின்று உபசாரம் பேசி, வேதிய ரிருக்கப் புசிக்கப் படுக்க விதித்திருக்கின்ற பர்ணசாலைப் பாலி லழைத்துக் கொண்டு போய் தர்ப்பாசனத்தி லுட்கார வைத்து, அவருடைய அடிகளில் முடியைப் பதித்து தெண்டனிட்டு, சுவாமி! நாயேன் கடைத்தேறுவதற்காக எழுந்தருளிய ஞானக்கனியே! அடியான் செய்ய வேண்டிய பணிவிடை யின்னதென்று கட்டளையிட வேண்டுமென்று தொழுதனள்.

அவன் செய்த உபசாரத்திற்குச் சந்தோஷப்பட்டு வந்த பிராமணன், அந்தோ பைந்தொடியே! கந்தர்ப்பன் கணையால் நொந்து நானைந்தேன்; வந்தனை யடைந்தேன், ஓ தையலே! என் சிந்தை மையலைத் தீர்த்தருள். உன் அமுத முலையையும், அதரக்கனியையும் விரும்பி அலைந்து கெட்டோடி வந்த எனக்கு அவைகளை யருந்தி, என் மோகத்தையுந் தாகத்தையுந் தீரும்: என்று பலவாறாக வேண்டினான். அவன் சொல்லைக் கேட்ட உத்தமி சற்றுங் கலங்காமல், அந்த இடத்தை விட்டும் விலகாமல், பத்திரசமாய்ப் பணிந்து, ஐயனே! இது முற்று முணர்ந்த முனிவர்கள் சொல்லு முறையோ? தாங்கள் விரும்பிக் கேட்ட தானத்தை நிதானித்தால் வானத்தில் மேலாகிய பதவி தருமோ? இல்லை இது உயிருக்கேனும் உதவியாய் வருமோ? ஐயோ! அற்ப காமத்தினால் உமது விற்பனமெல்லாம் வீணாகிப் போய், சொற்பனங் கண்டவர் போற் சோம்பிக் கற்பனையாகிய நரகத்தில் வீழக்காரியமேன்? உம்மைத் தொட்டு என்னையுமிழுக்குமே! தீமைக்கேது வாகிய காரியங்களிற் பெரியோர்கள் பிரவேசிக்க மாட்டார்களே! அனித்திய தேகத்திற்கு அனித்தியந் தேடுவது அனித்தியமே! ஆதலால் இந்த இல்லறத்திலிருக்கப் பட்ட பதார்த்தங்களில் எதைக் கேட்டினும் இந்தப் பெண்ணின்பம் ஒன்று தவிர மற்றெல்லாந் தருகிறேன். உமக்கு வேண்டியவை கேளுமையா வென்று அந்தப் புனிதவதிப் புகன்றாள்

இவ்வளவையுங் கேட்டிருந்த ஏமப் பிராமணன் நகைத்து, இவ்வேளையி லெனக்கு வேண்டியது இன்பம். நீ வீண் ஐயம் பேசுகிறாய். நீ என்ன தந்தாலும் அதை என் மனத்தினாலும் கரத்தினாலும் தீண்டேன். ஒருவரிடத்தில் ஒரு பொருளையும் வாங்குவதில்லையென்னும் விரதமுடையோன். இப்போது நான் மோக விகாரங் கொண்டிருக்கின்றேன். நீ தடைப் படுத்தாமல் உன்னுடைய அதரபானந் தருவையா? தரமாட்டையா? என் பிராணன் போய் விடும் போலிருக்கிறது உனக்குப் பாபமும் பழியும் வரும். என்னைச் சீக்கிரத்தில் காத்திடுக. விரைவில் என் அருகில் வருக. என் மடிமீதுட்கார்ந்து முத்தந்தருக என்று செப்பினான்.



அந்த ஆரணனுரைத்த காரணத்தைக் கேட்ட பூரணச் சந்திரோதயம் போன்ற வாரணத் தனத்தையுடைய புண்ணியக் கன்னி அனேக விதமாயெண்ணி, தீர்க்காலோசனைப் பண்ணி, கிலேச முள்ளவளாய் நண்ணி, இனியென்ன செய்வேன்! ஆ தெய்வமே! இவருரைத்த வார்த்தையோ தடுக்கக் கூடாமையாயிருக்கிறது. நமது நாயகன் கட்டளையோ அதிதியானவர் என்ன கேட்டாலுந் தடையறக் கொடுப்பதே தருமமென்று மொழிந்து, தானும் இல்லையென்னாமல் எதுவுங் கொடுக்கிறேனென்பதாய் விரதங் கொண்டிருக்கின்றார். அவருடைய விரதமும் பங்கமாகப் படாது நமதுபதியினுத்திரவின் படி நடக்கிறதே நமக்குப் பழுதில்லா தருமம். அதிதிகளின் மனதைத் திருப்தியாக்குகிறது இல்லற வாழ்க்கையின் இயல்பு இவைகளைப் பாராட்டல் செய்யாமல் விலக்கிவிட்டால், இது வரையிலுந் தேடிய மனை வாழ்க்கைப் பெருந்தவம் அடியோடழிந்து போம் ஒருவர் நாடியதைக் கொடுக்கிற நல்லறமே இல்லறம். நாமிருவருக்குடன் பட்டு விட்டால், நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்பு என்னு நால் வித மகடுக் குணமுங் கற்புடைமையுங் கெட்டுப் போம் இதற்கு யாது செய்யத் தக்கது! என்று

யோசனை கொண்டு, முடிவில் ஸ்திரீகளுக்குப் புருஷன் தெய்வம்; அவருடைய ஆக்ஞை திருமந்திரம்; ஆதலால் நம்முடைய கணவன் கண்டிருக்கின்ற படிக்கு மனச் சஞ்சலமில்லாமல் உடன் படுவதே மகா பதிவிரதா தன்மம் என்று மனவுறுதி கொண்டு, தன் புருஷனை தெய்வமாய்ப் பணிந்திருந்து, சுவாமி! என் கர்த்தாவாகிய பர்த்தாவின் சொற்கடவாமல் நடப்பேனேயில் லோகோபவாதத் தடையாகிய இடையூறு என்னை என்ன செய்யக் கூடும்; மற்றொன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை என்று குலமடந்தையானவள் அந்தப் பிராமண அதிதியை நோக்கி, ஏ ஐயா! தேவரீர் இச்சைத் திரும்படிக்குச் சித்தமாயினேன். முல்லையரும்பைப் போன்ற தந்தங்கள் பிரகாசிக்கும்படியாய் நகைத்துக்கட்டி, முத்தாடி, அதரபான மூட்டினள் அவளருந்தக் கொடுத்த இன்பரச சரச சல்லாபங்களினால் அந்த எம பார்ப்பான் உல்லாசமாயிருந்து அந்தப் பெண் கொடியாகிய போகவதியுந் தானும் ஒரு அறைக்குள் நுழைந்தார்கள்

அந்த வேளையிற் காட்டிற்குப் போயிருந்த கணவன் வந்து, தான் கொண்டு வந்த தருப்பை முதலிய வஸ்துக்களை ஓம வேதிகை பக்கலில் வைத்துப் போட்டு, தன் பத்தினியாகிய உத்தமியைக் காணமல் பட படப்புடனே அவள் பேரைச் சொல்லிக் கூப்பிட்டார், அந்த ஓசையை போகவதி கேட்டு நடு நடுங்கி, வைதிகப் பிராமணன் முகத்தைப் பார்த்தாள்; அந்த விடா சண்டாளனாகிய அதிதியானவன் கட கட வென்று பற்கடித்து, நீ கடைத் தேறுவாய்! கடைத் தேறுவாய்? பேசாதே! பேசாதே! விஞ்சிப் பேசுவையாகில் உன்னைச் சபிப்பேனென்றான் அதைக் குறித்துப் போகவதி யோசித்து, நாமிப்போது



இருவருக்கு உடன் பட்டோம்: இந்த அதிதியின் வார்த்தைத் தீர்ந்து, இவர் ஆனந்தம் படுவதற்கு முன்னே நாமுறித்துக் கொண்டு போவது முறைமையன்று; நல்லது நாயகனுக்கு நாமிங்கிரோமென்று தெரியச் செய்யலாமென்றால், இந்தப் பிராமணர் சபிப்பார்: ஆகையால் நம்முடைய வினைப்பிரகாரம் முடியட்டுமென்று பேசாமலிருந்து விட்டாள்,

இப்பால் அவள் புருஷனானவன் அநேகந் தரங் கூப்பிட்டு, மனந் திடுக்கிட்டு, வீட்டிற்குள் நுழைந்து பார்த்தான். அவ் வீட்டிலிருந்த அதிதிப் பிராமணன் சுதரிசன முனிவரைப் பார்த்து, ஓய் பிராமணனே! மதி மருளாதே! கவலைப்படாதே! கண் கலங்காதே! மயக்க முறாதே! உன் மனைவி அதிதி பூசை பண்ணுகிறாளென்றான். அக்கோதைக் கிசைந்த மணவாளன், சொற் குறிப்பறிந்த குணவானும், மேலான கதி சம்பாதிக்க விரும்பினவனும், புண்ணிய மெல்லாவற்றையும் ஒரே மொத்தையாக உருட்டித்தானே கைக்கொள்ள வேண்டுமென்னுங் காதலையுடையவனுமானதையால், அதிதியின் பேச்சைக் கேட்டு ஆனந்தமாய்ச் சரீரம் புளகித்து, மனங்குளிர்ந்து, மேன் மேலான பாக்கியங் கண்டவன் போல் பூரித்து, ஆடினான் பாடினான்; வேத பாடங்களைச் சொல்லிக் கொண்டோடினான். ஜன்ம சாபல்யமானேன்! என் தந்தை தாய் தேடிய தவந்தான்! தவம் மற்றதெல்லாம் அவம். கர்த்தாவினுடைய கிருபையை நானென்னவென்று சொல்லுவேன். அதிதியர் எழுந்தருளியவரும் அவரே! யாவற்றிற்கும் மேலான அறிவும் அவரே! திரிமூர்த்தி சொரூபமும் அவரே! எனக்கு முக்கியமான முதல்வரும் அவரே! விரதமும் அவரே! விவேகமும் அவரே!

வெற்றியும் அவரே! யுக்தியும் அவரே! சத்தியும் அவரே! சித்தியும் அவரே! இப்பவும் அவரே! இதுவே சத்தியம்! இதுவே நிச்சயம்! இதற்குப் பஞ்ச பூதமும், சூரிய சந்திரரும் என் மனமுஞ் சாட்சி! உண்மை யென்பதற்குத் திருஷ்டாந்திரக் காக்ஷி! இதுவே தருமக் காணியாக்ஷி. என்றுரைத்து, ஐயா! மஹாநுபாவா! முன்ன மென் பெண்சாதிக்கு அதிதிகள் ஆசைப் பட்டு விரும்பினபடிக்கு வழிபடச் சொல்லி உத்திரவு செய்திருந்தேன். நானுரைத்த வண்ணம் என் பெண்சாதி அதிதி பூசை பண்ணுகிறாள். மெத்தவும் சந்தோஷம். மகா சந்தோஷம்: என்று வாசலிற் போய் நின்று, அவ்வதிதியை வாயோயாமற் றுதிக்கின்றான்.

அப்போது அசரீரி, இதெல்லாந் தெரிந்து, ஓ அதிதியே! இந்த மஹாநுபாவன் சொன்ன வார்த்தைகள் யாவும் சத்தியமே. உண்மையே. அகம் புறம் இரண்டும் ஒத்தவன். யாதொரு குற்றமு மற்றவன். என்று சொல்லி யடங்கியது. அந்த வேளையில் அந்தப் பதிவிரதையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வீட்டுக் குள்ளிருந்த வேதியன், தானேர்ப் படுத்திக் கொண்டு வந்த வேடத்தை யொழித்து, தனது யதா ரூப மெடுத்து, கால - பாச - தண்ட - சூல - கோலத்தைத் தாங்கி, எருமைக் கடா வாகனத்துடன், தேவதைகள், ரிஷிகள், திக்குப் பாலகர் சூழப் பிரத்தியக்ஷ மானான்.

உடனே அந்தப் புனிதவதியும், அவள் புருஷனான புண்ணியவானும், பிரதக்ஷணநமஸ்காரம் புரிந்து, அனேக விதமாகத் தோத்திரஞ் சொல்லிப் போற்றி வாழ்த்தினார்கள். நான்கு திக்கிலும் தேவர்கள் புஷ்ப மாரி வாரித் தூற்றினார்கள். உலக மெல்லாம் வழுத்தக் குறை தவிர்ந்தார்கள். தரும வேந்தனும் உடல் குளிர்ந்து, இல்லறம் நடத்திய சதி புருஷா ளிருவரையும் பார்த்து, ஓ உத்தம குணத்தரே! உலகத்தில் உங்களைப் போல் ஒருவரையுங் கண்டிலேன். ஓ சுத்த பவித்திரனே! உனக்கு வேண்டிய வரங் கேள் தருகிறே னென்றனன். அதற் கவர், சுவாமி அடியேனுக்கு எம தண்டனையும், எம வாதனையும் இல்லாமலிருக்கும் படிக்கு வரங்கொடுக்க வேண்டு மென்றனர். அப்படியே எத்தனை காலம் இவ்வுலகிலிருக்க இச்சையோ அத்தனை காலமும் அன்போடிருந்து, அதிதி பூசை புரிந்து பிரபஞ்சத் தாசை பின்னிட்ட போது, தேவ லோகத்திற் போயிருந்து, போக பாக்கியங்களை அனுபவிக்க வரங் கொடுத்தேன். இன்று முதல் என்றைக்கும் உனக்கு எமனுடைய உபத்திரவ மில்லை, என்றியம்பிப் பதிவிரதா சிரோன் மணியாகிய போகவதி அம்மனைப் பார்த்து, அம்மா! உன்னுடைய மேலான நிதானத்திற்கு மெச்சினேன்! சந்தோஷ மானேன்! நீ இன்று முதல் போகவதி யென்னும் பெயருடன் வேகவதி என்கிற நதியாய், புனிதமாய், மருத்துவமாய், என்னாளும் வற்றாமல். இருப்பதோடு, உன் புருஷனுக்கு மாத்திரம் ஸ்திரியாய், மற்றவர்களுக்குச் சகல பாபங்களையும் போக்கடிக்கின்ற புண்ணிய நதியாய் வாழ்க வென்று வரங் கொடுத்து, அங்குள்ள மற்ற பெரியோர் முதலிய பேர்களும் புகழ்ந்து ஆசீர்வதிக்கும் படிக்கு அவர்களுடைய நன்னிலையை வெளிப்படுத்தி, தனது யதா ஸ்தானம் போய்ச் சேர்ந்தான். அத்தரும தேவன் கொடுத்த வரத்தின் படிக்கு எம தண்டனையை ஜெயித்து இன்ப மாக வாழ்ந்திருந்தார்கள். ஆதலால் இல்லறத்திற்கு எடுத் துரைத்திருக்கின்ற நெறி முறை நீதி

முறையின் படி நடந்தால் காலனை வெல்லலாம்; நதிமையும் பெறலாம்.

---

## 11 ௵ உரிசை தேவி சரித்திரம்.

—:*:—

தேவசன்மனென்னும் ஓர் முனிவருளர், அவருடைய பெண்சாதியானவள் உரிசை யென்பவள். அவளோ! சித்திரக்காரரால் எழுதி முடியாத விசித்திர அழகி மகா புத்தியுடன் புருஷனுக்குபசாரம் பண்ணித் தொழப்பட்ட புத்திசாலி, இவ்விருவருங் கூடி வனத்தில் வாழ்ந்து வருநாளையில் ஒரு நாள் இன்னொரு வனத்திலுள்ள மற்றொருவருக்கு யக்கியம் பண்ணி வைக்க வேண்டிய வேலை இம்முனிவருக்கு வந்தது, அதனை மனதிற் கொண்டு, விபுலனென்னும் பிரதம சிடனைப் பார்த்து, அப்பா! எனக்கு மனைவியாயும், உனக்குத் தாயாகவு மிருக்கிற உரிசை யென்னும் ஆசாரிய பத்தினியை விட்டுப் பிரிந்து ஒரு வேள்வி செய்யப் போக வேண்டியதாய் நேரிட்டிருக்கிறது என்னுடைய ஸ்திரியை தேவேந்திரன் விரும்பி வெகு நாளாய்க் கண் போட்டிருக்கிறான் அதை நானறிந்து, ஸ்திரிகளுக் கெல்லாம் காவல் வேண்டு மென்று கூறிய நீதியின் படிக்குப் பாது காத்துக் கொண்டிருந்தேன். அதனால் இது வரையிலும் இந்திரனுக்கு அவ் வெண்ணம் எட்டாமற் போய் விட்டது. அப்படி யிருந்த போதிலும் அவன் இவள் மேற் கொண்ட ஆசையை வெறுத்து விட்டவனல்ல. ஆகையால் நான் அக்கரையாய் யாகம் பண்ணி வைக்கப் போக வேண்டி யிருக்கிறது. நான் போய் வரு



கிறேன் நீ என்னைப் போல இரவும் பகலும் ஏமாறாமல், இந்திரன் வந்து நுழையாமல், என் மனங் குழையாமல், உன் தவம் பிழையாமற் காத்துக் கொண்டிரு; என்று கருணையோடுரைத்து, மறு படியுஞ் சிடனை நோக்கி, அப்பா! தேவேந்திரன் பலவித ரூப மெடுத்து வருவான். அவைகளெல்லா வற்றையும் உனது தவவலிமையா லுணர்ந்து அதற்குத் தகுந்த அவசரத்துடன் தடுத்துக் காத்து ஆதூராயிருக்க வேண்டும் என்று அனேக முறை யுரைத்துப் போகத் தொடங்கினான் ஆசாரியன் மொழியைக் கேட்டவிபுலனென்ற சிடன், சுவாமீ! தேவரீர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், மனதிற் சஞ்சலம் வேண்டாம். அந்த வேலை யென் வேலை நீர் போய் வாரும் தேவரீர் உத்திரவின் படி பத்திரமாய்க் காக்கிறேன் பாரும் என்று ஆசானைப் பூசித்து அனுப்பி விட்டு, தான் ஆசாரிய பத்தினியை வித்தியாச மில்லாமற் காத்துக் கொண்டிருந்த தேவேந்திரன் மாறு ரூபமாய் வந்து வஞ்சிக்கப் போகிறானென்றும். நம்மை நம்பிப் போன ஆசாரியருக்கு ஏதாகிலும் குறைவு வருமாகில், நமது சத்தியமும் தவமும் நிறை வேறாதென்று நினைத்து, ஆசாரியர் பெண்சாதியுந் தெரிந்துக் கொள்ளா திருக்கத் தக்கதாய்ப் பரகாயப் பிரவேசப் பந்த மென்னுஞ் சாகச மந்திரத்தாற் குருபத்தினியின் தேகத்திற் பிரவேசித்து, பிராணனோடு பிராண வாயுவாய்க் கலந்து பிழையற்றிருந்தான்.

இந்தப் பரட்டை இந்திர னறியாமல் அவ்வுரிசை யாகிய இருடி பத்தினியின் கொண்டை போ லிருண்ட காலத்திற் செங்காவி வஸ்திர முடித்து, சங்கோருந் தண்டு கமண்டலமுங் கொண்டு, வச்சிராயுத மனைய கண்களை யுடைய அம்மாதாசியின் ஆசிரமத்திற்குள், வந்து, பெண

கன் மோகிக்கும் படியான வடிவமெடுத்து, கநத்தகாய மேனியுடன் மகா உச்சித ரூபமாய் அவளுக்கு நேரில் நின்றான். அவனைக் கண்ட மங்கையானவள் மருண்டாள் அப்போதே இந்திரன் சொல்லுகிறான். ஓ திங்கள்வதனா! ஓ பொங்கு மெழிலாய்! ஓ மாதுரத்தினமே! ஓ மாதுரைத்தனமே! உன் பருவமும், உன் சொரூபமும், உன் னுருவமும், வீணாக விருதாக் காலம் போக்கி விட்டாய். ஆ! ஹா! என்னுடன் கூடினால் உனது மனம் வேறோரின்பந் தேடுமோ? உன்னுடன் கலந்தா லென்னிஷ்டம் வேறு நாடுமோ? இந்திரபோகம் உன் சொந்த மல்லவோ? பாக்கிய மனைத்தும் நீ பார்த்துப் பகர்ந்தவர்க் குண்டாம். இப்படிக்கிருக்க, இந்தப் பேய் முனியைப் பற்றிக் கொண் டிருப்பதில் பிரயோஜனமென்ன? நல்ல சோறுண்டா? நாடத் துணியுண்டா? பூசச் சாந்துண்டா? பூவாங்கி முடிக்கப் பொருளுண்டா? சீராயச் சிறப்பிக்க ஆபரணங் களுண்டா? தித்திப்பா யுண்பதற்குச் சிற்றுண்டி யுண்டா? கட்டினத் தாலிக்குக் கடைமணி யுண்டா? கலவி குலவி புலவி திருத்திக் கூடுதலுண்டா? வெள்ளைப் பல்லுக்கு வெத்திலை யுண்டா? கிள்ளித் தெளிக்கச் சதை யுண்டா? ஐயோ! எனிப்படி வீணாய் வாணாளை மாய்க்கிறாய்? என் றென்றைக்கும் இந்தப் பருவ கால மிருக்குமோ? இனிப் போனால் வருமோ? இனியேனு மென்னிடத்தி லன்பு வைத்து இன்புறவை என்று இதமாகிய வார்த்தைகளை யெடுத்துப் பேசினான்.

அப்போது அந்த ரிஷி பத்தினியின் உடலுக்குள்ளே பரவி அபிக்கிய மாயிருக்கிற சிடன் அவையனைத்தையுங் கேட்டு, மனது நொந்து வருத்தப் பட்டு, கோபத்தோ டெழுந்து, மறுபடியு படங்கி, அந்த ஆசாரிய பத்தினி



பேசுகிறாப் போல் அவள் வாக்கிலிருந்து வசனிக்கிறான் எப்படியென்றால், அடா துராத்துமா! நீயார்? இந்திரனல்லவா? எங்கிருந்து வருகின்றாய்? ஒருத்தருடைய ஆசிரமத்திற்கு மற்றொருவர் வரலாகுமா? நீராவண சந்நியாசி போல் வாசற் காவலாளியையு மயக்கி யல்லவா வந்தாய்? நீயப்படி வருவதற்கு என்ன சொந்தம்? மாயாண்டி வேட மென்று கொண்டு வந்தாய்? நீ பெரிய தேவனாயிருந்தும் புத்தி யில்லையா? தேவர்களுன்னைக் கும்பிடுகிறார்களா? சத மகனென்கிற சப்த முனக்குண்டா? முன் பட்ட சூடு மறந்து விட்டாயா? முதற் கொண்ட தாரந் துறந்து கெட்டாயா? உனக்கு விண் புழுதாளி என்னும் பட்டந் தகாது ப்ரகஸ் பதி பேசிய நீதி போதாது. போ போ பைத்தியக்காரா! என்று பேசினான்.

இவை யனைத்தையுங் கேட்ட தேவேந்திரன் திக் பிர்மை கொண்டு, பிராணன் போன பிரேதம் போல் மூர்ச்சை யடைந்து சோர்ந்தான். அந்தச் சமயத்தில் சிடனை விபுலன் அந்த அம்மன் தேகத்தைவிட்டு வெளிப் பட்டு, சர்வ சம்ஹார கால ருத்திரன் போற் கொதித்து, சகல பூதமு நடுங்கக் குதிக்க, ஆ! தேவேந்திரனே! என் ஆசிரியன் இல்லாத வேளையறிந்து, என் தாயாரிடத் தில் வந்து, வாய்க்கு வந்தவம்பு மொழிகளை வசனித்தாய் மடையர்கள் போல் புஜலித்தாய் என் ஆண்டன் கண் டால் நீ பூண்ட பட்டமும், பூண்களும், பொருளும், பொன்னாடும் பாழாய்ப் போய்விடும். உன் பிறவியும் ஊழுக்காய் விடும். நீ கெடுவாய்! அடா படுவாய்! அடா குடிகேடா! அடா குருத் துரோகி! என் குரு சாமி கண்டால் மீட்டும் யாக நாறுவாய்! உன் தேகம் நீராய்ப்

போவாய்! ஓ காமியே! அடே மூதேவி யிருக்கும் பூமியே! பரதாரமும் பர பொருளும் இச்சிப்பது ஆண்மையன்றென்று யோசிக்க வில்லையோ? உரிமையான நீதி சாஸ்திரங்களை முறையாய் வாசிக்க வில்லையோ? வாசித்ததை விசு வாசிக்க வில்லையோ? ஆளனில்லாத வேளையிற் பெண்களை அனியாயஞ் செய்ய வந்தாயோ? இதுவே உனக்கு நிரந்தர வேலையோ? நெறி முறை யறியாத பாலையோ? அடே அனியாயக்காரா! நீ பாவியிலுங் கொடிய பாவி! பெரும் பாவி! இதோ உன்னைக் கொல்லுகிறேன் பார்! நீ இனி என் கையாற் சாகாமற் பிராணனுடன் தப்பிப் போவையோ? என்று சொல்லி மந்திர வாளை யுருவிக் கொண்டான்

இதை இந்திரன் கண்டான். உடனே திடுக்கென்று நடுங்கி, விட விடென்று ஒடுங்கி, வெட்கப் பட்டு, துக்கப் பட்டு, உடப்போடுயிர் போனவன்போல் பயந்து, மானத்தால் நயந்து, மகாரிஷிக்குச் சீடனை விபுலனுடைய பாதத்தில் விழுந்து, பாதவித்தெழுந்து, ஓ மகானுபாவா! ஓ மாதவ தீரா! ஓ ஞான சொரூபா! ஓ நற்குண நேயா! என் அபராதத்தை இன்றைக்கு மாத்திரம் மன்னித்து விடும், எளியேன் பொருட்டு விறக்கப்படும் எரியுங் கோபத்தை விடும். ஏழையென் பேரிற் கிருபைவையும். இளைத்த பேருக்கருள் செய்யும். புத்தி கெட்டேன், உமது ஆசாரியர் சொல்லைக் காப்பாற்றி யதைப்போல் அடியேனையுங் காப்பாற்றி ரட்சியும் இந்தம்மாளுடைய பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றியது போல் என மனது விருதாவாகாமல் மானங் காத்தருளும், சபிக்க வேண்டாம். க்ஷமிக்க வேண்டும். என்று அங்கங் குன்றி பஞ்சபட்டு, செங்கரங் குவித்து, சங்கர சுயம்புவே யென்று



சாஷ்டாங்கமாய்ப் பணிந்து, இன்று முதலென்றைக்கும் இப்பேர் பட்ட துஷ்ட வேலைக்கு உடன் படப்போகிறதில்லை உமக்காட்பட்டேன். ஐயனே! சினைத தனத்திற் பிறவேசித்துப் பெரிய தனத்தைப் போக்கடித்துக் கொண்டேன். இனிப் புத்தி வந்தது; புத்தி வந்தது. என்று போற்றிப் புலம்பினான்.

அப்போது விபுலனாகிய முனி மாணாக்கன் மலை போலெழுந்த கோபத்தை மாற்றி, மன மிதங்கிக் கிருபை கூர்ந்து, ஐயோ! ஆகண்டலனே! உனக்கு எல்லாப் போகமுங் கிடைத்திருக்கப் புல்லரைப் போலே திரிவானேன்? இது நல்லதல்லவே! உன்னைக் கொல்லும் டெல்லவே, இனி மேலும் இப்படிப் பட்ட பொல்லாங்குக்கு இடங் கொடாதே புண்ணியவான்கள் புனிதவதிகள் சாபம் பொல்லாது. நீ பிழைத்துப் போய்விடு உனக்குப் பிராண பிக்ஷைக் கொடுத்தேன் பதனம்; பதனம்; என்று சொன்னான். அப்படியே மகா பாக்கியம் உமது வாக்கியம் என்று அடிக்கடி வந்திருந்தது அமராவதிக்குப் போனான்.

இப்பால் மகாரிஷி பத்தினிக்குப் புருஷதருமங்களும் பதிவிரதா மகத்துவமும் போதித்து, ஆவலாகிய அத்தாயினிடத்திற் காவலா யிருந்தான். இப்படி யிருக்கின்ற வேளையில் எக்கியம் பண்ணப் போன தேவசன்மரிஷியானவர் வந்தார், அவரை விபுலன் கண்டு தெண்டனிட்டு, நடந்த விர்த்தாந்தமெல்லாஞ் சொன்னான், அதைக் கேட்ட மஹாரிஷியானவர் மன மகிழ்ந்து, சந்தோஷப் பட்டு, சிஷனுக்கு மங்கள முண்டாகும் படிக்கு ஆசீர் வசனங்களுடன் வேண்டிய வரங்க ளெல்லாம்

கொடுத்து, தன் பெண்சாதியுந் தானும் ஒருமையுடன் வாழ்ந்திருந்தார்கள் பூமி தேவியானவள் மண்வெட்டி முதலிய ஆயுதங்களினால் தன்னை வெட்டுகிறபேர்களைத் தானே சுமந்துக் கொண்டிருக்கும் பொறுமை போல் தேவேந்திரனினைத்த குற்றத்தை அம்முனிவர் பொறுத்துக் கொண்டனர்

---

# 12 - பஞ்ச சூடை சரித்திரம்.

——*:*——

மகதியாழ்வருடிய நாரத முனிவர் பூமி சஞ்சாரம் பண்ணிக் கொண்டு வருகிறபோது, அவருக் கெதிரில் பெருமை பொருந்திய ரூப லக்ஷண மமைந்த பெண்கள் சிகாமணியாகிய பஞ்ச சூடை யென்னும் ஓர் அப்சரஸ்திரீயானவள் செந்தாமரை மீதிருமாந்துள சிந்தாமணி போல் வந்தாள். அவளது சௌந்தர்ய மானது, இரதியோ? தவவிரதியோ? என்னும்படிக் கிருந்தது அவளை நாரதர் கண்டு, அதிக அன்பு கொண்டு, ஓ மாது சிரோன்மணி! ஆபரண அலங்கார சிங்கார பொங்காரமா யிருக்கப் பட்ட பெண்களனைவரும் பாப ஜென்ம மென்று படித்த பெரியோர்கள் விதித்திருக்கின்றார்கள், அதென்னத்தினாலோ? அதனை நீ எனக்குச் சொல்லுக வென்று கேட்டனர்.

அந்த பஞ்ச சூடையானவள் அவரைப் பார்த்து ஓ பிரம புத்திரரே! நீர் கேட்ட கேள்விக் கொப்பில்லை. யாதொரு தப்பில்லை. உண்மை தான், உமது தந்தையான பிரமன் சகல பாவங்களையுந் திரட்டிப் பெண்ணுரு



வாக்கினார். அந்த மகா பாபிகளுடைய சரித்திரத்தைக் கேட்டுத் தேவரீர் செவிக்கு விருப்பமா யிருக்கின்றதோ? ஆனால் நானறிந்த மட்டுஞ் சொல்லுகிறேன் நீர் கவனமாய்க் கேளும். ஒருவர் ஒரு காரியத்தைச் சொல்லும்போது வேறு சிந்தை கொள்ளாமல் விருப்ப மாகக் கேட்டுத் திருப்பி உத்தரஞ் சொல்பவன் உத்தமன், மற்றவன் செத்தவன். இதை நீர் அறிந்துக் கொள்ளும். பூவுலகத்தில் உமக்குத் தெரியாத ஒளிப் பாட்ட மில்லை அக்கியான கேவல பாபமே ஸ்திரிகள்.

அஃதெப்படி யெனில், விஞ்ஞான மேமோங்கிய எப்பேர் பட்ட புருஷனையும் மாயவலையில் வசப்படுத்திக் கொண்டு, தாங்களே அவர்களுக்குப் பிராண சஞ்சீவியென்றும், தாங்களே அவர்களுக்குச் சகல சுகமு மென்றும் தோன்றச் செய்து, தங்கள் எண்ஜாணுடம்பி லிருக்கும் புண் காணியை அவர்கள் பார்க்கப் பார்க்கப் மங்கிப் பிரமை கொள்ளக் காட்டி, கரும்பின் ருசியினும் காமமதிக மென்று அதரோஷ்ட ரசமருந்தி தங்கள் காலடியே கதி யென்று கிடக்கக் கிடத்தி, ஜெபம் - தபம் - விரதம் - நோன்பு - தெய்வம் - பிதுர்க் கர்மம் இவை முதலியவை யெல்லாம் மறக்கப் பண்ணி, பந்து - புத்திரர் மித்திரர் - பத்தினி - சுற்றத்தார் இவரையுந் துறக்கச் செய்து, தம்மையே குல தெய்வ மென்று அணைத்துக் குறை தீரப் பணிந்து தங்களடிமை போல் வீழ்ந்து கிடக்கத் தக்கதாய்ப் பண்ணிக் கொள்ளுவார்கள்

ஓ மகானு பாவரே! சமுத்திரத்தையும், மழைத் துளியையும், வான்மீனையும், கரு மணலையும் கணக்கிட்டளக்கலாம் கண்டள்ளிக் கொள்ளலாம். பெண்களுடைய

கருத்தின் வருத்தத்தையும், அவாள் கொண்ட சாயப் பெருக்கத்தையும், தள்ளி விடப்பட்டார். மோனமான ஞானியையும் மோசம் போகச் செய்வார்கள் ஞான தீபத்திற்கு ஒரு தந்து. கோப தீபத்திற் கொரு கொத்து தீய மாயாபத்துக்கு ஒரு வித்து, தீண்டத் தீண்ட மனப் பித்து, கண் புருவ சாபத்தா லொரு சத்து காட்டி வதினால் வரும் விபத்து, ஐயோ! வெகு பொல்லா ஆபத்து. ஆ! ஆ! ஆ! என்ன சொல்வேன் அவர் சித்து நரகத்திற் கொரு மூல மந்திரம் நகைக முகமோ! வெகு ஜால யந்திரம் நய மொழியோ? செவிக் கேறிய ஆலம். நல் விழியோ? உயிர் கீறிய சூலம். நரகக் குழி நவத் துவார வழியும் சரி யென்பதற்குச் சாட்சி, நாறுஞ் சீழ் முதனியவை தொக்கிக் கிடப்பதே காட்சி இதிலழுந்திய பேர்கள் நல்வினைப் பயனை லெழுந்தாற் காணலாம்.

ஐயா நாரதரே? நெருப்பைத் தொட்டாற் சுடும் இத்தனை குரூர குண முடைய துரோகிகளை யொருவன் கூடினானாகில், அந்தப் பாவம் இவனுக்கு ஏழேழு ஜென்மத்திற்குந் நீங்காது. இப்படியான ஸ்திரீகளுடன் சேருவது மகா சவுக்கிய சுக மென்று எண்ணுவதொன்றே யொழிய இலேச மேனும் சுக மென்பது கிடையாது. துக்க மென்பது இவனை விட்டிடையாது அஃதெப்படி யென்றால், சுணங்கன் பசை யற்ற என்பைக் கடித்துப் பசி யாறியது போலாகும் ஒருவர் இன்ப மில்லாதவர் போன்ற பெரியோரிடத்தில் அடுத்து கடுகத்தனை கருணை சமயாதித்தால் அவனது குலமும் - இஷ்ட ஜன நலமும - தானிருந்த நவமும் ஆகிய இவை யனைத்தும் சீர் பெறப் பக்குவ மான பதவி பெறலாம்.



இந்த நாரியரிடத்து ஆசபாச நேச விசுவாசம் வைத்தாலும, முத்தா முத்தாய்ப் பேசிக் கொஞ்சினாலும், உனக்கு நான் முறியென்று கெஞ்சினாலும், நெஞ்சி லடங்கிய வஞ்சம் விலக்கார்கள். துரோகம் - கபடு - வஞ்சம்- மோசம் - காவிடம் - பொய் - சண்டை - கூச்சல் இவைகளே மெய்யா யிருக்கிற பெண் போகத்திற்கு மிஞ்சிய போகம் மற்றொன்று மில்லை யென்று எவனொருவன் எண்ணி யிருக்கின்றானோ! அந்த நாள் வரையிலும் அவன் பாவத்திற் குடன் பட்டு, துக்கங்களை அனுபவித்து, சங்கடத்தினால் வருந்தி, நோயினால் நொந்து - நைந்து - புகைந்து - இரும்பித்தலை நடுங்கிச் சாவான் அப்போது யம படாள் ஸ்தூலதேகத்தை நீக்கிச் சூட்சும தேகமென்றாக்கி, அதன் சாதனை சரீரத்தை வருத்தி, நரகத்திற் பொருத்தி, எரித்து இம்சை படுத்துவார்கள். ஆதலால் பெண்களைப் பாபரூப மென்று பகர்வது

ஓ மகதி முனியே! என்னை? புருஷர்களுக்கு ஸ்திரீகளால் துக்கமே யல்லது, சுக மில்லை சுக மென்கிற கிஞ்சித் போகம், சஞ்சித பாவம், யாவனொருவனுக்கு அதிக துன்ப மடைவதாய் தீவினை யுளதோ! அவனுக்குத் தான் பெண்ணாசை பேய் பிடிப்பது. பித்தேறிய சித்தம் மெத்தத் துடிப்பது. புண்ணியவான்கள் விஞ்ஞானப் பொருளைப்பற்றி பேசுவதல்லது, காமத்தைக குறித்துப் பேசார்கள் கடவுள் நிலையறியாத கயவர்கள் கருமைப் பெற்றக் கண்களை யுடைய காரிகை யாரைக் கண்டால், அடியென் கண்ணாட்டி யென்று ஆசை மயக்கேறி, அசையாமல் மீறி கணநோய் வெட்டை - சிரங்கு - சூலை - கிரந்தி மூலம - பவுத்திரம் - அரையாப்பு - வெள்ளை - சொள்ளை இவைகள் மேலிட்டு அன்னம் கசிந்து, பசிமாறி - அஜீரணப் பட்டு -

தேகம் வியர்த்து - தாகமெடுத்து-ஈளை - இருமல் மிகுந்து பெருமை குறைந்து, பீடை தழைத்து, முடிவாகிற பரியந்தம் மூக்கல் - கக்கல் - விக்கல் முதலிய நோய்கள் பொருந்தி, பின்பு ஒக்கலுடன் கூடி வருந்தி, சற்றுந் தலையெடுக்க மாட்டாமல் தரை மட்டமாகி, உயிரென்னும் பயிரை யறுக்கிற காம அறிவாளை நினைந்து, அதற்குரியவர்களாகிய துரோகிகளை மறந்து, ஆ தெய்வமே! என்னை வதைக்காமற் கொண்டு போய் விட மாட்டாயா? என்று கண்ணீர் பெருக்கி, ஆலால விஷமானாலும், வடவைக் கனலானாலும், வாசியே! அடி பாவி வேசியே, நாளும் வருத்தி நலிக்குதே? சீழு மிகுத்து வலிக்குதே? திட்டென்று வீழ்ந்து பொட்டென்று போகமற் சித்திரவதை செய்யுதே? எத்தனை விதமாக இணங்கிக் கலந்திருந்தாலும் இடைந்திருந்த தன் மனது போலவே இப்போ கிடைந்தாளே, என்று நனைந்து, கலங்கிக் காலனுக் கிரையாவார்கள் திரிபுவனங்களிலுள்ளவர்களும் ஸ்திரீ மனதைத் தெரிந்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் வஞ்சனை குடி கொண்ட கயல்; மாயை யடைத்து வைத்திருக்கிற கிடங்கு; பேராசை கொண்ட பெட்டி; பேதை மாந்தரைப் பதைக்கும் மண் வெட்டி; இவைகளை பாரம் பரியமாய்த் தெரிந்திருந்தும் விளக்கைப் பிடித்துக் கிணற்றில் விழுவார் போல் மூடர்கள் நம்பி, அவர்களெப்படி சொன்னாலும் அப்படியே கேட்டு நடந்து, மனோ வாக்கு காயம் மூன்றும் அவர்களுக்கு வசமாக்கி, படு குழியிற் பட்ட யானை போல் சிக்கிக் கொண்டு பரதவிப்பார்கள். அவர்கள் தான் பிறவியென்கிற துக்க சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கப் பட்ட பேர்கள்

ஐயா முனிதேவ தேவே? ஸ்திரிகளெல்லாரும் பாவிகள் தானோ வென்றால், ஏக தேசத்திற் கடலிற் கன்மிதந்



தாப்போற் கற்புடைய பதிவிரதைகளாகி, தன் புருஷனை தெய்வமென்று அம்மணவாளன் சொல்லுக்கு மாறு பேசாத மாதர்கள் சிலருண்டா யிருக்கலாம். அப்படிக் கில்லாவிட்டாற் பெண்களென்கிற வாசனை யற்றுப்போம். ஒரு தீக்கடைக்கோலி னிடத்திற் செனித்த தீயானது அதிக சுவாலையாய் மிகுந்த கிரணங்களுடனே வெப்பங் கொண்டு, குளிர்ந்து குழைந்து கிடக்கிற சேறுகிய ஈரத்தையும் புலரச் செய்து சுத்தப்படுத்துவ தெப்படியோ? அப்படி போல் உத்தம ஸ்திரிகளுடைய தரிசனத்தினாற் சகல பாவமுந் தோஷமும் பொரிந்து போய் விடும் ஆனதால் அவர்களைக்குறித்து நினைக்க வேண்டுவ தில்லை. இது அற்புதமான காட்சி, அருமையிலும் அருமை அநேகங் கோடி ஆன்மாக்களிற் சுகர் - வாம தேவர் - என்னப் பட்ட சிறிது பேர் மாத்திரம் எவ்வாறு ஞானவான்களா யிருந்து, அவரைக் கண்டு தரிசித்த பேர்க் கெல்லாம் ஞானோதயமாய் விளங்கிப் பிறவிக் கடலை கடத்தி வைத்தார்களோ? அப்படி போல் அநேகங் கோடி பெண்களுக்குள்ளே ஒவ்வொருத்தர் உத்தமிகளா யிருப்பதுண்டு. அவர்களால் மேலான கீர்த்திகளைப் பெற்றோர்களநேகர், மற்ற மாதர்கள் யாவரும் பாவிகளே யாம்.

இன்னும் பெண்களினாலே புருஷர்கள் கெட்டுப்போவார்களென்பது பொய்யல்ல. இதற்கு திருஷ்டாந்தம், பூரணச் சந்திரனுக்குச் சமான முகத்தை யுடைய கௌதமர் பெண்சாதியாகிய அகலிகை யாலே தேவேந்திரன் எந்த நாளையிலும் நீங்காத பழியும் பாவமும், ஆயிரம் யோனிகளை வாய்ந்த ஆகமும் பெற்றான் உலகிலுள்ள பெண்களி னழகில் எள்ளத்தனை யெடுத்து படைத்த மூன்றாம் பிறை போன்ற நெற்றியை யுடைய திலோத்தமை

யானவளால் ஒரு முகமாயிருந்த பிரமன் நாலு முகமாய்க் காணமடைந்தான். எந்தக் காலமும் உடலுமுயிரும் போலிருந்த அண்ணன் தம்பிகளாகிய சுந்தோபசுந்தர்களிருவரும் ஒருவராலுஞ் ஜெயிக்கக் கூடாத உரமுடையவர்களாயிருந்தும் மேனகையால் அழிந்தார்கள். சந்திரன் தீராத சாபம் பெற்றுத் தேகங் குறைந்து, திரிந்தலைந்து, தாரையென்னுங் குரு பத்தினியால் தாழ்வினைப் பூண்டான். மூன்றரை கோடி வயது பெற்ற இராவணன் சீதா தேவி பக்கத்தாற் புத்திர மித்திர சோதரருடன் செத்துப் போனான். இன்னும் பூதலத்திலும் மீதலத்திலுமுள்ள ரிஷிகள் - முனிவர்கள் - தபசிகள் - அசுரர்கள் - தேவர்கள் - இயாவர்களும் மாதர்களாலே பழியும், பாவமும், இழிவும், ரோகமும், தரித்திரமும், வருத்தமு மடைந்து வாணாளொழிந்தார்கள். இவைகளெல்லாங் காமமாகிய கிஞ்சித்து மோகமல்லவோ. இப்பாட்டுக்குங் கேட்டுக்கும் வாட்டமாயிருந்தது.

மேலும் பெண்களாயினோர் நல்ல புஷ்பம், ஆடையாபரணம் இவைகளைக் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லிக் கேட்பார்கள். அவர்களிஷ்டப்படி கொடாமற் போனாற் கெட்ட மனத்துடன் இகழ்வர்கள். இல்லையென்னாமற் கொடுத்தால் அதைச் சிங்காரித்துக் கொண்டு அடக்கமில்லாமல் வெளிப்பட்டுக் காமக் கிழத்தியாய் விரக மேலிட்டுத் திரிவார்கள். எத்தனை விட நாயகன் கூடினாலும் அத்தினியாகிய ஸ்திரீகளுக்குச் சற்றேனுங் காமத்தணிவிருக்க மாட்டாது. புருஷனுக் குண்டாகிய போகத்திலும் அவளுக்கு எழுபங்கு அதிகமாயிருக்கும். புருடர் மனது அற்பம். பெண்கள் மனது காயகல்பம். அதனாலாடவர்க்குப் போகம் முந்தும். ஆயிழையார்க்



குப் போகம் பிந்தும், இருவருக்கும் போகம் ஒன்றுபட்டியல்வதில்லை. இப்படி ஒன்றுபட்டுச் சரியாகிச் சமப்பட்டிருப்பது அருமை.

ஐயா முனிவரே! இப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் எப்படி யடங்கி இருக்கிறார்களென்றால், சாதிக் கட்டுப் பாட்டுக்கும், ராஜதண்டனைக்குப்; பழிச்சொல்லுக்கும் பதுங்கியிருக்கிறார்கள். சிலர் இத்தியாதி காரியங்களையும் லக்ஷியஞ் செய்யாமல் தங்கட்கிஷ்டமாகிய இன்பந் தேடுவார்கள்.

பெண்ணென்ற பெரும் ரூபமே காமமாகும். நாயகன் எத்தனை நாயகமாகவும், நல்லம்மான் பிள்ளையாகவும் கிடைத்திருந்த போதிலும், அயலாரின் பேரிலே அவர்கள் மனஞ் செல்லும், பரபுருஷனைச் சேருவதே பாக்கிய சுகமென்றெண்ணுவார்கள். இதன்றியும் தந்தையான போதிலும், கருவிலமைந்த மைந்தனான போதிலும், அண்ணன் தம்பியான போதிலும், அழகுடையாராயிருக்கில் அரிவையர்களுக்கு நிதம்பங் கடிக்க உதிரம் பொசியும். அதனால் எண்ணிய புருஷனை எப்போது சேருவோமென்று முப்போதுங் கவலை கொண்டு, அன்னிய நாயகனையணையும் பெருமையே அனுதினமும் நினைவார்கள். இப்படிப்பட்ட கெட்ட நினைப்பையுடைய துட்டப் பெண்கள் கொட்டமான பாபத்தைக் குடி வைத்துக் கொண்டவர்கள். அவர்களுக்குச் சுசி சுத்தமிராது. அதேதெனில், அவர்கள் முகர்க்க உதிரம் - மூத்திரம் - இந்திரியம் - மதசலம் - மும்மல பாசம் - மொய்க்குங் கிருமிகள் வாசம் - கீழ்வாய் நேசம் - வியர்வை புல்லாசம் - வெகுவித மோசம் இவைகள் இடைவிடாமல் ஊறிக் கொண்டிருக்கிற சேற்றுக் கயத்திற் சொப்பானவர்கள்.

அதனலவர்களிடத்தில் சுசியில்லை. இது புத்தி மான்களுக்குத் தோன்றும். புத்தியீனருக்குத் தோன்றாது இவ்வளவு தானேயா பெண்ணுருவின் பிரதாபம். ஆதலால் பெண்ணுரு வெல்லாம் பெரும் பாவ ரூப மென்று சொன்னேன்: என்று மகதி யாழ்கைக் கொண்ட நாரதருடன் நவின்று, தேவர்கள் கொண்டாடுஞ் சௌந்தரியவதியாகிய பஞ்ச சூடை யென்னும் அப்சர ஸ்திரீ போய் விட்டாள்.

---

# 13 - தமயந்தி சரித்திரம்.

—— :*: ——

நாற்குணமும் நாற்படையாய் ஐம்புலனும் நல்லமைச்சாய்
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசாய்—வேற்படையும்
வாளுமே கண்ணாய் வதனமதிக் குழைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

நிடத தேசத்தை நெறிமுறை தவாது அரசு செய்து வரப்பட்ட நளச் சக்கரவர்த்தி என்பவன் பிரமசாரி விரதத்துடன் செங்கோல் நடாத்தி வருங் காலத்தில் ஒரு நாள் உல்லாசமாக சிங்கார வனத்திற்குப் போயிருந்தான். அங்கே அனேகமான மரம் செடி - கொடி முதலியவைகள் படர்ந்து, மல்லி - முல்லை - இருவாக்ஷி முதலிய பரிமள நறு மலர் வாடைகள் வீசிக் கொண்டிருந்தது மயில்கள் சிறகை விரித்தாடிக் கொண்டிருந்து. குயில்கள் பாடிக் கொண்டிருந்தது, இவ்வித மனோல்லாச வைபவங்களைப் பார்த்துக் கொண்டிருக்கை மாலை நேர மஞ்சள் வெயில் சிறிது சிறிது தெரிந்துக் கொண்டிருந்தது.



அப்போது அவ்விடத்தில் வந்து ஒன்றோடு ஒன்று வெகு அழகாய் நடித்துக் கொண்டிருந்து, பிறகு தடாகத்திலுள்ள தாமரை மலர்மீது சரசமாக விளையாடிக் கொண்டிருந்தது. அதனை இடைவிடாது ஒரே நோக்கமாகப் பார்த்திருந்த நளன் அதுகளின் மீது மிக்க ஆசையுள்ளவனாய் அதனைப் பிடித்து வரச் சொல்லி, அதுகளை தனது கரத்தால் தடவி ஆசை தீர்த்து விட்டு விட்டான். விடுபட்ட அதுகள், நளனுடைய காருண்யத்தையும் அன்பையுங் கருதி மற்றும் அவரிடம் கரத்தில் வந்தது. அது கண்ட அரசன் மகிழ்வுற்று, மகா விசுவாசத்துடனே ஒரு கரத்தி லேந்தி, மற்றொரு கரத்தால் அதனுடலைத் தடவிக் கொடுத்து, அங்கிருக்கும் ஓர் சந்திரகாந்த மண்டபத்தில் வந்து, அதன் பத்தியிலுள்ள ஓர் மணி மேடையில் தன்னந் தனியே யிருந்தான்.

அப்போது பெண்மயமான தேவ லோகத்து அன்னமானது அரசனை நோக்கி, ஓ! வண்டினங்கள் பசியோடு யடங்கி மகிழ்வுறத் தேனைத் துளிக்கு முல்லை - அசோகு - நீலம் - மாம்பூ - கமலம் என்கிற ஐந்து பூவாளிக்கும் தலைவனாகிய மாரனும் நாணத் தரும் அழகினையும், வெற்றியையு முடைய மகாமண்டலேஸ்வரா! என்னைப்பிடித்து என்னழகை கண்டு மகிழ்வுறக் கருதிய உன் கருத்துக்கு நான் வருத்தத்தை யுண்டாக்கினேனன்றி, நீ கருதிப்படி மகிழ்ச்சியைக் கொடுக்க வில்லை அது வருத்தம் நீங்கச் சில மொழி நுகிறேன் கிருபை கூர்ந்து கேட்க வேண்டுமென்று சொல்லுகிறது

கேளும் மகா ராஜனே! சிறப்புற்ற விதர்ப்ப தேசமென்றொரு தேச முண்டு. அதிற் குண்டின புரமென்

னும் ஓர் நகருண்டு அந்நகரத்திற்கு வீமராஜா வென்று ஒரு அரசனுண்டு. அவனுக்கு எல்லா பாக்கியங்களு மிருந்தும் புத்திர பாக்கிய மில்லாமல் தானும் தன் மனைவி யும் வருத்த முற்று, ஆரண்யமடைந்து, தபமோன்பியற்றி தமன முனிவரால் ஓர் ஆண் மகவையும், ஒரு பெண் மகவையும் பெறும்படி வரம் பெற்று, பிறகு தன்னகர் வந்து, அதே கர்ப்பமாய் ஒரு ஆண் மகவையும் ஒரு பெண் மகவையும் பெற்றார்கள் அப்புத்திரன் பெயர் தமனன், புத்திரிப் பெயர் தமயந்தியாகும். இருவருள் அந்த தமயந்திக்கு இன்னும் மணம் செய்யவில்லை நீரும் மணமில்லாதிருக்கின்றீர். நீங்களிருவரும் குணத்திலும் அழகிலும் ஒத்திருக்கிறீர்களென்று என் கருத்திற்குத் தோன்றினமையால், உங்களிருவரையுங் கூடும்படி செய்யக் கருதினேன். அந்த மாது சிரோன்மணியின் சுந்தரத்தை தேவராலும், ஆதிசேடனாலுஞ் சொல்லக் கூடாதென்றால், பறவைச் சாதியுள் ஓர் அன்னமாகிய நான் என்னென்று கூறுவேன்? ஆனால் என்னால் கூடிய மட்டும் சொல்கிறேன் கேளும்

ஓ காருண்ய வேந்தே! சொர்க்க - மத்திய - பாதளமென்னும் முப்புவனத்திலுமுள்ள மனிதர்களின் அழகெல்லாந் திரண்டு ஒரு வடிவங் கொண்டது போல விளங்குஞ் சுந்தரத்தை யுடையவள். அவளது கேசாதி பாதங்கட்குள்ள சிறப்புகளைக் கேட்கவும் வேண்டுமோ? கறுப்பில் நீர் கொண்ட மேகத்தையும், நெருக்கத்திற் சைவலத்தையும், நீட்சியிற் நொண்டைக் காயையும், பளபளப்பிற் கருமணலையும் நாணச் செய்யுங் குழலை யுடையவள் பார்ப்பவர் கண்களைக் கிளிக்குந் தன்மையை யுடையதாகி, சிவந்த நிறமும்-திலகப் பொட்டும்-பொன்னிறமும் பெற்று விளங்கும் ஒரு சந்திர பிறை யுண்டாகியிருக்குமாகில்,



அதற் கொப்பாகிய நெற்றியை யுடையவள். மாரனும் ரதியும் தங்கள் கரத்திற் பிடித்த வில்லைத் தமது குடையாகிய சந்திரனிடத்து வைத்தாற் போல விளங்கும் புருவத்தை யுடையவள். கண்களாகிய கடலுக்கு அணையிட்டாற் போல விளங்கும் குமிழம் பூவையும் எள் மலரையும் வென்ற நாசியை யுடையவள் ஆலத்தைப் போற் கறுத்து பாலைப் போல் வெளுத்து, பிறழுவதிற் கயலையும், ஊடுருவிப் பாய்வதில் வேலையும், ஆடவருடைய ஆவியைவெட்டி வாதிப்பதில் வாளையும், கொலை புரிதலில் யமனையும், வெற்றிக் கொள்ளும் இரண்டு நேத்திரங்களை யுடையவள். கண்ணாடியைப் போல் விளங்கும் இதழையும், பவளக்கிண்ணத்தில் முத்துகளை நிரை நிரையாக வைத்தாற் போல விளங்கும் பல் வரிசைகளையும், கமுகை யொத்த கண்டத்தையும், குயிலை நாணச் செய்யுந் தொனியையும், வேயை நிகர்த்த தோளையும், கல்லெனத்திரண்டு பருத்த தனத்தையும், தனமாகிய தாமரை மலர்களுக் குண்டாகிய கொடியைப் போல விளங்கும் உரோமவரையையும், ஆற்று நீர் சுழியை யொத்த உந்தியையும், ஆடவர்கள் அவா எவ்வளவோ அவ்வளவும் உவமை யாகக் கொண்ட அல்குலையும், வாழை ஸ்தம்பங்களை யொத்த தொடைகளையும், சினைவராலை நிகர்த்த கணுக் கால்களையும், காமன் புத்தகத்தை யொத்த பாதங்களையு முடையவள்.

அந்த மாது சிரோன்மணியின் முகத்தை நிகர்க்க மேற்றிசையி லுதயமாகி வருஞ் சந்திரனைப் பிரமன் நாள் தோறும் புதிதாகச் செய்தும், சந்திரன் அவளது தனத்துக் கொப்பாகா திருத்தலை நோக்கி அப்பிரமன் வருந்த முறுவ னெனின், அந்த மாதின் சுந்தரத்தை என்னாற் கூறத்தக்கதோ? அந்த மாதின் முன்னகைக்கு நாணிய

காந்தன்கள் வனத்திற் சென்று இதழ்களை பூமியிலும் குத்தன. அவளது இடையைக் கண்ட மின்னல் நாணத்தினால் வெளிப்பட்டு நிற்க மாட்டாமல் தோன்றி மறைகின்றது. கல்வியில் வாணியையும், கற்பில் அருந்ததியையும், குணத்தில் லக்குமியையும் நிகர்த்தவள்.

அந்த மாது சிரோமணியின் ரூப சௌந்தரியமும் உமது ரூப சவுந்தரியமும் ஒத்திருப்பதினால் உமக்கவளை மனைவியாக வேண்டுமென்று கருதினேன், ஆனால் அந்த மாதின் அழகைக்கண்டு இந்திரன் முதலான தேவர்களும் விருப்பங் கொண்டிருக்கிறார்களென்றால், மண்ணுலகாதிபர்க்கு அவள் வாய்ப்பதரிதாக இருக்குமே! அதைப் பற்றித்தான் கொஞ்சம் ஆலோசிக்கிறேனென்று கூறியது.

அன்னங் கூறிய வற்றைக் கேட்டநளன் அனலிடு மெழுகு போல் மனமது உருகி, அவ்வன்னத்தைப் பார்த்து, ஓ அன்னமே! எனக்கும் பெரியவர் என் குடும்பத்திலில்லை, உலகத்தி லுள்ள அரசரனைவரும் என்னுக் கிளைக் குட்பட்டவர்களே யன்றி, உடம்படாதபேர் ஒருவருமில்லை. நீ எடுத்துக் கூறிய மாது சிரோன்மணியைப் பெற்ற அரசன் என் வாக்கியத்தைத் தடுக்கிறவனல்ல, நானும் எனக்கொன்று வேண்டுமென்று கேட்கிறவனுமல்ல. ஆதலால் நீயே இருவரையுங் கூட்டிவைக்க வேண்டும். இவ்வளவு உபகாரம் நீ எனக்குச் செய்வையாகில், தாய் தந்தையரை விட என் மனங் கதிகமான பெருமையடைவதுமன்றி, சந்திர சூரியரிருக்கிற பரியந்தம் பெரும் புகழை பெற்றிருப்பாயென்று கூறினன்.



அதற் கன்னம் மகிழ்ந்து, ஓ மகா ராஜனே! உன்மனதின்படி அந்த மாது சிரோமணியைக் கூட்டி வைப்பதற்கு எவ்வகைப்பட்ட தேவர்கள் தடை நேரிட்ட போதிலும், அத்தனையும் விலக்கி உனக்கே மனைவியாகச் செய்விக்கிறேனென்று நான் வாயாற் சொல்வதிற் பயனில்லை, என் கையாலன்றோ தெரிவிக்க வேண்டும். ஆதலால் இதோ நான் அந்த மாது சிரோமணியிடத்துச் சென்று அவள் மனதை உன்பால் திருப்பி, அவளுள்ளமாகிய மனக்கோட்டையில் உன்னை இனிது வீற்றிருக்கச் செய்து வருகிறேன். பறவையாயிற்றேயென்று ஐயமுறாமலும், காமத்தின் வழியிற் கருத்தைச் செலுத்தாமலுமிருவென்று கூறி, அரசனிடத்து விடை பெற்று, கருமையாகிய அந்தர வெளியெல்லாம் பொன்மயமாகத் தன்னிறத்தோடு சிறகைவிரித்துப் பறந்து, விதற்ப தேசத்தை நோக்கிச் சென்று, குண்டலிபுர மடைந்து, தமயந்தியிருக்கிற கன்னிகா மாடத்தை நெருங்கிற்று

அத்தருணத்திற் சவுந்தரியத்தி லுயர்ந்த தமயந்தியானவள் தன் தாதிமார்களோடு சந்திர காந்தக் கல்லினாற் கக்கப்படுஞ் ஜலத்தினால் வெகுவாய் வளர்ந்து புஷ்பிக்கும் முல்லை மல்லிகை இருவாக்ஷி முதலிய மலர் கொய்து விளையாட வந்தனள். அப்படி வந்ததை அன்னங் கண்டு, ஓ! ஓ! தேடிப் போன மருந்து காலிலகப்பட்டது போல் நாம் நாடி வந்த கன்னிகை மலர் கொய்து விளையாடச் சிங்கார வனத்துக்கு வந்தனள். இந்த வேளை காலமுமிடமும் ஒத்திருக்கின்றது நாம் நாடி வந்த கருத்தும் நிறைவேறுமெனக் கருதி, நக்ஷத்திரங்களின் மத்தியிற் பிரகாசிக்குஞ் சந்திரனையொப்ப தாதிகள் மத்தியில் விளங்குந் தமயந்தியை வலஞ் செய்வது போல் வட்ட மிட்டு

அன்னங்களெல்லா மிறங்கின. அவ்வாறிறங்கினவைகள் தாமரைத் தடாகத்தி லிறங்காமல் தமயந்தியின் கண்ணுக்குங் கைக்கும் எட்டும்படியாக அங்கிருந்த மணல் மேட்டி லிறங்கிச் சிங்காரமாக நடந்தன. அன்னங்க ளிறங்கிய தனா லதுகளின் சிறகினின் றுண்டாகிய காற்றின் கடுமைக் கிடை வருந்தி களைவருத்த முற்ற தாதியர் மத்தியிலிருக்குந் தமயந்தி அன்னத்தைக் கண்டு மகிழ்வுற்று, தன் கர கமலத்துக்கு எட்டு மென்று கருதி தானணிந்திருக்குஞ் சிலம்பு முதலிய ஆபரண ஒலியை அடக்கி மெல்லென நடந்து அவ்வன்னங்களி னருகிற் சென்றாள்.

அப்போது பக்கங்களி லிருக்குந் தாதியர்கள் கண்டு, ஓ! ஓ! நமது மாது சிரோமணி அன்னத்தின் மேற் கருத்து கொண்டு பிடிக்கச் செல்லுகிறாள். ஆகாயத்திற் சஞ்சரிக்கும் அன்னங் கைக் கெட்டுமோ? ஆ! ஆ! இதென்ன ஆச்சர்யமென்று கைக்கொட்டி சிரித்தனர். தாதியர் நகையதைக் கண்ட தமயந்தி சினங்கொண்டு, அன்னத்தைப் பிடித்துக் கொடுக்கச் சக்தி யற்றவராகி யிருந்து விட்டது மன்றி நாம் பிடிக்கச் சென்றால் அன்னம் பறந்து போகக் கைக் கொட்டி சிரிக்கிறீர்களா வென்று கோபித்து கூறி, அன்னத்தை நாடி பின்னுஞ் சென்றாள். தாதிகள் பயந்து ஒன்றும் பேசாமல் நின்று விட்டனர். அன்னம் இது தான் தருண மென்று கைக் கெட்டுவது போல் அபிநயத்துக் கொண்டே தமயந்தியை நெடுந்தூரம் அழைத்துக் கொண்டு, நிறையப் பூத்திருக்கும் ஒரு புஷ்பபுதருக்குட் புகுந்து, தன்னை விரும்பி வந்த தமயந்தியை நோக்கிச் சொல்லுகின்றது.

ஓ மாது சிரோமணி! நானோ? ஆகாயத்திற் சஞ்சரிக்கும் பறவைகளின் இனத்தி லொன்றாகிய அன்னம். அந்த



அன்னத்திலும் இந்த மண்ணுலகத்தி லிருக்கின்ற வெள்ளை யன்னத்தி னினமல்ல. பொன்னுலகத்தி லிருக்கின்ற பொன்னன்னத்தி னினம். நீ என்னைப் பார்த்த மாத்தி ரத்திற் பிடித்துக் கொள்ளலா மென்றெண்ணங் கொண்டு, உனது மிருதுவாகிய பாதம் வருந்த இவ்வளவு தூரம் வந்தனை, நீ யார்? உன்பெயரென்ன? இவைகளை எனக்கு விபரமாகச் சொல்லென்று வினவ, கிளிகளின் வார்த்தை களையும், நாகண வாய்ப் பக்ஷிகளின் வார்த்தையுங் கேட் டறியாத தமயந்தி ஆச்சர்யத்தையும் அதிக மகிழ்வையுங் கொண்டு சொல்லுகிறாள்.

ஓ அன்னமே! நான் விதர்ப்ப தேசாதிபதி யாகிய வீம ராஜன் புத்திரி. என் பெயர் தமயந்தி மலர் கொய்து விளையாடும் படி இந்தச் சிங்கார வனத்திற்கு வந்தேன். வந்த விடத்தில் உன்னைக் கண்டு, உன்னை என் கரத்தில் வைத்து விளையாடி மகிழ நான் இவ்வளவு தூரந் தொடர்ந்து வந்தேன் ஆதலால் சில நேரம் என் மனங் களிப்புற என் கரத்தில் வந்திரு வென்று கூற, அன்னம் குறு நகை கொண்டு சொல்லுகின்றது.

ஓ மாது சிரோமணி! நான் எப்போதும் விண் ணுலகத்திற் கமலாசனக் கடவுளாகிய திசை முகன் கரத் தும், மண்ணுலகத்தில் மகா மண்டலேஸ்வரனாகிய நளச் சக்கரவர்த்தியின் கரத்து மிருப்பதே யன்றி; மற்றவர் கைக் கரிதாக இருப்பேன். ஆதலால் என்னை கரத்தில் வரவழைப்பது தகுதியல்ல வென்று கூற, அவ்வாக்கியத் தைக் கேட்ட தமயந்தி, கமலாசனக் கடவுளுக் கொப் பாக விளங்கும் அவ்வளவு மாட்சிமை யடைந்த அரசன் மண்ணுலகத்திலு மிருக்கின்றானோ வென்று மனதில் மதித்து முகமலர்ச்சியோடு அன்னத்தை நோக்கிச் சொல்லுகிறாள்.

ஓ அன்னமே! மண்ணுலகச் சுகத்துக்கு மேலானது இந்திர லோகம். இந்திர லோகத்திலுஞ் சிறந்தது சத்திய லோக சத்திய லோகாதிபதியாகிய திசை முகன் காத்திருக்க நீ, மண்ணுலகாதிபதி யாகிய நளச்சக்கிரவர்த்தி காத்திருக்கிற தென்று கூறினதை யுரைத்து நாக்கினால் திசை முகன் பெருமைக்கு அந்த அரசன் ஒத்திருக்கிற தாகவும், அவ்வரசனது பெருமையை நீ நன்றாக அறிந்திருக்கிற தாகவும் விளங்குகின்ற தாதலால், தயை செய்து அவ்வரசன் பெருமையைக் கிஞ்சித் தெடுத்துக் கூறென்று வினவினாள்.

அதற்கு அன்னம் நகைத்து, ஓமாதரசே! முப்பத்து முக்கோடி தேவர்கள் புடை சூழக் கொலுவிருக்கும் இந்திரன் சபையி லிருக்கிறவர்களும், வேத வேதியர்களும், மண்டலாதி பதிகளா யிருந்து புண்ணிய வசத்தாற் சத்திய லோகத்தி லிருக்கிற மனு மாந்தாதிகளும்; பிரமனும், நளனென்கிற பெயரைக் கேட்டமாத்திரத்தில் மகிழ்வார்களென்றால், மண்ணுலகத்தில் மகிழாதவர் யார்? என்று கூறிப் பின்னுஞ் சொல்லுகின்றது. வெற்றிமாலை புனைந்து மகுடாதிபதிகளாகி இந்திர போகத்திலுஞ் சிறந்த போகத்தை வகித்து விளங்கும் அரசர்களெல்லாங் குடங்கையைத் தலையணையாகக் கொண்டு, தாங்கள் கொண்டு வந்த திரையைக் கட்டுவதற்குச் சமயம் வாய்க்காமல் வாயற்படி யண்டை காத்திருப்பார்கள் இன்னும் அவனது சீரும் சிறப்பும் வல்லமையும் சொல்லுவதற்கு அவனைப் படைத்த பிர்ம தேவனாலும் தரமல்ல வென்றால் நான் இன்னம் என்ன எடுத்துரைக்கலா மென்று நீயே உன் மனதில் செவ்வையாக தெரிந்துக் கொள்வாய்; அவ்வள மாட்சிமை யுற்ற மகா ராஜன் இன்னும் விவாகமே செய்துக் கொள்ள வில்லை யென்றதுகள்.



இதுகளைக் கேட்ட தமயந்திக்கு காந்தமும் இரும்புஞ் சேர்ந்தது போலாகியது. தனக்குரிய அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு மறந்தவளாயினாள். அந்த நளன் மீதே மனதை நாட்டினவ ளாயினாள். இப்படிக் கெல்லாம் பூலோகத்திலும் வான லோகத்திலும் மதிக்கப் பட்ட புருஷனை யல்லவா நாம் கணவனாக ஏற்படுத்திக் கொள்ளுவதல்லவோ நமது மன சம்மதிக்குப் பொருத்த மாகுமென்று எண்ணினாள். அன்னம் சொல்லிய அழகும் உருவு மாகிய ஒரு நளனே பிரத்பக்ஷமாக எதிரில் காணுவது போல் கருதினாள். ஆசையும் பாசமும் அளவுகடந்தது போலாயினாள். எந்த சமயம் அவரோடு கூடுவோமென்று கருதினாள். கண்கள் சோரவும், யிடை வாடவும், தனங்கள் விம்மவும், சர்வாசை யோடு அவனோடு கூடி வாழ்வதும் போல மனதில் கருதினவளாகி, அன்னத்தை நோக்கி சொல்லுகிறாள்.

ஓ பொன் மயமான அன்னமே! நீ சொல்லிய பின் என் மனமும் காயமும் அந்த நளச் சக்கிரவர்த்தி மேலேயே நின்று விட்டது, இனி ஒருவர் மீதும் திரும்பாது கற்புடைய மாதர்கள் ஒரு நாயகனை மனதில் கருதி விட்ட பிறகு மற்றொருவரைக் கருதுவது கற்புடைமைக்குப் பங்க மாகும் நீ மனதில் எவ்வித சந்தோஷங் கொண்டு இவ்வித விஷயங்களை யெனக்குத் தெரிவித்தையோ, அதுபோலவே என் எண்ணத்தை நீ தான் முடிவு பெறச் செய்ய வேணும். எப்போது இந்த விஷயங்கள் உன்னால் தெரிய வந்ததோ மற்றவையும் உன்னால்தான் முடியுமென்று நான் பூரணமாக எண்ணுகிறேன் என்று வேண்டியது, நான் அவர் மீது காதல் வைத்தாகவும் தெரியப்படுத்தி, என் சுயம் வரத்தின் போது அந்த

ளச்சக்கிரவர்த்தியையே பாலையிடுவேனென்று சொல்லவும், இந்த வார்த்தை சந்திர சூரியர் பிரண்டாலும் பிறளாது என்பதாய்ச் சொல்வதோடு அவசியம் சுயம் வரத்திற்கு வர வேண்டுமென்றும் சொல்லவும், இது விஷயத்தை எப்படியாவது நிறைவேற்றுவது கடமையென்றான்.

கேட்ட அன்னமானது தன் கோரிக்கை நிறைவேறியதும், அதற்கேற்றாப் போல் இவன் கொண்ட சம்மதத்திற்கும் சந்தோஷமடைந்து, ஓ தமயந்தி! என்னை கேட்டதெல்லாம் சரியே! உன்னுடைய எண்ணத்தை நிறை வேற்ற வேண்டுமென்று எனக்கும் எண்ணமே, நான் சொல்லும் வார்த்தைக்கு அந்த நளமகா ராஜா மறுமொழி ஒருக்காலும் சொல்லப் போகிறதேயில்லை. இந்த திருமண விழாவானது எப்படியும் நடக்கத் தான் போகிறது. என்னை ஒரு சாமான்யமான பறவை இனமென்று கருதி விடாதே. என்னாலாகாத காரியம் ஒன்றுமேயில்லை. என்னால் எல்லாக் காரியமும் ஆகும். உன் வார்த்தை தான் நிலையான வார்த்தையாக சொல்ல வேண்டுமென்று சொல்ல, தமயந்தி மற்றும் இதே வார்த்தை யுண்மையென்று நிச்சயங்கள் சொல்ல அப்படியே முடித்து வைக்கிறேனென்று பறந்து போயிற்று

அன்னம் பறந்து போய் விடவே தமயந்தி காமாந்தகார முடையவளாகி தாதிகளோடு கூடி கன்னிகா மாடம் வந்து விட்டாள். அன்னத்தோடு பேசியது முதல் காமத்தீயினாலே பித்தேறினவளாயினாள். அதனைக் குறிப்புடன் அறிந்த தாதியர் தங்களால் இயன்ற வரையிலும் பனிநீர் முதலிய சாந்தங்களைச் செய்தும் ஒன்றும் பயன் படாது



உடனே சென்று அவளது தாயினிடம் தெரியப்படுத்தி விடுவதே உத்தமமென்று தெரிவித்தார்கள்.

அதை வீம ராஜன் மனைவி கேட்டு நமது புத்திரி பக்குவ காலத்தை யடைந்தாளெனத் தெரிந்து, தன் கணவனிடத்துச் சென்று, ஓ பிராண நாதா! நமது புத்திரி பக்குவ காலத்தை யடைந்தனள். இனி நாம் சும்மாயிருப்போமானால் கெடுதி நேரிடும் மணம் செய்வதற்கு தகுதியான முயற்சியைத் தேடுமென்று சொல்லினள். மனைவி கூறிய வாக்கியத்தைக் கேட்ட வீமன் மனக் களிப்புற்று, தன் கொலு மண்டபத்திற்கு வந்து, மந்திரிகளை நோக்கி, ஓ மந்திரிகளே! நமது குமாரத்திக்கு மணம் செய்விக்க வேண்டும். நகரத்தை நன்றாக அலங்கரித்து, முரசு முன்னிலையில் யாவருக்குந் தெரிவித்து, தேவர்களும் வியப்புற கல்யாண மண்டபமொன்றியற்றி, மன்னர் மன்னர்களுக்கும், முனிவர்களுக்கும், குடிகளுக்குந் தகுந்த ஆசனங்களிட்டு, சுயம் வரம் நாட்டி, திருமுக முன்னிலையிற் சகல தேசாதிபதிகட்கும் தெரிவியுங்களென்று கட்டளையிட்டான். மந்திரிகள் தங்கள் கட்டளைக்குட்பட்டவரால் நகர முழுவதும் கல்யாண முரசறைவித்து, தேவர்களும் வியப்புற கல்யாண மண்டபமொன்றியற்றி, அதில் அரசர்களுக்கும், முனிவர்களுக்கும், குடிகளுக்குந் தகுந்த ஆசனங்களிட்டு, சுயம் வரம் நாட்டி, கல்யாண ஓலையெழுதி, எழு நாளையில் யாவரும் வருகிறதென்று அதிற் குறித்து, அத்திருமுகத்தைத் தூதுவர் கையில் கொடுத்து தேசத்திற் கனுப்பினார்கள்.

உடனே தூதுவர்கள் அத்திருமுகத்தைச் சகல தேசாதிபதிகளுக்குங் கொடுத்து, சக்ரேஸ்வரனாகிய நளராஜனுக்குங் கொடுத்துப் போயினர். சகல தேசாதிபர்

களும் திருமுகத்தைக் கண்ட மாத்திரத்தில் தங்கள் தங்கள் பரி ஜனங்களோடு குண்டலி புரத்தை வந்தடைந்தார் அன்னத்தால் மற்றும் தெளிவுடன் ஐயந்திரிபற தெரிந்த நள மகா ராஜனும் சர்வ ஆடம்பரத்துடன் வந்து சேர்ந்தான். இவர்களெல்லாம் வந்ததை முன்னிட்டு விம ராஜன் அவர்களுக்கெல்லாம் தகுந்த வாறு இருப்பிடம், போஜனாதி முதலிய சவரக்ஷனை மரியாதையும் செய்து வைத்தான்.

இந்த தமயந்தியின் சுயம் வரத்தை நாரதரால் கேழ்விப்பட்ட இந்திரனும், யமன்-வாயு-அக்கினி இந்த நால்வரும் ஆசையுடையவர்களாகி தாமும் அங்கு சென்று எந்த விதத்திலாவது தமயந்தியை நளனுக்கு எட்டாமல் நாம் தாமே கைக் கொள்ளலா மென்று வந்தனர் அது போல சனிபகவானும் கேள்வியுற்று அவர்களைப்போலவே எந்த விதத்திலும் அந்த தமயந்தியை திருமண முடிக்க வேணு மென வந்திருந்தார். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் காரியத்தை முன்னிட்டு அந்நளமகா ராஜனை தூதுவனாய் நியமித்து தமயந்தியிடம் தங்கள் கோரிக்கைகளைத் தெரியப் படுத்த, அவரும் தேவர்களுக்கு தடைமறு மொழி கூறப்படா ரென மதித்து உண்மைக்கு உத்தரமாகவும், மனசாக்ஷிக்கு விரோத மில்லாமலும் அவர்கள் கருத்தை யுள்ளபடியே தெரியப்படுத்த, அவையனைத்தும் சூழ்ச்சியும் தெரிந்த அம்மாது சிரோமணி நளச்சக்கிரவர்த்தி தவிரவேறு ஒரு வரையும் மணக்கேனென்று மறுமொழி யுரைத்துப், தன் மனோவாக்கு காயம் மூன்றுக்கும் குற்றம் நேரிடாத படி சுயம் வரத்தின் முன்னிலையில் சர்வ ஆடம்பர மங்களகோஷ்டி ஒமாதிகளும் முழங்க அந்த நளச்சக்கரவர்த்தியையே மாலை சூட்டினள். சகல



தேச மன்னரும் புகழ்ந்தனர், பல முனிவர்களெல்லாம் ஆசீர்வதித்தனர், வீமனும் தன் மனைவியும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தினார்கள். சகல வைபவத்துடன் கலியாணச் சடங்கும், பந்தி போஜனாதி மரியாதை வர்க்கங்களும் நடந்தேறியது எல்லோரும் தங்கள் விடுதிகளுக்குப் போய் விட்டார்கள் வீமசேன மகா ராஜனும் தன் அருமை செல்வக் குமாரத்திக்கு வேண்டிய உபசாரனாதிகளும், ஸ்திரி தனமுங்கொடுத்து, மகளையும் மருமகனையும் மாரிதை ஆடம்பர கோஷ்டியுடன் நிடதேசம் அனுப்ப அவர்கள் அது முதல் இணை பிரியா அன்றிலும் பேடை போல் வாழ்ந்து வந்தார்கள்

இவர்களெல்லாம் இன்புற்று இவ்வாறு வாழ்ந்துவர, முன்னம் தமயந்தியை நாடிய சனீஸ்வரன், தனக்கு அந்த தமயந்தி கிட்டாததைக் கருதி, எந்த விதத்திலும் இணை பிரியாத இந்த இருவரையும் பிரித்து துன்புறச் செய்ய வேணு மெனக்கருதி, எது சமயம் வாய்க்குமோ அந்த நளமகா ராஜனைத் தொடருவ தென நெடுநாள் காத்திருந்து ஒரு நாள் அவன் ஆசார சிலத்தை தெரிந்து அவன் ஆசார சீலத்தை காத்திருந்து அவன் பாதத்தில் பிடித்துக் கொண்டான். அந்த சனீஸ்வரன் சூழ்ச்சியால், புஷ்கரராஜன் சூது விருதுக் கொடியுடன் வந்து, சூதாடி அதனால் தன் நாடு நகரம் முழுதும் இழந்து, இருவரும் தங்கள் பிள்ளைகளை ஒரு பிராமணன் வாயிலாக விம ராஜனிடம் அனுப்பிவிட்டு காட்டுக்குள் நுழைந்து விட்டார்கள்.

தான் எத்தனை சொல்லியுங் கேளாது தன்னுடன் ஆரண்யத்தில் தன்னோடு தன்புறம் மனைவியுந் தானும் ஒரு கன்னிருளில் நித்திரை போகும் போது, அவன்

அயர்ந்து நித்திரை செய்வதைத் தெரிந்த நளன், அவளை விட்டு நாம் பிரிந்து விட்டால், விழித்ததும் நம்மைக் காணாததால் எவ்விதத்தாலும் திரும்பி தன் தந்தை தாயினிடம் போய் சவுக்கியமாயிருப்பாளெனத் தீர்மானித்து, சுற்றிலும் பார்க்க சனி பகவான் ஒரு கத்தியாக எதிரில் இருப்பதைக் கண்டு எடுத்து ஆடையை வகிர்ந்து கட்டிக் கொண்டு. கன்னிருளில் நடு காட்டில் தமயந்தியை விட்டுப் போட்டுத் தனியே தையலை நினைந்துருகி வரும்போது, எரியும் ஒரு நாகத்தைக் காப்பாற்ற, அந்த கார்க்கோடகன் மீண்டு அந்த நளன் பாதத்தைத் தீண்ட விஷாக்னி பற்றி நளவேந்தனுடைய திருவுருவம் கரிய முகில்போல் கறுத்து விட்டது உடனே இவையனைத்தும் சனீஸ்வரன் சூழ்ச்சியெனத் தெரிந்து அவ்விடம் விட்டு பல விடம் சென்றகன்று முடிவில் அயோத்திய புரிக்குச் சென்று அங்கு ருதுபர்ண மகாராஜனை யடுத்து, அவனிடம் தேர்ப்பாகனாகவும், அடிசிற்றொழில் புரிபவனாகவு மிருந்தான்.

அப்பால் தமயந்தி விழித்துப் பார்த்து தன்னாயகன் அருகி லில்லாமையால், அக்கம் பக்கம் உலாவி ஓடிப் பார்த்தும் இல்லாமையால் வாய்விட்டலறி. அழுது தேடி வருவாளாயினள். அப்படி வரும்போது சனீஸ்வரன் தமயந்திக்குப் பின்னுந் துன்பத்தைச் செய்யக் கருதி தன் மாயையால் ஒரு பெரிய நாகத்தினை யுண்டாக்கி அனுப்பி வைத்தான். அந்தப் பெரும் பாம்பானது தமயந்தியைப்பற்றி விழுங்கத் தலைப்பட்டது, அப்பெரும் பாம்பின் வாயிற் பட்ட தமயந்தியின் துன்பத்தை யார்தான் அவிட்டுச்சொல்லக்கூடும்? அவ்வளவு துன்பத்தை யடைந்து வென்றலறி, தன்து சாபனைக் கூவி, தெய்வத்தைத் துதித்து, தேகமெல்லாம் நடுங்கி, வெயர்வு நீர் ததும்பி



ப்குழறி, நெஞ்சலர்ந்து, கைசோர்ந்து, மெய்சோர்ந்து கிற தருணத்தில் சனிபகவான் மகத்தவத்தால் ஒரு வேடன் வில்லம்பு முதலிய ஆயுதங்களோடு தோன்றி, தமயந்தியை விழுங்கின பாம்பைக் கண்ட துண்டமாகக் கண்டித்து விட்டான். தமயந்தி பாம்பின் வாய் நின்றுந் தப்பித்து கணவனை நினைத்துப் புலம்பி செல்கின்றாள்.

அப்போது பாம்பைக் கண்டித்த வேடன் தமயந்தியின் திருவுருவத்தைக் கண்டு காதல் கொண்டு, தமயந்தியருகிற் சென்று கர்ண கடூரமான சில வசனங்களை வழங்கினன். தமயந்தி அச்சொற்களைக் கேளாதவள் போலத் தன் கணவன் மீது கருத்தை வைத்துத் தெய்வத்தை நினைந்துப் புலம்பிச் சென்றாள் வேடன் மிஞ்சித் தமயந்தியை யடைந்து மடக்கி அணைக்க நெருங்கினன். பதிவிரதா சிரோமணியாகிய தமயந்திக்கு. அதிக சின மூண்டாகித் தன் விழியால் நோக்கினள். அப்படி தமயந்தி பார்த்த மாத்திரத்திற் சாம்பவ மூர்த்தியின் நெற்றிக் கண்ணுக்கு எதிர்ப்பட்டு உடலை யிழந்த மாரனைப் போல், அந்த தமயந்தி கண்ணுக்கு எதிர்ப்பட்ட வேடனுடலஞ் சாம்பராய் பூமியில் விழுந்தது.

அப்பால் தமயந்தி வணிகரால் வழிகொஞ்சம் தெரியலாகி சேதிய தேச மடைந்து, அங்கிருந்து குண்டின புரத்தை யடைந்து, தன் தாய் தந்தை மக்களையுங் கண்டு தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களைச் சொல்லி, அவர்களும் மகளின் துன்பத்தை ஒருவாறு ஆறுதல் செய்ய, அங்கிருந்து சில நாளையில், சந்தையால உள்ளதை விளம்பி, நள மகாராஜ னிருக்கும் இடமுந் தன்மையுந் தெரிந்து, தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்று ருதுபர்ண மகாராஜன் முதலியோருக்குத் தெரியப் படுத்தி, அங்கு

ருதுபர்ண மகா ராஜனும் தன் தேர்ப்பாகனுகிய நளனுட வந்து குண்டின புரத்து ராஜ வீதியில் வந்து சேர்ந்தார்கள்.

உடனே தமயந்தி ஒரு தனித்த இடத்தில் வந்து தன் தாதியர்களால் தேர்ப்பாகனை அழைத்துவரக் கட்டளையிட்டாள். தாதியர்கள் நளமகா ராஜனிடத்து வந்து வணங்கி, ஓ ஐயா! எங்கள் யஜமானி உங்களை அழைத்துவரக் கட்டளையிட்டாள். ஆதலால் தயைசெய்து வரவேண்டுமென்று கூற, அரசன் அக்கருத்திற் கிசைந்து, தாதியரோடு சென்று தமயந்தியிருக்கிற விடத்துக்கு வந்தான். தமயந்தி கறுகறுத்த தேகத்தோடு விளங்கும் அரசனைக் கண்டு, ஓவென்றலறி புலம்பி, அரசன் திருவடியில் விழுந்தழுதாள்.

அரசன் தமயந்தியின் தேகம் வாடித் தளர்ந்து மாசடைந்திருக்கிறதை நோக்கின மாத்திரத்தில் அன்புடைமையை படைத்து வைப்பதற் கொரு அளவு மில்லையென்று பெரியோர்கள் கூறிய வாக்கியத்திற் கொப்பாக மனந் தளர்வுற்று, இரண்டு கண்களிலும் அருவி போல் நீர் சோர நின்று, விழுந்தமாதை யெடுத்து நிறுத்தினான். அப்போது தமயந்தி சொல்லுகிறாள்

ஓ மகா மண்டலேஸ்வரா! ஏதோ ஒரு கால ஹேதுவினால் அரசு - நாடு - நகரம் - வீரம் - முதலியவை யிழந்தாலும் உமது தேக வொளியேன் மயங்கிற்று? அதனை அடியாளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பணிவுடனே வினவினாள். அதற்கு நளன், ஓ மாதரசே! எனக் கொரு பாம்பின் மூலமாக இந்த உருவம் கிடைத்தது. இப்போது அப்பாம்பை நினைத்தால் அது வந்து இந்த உரு

வ தை வாங்கிக் கொண்டு சுய ரூபத்தைக் கொடுக்கும்.
வி ற்காக நான் வருத்தப் படவில்லை விதிவலியாலுன்னை
ெ டுப் பிரிந்தால் நீ மறுமணஞ் செய்துக் கொள்ள விரும்
ச் சிவனை நோக்கித்தவஞ் செய்து, கன்னிப் பருவ
டைந்து ஒரு மணவோலை அனுப்பி வைத்தனையே;
க தென்ன வென்று வினவ, தமயந்தி யதைக் கேட்டு, ஓ
கா ராஜனே! உண்மையாக மணம் புரிந்துக் கொள்ள
ரும்பினவளல்ல, உம்மைக் காணுதற் காகச் செய்த
பாய் மணவோலை. இதனைக் குறித்துக் கோபித்துக்
காள்ளாமல் மன்னித்து. தங்கள் சுய ரூபத்தை விரைவில் அடியாட்குத் தெரிவிக்க வேண்டுமெனக் கூறினாள்.

அதற்கு நளன் மகிழ்ந்து தன்னைக் கடித்த நாகத்தை நினைத்தான். நாகந் தக்ஷணம் வந்து நளனைக் கடித்து ஷத்தை வாங்கிக் கொண்டு சுயரூபத்தைக் கொடுத்துப் யாய் விட்டது. நளன் பால சுப்பிரமணியரைப போலத் தன் சுய ரூபத்தைக் கொண்டான். தமயந்தி அந்த ரூபத்தைப் பார்த்த மாத்திரத்தில் தக்ஷணம் வருத்தத்தை யெல்லாம் நீக்கி, முப்பொழுதும் அமுதருந்தி இனிது வீற்றிருக்குங் கன்னிகையின் உருவத்தைப் போலப் பூரித்துப் பிரகாசித்தாள் இந்தச் சேதியைத் தாதியார்கள் வீமராஜனுக்குத் தெரிவித்தனர். வீமராஜன் கேட்டு மகிழ்ந்து ஓடோடியும் வந்து மகளையும் மருமகனையும் பார்த்து உடல் பூரித்து, பேரின்பக் கடலி லாழ்ந்தவர் போல மகிழ்வாகிய கடலில் மூழ்கி, நளனைப் பலவாறு துதித்தான். நளனிடம் தனது சூது வித்தையில் கெலிக்குந் திறத்தை கற்பித்து, அவனிடம் சாரதித்வம் தெரிந்துக் கொண்ட ரிதுபன்ன னிச்சேதியை யறிந்து நளனைக் கண்டு காடாலிங்கனஞ் செய்து மகிழ்ந்தான் நகரத்தி லுள்ளவர்

களும் உணர்ந்து வந்து பார்த்து மகிழ்ந்து வணங்கினர். அந்தர லோக வாசிகளாகிய இந்திரன் முதலான தேவர்களும் வந்து பல ஆசிகள் கூறி, இந்தத் தமயந்தி அருந்ததியினும் சிறந்த கற்புடையவள், இவளுக்கு யாதொரு தீங்கும் வாராமல் நாங்கள் பாதுகாத்து வந்தோம். இவள் மீது ஐயங் கொள்ளாமல் முன்போற் சுகித்திரு மென்று நளனுக்குரைத்துப் போயினர். நளன் ஐயம் நீங்கி மனைவியை ஆதரித்து, மக்களைத் தழுவி முத்த மிட்டு, ரிது பன்னராஜனைப் பலவாராகப் புகழ்ந்து, வேறொரு சாரதியை யமைத்து அவ்வரசனை அனுப்பி விட்டான். ரிது பன்னனுந் தன்னகரஞ் சேர்ந்து இனிது வீற்றிருந்தான். வீமன் முதலான நகருளோர் யாவரும் மேலாக மகிழ்வுற்றனர்.

இப்பால் நளன் தன் மனைவியோடு சில நாள்ளங்கிருந்து வீம ராஜனிடம் விடை பெற்று, தன் புத்திரரையும் மனைவியையு மழைத்துக் கொண்டு இரதமேறி, சில ரதகஜ துரக பதாதிகளோடு பிரயாணப்பட்டு, நாடுநகரம் காடு - மலை - வனாந்தரங் கடந்து, தன் தேசமாகிய நிடத தேசத்துக்கு வந்து, நகர்ப் புறத்திலிருந்து, சில தூதுவர்களை விட்டுப் போர்புரியக்கருத் திருந்தாற் போர்புரியவா அல்லது முன் போலச் சூதாடக் கருத்திருந்தாற் சூதாடென்று புஷ்கரனைக் கேட்டுவரச் சொல்ல, அப்புஷ்கரன் சூதாடுவதற்கே இசைந்தவனெனத் தூதுவர்களால் தெரிந்துகொண்டு, தானுந் தன் மனைவியுமாக நகரத்தினுட் புகுந்து, இராஜ சபைக்கு வந்து புஷ்கரனைக் கண்டு, என் மனைவியைப் பந்தயமாக வைத்துச் சூதாடுகிறேன். நான் தோற்றால் என் மனைவியை விட்டு விட்டுச் செல்கிறேன். நீ தோற்றால் உன் நாடு நகர முதலிய வற்றோடு



உன் நாடு நகர முதலியவற்றையும் எனக் கொப்புவித்துப் போவென்று பேசி, சூதப் பலகை விரித்து சூதாடிக் கெலித்து, தன் நாடு நகர முதலியவைகளோடு அந்த புஷ்கரனின் நாடு நகர முதலியவற்றையுங் கிரகித்துக் கொண்டு அவனைக் கர்வ பங்கஞ் செய்த பின்பு, மீட்டும் அவனுடைய நாடுநகர முதலியவற்றை அவனுக்கே கொடுத்துப் பகுதி கட்டிவரக் கட்டளையிட்டனுப்பி விட்டு, தான் சின்காதன பதியாகி, புத்திரர்களையும் மற்றுமுள்ள நால்வகைச் சேனைகளையும் ஆதரித்து, முன்போல மநுசாஸ்திர விதி பிசகாமற் சக்கரம் நடாத்தி அரசு செய்து வந்தான்.

---

## 14. அகல்யா சரித்திரம்.

—*:*—

கௌதம ரிஷியின் பத்தினியார் அகல்யாதேவி மகாதப சிரேஷ்டராகிய கௌதமர் மனைவி. மகா பதிவிரதை. நிரீபோது புருஷன் பணிவிடையும், பக்தியும் இடைவிடாதவள். ஒரு போதும் தன் மனதில் குற்றமான நினைவுகள் நினையாதவள் ரூபலாவண்யத்தில் இரதியையும் பழிக்கத்தக்கவள். இவளது அருமையான ரூபலாவண்யமானது ஸ்திரிகளும் கண்டால் மோகிப்பார்களென்றால் அவளது அழகின் தன்மையை யாரால் தான் சொல்லக் கூடும்?

இத்தகைய மனைவியோடுங் கூடி இருவரும் சதிபதி விரதம் அநுஷ்டித்து வருங்காலத்தில், இதற்கு முன்னமே

அகல்யா மீது நீங்காத காம எண்ணத்தை கொண்டவனும் எப்போது சமயம் வாய்க்குமோ வென காத்திருந்தவனு மாகிய தேவேந்திரன் அன்று இரவுகாலத்தில், இப்போது எவ்வாறுவது இந்த சமயத்தில், அந்த கௌதமருக்கு சூது மார்க்கங்காட்டி, இந்த அகல்யா வோடு கூடிக் கலந்து, இன்ப சுகத்தை அநுபவித்து, தமது எண்ணத்தை பூர்த்தி செய்துக் கொண்டு வரவேண்டு மென்ப தாய் மனதில் தீர்மானஞ் செய்துக் கொண்டு, இரவு பதி னைந்து நாழிகைக்கு ஜாமச் சேவல் கூவுவது போன்ற கற் கோழி வேடங் கொண்டு கூச்சலிட லானான், அந்த சூது மார்க்க சேவல் கூவுஞ் சத்தத்தைக் கேட்ட கௌதமர் நித்திரை யகற்றி எழுந்து, இரவு கழிந்து பிராத கால முன் ஜாம வேளையாய் விட்டதென்று நினைத்து ஸ்நானம் செய்யும்படி வேண்டி கங்கைக்கு வந்து விட்டார்.

தான் சேவலாக உருக்கொண்டு கூவியதை மெய யென்று நம்பி கௌதமர் ஸ்நானத்திற்கு சென்று விட்டா ரென்று தெரிந்த தேவேந்திரன், அதே கௌதமரைப் போல் வேடங் கொண்டு அகல்யா தேவியை கிட்டி, அவளை வஞ்சித்து அவளோடு சரசமாகக் கூடி கலவி புரிந் துக் கொண்டிருந்தான். இவன் செய்து வரும் சூழ்ச்சி கலவியை அந்த அம்மணியவள் தன் பிராண நாயகனாகிய கௌதம ரென்று நினைத்தும் சங்கையின்றி அவனது எண்ணத்திற்குத் தக்கவாறு கலவி வினையாடிக் கொண்டி ருந்தாள். குற்றமற்ற அக்கற்புடைய மனையோடு களவு காமம் பயின்றுக் கொண்டிருக்கிறான்.

இதற்குள் ஜாமக்கோழியின் சப்தத்தால் எழுந்து கங்கைக்குப் போன கௌதமர் கங்கையை கண்கொண்



டறிந்து, கரந்தட்டி அழைக்க, அக்கங்கை யானது விழி யாது நித்திரை செய்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்து, ஏன் இவ்வாறு அகால சமயம் நேர்ந்ததென திரி கால ஞானத்தால் தெரிந்து, இது இந்திரன் சூழ்ச்சி யென அறிந்து, திரும்பலாகி தன் அகத்தன் வந்து காண, தன் ரூபகி யோடு சூது வேடங் கொண்டு கலவியி லிருக்கும் தேவேந்திரனையும், தன் மனைக் கிழத்தியாகிய அகல்யை யும் பார்த்து விட்டார்.

சூழ்ச்சி வேடங் கொண்டு களவு புணர்ச்சி செய்துக் கொண்டிருக்கும் தேவேந்திரன் கௌதமர் வந்து விட்ட தைக் கண்டு, பய முண்டாகி, என்ன தீங்கு நேரிடப் போகிறதோ வென்று ஒன்றுந் தோன்றாதவனாய், சூது வேடத்தை யகற்றி தன் நிஜ ரூபத்தோடு எதிரே நின்று விட்டான். முன் தன் கணவனைப் போல் ரூபமிருந்து தன்னைக் கூடிக் கலந்து, இப்போது தேவேந்திர உருவத் தோடு எதிரே நிற்கும் இந்திரனையும், நிஜ ரூப தன் கண வனையும் பார்த்த அகல்யாதேவி, அய்யோ! வினைப்பயன் இவ்வாறு விந்தை யெல்லாம் நிகழ்ந்த தல்லவா? இந்த அபசாரத்திற்கு என்ன தண்டனை? என்ன சாபம் நேரி டப் போகிறதோ? என்ன செய்வேன் தெய்வமே! இது வரும் குற்றமற்ற எனக்கு இப்போது இத்தகைய பாப நரகம் விளைய நேரிட்டதும் விதிவசமே! என சிந்தை கலங்கி, பயமுண்டாகி, சரீரம் நடுக்கமுண்டாகி இன்னது தான் செய்வ மென்று ஒன்றுந் தோன்றாதவளாய் மெய் மறந்து நின்றாள்.

இவ்விரு கோலத்தையுங் கண்ட கௌதமர், தேவேந் திரனை நோக்கி, ஓ இந்திரா! நீயோ தேவ தேவர்களுக்.

கெல்லாம் அரசன். உலகத்தவரைப் போல் சாமான்ய விவேக முடையவனல்ல, பிரகஸ்பதியால் நான்கு வேதம் ஆறுசாஸ்திரம்-அறுபத்து நான்கு கலைஞானமும் தெரிந்தவன். மேலும் தெய்வத் தன்மை யுடையவன், சத்தியந் தவறாத உத்தம கொலுவாகிய இந்திர பட்டத்தை அரசு செய்யப் பட்டவன். நீயே இப்படி யெல்லாம் துன்மார்க்க மாகவும், சோரத்துவ மாகவும், பிறதார இச்சையைக் கொண்டு, கற்புடைய மங்கையர்களைக் களவு காமம் பயில்வது உனது இந்திர பதவிக்குத் தகுமா? ஓ ஆகண்டலா! சாதாரண மாக எவனொருவன் கற்புடைய ஸ்திரீகளைக் களவாடக் கருதினாலும், களவிபற்றினாலும், அதற்குடந்தையா யிருந்தாலும் அவர்களை ரௌரவாதி நரகத்தில் வதைக்க வேண்டு மென்று உனது குருவாகிய பிரகஸ்பதி உபதேசித் தில்லையா? இவள் ரிஷி பத்தினி யென்று தெரியாதா? இவள் கற்புடையவ ளென்றும் அறியாயா? இவளை கற்பழிக்க லாமா வென்று உணராயா? அடா சண்டாளா! மகா பழியையும், பாவத்தையும் நீ யடைவதோடு அம்மங்கையையும் பழிச் சொல்லுக்கும், பாப ஜென்மத்திற்கும் ஆளாக்கி விட்டா யல்லவா? உன்னைப் பிடித்த கர்ம சண்டாள சனி அவளையும் பிடித்துக் கொள்ளும்படியாக ஏற்படுத்தி விட்டா யல்லவா? தேவ புருஷனாக யிருந்து உன் விவேக மெல்லாம் எங்கே போய் விட்டது. இது நியாய மாகுமா?

ஏ இந்திரா! நீ இந்த ரிஷிபத்தினியின் மேல் காம வெண்ணம் கொண்டு, சூழ்ச்சி சாவலாகக் கூவி என்னையும் வெளியே போகச் செய்து, என் போல மாறு வேடங் கொண்டு அவளோடு சேர்ந்த உனக்கு என்ன பழிபாவ மென்று எடுத்துரைப்பேன். ஸ்திரிகளின் அல்குலால்-



ளையும் இன்பம், தன் மனையாட்டியிடத்திலும், பிறமாதர்களிடத்திலும் ஏக இன்பமே யன்றி வேறுண்டா? இவ்வாறு சிந்திப்பவர்களும் செய்பவர்களும் தங்கள் உயிரில் எவ்வள விருந்தும் அழிந்து போக வழி தேடிக் கொள்ளப் பட்டவர்க ளல்லவா? உனக்கு மனைவியிந்திராணி யில்லையா? அவளுக்கும் இவளுக்கும் ரூப பேதமே யன்றி மற்ற சுகாதி கலவி யேகந்தானே! தேவ தன்மை யுடைய நீயே இத்தகைய தீயகாரியத்திற்கு நடபட்டால் பாமர ஜெனங்களாகிய உலகத்தவர்கள் என்னத்தான் செய்ய அஞ்ச மாட்டார்கள்? நீயோ உயர்வான நிலைமை யுடையவனாக இருந்தும், பழி பாவத்துக் கிடமாகிய ஒரு யோனியிற்மீது ஆசை வைத்து, தீயகிருத்தியத்தி லிறங்கி, கிஞ்சித்து சுகத்துக்கு ஆசையும் பழியும் பாவமுந் தேடிக் கொண்டும், தேடியது மாகையால், இன்று முதல் ஒரு யோனியின் ஆசையைப் பற்றி, உன் சரீர முழுதும் ஆயிரம் யோனிகளாகக் கடவதென சாப மிட்டார்.

தானொன்று நினைக்க தெய்வ மொன்று நினைத்தது என்பது போல, சிறிது இன்பத்திற் ஆசை வைத்து இப்போது சரீரமுழுதும் நூறுயோனிகளாக இருக்கக் கண்ட தேவந்திரன், நாணமும் பயமுங் கொண்டவனாகி, கௌதமரை வணங்கி, ஓ முனி சிரேஷ்ட சிகாமணியே! நீர் சொல்லும் நீதிகளெல்லாம் உண்மையே! நான் செய்ததெல்லாம் அபசாரமே! நானோ இந்திர போகத்தி லிருக்கப்பட்டவன் ஐராவதம் பெறப் பட்டவன், வஜ்ஜிராயுதம் பிடிக்கப் பட்டவன். தேவர்களை யெல்லாம் என் கட்டளையின் கீழ் நடக்கச் செய்யப் பட்டவன் போக பாக்கியத்திலும் மற்றவைகளிலும் மேலான கீர்த்தி யுடையவனென்று எனக்கே நன்கு தெரியும். எல்லாந் தெரிந்த

னைக்கு கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே, என்பதாய், இப்போது உன் மனைவியிடம் வந்ததும், அதனால் எனக்கு என் சரீரத்தில் ஆயிரம் யோனிகளாக வந்ததும், என் மதியீனத்தால் வந்த பங்கமும், அகௌரமடைந்ததும், என்னுடைய கெட்ட காலத்தின் குற்றமேயாகும். ஓ முனி புங்கவா! இவையனைத்தும் மன்னித்து தாங்கள் கொடுத்த சாபத்தை பிரதி சாப மாக்க வேண்டும்! என்று கெஞ்சிக் கொண்டான்.

அப்போது கௌதமர் ஒரு வாறு மன்னித்தவராய், அடா துன்மார்க்க இந்திரா! நீ இவ்வளவு தூரம் கேட்டுக் கொண்டதினால், உன்னை மன்னிக்கப் படாதென்றும், இந்த அங்க பங்க அகௌரம் என்றும் அழியாமலிருக்க வேண்டுமென்றும், அன்னிய யோனியால் அடையும் நன்மை தீமை எப்போதும் உனக்கு அந்தர் முக பகிர்முக ஞாபகமாக இருக்க வேண்டுமென்றும், இந்த ஆயிரம் யோனியும் உன் கண்ணிற்கு யோனியாகவும், மற்றவர் கண்களுக்குக் கண்களாய் தெரிய வேண்டுமென்றும் பிரசாபம் கொடுத்தார். அதைப் பெற்ற இந்திரன் தப்பியது தம்பிரான் புண்ணியமென்று, ஆயிரங் கண் படைத்த தேவேந்திரன் என்னும் பெயர் விளங்க இந்திர லோகம் போய் விட்டான்.

அப்பால், கௌதமர் மனைவியாகிய அகல்யா தேவியார், வினை சம்பந்தமாக இப்படிப் பட்ட பெரும் அபசாரம் நேர்ந்து விட்டதே! எவ்வாறு உய்யப் போறேய்? இன்னும் என்ன விளையப் போகுதோ? ஆ என் பிராண நாயகா! நான் என் நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமும் நினைந்த தில்லையே! இது வரையில் தங்களுடைய பக்தி



பூஜா திவ்ய சொரூப நினைவு தவிர மற்ற எந்த நினைவும் கனவிலும் நினைத்த தில்லையே! ஹே! அந்தரங்க வாசா! என்று சிந்தித்துக் கொண்டே, மெய் நடுங்கி, மனமொடுங்கி, தன்னுபகன் திருவடிகளில் விழுந்து பணிந்தாள். அப்போது கௌதமர் அவ்வம்மையாரை நோக்கி பெண்ணே! உத்தம ஸ்திரீயே! பதிவிரதையே! குற்றமற்றவளே! குல மடந்தையே! உன்மீது யாதொரு குற்றமுமே யில்லை. என் மனதிற்கு நன்றாய்த் தெரியும். குற்றமுடையோன் தேவேந்திரனே, அவன் குற்றத்திற் தக்க தண்டனை யடைந்தானென்பதும் தெரியும், உனக்கு மனக்குற்ற மில்லை அகக்குற்ற முண்டென்றும், சரீர குற்றமுண்டு மனது குற்ற மில்லை யென்றுந் தெரியும். உன் மீது குற்ற மில்லா விட்டாலும் உன் வினை சம்பந்தம் அநுபவிக்க வேண்டி இருக்கிறது. அதனால் நீ இன்று தொட்டு கல்லா யிருக்கக் கடவது என்று சாப மிட்டார்.

களங்க மற்ற நெஞ்ச முடைய அகல்யா தேவியார் கேட்டதும், மறுபடியும் தன் நாயகன் திருவடிகளில் விழுந்தெழுந்து, கைகட்டி, பயந்த இளமன திரக்கத்தோடு ஓ பிராணேசா! நானோ பெண்பால். இது வரையிலும் ஸ்திரீகளுக்கு விதித்துள்ள சட்டத்திற்கு மாறு பட்டவளல்ல. கணவன் ஆணையைக் கடந்தவளல்ல, எல்லாந் தெரிந்த தங்களுக்கு, நானெடுத்துச் சொல்ல வேண்டியதும், காட்ட வேண்டியதும் ஒன்றுமே யில்லை. நீரே எனக்கு தெய்வ மாகும். ஆனதினால் நான் அடைய வேண்டிய நன்மைக்கும் தீமைக்கும் நீரே காரண காரியவஸ்துவாகும். நான் தங்களுடைய கட்டளைக் குட் பட்டவளே யாகும். ஆனால் என் மனதில் ஒரு சங்கை யுள்ளது,

அதனை தேவரீர் அங்கீகாரஞ் செய்து கேட்க வேண்டியதென்று, கெஞ்சி கேட்டு வேண்டிச் சொல்லுகிறன்.

ஐயா திரிக்காலக் ஞானியே! என்னை ஆட்கொண்ட மௌனியே! காம மென்பது பொதுவியல் தானே. அதற்கு யாதொரு ஜாதி ரூப பேத முண்டா? உயர்வு தாழ் வுண்டா? இல்லையே. இதன் பேத மெல்லாம் சுக்கிலம் சுரோணிதம் என்றது. உடனே அதுவும் பேத மென்றாலோ ஆராயில் அதுவும் ஒன்றோடொன்று உறவு தானே. அப்படி யுறவில்லா விடில் பிறஜோற் பத்தி யுண்டா? இல்லையே, பிறஜோற்பத்தி உலக உற்பத்தி யென்பது இயற்கை தானே. ஆதியில் ஆண் பெண் என இரண்டி லின்றுதானே பிறபஞ்ச உற்பத்தியே என்பது சாஸ்திர ஆராச்சி. அவ்வாறு உற்பத்தி யாகுங் காலத்தில் உற்பவ மெல்லாம் அண்ணனும் தங்கையும், அக்காளும் தம்பியும் என்பதாகவேதானே ஏர்ப்படுகிறது. அப்போது இந்த அக்காளுக்கு மாமனும், அண்ணனுக்கு அத்தை மகளும் என்பதாய் விதிமுறை நடந்தே உற்பவ மாகி வந்ததா? இல்லையே, காணும்போதும், கருதும்போதும் காமத்திற்குத் தூண்டுதல் தானே. அந்தகைய சுபாவம் எல்லா ஜீவ ராசிகட்கும் இயற்கை தானே இப்போதும் உலகில் விதி விலக்கு முறைப் பாடிருந்தும் ஒரு ஸ்திரியின் ரூப லாவண்யத்தையேனும், அல்லது அவள் மிக்க ரூப சவுந்திரிய மில்லா விடினும், அவளுக்கு முக்கிய பாகமாகிய ஸ்தனத் ஸ்தான மேனும் அல்குற்றான மேனும், அதில் முழு பாகமேனும், அல்லது ஒரு சிறு பாகமேனும் அகஸ் மாத்தாய் அல்லது சகஜமாய் இவனுடைய கண்ணுக்குத் தோன்றி விட்டால், உடனே இவனுடைய கண்களை மூடிக் கொள்ள மாட்டான். ஒருக்கால் மூடினாலும்



திரும்பி மறைந்தாலும் அதைப் பூரணமாய்ப் பாராமற்றிருப்பான். அப்போது காந்தத்தை ஊசி பற்றுவது போல் இவன் மனக் கண் அவளுடைய அந்த பூரண பாகமும் பதிந்து விடும். அப்போது அம்மங்கை, அக்காளென்றும், தங்கை யென்றும், தாயென்றும், சுற்ற மென்றும், முறை யென்றும், சொந்த மென்றும் அன்னிய ரென்றும் நேச பத்னி-குரு பத்னி - அண்ணன் பத்னி-தம்பி பத்னி- மற்றெவ்வகையோர் பத்னி யென்றும் ஒது ஒன்றுங் கருதாது காம வெழுச்சியை யுண்டாக்கும். இது போலவே ஸ்திரீகளுக்கும் ஒரு புருஷனுடைய காமத்துக் குரிய சில பாகங்களையேனும், அழகிய உருவங்களையேனும் காணும் போது அவர்களுக்கும் அவ்வாறே எது முறையுங் கவனியாது காம வெழுச்சி யுண்டாகும். இது பொதுவியல் எனும் காமத்தின் சுபாவம். அப்போது இருவருக்கும் ஏதோ சிறிது பரஸ்பரம் ஏற்பட்டு விட்டால் எது ஒரு விதி விலக்கும் கவனியாமல் இணங்கி விடும். இந்த விஷயமும், அநுபவமும் ஒவ்வொருவருடைய மனதிற்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே. ஆயினும் ஆடவரும் மகளிர் மனதில் நிகழ்ந்ததை வெளிக்குக் காட்டாமல், தன் மனதில் எது ஒன்றும் நிகழாதது போல் பாவனையை காட்டுவாரே யன்றி உள்ளதை சொல்லவே மாட்டார்கள். நீர் முற்று முணர்ந்த முனிவராகையால் என் சிற்றறிவிற்கு இவ்வளவு விளங்கியது தங்கள்விசாரணைக்கும் நன்கு விளங்கும். இவை யெல்லாம், உலகோப காரமாக காத்தைக் கட்டுப் படுத்தாமல் க்ஷீணப்படுவதோடு, ஒருவருக்கொருவர் பாது காத்த லின்றி போவதும், பலஹீன நிலையுடைய ஸ்திரீகளுக்கும், தங்கள் பிற்கால ஆதாரனைக்கும், குரோதமும் கொலையும் நடவாம லிருப்பதற்கும், விதி விலக்கை அநுசரித்து நடப்பதற்கும், உயர்வு தாழ்வுக்கும்

பேதா பேதத்திற்கும், உலக வியாபாரக் கட்டுப் பாட்டுக்கும் கருதியே அன்னை யென்றும், தந்தை யென்றும், அக்கா ளென்றும், தங்கை யென்றும், மாமி யென்றும் மச்சி யென்றும், புருஷ னென்றும், மனைவி யென்றும், கலியாண மென்றும், உடன் படிக்கை உறுதி மொழி யென்றும், தன்மனை, பிறன் மனை யென்றும் இப்போது நடந்து வரும் உலக கிருத்திய மெல்லாம் ஆதி காலத்தில் உம்மைப் போல் முனிவர்களாகிய வியாசர் முதலானவர்கள் விதித்த விதிதானே யாகும்.

ஆ என் புருஷ தெய்வமே! நான் அப்படிக்கெல்லாம் சுபாவ காமத்தாலும், அதற் குடன் பட்டும் நடந்தவளல்லவே? அவன் இந்திரனா யிருக்கட்டும். தந்திரனா யிருக்கட்டு, மந்திரனா யிருக்கட்டும், உன் உருவைக் கண்டுங் கருதியும், உன் உணர்வைக் கருதியும், உன்கட்டளைக் குட் பட்டும், மனோ வாக்குக் காயம் மூன்றும் உண்மை விஷயமாக இருந்ததே தவிற அன்னியவிஷயமாக சிந்தித்து நடந்தவை யல்லவே! இவ்வாறு மனக்கற்புக்கு யாதொரு குற்றமு மில்லா திருக்க, என்னை என் வீணா உயிர்-உணர்வு அறிவு-இல்லாத கல்லாகுப்படி கட்டளை யிட்டீர்? இப்படிப்பட்ட தண்டனை விதிப்பதற்கு உமதுமனோ சம்மதத்திற்கு நியாயமல்லவே!

உலகின் கண்ணே காமத்தின் வியல்பாய் பல கிருத்தியங்கள் நடப்ப துண்டு. அது நல்வழியிலும், தீய வழியிலுமே நடப்பதாகும். இது உலகசுபாவமே அதாவது ஒரு அழகுள்ள ஸ்திரீயைக் கண்ட எவனொரு புருஷனும் இச்சைப் படுகிறான். அவன் உருவத்தையே உபாசனா மூர்த்தியைப் போல் தரிசித்துக் கொண்டிருக்கிறான்.



இடை விடாது அவளோடு பேசுவதாகவும், சிறிப்பதாகவும், கூடுவதாகவும், இன்புறுவ தாகவும் சிந்தித்துக் கொண்டே யிருக்கிறான். அப்படிக் கெல்லாம் அவர்கள் கருதுவ தெல்லாம் அம்மங்கைக்கு கற்பு பங்கம் நேரிட்டதாகுமா? இல்லையே. அதை முன்னிட்டு அவளைத் தண்டித்து விடலாமா? இன்னும் ஒரு பெண் குற்ற மற்ற பதிவிரதா லக்ஷண முடையவளே; அவள் தன்னை மறந்து நித்திரை செய்கிறாள். அதாவது நித்திரையில் ஜாக்கிரதா அவஸ்தை நித்திரை ஒன்று, சொப்பனாவஸ்தை நித்திரை யொன்று, சுழிமுனை அவஸ்தை நித்திரை யொன்று இது இயற்கையே இதில் சுழிமுனை அவஸ்தா நித்திரைசெய்துக் கொண்டிருக்கிறாள். இப்படி சமய காலங்களில் எவனோ ஒரு காமுகன் களவாட வேண்டுமென்று காத்திருந்தோ அல்லது வாய்த்த சமயமோ, அது காலையில் நித்திரையில் பைசாச போகஞ் செய்து போய் விட்டான். அவன் செய்த களவு காமம் இவளுக்கு கிஞ்சிற்றும் தெரியாமலே யிருந்து விட்டது. அப்போது அவள் கற்பழிந்தவளா? விபசாரத்தத்துவமா? கற்புடையவளா? அதற்காக அவளை இஷ்டப் படி தண்டித்து விடலாமா? அத்தகைய காலங்களில் காமம் பொதுவியலாகியதாலும், சுக்கிலத்துக்கும் சுரோணிதத்திற்கும் நேசதத்துவம் கூட்டுறவு தத்துவம் இருப்பதால், நித்திரை சுழிமுனை அவஸ்தை யிருந்த போதிலும், காமத்தின் எழுச்சி தூண்டுதலினாலும், ஒன்றோடொன்றின் பரிசத்தினாலும், ஒன்றோடொன்று இயங்கியேவிடும். அதனால் கருப்பமு முண்டாகி விடலாம். அப்போது அவளை தண்டிப்பதோடு அதனா லுண்டாகிய கருவுரு சிசுவையும் தண்டிக்க வேண்டியது தானே. இது அவளுடைய நாயகன் காக்க வேண்டிய காவலின் குற்-

றமா? அதுபோல் நான் தேவரீருக்குச் சொல்ல முன் வர வில்லை. நான் அதுபோன்ற விஷயத்தை உடைத் தாயும் நடக்க வில்லையே எனக்கு இப்படிப்பட்ட சாபம் கொடுப்பது நியாமல்லவே?

ஓ என் ஆவியே! சஞ்சீவியே! இன்னும், வாக்கு மனோ காயம் இம்மூன்று முடைய கற்பில், காயத்திற்கு மாத்திரம் குற்ற முண்டாய தென்றாலும், பண்டு தேவ தேவர்களுக் கெல்லாம் குருபகவானாகிய பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரா என்பவள், வாசிக்கவந்த சந்திரனை மகனென்றுங் கருதாது, நாயகனை வஞ்சித்து, அச்சிறு வனை காமத்தை மூட்டி எழுப்பி விட, அவனும் குருபத் தினி அன்னை யென்றுங் கருதாது, பாபபுண்ணிய மென் றும் எண்ணாது, இருவரும் தங்கள் ஆவலைத் தீர்த்து ஒரு ஆண் மகவையும் பெற்று விடவில்லையா? அப்பால் அந்த தாரையை பிரகஸ்பதி அங்கீகரிக்க வில்லையா? இதற்கு தேவர்களும் மன சம்மதி படவில்லையா? இன்னும் அவளை புண்ணிய ஸ்திரீகளில் ஒருவளாக உலகம் பஜிக்க வில் லையா? அப்படிப்பட்ட கிருத்திய மேனும் செய்தவ ளுண்டா? இல்லையே. வீணில் என்னை இப்படி சபிப்பது நியாயமா? ஏதோ அடியேன் தங்களுக்குப் புத்தி புகட்ட வந்ததாக எண்ணி கோபிக்க வேண்டாம்! ஏதோ என் சிற்றறிவிற் குள் எற்பட்டதை எடுத்துப் புலம்பினேன், என் மீது வீண் சாபத்தைப் போடவேண்டாம், மன்னிக்க வேண்டும்; மன்னிக் வேண்டும்; என்று ரொம்பவும் கேட் டுக் கொண்டாள்.

இவள் சொல்லிய விசாரனை கேழ்விமுதலியவை யெல் லாம் செவி சாய்த்துக் கேட்ட கௌதமர், தனது பத்தி



னியை நோக்கி ஏ பெண்பாவாய்! நீ சொல்லும் விஷயங்க ளெல்லாம் உண்மையே நான் முழுதும் ஒப்புக் கொள் கிறேன். தோற்ற ஒடுக்கமும், இயற்கையும், செயற்கை விசாரணையைக் கொண்டு நாமெல்லோரும் இவ்வித நடை நொடி பாவனையி லிருந்து விட்டால், பின்னை கலியுகத்தி லுள்ளவர்கள் விதி விலக்கில்லாமலே நடந்து விடுவார் களே! அப்போது உங்களுக் கெல்லாம் ஏது ஒரு கௌர வமும் இல்லாமலே போய்விடுமே. அப்படிப்பட்ட கலி யுகத்தில் ஒவ்வொரு வரும் விவாக காலத்தில் அருந்ததி யோடு உன்னையும் கற்புடைய நாயக மாக துதிப்பதற்கும், அறக் கற்பு மறக் கற்பு என்று சொல்லும் இரண்டினுள் இப்போது நிகழ்ந்தவை யால் உன் கற்பு மறக் கற்பாக ஏற்படுவதால், அக்குற்றமும் வசையும் ஒழிந்து பரி சுத்த அறக் கற்புடையவளென்று எல்லோரும் கொண்டாடு வதற்கும், நீ நெடுங்கால மாக ஸ்ரீமந் நாராயண மூர்த் தியை தரிசிக்க வேண்டுமென்று மனத்தில்கொண்ட பூஜாஸ் தோத்திரம் நிறைவேறுதற்கும், பிரதி சாபம் கொடுக்கின் றேன் அதாவது நீ கொஞ்சகாலம் சிலையாகவே யிருப்பாய், அப்பால் தேவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி, இராவண சம்மாரத்தின் பொருட்டு ஸ்ரீமந் நாராயண மூர்த்தி தசரத சக்கிரவர்த்திக்கு ஸ்ரீராம னென்னும் திருக்குமாரனாக திருவவதாரஞ் செய்து, லோக மாதாவாகிய சீதாங் கனியை திருமணம் செய்யப் போகும்போது அவருடைய திருவடி உன் மீது பட அதனால் உன்சாபம் விமோஷன மாகி பரிசுத்த முடைய தரிசனங் கொடுப்பார் அதன் பிறகு என்னிடம் வருவாய் என்று பிரதி சாபம் கொடுக்க அதைப் பெற்று சிலை யுருவா யிருந்தாள்.

அப்பால் சிறிது காலஞ் சென்று அயோத்தியில் ஸ்ரீராமர்-லக்ஷ்மணர் - பரதன் - சத்ருக்கன் ஜனன மானார்கள். ஸ்ரீ மகா லக்ஷ்மி தேவி ஜனக ராஜனுக்குத் திருக்குமார்த்தியாய் அவதார மானாள். அயோத்தியில் தசரத சக்ரவர்த்திக்கு ஸ்ரீராமர் திருக்குமாரனாக அவதரித்து வளர்ந்து வருகாலையில் ஒரு நாள் ராமர் லக்ஷ்மணர் இருவரையும், கௌசிக முனிவர் தன் யாகத்தை முடிக்க இட்டு வந்த காலத்தில், தாடகையைக் கொன்று, சீதையை மணக்க மிதிலைக்குப் போக வரும் வழியில் ஸ்ரீராம மூர்த்தியின் பாத தூளி அகல்யா சிலையின் மீது பட, சாபமும் பாபமும் விமோசனமாகி பழய அகல்யா பெண்ணுருவை யடைந்தாள். அப்போது ஸ்ரீராமர் மானிட அவதார மாக வந்த போதிலும், அகல்யா தேவி நேத்திரங்களுக்கு மாத்திரம், சங்கு-சக்கர - கதா - கட்க - கோதண்ட - லக்ஷ்மீ நாராயண தெரிசனங் கொடுத்தருளினர். அப்போது அகல்யா மனோ வாக்கு காய திரிகரண சுத்தியோடு, ஸ்ரீராம மூர்த்தியை நோக்கி,

ஓம் ஹரி ஹரி, நரஹரி, முராஹரி, அம்புஜாக்ஷா, அச்சுதா, உச்சுதா, பஞ்சாயுதா, பரமபுருஷா, லக்ஷ்மீசமேதா விலாவினோதா, கமலபாதா, ஆதிமத்யாந்த ரஹிதா, அனுதாக்ஷகா, அகிலாண்ட கோடி பிர்மாண்ட நாயகா, பரமானந்தா, முகுந்தா, வைகுந்தா, கோவிந்தா, பச்சை வண்ணா, கார்வண்ணா, கமலக்கண்ணா, ஜனார்த்தனா, கருட வாகனா, ராக்ஷஸ மர்த்தனா, காளிங்க நிர்த்தனா, சேஷசயனா, நாராயணா, பிர்ம பாராயணா, வாமனா, நந்தநந்தனா, மதுசூதனா, பரிபூரணா, சர்வ காரணா, வெங்கட்டரமணா, சங்கடஹரணா, ஸ்ரீதரா, துளசிதரா, தாமோதரா, பீதாம்பரா, மச்சகச்ச வராஹாவதாரா, பலபத்ரா, பராமதயா



பரா, பரமேஸ்வரா, சங்கு சக்கரா, சர்வேஸ்வரா, கருணாகரா, லக்ஷ்மீ மனோ ஹரா, ஸ்ரீரங்கா, பாண்டுரங்கா, லோக நாயகா, பத்மநாபா, திவ்ய சொரூபா, புண்ணிய புருஷா, ஸ்ரீராமா, பரந்தாமா, நரசிம்மா, திரிவிக்ரமா, பகல்ர ராமா, பக்த வத்ஸலா, தேவானுகூலா, ஆதிமூலா, வேணு கோபாலா, மாதவா, யாதவா, ராகவா, கேசவா, வாசுதேவா, தேவதேவா, ஆதி தேவா, மகானுபாவா, தேவி சேயா, தசரத தனயா, மாயா விலாசா, சுயம் பிரகாசா வெங்கடேசா, ருஷிகேசா, சித் விலாசா, கஜபதி, ரகுபதி, சீதாபதி, வெங்கடசலபதி, மாயா, ஆயா, வெண்ணை யுண்ட நேயா, அண்டர்களேத்தும் தூயா, உலக முண்ட வாயா, நான் உபாயா, பக்தர்கள் சகாயா, சதுர்ப்புஜா, கருடத்துஜா, கோதண்ட ஹஸ்தா, புண்டரீக வரதா, ஓ விஷ்ணு ஓபராத்பரா, ஓம் நாராயண நம் நமோ நாராயணா! என்று தோத்தரித்தாள்.

உடனே கௌதமரும் வசிஷ்டரும், ஸ்ரீராமலக்ஷ்மணருமாக அகல்யா தேவியை அழைத்துக் கொண்டுபோய் கௌதம ருடன் ஒப்புவிக்க அவரும், பரி சுத்தமாகிய தனது பத்தினியை அங்கீகரித்து, இருவரும் ஸ்ரீராம தரிசனம் செய்து, முன் போல சதிபதி வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

# 15 - நளாயினி சரித்திரம்.

—*:*—

நெறி முறை தவறாது அரசு செலுத்தி வந்த ஸ்வமகா ராஜனுக்கு நெடுநாள் பரியந்தம் மகப் பேறில்லாமல்

தாமும் தன் பட்ட மகிழ்வும் விசன முற்றவர்களாகி,
அனேக தான தர்மங்களைச் செய்தும் சந்தான மில்லாமல்,
தவ மிழைத்து ஒரு பெண் மகவைப் பயின்றார்கள் அரு
மையாகப் பெற்றெடுத்த தமது அருமைப் புதல்விக்கு காப்
புச்சடங்கு முதலியவையியற்றி, ஆதுலர் முதல்வேதவேதி
யர்களுக் கெல்லாம் தானாதிகள் வழங்கி, நகரம் சிங்கா
ரித்து, திருவிழாக் கொண்டாடி, ஆலய உத்ஸவாதிகள்
நடாத்தி, நளாயினி என நாமகரணம் சூட்டி, நாளொரு
மேனி பொழுதொரு வண்ணமாக வளர்த்து, கல்விப்பற்றி
உலகவியல்-ஆசாரம் - விவேகம் - கற்பு முதலியவைகளைப்
புகட்டி, அதி வேர்க்கி வளர்ந்து வர மங்கைப் பருவ
மடைந்து, இன்னும் விவாக மில்லாமல் கன்னிகா மாடத்
திலிருந்தாள். தாய்தந்தையும் நம்குமாரத்திக்கு பொருத்த
லக்ஷணத்துடன் எப்போது மணவாள னேற்பட்டு, கல்யா
ணம் செய்து கண்களிக்க மனமகிழ பார்ப்போ மென்று
பேராவ லுடையவர்களா யிருந்தார்கள்.

இவ்வாறிருக்க ஒரு நாள், மகா தப சிரேஷ்டரும்,
பிரமசாரி விரதம் அனுஷ்டிப் பவரும், நான்கு படி
புணர்ந்தவரும், திரிகால முணர்ந்தவரும், சர்வ சக்தி
யுடையவரு மான மௌத் கல்யமுனிவர், அந்த நளாய
னியைத் தான் மணம் செய்துக் கொள்ள வேண்டுமென
நிர்தாரணஞ் செய்துக் கொண்டு புறப்பட்டு, ஒரு கிழமுனி
உருவ மாக நள மகாராஜன் கொலுமுகத்தே வந்தார்,
அப்போதுடனே அரசன் எழுந்து அதிக பயபக்தியுடனே
அம் முனிவருடைய திருவடிகளில் பணிந்து, உபசரணை
புரிந்து. உபசார வார்த்தைகள் பேசி, ஓ முனிபுங்கவா!
தாங்கள் அடியேன் மாட்டு இவ்வளவு தூரம் எழுந்தரு
ளிய விசேஷ மென்ன? என்னாலாக வேண்டிய காரியங்க



ளேதேனு முண்டா? என்று கேட்க, முனிவரும் அர
சனை நோக்கி, ஓ நளமகாராஜனே! உன்னிடம் ஒரு பெண்
மணி இருப்பதாகக் கேழ்விப் பட்டேன். அப்பெண்ணின்
மீது மிக்க காதலுடையவனாகவும், அவளை மணம் புரிந்து
அவளோடு இல் வாழ்க்கை நடத்த ஆவலுள்ளவனாகவும்
இருக்கிறேன். அந்த மங்கையை எனக்குத் திருமணஞ்
செய்து கொடுக்க வேண்டு மென்றுங் கூறினார்.

அந்த கிழ முனிவர் வார்த்தைகளைக் கேட்ட அரசன்,
மௌத்கல்யரை நோக்கி, அய்யா தபசிரேஷ்டரே! தேவரீர்
வார்த்தைக்கு யான் எதிர் வார்த்தை சொல்லப் பட்டவ
னல்ல. ஸ்திரீ புருஷ கல்யாண காரியத்திற்குச் சில முக்
கிய விஷயங்களிருக்கிறது. அதாவது, ஒருவர் ஒரு
பெண்ணை விரும்பும் போது, அப்பெண்மணிக் குடைய
தந்தை நமது குமாரத்தி நல்ல கல்வி விவேக முடைய
வனுக்கே கொடுக்க வேண்டு மென்று கருதுவான். அவ
ளுடைய தாயோ உயர்ந்த செல்வ முடையவனுக்கே நம்
பெண் வாழ்க்கைப் பட வேண்டு மென்று எண்ணுவாள்.
சுற்றத்தாரோ பழுதில்லாத குலத்தி லுதித்தவனுக்கே
பெண்ணைக் கொடுக்க வேண்டு மென் றெடுத் துரைப்பார்
கள். அப்புருஷனை மணக்கும் பெண்ணோ, எது எப்படி
யிருந்தாலும் அவசிய மில்லை நமது கண்ணுக்கும் மன
திற்கும் ரம்மியமும் சந்தோஷ முடைய புருஷனே
வேண்டு மென்று உண்மையில் கருதுவாள். இது உலகந்
தெரிந்த விஷயமே. எனக்குத் தெரிவது போல் தேவரீ
ருக்குந் தெரியும். ஆனதால் தேவரீரே என் மகளிடம்
போய் சம்மதி தெரிந்து வந்தால் தங்கள் எண்ணத்திற்கு
யான் ஒன்றுந் தடை சொல்லப் போகிறதில்லை யென,
அவரும் சரியென அரசன் வாக்கியப் படி நளாயினிடம்

போவதற்கு போகலானர். அப்போது வழியில் உடனே தனது சர்வ சக்தியால் அந்த கிழ முனி ரூபத்தை மாற்றி நவ மன்மத திவ்ய அழகிய சொரூப புருஷனாக உருவெடுத்து கன்னிகா மாடஞ் சென்றான்.

இத்தகைய கோடி சூரியப் பிரகாச ரூப லாவண்ய புருஷன் வந்ததும் இரு விழிகளால் பார்த்த நளாயினி எழுந்து ஆசனங் கொடுத்து வந்தனை வழிபாடு மரியாதை செய்து, மிகுந்த வணக்கத்துடன் அந்த திவ்ய புருஷனை நோக்கி, ஐயா! தேவரீர் என்மாட்டு எழுந்தருளிய காரியமென்ன வென்று கேட்க அவரும், ஓ பெண்பாவாய்! நான் உன்னை கலியாணம் செய்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்தேன், வந்ததும் முதலில் உன் தந்தையைக் கண்டு என் அபிப் பிராயத்தை யெடுத்துரைக்க அவரும், என் குமாரத்தியின் சம்மதத்தை தெரிந்து வந்தால், அவ்வாறே கொடுப்பதற்கு ஆக்ஷேபனையில்லை யென, அவர் வார்த்தைப் படி இங்கு உன்பால் வந்தேன். இதனை உனக்கு எடுத்துரைத்தேன். உன்னுடைய மனது சம்மதம் எப்படி? என்றார்.

மகா திவ்ய ரூப லாவண்ய புண்ணிய புருஷ மௌத்கல்யார் வந்தது முதல், அவருடைய அபிப்பிராயத்தை எடுத்து சொல்லி முடிப்பது வரையில், நளாயினியின் மனம் ஒரு விதமான வழியில் நின்று விட்டது, அதாவது எது ஒரு வார்த்தையும் ஆரம்பிக்கா முன்னமே அவருடைய திருமுகத்தை தரிசித்ததும், ஆ! இவர் மனித வுருவோ? அல்லது தேவ வுருவோ? மன்மதனே நேரில் வந்து விட்டாரோ? இதுகாறும் இத்தகைய ரூபலாவண்ய புருஷனைக் கண்டதில்லையே? இம்மகா புருஷனையே நாயக



னாகப் பெறுவ தல்லவோ நாம் நோற்ற நோன்பின் பயனாகும் ஆ! ஆ! என்ன அழகு! என்ன சுந்தரம்! என்று மனதில் கருதினவளாகி அவர் மீது தனது பூர்ண எண்ணத்தை செலுத்தி விட்டாளானதினால், அவருக்கு மிக்க உபசாரத்துடன் வணங்கி, சுவாமி! தேவரீர் என்னை கல்யாணம் செய்ய வேண்டி இச்சை கொண்டு இவ்விடம் வந்து என்னை கேட்க, நான் பெரிய தவப்பயனை அடைந்தவளாகும் தங்கள் எண்ணப்படியே உன்னையான் கல்யாணம் செய்துக் கொள்ள பூரண எண்ண முடையவளாக சம்மத முடையவளாகும் என்று கூறினள். கேட்ட முனிவர் சரியென ஒத்துக் கொண்டு, பெண்ணே! நாமிருவரும் இப்போது மன ஒத்துமையுடன் புருஷன் மனைவியாக ஒப்புக் கொண்டோம், இதற்கு உன் மனமும் என் மனமுமே சாக்ஷியாகும். கிற்ச, விதிப்படி விவாகம் செய்துக் கொள்ள உனது தந்தை சம்மதிபட. உன்சம்மதமும் என் சம்மதமும் ஒற்றுமை சம்மதம் ஏற்பட்டதென சாக்ஷியாக நீ என்ன சொல்லுகிறாயென, சம்மத பண்மாகிய நளாயினி உன்னை நான் உன்னிஷ்டப்படியே மணம் செய்துக் கொள்ளுகிறேன் எனக்கும் சம்மதமே! இதோ நிஷ்காமாய் விட்டோமென்பதற்கு சாக்ஷியமாக என் கணையாழியைத் தருகிறேனென தனது முத்திரை மோதிரத்தைக் கொடுத்து வேண்டிய உபசாரங் கூறி தன் தந்தையிடம் போய் முடிவு செய்துக் கொள்ளும்படி அனுப்பி விட்டாள்.

மோதிரம் வாங்கிய முனிவர் அவ்விடம் விட்டு வரும் போது பழயபடியே கிழமுனி வேடங் கொண்டு அரசனிடம் வந்து, நளாயினியின் சம்மதத்தைக் கூறி மோதிரத்தைக் காட்டினர். அரசன் உடனே தனது குமாரத்தியை

அழைத்துக் கேட்க, அவளும் தான் கண்ட ரூபத்தையும், இப்போது இருக்கும் கிழ முனி உருவத்தையுந் தெரிந்து, தனது மோதிரத்தையுங் கண்டு, இது ஏதோ தேவ சூட்சியாக இருக்கிறதென யோசித்து, உடன் பட்டவனாகி, அவளை அம்முனிவருக்குத் திருக் கல்யாணஞ் செய்து கொடுக்க, அவ்வம்மனும் அவரோடு கூடி, சதிபதி வாழ்க்கை நடாத்தி வந்தாள்.

மௌத்கல்யர் நளாயினி மனதை சோதிக்குமாறு தனக்கு கழுரோ பென்னும் பெரு நோயை போற்றுக் கொண்டார். விதியுங் கணவனுடனேர் படினுந் தன் தன் விதியின் பயனே பயன் என்பதாய் இவையனைத்துக்கும் வெறுப்பின்றி பதி பக்தி பணிவிடை செய்து வந்தாள். அவ்வாறிருக்கு நாளையில் தான் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டுமென அந்த நளாயினி அங்க பங்க நோயுடன் இருக்கும் தன்னுயகனை ஒரு கூடையில் வைத்துத் தலைமீ தெடுத்துக் கொண்டு ஒவ்வொரு தீர்த்தங்களிலும் தீர்த்தமாட்டி வருவாளாயினள்.

இவ்விதமாக தீர்த்தமாடி வரும்போது ஒரு நாள் இரவு நேரத்தில் தன் பதியை தலை மீது தூக்கிக் கொண்டு வரும்போது, கழுமரத்தில் கண்டனையாக தொங்கலாடிக் கொண்டிருக்கும் ஆணிமாண்டவரின் காலில் தாக்க, அவருக்கு அந்த மோதலால் மிகுந்த உபத்திரவமுண்டாகி, அடீ! சண்டாளி! உன்னுடைய இறுமாப்பால் எனக்கு வாதையை உண்டாக்கினாய்! ஆனதினால் பொழுது விடியு முன் உன் மாங்கல்யம் இழக்கக் கடவதென சாபமிட்டார்.

அவ்வார்த்தையைக் காதில் கேட்ட நளாயினி திடுக்கிட்டுப் பயந்து, ஐயோ! நம் மனதார ஒரு குற்றமும்



செய்ததில்லையே, அகஸ்மாத்தாய் இப்படிப் பட்ட சாபம் நேர்ந்ததே! பொழுது விடிந்தால் தாலி இழக்க நேரிடுமே! இது தானா நான் இதுவரையிலும் நோற்ற நோன்பின் பயன் எனத் தன்பதியை மனதில் தியானித்து, நான் பதிவிரதை யென்பது உண்மை விரதமாக இருக்குமாகில் பொழுது விடியாமல் இருக்கக் கடவதென்று மறு சாப மிட்டாள்

மகாபதிவிரதா சிரோமணியாகிய நளாயினி கொடுத்த சாபத்தால் அவ்வேளையிலிருந்து மூன்று நாள் வரையிலும் சூரியன் வரவேயில்லை உலகம் அந்தகாரமாய் விட்டது, மானிடர், தேவர், ரிஷீஸ்வரர், முனிவர் முதலிய யாவரும் நித்ய கன்ம அனுஷ்டான ஜெப தபங்களெல்லாம் தடையாக நின்று விட்டது, திரிமூர்த்திகளும் தியங்கலானார்கள். இதற்குள் திரிலோக சஞ்சாரியாகிய நாரத முனிவரால், இவ்வாறு உலகம் அந்தகாரமானதைத் தெரிந்து: தேவ தேவர்களும், இந்திரனும், திரிமூர்த்திகளும் ஒன்றாக திரண்டு நளாயினியிடம் வந்து பொழுது புலரச் செய்யும்படி வேண்டினார்கள்.

களங்கமற்ற கற்பு நாயகமாகிய நளாயினி தனக்கு நிகழ்ந்தவையும் எடுத்துக் கூற, இவளுடைய கற்பின் மகத்துவத்தை தேவ தேவர்களெல்லாம் புகழ்ந்து ஆசி கூறி, எப்போதும் போல பொழுது புலரச் செய்யும்படி வேண்ட, ஆணிமாண்டவரும், இந்த நளாயினி என்றும் அழியாத மாங்கல்யத்தை அடையக் கடவதெனப் பிரசாப நிவர்த்தி ஆசி கூற, அம்மனும் எப்போதும் போல பொழுது விடியக் கடவதென சாப விமோசனம் கூறினள் அருண பகவான் கர கரவென உதயமானான். ஆணி

மாண்டவரின் கழுமர தண்டனை நிவர்த்தியாகியது. நளா யினியின் கற்பை சோதிக்க வேண்டுமென இதுவரையிலும் நடாத்தி வந்த மௌத்கல்ய முனிவரும் தன் சுய உருவு குற்ற மற்ற ரூப லாவண்யத் தோடு நின்றார். அப்பால் தேவ தேவர்களும், ரிஷிகளும், முனிகளும் மௌத்கல்ய முனிவரையும் நளாயினியையும் ஆசி கூறி போயினார்கள். அது முதல் சதி பதியிருவரும் ஆனந்த பரவசர்களாக இன்புறக் கூடி வாழ்ந்தனர்கள்.

---

## 16 - பாஞ்சாலியம்மன் சரித்திரம்.

:*:

பாஞ்சால தேசத்தை அரசு நடாத்தி வந்த பாஞ் சால மகாராஜனுக்கு யாகத்தில் பெற்றெடுத்த பாஞ்சாலி யென்னும் திரௌபதி யம்மன் பாரதத்தின் முன்னிட்டு உற்பவ மாகிய பாரத மாதா வாகும். பாரதத்தின் சரித் திரமும் திரௌபதியின் சரித்திரமும் பாரதத்தில் நீண்ட விசாலமாக யாவருக்கும் நன்கு தெரிந்ததே யாகும். அத் தேவியைப் பற்றி நாம் விசேஷமாக சொல்ல வேண்டிய தில்லை.

பாஞ்சாலியின் முக்கிய அம்சமாவது, தொண்ணூற் றுயா தத்துவங்களே துரியோதனாதிகளாகவும், பஞ்சபூதங் களே பாண்டவர்களாகவும், மாயை சத்தியே திரௌபதி யாகவும், அறிவே கிருஷ்ண பரமாத்மாவாகவும் திருவவ தாரங் கொண்டு பாரதம் முடிந்ததாக கருதி யுத்தி அனு பவ இதிகாச மாகும். இதுவே இதினுடைய அந்தரார்த்த மாகும்.



கிருஷ்ண பரமாத்மாவின் சகாயத்தால் பாஞ்சாலி அருச்சனனுக்கு மாலையிடப் பெற்று, தன் தாயார் குந்தி யம்மனிடம் வந்து, அம்மா! ஒரு கனி கொண்டு வந்தே னென, அக்குந்தி யம்மனும், உள்ளபடியே கனியென்றே நினைந்து, மகனே! நீ கொண்டுவந்த கனியை ஐவருமாய் எடுத்துக் கொள்ளுங்க ளென்றாள். மறுபடியும் அர்ஜு னன் தன் தாயை வணங்கி, அம்மா! கனி யென்றால் மரத் தில் உற்பத்தியான கனியல்ல, இது ஒரு பெண் கனியென குந்தியுங் கேட்டு, அர்ஜுனா! நீ முதலில் சாதாரண மாக கனி யென்றதினால் உங்கள் ஐவரையும் பேதமின்றி எடுத் துக் கொள்ளு மென்றேன். மறுபடியும் பெண் கனி யென்றதினால், என் வாக்கு பழுதாகமற் படி உங்கள் ஐவ ருக்குமே மனைவியாக இருக்கட்டும், ஆனால் அவள் அழி யாத பத்தினியா யிருப்பா ளென உண்மை வாக்குத் திரு வாய் மலர்ந்தருளினாள்,

கேட்ட அர்ஜுனன் தாய் சொற்றுறந்தால் வாசக மில்லை யென்னும் வாக்கியப்படி அவ்வாறே யொழுக, அதற்கு உடன் பட்டவளாகிய பாஞ்சாலி தேவியார் நார தர் வாக்கியப்படி. ஐவருக்குந் தேவியாகவும், அழியாத பத்தினியாகவு மிருந்து, அவர்களோடு, பங்காளி தத்துவ சூதாட்டப் படி அவர்களோடு பன்னிரண்டு வருஷம் ஆரண்ய வாசமும், ஒரு வருஷம் அக்யாதமும் செய்து, இடையே தன் மீது காமாந்த காரங் கொண்ட கீசகனை பீமனால் கொல்லச் செய்து, தன் பதிவிரதா மகத்துவத் தால் தன்னை பெண்டாள முன்வந்த கொடூர குணமுடைய துரியோதனாதிகளை சம்மாரஞ் செய்யச் செய்து, ஐவரை யும் பாது காத்து, தானும் அவர்களுடன் உலகவாழ்க்கை நடாத்தி, உலக முள்ளவரையிலும், சந்திர சூரியர் உள்ள

வரையினும், பஞ்ச மாதர்களில் ஒரு மாதராகவும், ஐவருக்குந் தேவி அழியாதபத்தினி யென்பதாகவும், உலகில் யாவரும் வணங்கும்படியான தேவதா சக்தியாகவும் நிலை நாட்டினவளாகும். இந்த திரௌபதா தேவியின் கற்பு நிலையைப் பற்றி முன் வரும் சரித்திரங்களிலும் பின்வரும் சரித்திரங்களிலும் இடையிடையே விளக்குவதாகும்.

---

# 17 = சகுந்தலை சரித்திரம்.

—*!*—

பெருதற்கரிய பேரின்ப வீட்டை யடைவான் வேத போதனர்கள் தவமியற்ற ஹேதுவாயுள்ள இமயகிரி பர்வதத்தினருகில் அடர்ந்த ஓர் வனத்தின் கண், வசித்து வருபவரும் எதிர் காலம், நிகழ் காலம், இறந்த காலம் என்னும் திரி காலங்களையும் அறியும் ஆற்றலும், அநேக தவ ஸ்ரேஷ்டர்களால் போற்றத் தகுந்த புகழ் வாய்த்தவருமான "கண்ணுவ மாமுனிவர்" இமயகிரி பர்வதத்தை நாடி செல்லும் போது அவ்வழியில் சிறு குழவியின் அழுகுரல் கேட்டு அக்குரல் கேட்கும் திசையை நாடிப்பார்க்க அங்கு ஓர் பெண் மகவு எழிலுற்று அழுதுக் கொண்டிருக்க, அக்குழவிக்கு * பானுவாடை சாராமலிருக்க சகுந்தலா பக்ஷிகள் தங்கட் சிறகினால் குடை பிடித்திருப்பதைக் கண்டு ஆச்சரிய முற்று அம்மகவை ஆவலுடன் எடுத்

* பானுவாடை - சூரிய வெப்பம். சகுந்தலை பக்ஷி காவல் புரிந்தமையால் சகுந்தலை யென நாமம் இடப்பட்டது.



தணைந்து உச்சிமோந்து மார்போடணைத்து இக்குழவி யீண்டுவர வேண்டிய காரணமென்னவென்று ஞான சக்தியினால் அறிந்து தன்னிருப் பிடத்திற் கொடுத்தேகி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்

அவ்வாறு வளர்ந்து வந்த சகுந்தலை மங்கை பருவமுற்று ரூப சவுந்தரியாக விளங்கி தன் தாதி மார்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது சில வண்டுகள் சகுந்தலையின் முகத்திலடிக்க, அப்போது அவள் தாதிகளிலொருத்தி அவ்வண்டை நோக்கி ஐ! வண்டே! அஸ்தினாபுரத்தை நீதி வழுவாது செங்கோலைத்தும் துஷயந்த மஹா ராஜனிருக்கும் போது கூடவா தாமரை மலர் போன்ற மிருதுவாயுள்ள சகுந்தலையின் முகத்தை உங்களது கொடுமை பொருந்திய சிறகால் தாக்குகின்றீர்கள் என்றாள் இச்சொற்களை செவியுற்ற வண்டினங்கள் அவ்விடம் விட்டகன்று போயின. பின்னர் சகுந்தலை பலர் கையிலாக துஷ்யந்த மஹாராஜனது வீரதீர பராக்கிரமத்தையும், அதிரூப சௌந்தியங்களையும் கேள்வியுற்று மனதை அவன்பால் நாட்டினாள் ஒரு நாள் துஷ்யந்தன் வேட்டைக்கு புறப்பட்டு வேட்டைகளாடி வருகையில், மன்னன் வந்த மந்திரி - வேடர், வில்லியர்களை நீங்கி கண்ணுவர் ஆசிரமத்திற் கருகில் வந்து விட்டான் அப்போது தான் துஷ்யந்தனுக்கு கண்ணுவர் ஆசிரமத்திற்கு வந்தோமென் றுணர்ந்து அவரைக் கண்டு ஆசிப்பெற்று போகலாமென்று ஆசிரமத்திற்குள் நுழைந்தான்.

அவ்வாறு ஆசிரமத்துள் நுழைந்ததும் தாம் கருதி வந்த கண்ணுவ மகாமுனிவரின்றி அங்கு ஓர் மங்கை

நல்லாள் இருக்கக் கண்டான். அங்கு வீற்றிருந்த சகுந்தலையும் வந்தவனின்னானென்று ஒருவாறு யூகித்து ஆசனமீந்து அமரச் செய்தாள். மன்னனும் மங்கையைவிளித்து இவ்வாசிரமத்தில் வசிக்கு முனிவர் எங்கே? என்று கேட்ட வண்ணம் அவளழகி லீடுபட்டு மெய் மறந்து நிற்கலானான். அவ்வுரை கேட்ட சகுந்தலையும் புன் முறுவல் பூத்தவண்ணம் மன்னர் பூபா! அவரை சதானந்த மாமுனிவர் அழைத்தேகி சென்றார் சின்னாழிகைக்கு வந்து விடுவர் என விடை பகர்ந்தாள். அது கேட்ட மன்னன் ஹே! மங்கையர் திலகமே நீயார்? இக்கண்ணுவர் ஆசிரமத்தின்கண் தனித்திருக்க வேண்டிய காரண மென்ன? என்று வினவ, அதற்கு மங்கை என் பெயர் சகுந்தலை. கண்ணுவருடைய புதல்வியென பகர்ந்தாள். அது கேட்ட துஷ்யந்தன் மனத்திடுக்கிட்டு ஹே! பாவாய்! மும்மலங்களையும் கட்டறுத்து சிறந்தவர்களில் சிறந்தவரும், பிரமாசாரியும், மஹா பக்த சிரோன் மணியாயும் விளங்கும் புதல்வியாகிய விபரத்தை யானறிய உரைக்க வேண்டு மென்று வினவக் கேட்ட சகுந்தலை சொல்லத் தொடங்கினாள்.

அத்தினா புரிக் கதிபதியாகிய ஹோ! இரைவனே! நீவிர் என் சரிதையை கேட்க விரும்புவதால் சுருக்க மாக சொல்லுகின்றேன் கேட்பாயாக வென்று சொல்லுவாள் ஓ! மன்னர்கள் போற்றும் மன்னா! ஒரு நாள் சதானந்தர் கண்ணுவரை யடைந்து இம்மங்கையாரென வினவ அது போது கண்ணுவர் சொல்லத் தொடங்கினார் ஓ! சதானந்தரே! விசுவாமித்திரர் ஐம்புலன்களையு மடக்கி பேரின்ப மாகிய் மயமாக அகோரமான தவமியற்ற அத்தவத்தினெழுந்த அக்கினிவாடையானது மூவுலகினையும் தகிக்க அதைத்தாளாது தேவர் கோன் முபத்திமுக்கோடி



தேவர்களையுப், நாற்பத் தெண்ணாயிரம் முனிவர்களையும் மற்று முள்ள, கின்னரர், கிம்புருடர் முதலிய ஏனையோரையும் அழைத்து இவ்வாறு தகிக்கும் அக்கினிவாடைக்கு காரண மென்ன வென்று வினவ. அங்குற்ற யாவரும் ஒருமித்து தேவேந்திர பூபா! இந்த அக்கினி வாடையானது இமயமலைச் சாரலில் விசுவாமித்திரர் தவம் செய்கின்றார் அத்தவத்தின் எழுந்த அக்கினிவாடையே இங்கு சாறுகின்றதென, தேவராஜன் விளம்பு வான் நீங்களே இதற் கொரு உபாயம் தேட வேண்டு மென, முனிவரும் தேவர்களும் சொல்லுகிறார்கள் ஓ! தேவபூபா! மற்ற முனிவர் போன்றல்ல பிரம சிருஷ்டிக்கு எதிர் சிருஷ்டி செய்யும் வல்லமை புடையவர். அவர் தவத்தை, அழிக்க நாமெல்லோரும் ஒன்று கூடி பிரயாசை படினும் முடியாது. இவன் தவத்தை அழிக்க ஸ்திரீகளே காரணராவார்கள் ஆதலால் மேனகை என்பவளை யழைத்து ஏவினால் அவன் தவத்தை யழிக்கலா மென்று சொன்னார்கள்.

அது கேட்ட தேவேந்திரன் மேனகையை யழைத்து ஆகவேண்டிய விஷயத்தைச் சொல்ல, அவளும் ஆயத்தமாக சென்று கௌசிகர் முன்னால் போய் நின்றாள் அது போது பஞ்சபாணங்களையுடைய மாரன் தன் கரும்பு வில்லில் பாஞ்சபாணங்களை முறையே பூட்டி அவர் மேல் வீசினான் வீசிய அளவில் விசுவாமித்திரர் தவநிலைகளைந்து விழிதிறக்க ஆடம்பர அலங்கிர்தத்துட னிருந்த மேனகையை கண்டு காம பித்துக் கொண்டு அவளையணுக, அவளும் பல சாக்கு போக்கு பேசி முடிவில காம லீலா விநோத கிருத்தியத்தி லீடு பட்டனர்.

அவ்வாறு விசுவாமித்திரரும், மேனகையும் மனமொருமிக்க நான் பிறந்தேன் என் தாய் தெய்வப்பெண்-

ளுகையால் என்னிடம் அன்பு பாராட்டாது என்னை விட்டகன்றான். விசுவாமித்திரர் முழுதுந் துறந்த முனிவராதலால் அவருக்கிசைந்தவாறு அவரும் நடந்தார் பின்னர் எனக்கு சூரி வெப்பத்தால் இன்னல் நேராதவண்ணஞ் சகுந்தலை பக்ஷி கார்த்து அது வழியே கண்ணுவர் அவரென்னை எடுத்து வளர்த்ததாக சொல்லக் கேட்டேன் என பணித்தாள். அது கேட்ட மன்னன் தன் கருத்தை வெளியிட அதை அறிந்த மாதும் தம் கருத்து நிறைவேறியதென ஒரு வாறு தேறியிருக்கும் போது துஷ்யந்தன் சொல்லுவான் பெண்ணே! நீயும் ராஜ ரிஷியாகிய விசுவாமித்திரரின் மகள் யானும் இராஜ வம்சத்தை சேர்ந்தவன் என்று சொல்லி கணையாழியை அவள் கரத்தில் மாட்டி அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே பட்டமளிப்பதாக வாக்குறுதி செய்து கொடுத்தான் பின்னர் இருவரும் காமக் கவலையை ஒழித்தனர். துஷ்யந்தன் சகுந்தலையை நோக்கி பெண்ணே நான் எனது பட்டணம்போய் உன்னை கௌரவ முடனழைத்துக் கொள்ளுகிறேன் என்று இன்னும் சிலவார்த்தைகள் சொல்ல சகுந்தலையும் பிரிய மனமின்றி விடை பணித்தாள். துஷ்யந்தனும் தந்நகரடைந்தனன் சகுந்தலையும் அவன் பாலே மனதை ஓட்டினள்.

இது இவ்வாறிருக்க கண்ணுவமா முனிவர் சதா நந்தருடன் சொன்னவர் திரும்பி வந்து சகுந்தலையின் மாற்றங்களால் அங்கு நடந்த விஷயங்களை அறிந்துக் கொண்டு சகுந்தலையை நோக்கி குழந்தாய் இங்கு நடந்த விஷயமனைத்தும் விளங்கி விட்டன இது பற்றி நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை என பணித்தனர் இப்படியே சில காலம் ஓடின சகுந்தலை பத்து மாதமுங் கடந்து ஓர் ஆண்மகவை யீன்றனள். கண்ணுவ மாமுனிவரால் கபச்



சடங்குகள் யாவும் கிரமமாகச் செய்து முடித்து அக்குழவிக்கு "பரதன்" என நாமம் புனைந்து ஐந்து வயதிற்கு மேல் கல்வியும், வில்வித்தைகளும், ஆனை யேற்றம் குதிரையேற்றம் முதலியவைகளும் நன்கு பயிற்றுவித்து வளர்த்து வந்தார்கள் பரதனுக்கு வயது 13 ஆகியது அப்போது சகுந்தலைக்கு சிலபுத்தி மதிகள் சொல்லி தன் சீடர்களை யழைத்து பரதனையும் சகுந்தலையையும் அத்தினாபுரிக்கு அழைத்துப் போய் துஷ்யந்தனிடம் விட்டுவாருங்கள் என சீடர்களும் அவ்வாறே அழைத்தேகி ராஜன் முன்னிலையில் விட்டு வந்தார்கள். அப்போது துஷ்யந்தன் சகுந்தலையை நோக்கி ஓ! பெண்ணே! நீயார்? உன் பெயரென்ன? உன்னருகி லிருக்கும் இச்சிறுவனார்? இச்சபைக்கு வரவேண்டிய காரண மென்னவென சகுந்தலைத் திடுக்கிட்டு வணங்கி மன்னவா! நான் சகுந்தலை இச்சிறுவன் உமது புத்திரன் என்று எல்லா விஷயமும் விபரமாக எடுத்துச் சொன்னாள் அது கேட்டு அரசன் மறுத்து கடுமொழி பகர சகுந்தலை மனவருத்தம் கொண்டு மனம் வெதும்பி முன்னம் சாக்ஷி வைத்த பூமாதேவியும் ஆகாய வாணியும் எங்கொளித்துள்ளாரோ? என்மனங் குழைந்து ஓடி எடுத்து வைக்கும் போது. கேட்டோர் அஞ்சி நடுநடுங்கும்படி பேரிடி போன்ற சத்த முண்டாகி ஆகாய வாணி அந்தரத்தி லிருந்த படியே ஓ! அரசனே! இந்த சகுந்தலை மகா பதி விரதை ஆதியில் நீர் இவளை கூடும் போது என்னையும் பூமா தேவியையும் சாக்ஷி வைத்தீர். இராஜ சபையில் அவள் கூறியதுமுற்றம் உண்மை இதோ! அருகிலிருக்கும் பரதனே உனது புத்திரன். இவனே உன் பட்டத்திற் குரியவன் ஆகையால் நீ இவர்களை ஆதரி என பணித்து மறைந்தது. ஆகவே இச்சகுந்தலையின் கற்பு எத்தனை சிறப்புடைத்தென சொல்ல வேண்டியதில்லை.

பின்னர் தன்பக்தன் சுருக்கலையையும், பாதனை ஏற்றுக் கொண்டு பாதுகைக்கு இளவரசு பட்டங் கட்டினான்.

பக்கம் 175 முதல் 188 வரை இல்லை

## 18 - காரைக்காலம்மையார் சரித்திரம்.

———*:*———

காரைக் காலிலே வைசியர் குலத்திலே தன தத்தன் என்பவனொருவ னிருந்தான் அவனுக்கு புனிதவதியார் என்னொரு புத்திரி பிறந்தார். அத் தன தத்தன் தன் புத்திரியை நாக பட்டணத்தில் நீதிபதி என்பவருடைய குமாரன் பரம தத்தனுக்கு மணஞ் செய்வித்தனர். தனக்கு வேறு மகவு இல்லாததினால் மருகனையும், மகளையும் தன் வீட்டுக் கடுத்த படியே குடியேறச் செய்து அளவிறந்த செல்வ மீந்தான். பரம தத்தன் அச் செல்வத்தை நாளுக்கு நாள் பெருக்குவதானான். புனிதவதி யாருக்கு பரமசிவன் திருவடிகளினை அன்பு பெருக பெருக தம் மில்லத்தில் வரும் சிவனடியார் கட்கமுதூட்டி வேண்டுவன அளிப்பள். ஒரு நாள் பரம தத்தனுக்கு ஒருவர் இரு மாம்பழங்களை கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை வீட்டிற் கனுப்பி விட்டான்..

அது போது புனிதவதியாரில்லத்தை நாடி ஒரு சிவ னடியார் பசிப்புடன் வருந்திய வண்ணம் வந்தார். அவ் வடியாரின் நிலைமையை புணர்ந்த புனிதவதியார் கலத்தை வைத்து சோறு படைத்து, அச்சோற்றுக்கு கறி யமுது பாகம் செய்யப் படாமையால் தம் கணவன் அனுப்பிய

பக்கம் 175 முதல் 188 வரை இல்லை



ஆச்சரிய மடைந்தார்கள் அங்கிருந்த சிவ யோகியை காணாததால் மயங்கி நின்றார்கள் அதுபோது பரமசிவன் பார்வதி சமேதராக ரிஷபாரூடராய் ஆகாயத்திலேத் தோன்றி யருளினார் அதுகண்ட அடியவரும் கட்டுவாயம் மனும் பூமியிலே விழுந்து நமஸ்கரித்து நின்றார்கள் அது போது பரமன் அவர்களை நோக்கி அன்பர்களே எக்காலத் தும் இவ்விளமை நீங்காமல் நம்மிடத்தில் இருங்கள் என்று சொல்லி மறைந்தார் கட்டுவாயம்மனின் கற்பின் மாட் சிமையால் அடைந்த அருளேயிதுவா மென்று அனை வரும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

———

## 22 சாரதை சரித்திரம்.

———:*:———

காசி என்னும் க்ஷேத்திரத்தில் தனபாலன் என் றொரு வணிக னிருந்தான். அவன் மனையாட்டி கருப்பத் தில் அருமையாகப் பெற்று வளர்த்தெடுத்த பெண்மக ளென்னும் சாரதை யென்பாள், கற்புடைமை வாய்ந்த புண்ணியவதி வயற்றில் பிறந்த விற்பன மங்கையாகும். இவள் இளமையி லிருந்தே செல்வப் பெருக்கில் வளர்ந்த செல்வியாகும். தன் தாயார்பாலும் தந்தைபாலும் இடை யிடையே கல்வி கேள்வி விசாரணைகளை நன்கு சொல்லக் கேட்டவளாகும். அத்தகைய செல்வச் சிறுமி மங்கைப் பருவ மடைந்திருந்து விதிவழிப்படி கங்காதர புரத்தில் ஒரு வணிக சிரோமணியாகிய ஞானசன்மனுக்குத் திருக் கல்யாணஞ் செய்துக் கொடுத்து சர்வ ஸ்திரீ தனத்துடன் புருஷனோடு அனுப்பலானார்கள்.

தன்பதியோடு செல்லப் போகும் தனது செல்வப் புதல்வி அன்னையையுந் தந்தையையும் அடிவணங்கி, சதிபதி இல்வாழ்க்கைக் குரிய விதி விளக்குகளையும், நான் கடைத்தேறும் மார்க்கத்தையும் எடுத்துரைக்க வேண்டுமென வேண்டினாள். அப்போது தாயாகிய புண்ணியவதி மகளை நோக்கி, அம்மா! எனது கண்மணீ! நான் சொல்வதைக் கவனமாக கேட்பாயாக வென்று சொல்ல ஆரம்பித்தாள்.

அதாவது உலகத்திலே பெண் ஜெனன மெடுத்த ஒவ்வொருவரும் தமது பாலியப் பருவமுதல் விருத்தாப்பியம் வரைக்கும் பதிவிரதத்தை ஆசரிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். புருஷனுக்கு எப்படி பிரமசாரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசித்துவம் ஆகிய நான்கு ஆச்சிரமங்கள் ஏற்பட்டிருக் கின்றனவோ, அப்படியே பெண்களும், பாலியத்தில் மற்றொரு புருஷர்களிடம் சேராமலும், பரிகாச வார்த்தை யாடாமலும், தனக்கு வேண்டிய ஞான சம்பாதநியத்தைத் தன் தாய்தந்தைகளிடத்தில் கல்வி, கேள்விகளினாலும், வீட்டிற்குரிய தொழில்களினாலும் விருத்தியடைந்து வரவேண்டியதே பிரமசாரியமாயும்; மங்கைப்பருவத்தில் தாய் தந்தையரால் தேடிய புருஷனைத்தவிர, அண்டை அயல் வீட்டுப் புருஷரை ஏறெடுத்துப் பாராமல் தன் பதிக்குரிய ஏவற்றொழில் செய்தும், அதிதி முதலியவர்களை யாராதித்தும், அன்போடு தான தருமஞ் செய்தும் வருவதே கிரகஸ்தமாயும்; இல்லற தருமத்தை கணவனுக் கொத்து நடந்து வந்த சில காலத்துக்குப்பின், மோக்ஷார்த்தத்துக்காக முயலும் கணவனுடைய சிசுருஷையை இலக்ஷியமாகக் கொண்டு, கணவன் செய்யுந் தீர்த்தயாத்திரை, வனங்களிலும், மலை



களிலும், ஊர்களிலும், ஜெகதீசன் திருக்கோயில் கொண்டிருக்கும் திவ்யதேச சேவை முதலியவைகளைச் செய்து வருவதே வானப்பிரஸ்தமாயும்; கணவனுடைய முதுமைப் பருவத்திலேனும், கணவனை யிழந்த பின்னேனும், அக்கணவனையே பதி, தெய்வமென்று தியானித்து காலங் கழிப்பதே சந்நியாசித்துவமாயும் நன்றாக விளங்குகின்றன.

இவற்றால் பெண்களுக்குப் பதியைத் தவிர தெய்வம், பந்து, மித்திரன், வேறில்லை யென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன, பெண்கள் புருஷனிருந்தாலும் பிரிந்தாலும், இறந்தாலும் வேறொரு இச்சையுங் கொள்ளத் தகாது; ஒரு புருஷனை யடைந்த பெண் மறு ஜெனனத்திலும் அப்புருஷனை யடைய வேண்டியதே பதிவிரதையின் பிராப்தி யாகையால் வேறு கணவனை நாடக்கூடாது. அப்படி நாடினால், மிருக மாகப் பிறந்து பலபேர் பரிகாசிக்கவும், காரியுமிழவும், ஆடு, மாடு, நாய், கழுதைகளைப் போல் கூடித்திரிவார்கள். இப்படி யிழிவான ஜென்ம மெடுப்பதைக் காட்டிலும், பிறவியில்லாத மோக்ஷ பேரானந்தத்தை யடைவது எவ்வள சுகிர்மாகும். அற்ப ஆசையால் வருங் கஷ்டங்கள் எவ்வளவுக் கதிக மென தன் தனக்கே நன்கு உணரலாம்.

இவைகளை யெல்லாம் நீக்கவும், நன்னெறியை யூட்டவும், முற்காலத்தி லிருந்தவர்களான சீதை, சந்திரவதி, தமயந்தி, சாவித்திரி, நளாயணி, சபிப்பியை முதலிய அநேக ருஷிராஜ பத்தினிகள் பதிவிரதா தருமத்தை அநுஷ்டித்துக் காட்டினார்கள். அவர்கள் பதிவிரதா தருமத்தை யடைவதற்காக எவ்வளவோ கஷ்டத்தை யடைந்

தார்கள். பதியின் தருமத்தை யடைய வேண்டுமானால் சுகதுக்கங்களையும், தைரியத்தையும், பலத்தையும் அடையவேண்டியதாய் இருக்கின்றது, அப்படி தருமத்தைக் கஷ்டப்பட்டு நாம் காப்பாற்றினால் நம்மை அத்தருமம் காக்கும்.

ஆனது பற்றி, சீதா பிராட்டியார் இராவணன் கையில் சிக்கிக் கொண்ட போது, தன்னுபகனை ஸ்ரீராமனைத் தவிர வேறே நினைவின்றி தன்ஜீவனைக் காபாற்றிக் கொண்டிருந்தாள். சந்திரவதி தன் புருஷன் பட்ட கடனுக்காக தான் ஒரு பிராமணனுக்கு அடிமையாகிக் காப்பாற்றினள். தமயந்தி சூதினால் நாடு நகரந்தோற்ற தன் புருஷனுடன் காடு திரிந்து, புருஷனை விட்டுப்பிரிந்து படாதன பட்டாள். சாவித்திரி தன் புருஷன் உயிர் விட்ட பொழுது, எமனைக் கண்டு தன் புருஷனுயிரையும், மாமனாரிழந்த செல்வங்களையும், தகப்பனார் நூறு புத்திரர்களைப் பெறவும் வாதாடிப் பெற்றாள். நளாயனி குஷ்டரோகியாகிய தன் புருஷனுடைய தாசியைச் சேரும் பொருட்டு அவளுக் கடிமை செய்து, அவன் மனதிணங்க வைத்தும், தன் புருஷன் உயிர் போகவும், தான் அமங்கலியத்தை யடையவும், ஒரு ரிஷியின் சாபத்தைத் தன்னுடைய பிரதி சாபத்தினாற் போக்கியும் பதியுடன் வாழ்ந்திருந்தாள். சயிப்பியை யென்னும் ராஜபத்தினி தன் புருஷனுக்கு நேர்ந்த விரதபங்கத்தினால், மறு ஜென்மங்களில் நரியாகவும், கரியாகவும், செந்நாயாகவும், கழுகாகவும், நாகமாகவும், கொக்காகவும், மயிலாகவும் பிறந்து துன்பமடைந்த காலத்தில், தான் காசி ராஜனுக்கு மகளாகப் பிறந்து, அப்போதைக் கப்போது திவ்ய ஞானத்தை யூட்டி, ஜனகராஜனுக்கு மகனைப் பிறக்கச் செய்து, தான்



அந்த கணவனையே சுயம்வரக் காலத்தில் புருஷனாக அடைந்து இருவரும் புண்ணியலோகத்தை யடைந்தார்கள். இப்படி அநேக பதிவிரதைகள் கஷ்ட மடைந்தது கணக்கில்லையாகும், ஒவ்வொரு பெண்களும் எவ்வளவு கஷ்டம் நேர்ந்த போதிலும் பதியையே நன்கு மதித்து இன்புற்று வாழவேண்டும், இதுவே உனக்கு பேருபதேசமாகும் எவ்விதத்தாலும் கற்பைக் காப்பாற்றுதலே உனக்கு வேண்டிய சுகதுக்க நன்மை தீமைக்கு வழிபடு மார்க்கம் என்று சொல்லி ஆசிகூறி அனுப்பினார்கள்.

அப்பால் சாரதை புருஷனுடன் கொழுநன் அகம் வந்து குடும்பம் நடத்தலானாள் அவ்வாறு நடந்து வருங் காலத்தில், இவளுக்கு வாய்க்கட்ட நாயகனோ ரொம்பவும் மூர்க்கன், எவர் வார்த்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். எது ஒன்றும் முன் பின் பாராமல் நடப்பவன். கோபத்தில் துருவாச முனிவரென்றே சொல்லலாம், அதோடு கைச் சேஷ்டையிலும் வீர முடையவனாகும். இவை யனைத்துக்கும், தாய் உபதேசப்படி மனம் பொருந்து வருவதோடு, அவனுக்கிணங்கியும், மறுமொழி கூறாமற் படியும் நடந்து வருவாள். அத்தகை மகா கொடியவன் அடங்க மாட்டாதவனென்றால் அவனைப் பற்றி நாம் என்ன சொல்லக் கூடும்.

இப்படி நடந்து வரும் போது இவள் நாயகனுக்கு மூத்த சகோதரன் ஒருவனுண்டு. அவனாலே அந்த குடும்பம் ஜீவித்து வருவதாயிருந்தது. ஆனால் வரன் முறை தவறிய காமுகனானபடியால், இவன் தம்பி மனைவி தனக்கு தனயாள் என்றுங் கவனியாது, அடிக்கடி இவளையே உற்று நோக்குவதும், சரசவார்த்தைக் கூறுவதும்,

கலகிக்கு அழைப்பதுமாயிருந்தான். இவளும் மூத்தார் என்பவர் அண்ணன் தகப்பன் போலல்லோவென்று, தக்க நீதி வார்த்தைகளைச் சொல்லியும் கேளாதவனாயிருந்து எந்த விதத்திலும் இவளை கற்பழிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மனதில் பதித்து விட்டான். அவன் எத்தனை சொல்லியும் கேளாத மூத்தாருக்கு இன்னம் என்னத்தான் எடுத்துச் சொல்லுவாள் முகத்திற்கு அஞ்சி மூத்தாரிடம் போனால் குலத்துக்கெல்லாம் யீனமல்லவோ அரைக்காசுக்குப் போன கற்பு ஆயிரம் வராகன் கொடுத்தாலும் வருமா? வராதே இந்த சிறிய பெரிய சமாச்சாரத்தைப் புருஷனிடம் அறிவித்து விட்டாலோ உடனே உயிரே போய் விடும். அப்போது எத்தனை உயிர் போமென்று யாருக்குத் தான் தெரியும்?

இவ்வாறு தினத்தொந்தரையோடு தினமும் நிகழ்ந்துவர ஒரு நாள் புருஷன் இல்லாத நல்லிருள் வேளையில் தனியே இருக்கும் போது இவளிடம் வந்து, பெண்ணே! என்னை நீ நெடுநாளாய் ஏமாற்றி வருகிறாய்! இப்போது இங்கே உனக்குத் துணையாக ஒருவருமில்லை உன்னால் என்ன செய்யக்கூடும்? என்று தாவி துராக்கிரப் புணர்ச்சிக்குப் பிரவேசிக்க, இன்னும் அவள் மீது இவன் அவ்தம் படுவதற்குச் சுமார் ஒன்றிரண்டு ஜான் நீளமிருக்கும். அத்தகைய ஆபத்து சமயத்தில் என்னதான் செய்யக்கூடும்? என்னதான் கருதக்கூடும்? அப்போது ஒன்றுந் தோன்றாதவளாய்த் தன்னை மறந்தவளாய், பதிபக்தியை மனதில் பதிந்தவளாய், அடிசாய்ந்த மரம்போல் சாய்ந்து விட்டாள். அப்போது பெருமழை பிடித்து இடி மழையாக பெய்யும் சமயமானதால் இவளது கற்பின் மகத்துவத்தை முன்னிட்டும், இத்தகை ஸ்திரிகள் மகா பாதகர்களுக்கு தண்டனை விதிக்கும் பொருட்டும் ஒருயிடி இவன் மீது விழுந்து உயிர் மாண்டான். இவளும் அதனால் மீண்டவளாகினாள் அப்பால இவளும் தான் பதிபக்தியால் தீய நடை நாயகனை சீர்திருத்தஞ்செய்து, சுகபோக இன்பவாழ்க்கை நடந்து வாழ்ந்தார்கள்.



பின்னே! சல்லமாதேவியும் கணவனுரை தவறாது ஜங்கமரிடம் சென்று பார்க்க அவர் துயில்வதைக் கண்டு பலவிதத்தும் அவரை எழுப்ப எழுவதை காணாது அவர் மீது விழுந்து ஆலிங்கனஞ்செய்ய எத்தனிக்கையில் பரமன் சிறு குழவியாய் அழ ஆரம்பித்தார். இவ்வழுகுரல் கேட்டு மன்னன் உள் நுழைந்து குழந்தையை ஆவலுடன் எடுக்கப் போகையில் குழவியாகிய பெருமான் மறைந்தருளினார். அதுகண்ட மன்னனும், சல்லமாதேவியும் மனமிகவாடி ஈசனை பலவாறு துதிக்கும்போது பரமசிவன் உமாதேவி சமேதராய் விடையாரூடராய் ஆகாயத்தில் தோன்றி ஓ! பக்த குழாங்களே! நீவிர் கவலையுறல்வேண்டா நாமே உமக்கும் சேயாகியதால் உமக்கு பின் இறுதிப்பணியனைத்தும் யாமே செய்வோம் ஆகையால் நீவிர் இன்னும் சிலகாலமிருந்து ஆட்சிபுரிந்து நமபதிக்கு வந்து சேரக்கடவீர். என பணிந்து மறைந்தருளினார். மன்னன் இருமனைவியுடன் சின்னாட்டாட்சி புரிந்து கிடைத்தற்கரிய பேரின்ப பதவியையடைந்தார்கள். ஈசன் அருளியபடி மன்னனுக்கு இறுதிப்பணிகள் செய்து முடித்தார். தற்போதும் சிரார்த்தம் செய்து வருகிறார்.

# 23. கௌரி நாயகி சரித்திரம்.

—*:*—

மதுரையப்பதியிலே விரூபாக்கன் எனும் வேதியன் ஒருவனிருந்தான். அவன் சைவசமயத்தைச் சார்ந்தவன் அவனது பத்தினி சுபவிரதை. இருவரும் பரமசிவனருளால் இல்லறம் நடாத்தி வந்தனர். இவ்வாறிருக்குங்காலத்தில் புத்திரப்பேறின்றி ஆண்டவனை வேண்டி பலவிதமாக தோத்தரித்தனர் அவர்களின் பக்திக்கு இறங்கிய பரமன் ஓர் பெண் மகவை யீந்தனர். அவ்வாறு ஈஸ்வர கிருபையில் யீன்ற அக்குழவிக்கு "கௌரி" என நாமகரணஞ்சூட்டி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தார்கள். வயதும் ஐந்து கடக்கலுற்றது, அதுபோது "கௌரி" யானவள் தந்தையை விளித்து இம்மானுட தேகம் ஈடேறுவதற்கு மார்க்க மென்னவென்று வினவ, அதுகேட்டு தந்தை அதிசயமுற்று ஆனந்த மடைந்து "கௌரி" பூஜையை உபதேசித்தருளினர். அவ்வுரைப்படி கௌரியானவள் சதா கௌரியின் மந்திரத்தையே உரைத்து கடவுள்பத்தி மேலிட்டு வந்தாள்.

இவ்வாறிருக்கும் கௌரிக்கு இராணு பனிரெண்டவயதாவது மணப்பருவமுற்ற கௌரியை அங்கு யாசித்ததற்கு வந்த ஓர் வைணவ பிராமணனுக்கு அவனுடைய சுற்ற முதலியவர்களுடைய அநுமதியின்றி விவாகம் செய்வித்து புருஷனுடன் மனைவியையும் கூட்டி கௌரியின் பக்கம்போக விடை யளித்தனர். இச்சேதி ஊரார் பலரும் அறிந்து விரூபக்கன் செய்கைக்கு இறங்கியும் இகழ்ந்துமினர்.



இவ்வாறு வரும் மணமகனின் தாய் தந்தையர் ஒவ்வொரு வீட்டிலும் சென்று யாசித்து புசித்துக் கொண்டிருந்த தன் மகன் மனைவியுடன் வருகின்றானென்று பார்க்க மணமகள் சைவமத பாவையாக இருந்ததைக்கண்டு அவனையும் அவளையும் தனித்து விட்டு வீடுகளைப்பூட்டி தம் சுற்றத்தார்களிடம் சென்றார்கள். "கௌரி" யானவள் சைவநெறி பிசகாது சதா பரமசிவனது குணவிசேடங்களை புன்னி புன்னி அவனது அருட்செய்கையை விதந்து சித்தித்துக் கொண்டிருந்தாள். அதுகண்ட பரமசிவனர் அவளது பக்திக்கு இறங்கிவிருத்த சந்நியாசி வேடந்தாங்கி கௌரியிருக்குமிட மணுகவாக்கண்ட கௌரி விரைந்தெழுந்து அப்பெரியாரையணுகி உபசரித்து அமரச் செய்து இவண் அண்மிய விடயமாதென, விருத்தவேதியர் சொல்லுவார் ஓ! பெண்கள் நாயகமே! எனக்கு பசியதிகமாக இருக்கிறது ஆகவே போஜனம் செய்துப்போடுவாய் என்றார்.

அவ்வார்த்தையை கேட்ட 'கௌரி" மனங்கசிந்து என் ஆண்டவன் போன்றவரே! அமுதுபடைக்க யாதொரு தடையுமில்லை. சாமகிரியங்களுள்ள விடுதியை பூட்டப்பட்டிருக்கின்றதே என்ன செய்வேனென. குழந்தாய் நீ யாதொன்றுக்கு மஞ்சாதே நீ சென்று பூட்டப்பட்டிருக்கும் கதவின்மீது உன்கத்தை வைத்தால் உடனே திறக்குமென்று பணித்த மொழிகேட்டு மங்கை அவ்வாறே கதவை கரத்தால் தீண்ட கதவும் திறந்தது. உடனே சமையலுக்கு வேண்டிய சாமக்கிரியங்களால் சமைத்து வயோதிக வேதியருக்கு அமுது படைத்தாள் விருத்தாப்பிய வேதியரும் அமுதை வாழினிடமாக எடுத்து புசிக்க யத்தனிக்க கை வாயில் படாமல் முகம், மூக்கு கண்களில்,

படக்கண்டவனிதை தானே அமுதை பிசைந்து விருந்தாப்பியருக்கு ஊட்ட புசித்த வயோதிகர் குமார பருவமடைந்தார்.

இவ்வாறு குமார பருவமான கடவுளைக் கண்டஞ்சி நடு நடுங்கி விரைந்தெழுந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றான். அதுபோது குமாரபருவ மடைந்த பரமசிவனானவர், சிறு குழந்தை பருவமாகி தாய்விட்டு பிரிந்த குழந்தைபோன்று அழத்தொடங்கியது. அது காலை சுற்றத்தார் வீட்டிற்கு சென்ற மாமன் மாமியும் இல்லம் நாடி வந்தார்கள். அதுபோது குழந்தையும் கையுமாக இருந்த கௌரியைநோக்கி இக்குழந்தை ஏதென்று கேட்க, அதுகேட்ட கௌரியானவள் அடுத்த வீட்டிலிருக்கு தேவதத்தனது மனைவியார் இக்குழந்தையை பார்த்திருக்கும்படி சொல்லிப் போனாள் என்றான் சைவதைக் கொள்கையை யுடைய அவனது மகளுக்கு அன்புகாட்டிய நீயும் எமக்கு ஆகாதென்றுச் சொல்லி குழந்தையையும் கௌரியையும் அவர் வீட்டை விட்டு வெளி துரத்தினார்கள். *

தாயில்லாப்பிள்ளையை மடியில் வைத்துக் கொண்டு மனம் வெதும்பி பரமசிவனை தொழுது கண்ணீர் சொரிந்த வண்ணம் வீதியில்வர அதுபோது மடியிலிருந்தக் குழவிக் காணாது மறைந்தருள உடனே ஆகாயத்தினிடத்து அக்குழவி உமாதேவி சமேதரிஷியாரூடராய் எழுந்தருளியதைக் கண்டு சாட்டாங்கமாக கீழேவிழுந்து அஞ்சலிசெய் ஆனந்த பாஷ்யம் வழிய மெய்மறந்து உள்ளங்குளிர

* வைணவ மதக்கொள்கையார் கவனிக்க சைவத்தின் மேன்மை நன்கு விளங்கும்.



பாடி ஸ்மரித்தாள் அதுகண்ட பரமசிவன் தன்னருட்பிரகாசத்துட் ஆட்கொண்டருளினார்

---

## 24 = இயற்பகை தேவி சரித்திரம்.

—*:*—

சோழமண்டலத்திலே காவிரிப்பூம் பட்டணத்திலே வைசியர் குலத்திலே குருலிங்க சங்கம பத்தினிகளின் சிறந்தவரும், ஔதாரியம் உள்ளவருமாகிய இயற்பகையாரென்பவர் ஒருவரிருந்தார் அவர் இல்லறத்திலிருந்து விபூதி, உத்திராக்ஷம் தரிசித்த சிவபக்தர்களுக்கு அவர்கள் விரும்பிய வண்ணம் வேண்டுவன அளித்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள் பரமசிவனானவர் அவ்வியற்பகையார் அடியார்கள் விரும்பியவை யாவையேனும் அவற்றை மாறாது கொடுத்தலைச் சகலருக்கும் புலப்படுத்தும்படிக்கு ஒரு பிராமணவடிவந் தாங்கி விபூதி திருமேனியில பிரகாசிக்க விட புருடவேடந் தோன்ற அவர் வீட்டுக்குச் சென்றார்.

இயற்பகையார் அன்போடு அவரை எதிர்கொண்டு அழைத்து போய் உபசரித்து அதனைமீந்து வணங்கி சுவாமி! தேவரீர் ஈண்டு எழுந்தருளிய விடயமேதென்று வினவ, அதுகேட்ட விட புருடவேடந்தாங்கிய பரமசிவனார் சொல்லுகின்றார் ஓ! பக்திபிற்சிறந்த உத்தமா! சிவனடியார்கள் கேட்பனயாவை யாவையெனினும் அவைகளை மாறாமல் மகிழ்ச்சியொடு மாறாமல் மகிழ்ச்சியோடு கொடுத்தலை நான் கேழ்வியுற்று உம்மிடத்திலுள்ள ஒரு பாருளை விரும்பி இன்று இங்குவந்தேன். நீர் இதற்கு

இசைவீராகில் அந்தப்பொருள் இன்னதெனச் சொல்வேனென்றார்

அதற்கு இயற்பகையார் எப்படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்திலிருக்குமாயின் அந்தப் பொருள் நமது கடவுளாகிய பரமசிவனடியார்கட்கு உரிய பொருளேயாம் இதைக் குறித்து தேவரீர் சந்தேகிக்க வேண்டுவதில்லை, திருவுள்ளம் விரும்பியதை இன்னதென்று சொல்லியருளும் என்று சொல்ல ஐயர் உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன் என்றார்

அதுபோது இயற்பகையார் முன்னைப் பார்க்கிலும் அதிக அகமகிழ்ச்சிக்கொண்டு வணங்கி தேவரீர் அடியேனிடத்தில் உள்ளம் பொருளையே விரும்பிக்கேட்டது அடியேனுடைய பாக்கியம் என்று சொல்லி, சீககிரமாகச் சென்று உள்ளே யிருந்த கற்பிலே சிறந்த தம்முடைய மனைவியரை நோக்கி நான் இன்றைக்கு உன்னை இந்தச் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டேன் என்றார், உடனே மனைவியார் மனங்கலங்கிப் பின்னை தெளிந்து பிராணநாயகரே நீர் கட்டளையிட்டது எதுவோ அதையே நான் செய்வேன் அதையன்றிச் செய்வதற்கு உரியகாரியம் எனக்கு வேறொன்று உண்டோ இல்லை என்று சொல்லி அவரை வணங்க, அவர் தமது மனைவியாரை அங்குவந்த சிவனடியாருக்கு மனைவியாக பற்றி வணங்கினார். அவரும் அதை பெற்றக் கொண்டார். பின்னும் இயற்பகையார் சிவனடியாரை நோக்கி இன்னும் அடியேனால் செய்தற்குரிய ஏவலுண்டோவென, சிவனடியார் சொல்லுவார் ஓ! பக்தனே உன் சுற்றத்தார்கள் கண்டால் என்னை இம்சித்து துன்பம் செய்வார்கள் ஆதலால் நான் உன்மனைவியை அழைத்



துப் போகும் பரியந்தம் நீ என்னுடன் துணையாக வரவேண்டுமென நம்பக்தரும் அவ்வாறே வருவதாக ஒப்புக்கொண்டு ஆயுதபாணியாக புறப்பட்டு வந்தார்.

அதுபோது சிவனடியார் இயற்பகை தேவியுடன் முன்னே போக பின்னால் இயற்பகையார் பின்னே போகக் கண்ட உறவினரும் சுற்றத்தாரும் தடுத்தார்கள் பலகுறையாருகள் கூறினார்கள் அதுகண்ட இயற்பகையார் அனைவரிடமும் யுத்தம் புரிந்து அதர அகப்படுத்தி அங்கிருக்கும் ஓர் காட்டினுள் நுழைந்தார்கள் அப்போது சிவனடியார் இயற்பகையாரை நோக்கி நாம் போகலாம் என்று சொல்ல இயற்பகையார் வணங்கி விடைப்பெற்று போக மீண்டும் இயற்பகையாரை கூப்பிட அவர் ஓடிவந்து பார்க்க தேவி இயற்பகையார் மட்டும் அங்கிருந்தார் சுவாமியை காணாது மனங்கலங்கி எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானை நினைந்து தோத்தரித்து வணங்க, அதுபோது முழுமுதற்கடவுளாகிய பரமசிவனார். உமாதேவி சமேதராக ரிஷியாருடைய ஆகாயத்தில் தோன் “ ஓ! பக்தசிகாமணிகளே! நீங்களிருவரும் பெறுதற்கரிய பேரின்ப வீட்டை யடைந்து சந்தோஷமாக இருங்கள்” என்றருளி மறைந்தருளினார். இயற்பகையாரும் தேவியாரும் பேரின்பவீட்டை யடைந்து இன்ப மனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் யுத்தத்தில் மாண் யாவரும் வானுலகத்தை யடைந்து இன்ப மனுபவித்தார்கள்.

# 25 - சல்லம்மாதேவி சரித்திரம்.

வினைக்கு மனவில் பேரின்பப் பதவியை அளிக்கக் கூடிய * "திருவண்ணாமலை" க்ஷேத்திரத்தில் நீதிநெரி தவறாது சிவபக்தியுடன் செங்கோ னடாத்திவந்த 'வல்லாள மகாராஜனுக்கு அளவிறந்த செல்வங்களிருந்தும் புத்திரச் செல்வமில்லாது மனதேங்கி பெருங்கவலையுடன் மதியூகத்தில் மிகுந்த மந்திரியை யழைத்துச் சொல்லுவான் ஓ! மந்திரியாரே! அளவிறந்த செல்வங்களிருந்தும் புத்திரச்செல்வமில்லாததால் இறுதியில் 'புத்' என்னும் நரகத்திற் ஆளாக வேண்டி வருகிறதே என்செய்வேன் இதற்கு ஒரு யோசனை சொல்ல வேண்டுமென மந்திரி சொல்லுவான் ஓ! அரசர்களுக்கரசே! இதற்கோருபாய மிருக்கின்றது அது யாதெனில் நம் கோட்டையின்மீது ஓர் கொடியை நாட்டி யார் எது கேட்டாலும தடையின்றி கொடுப்பேன் வேண்டியவர் வந்து வாங்கிக்கொண்டு போகலாம என்று ஊர் முழுமையும் தண்டோரா போடும்படிச்செய்து சிவபக்தியும் ஆசாரமும் கைவிடாது இப்பெரிய அறத்தைச் செய்வீராகில் தங்கோரிக்கை வெகு சீக்கிரத்தில் முடியும் என்று சொன்னார்

அது கேட்ட மன்னன் அவ்வாறே செய்து முடித்து வந்து கேட்பவர்க்கெல்லாம வேண்டியதை கொடுத்து வந்தான். இப்படியாக நடந்து வரும்போது "திரிலோக சஞ்சாரி" யாகிய நாரதர்படி குபேரனுக்கு பரமன் கட்

வாவி - குளம். * இந்நூலாசிரியர் இயற்றிய திருவண்ணாமலை பாரக்கிரமத்தில் விளக்க பார்க்கலாம்.



டளை யிட்டார். அதுபடியே அளகேசனும் செய்தான். பின் அளகேசனையும் ஒரு வீட்டில் புகச்சொன்னார் அவனும் அப்படியே சென்றான் பின்னர், ஜங்கமர் வேடந்தாங்கிய பரமசிவன் வல்லாள மகாராஜன் கொலுவை நாடிச் சென்றார். ஜங்கமர் வரவை யறிந்த வல்லாளன் எதிர்கொண்டழைத்து உபசரித்து வணங்கி எழுந்து தேவரீர் வேண்டுவது யாது? என ஜங்கமர் சொல்லுகிறார் ஓர் அன்பனே! நாமிருப்பது இமயகிரிக்கு அருகே நமக்கு ஒரு மனைவியாருண்டு. இருபிள்ளைகளு மிருக்கின்றன அவைகளை நீக்கி இம்மார்க்கத்தில் வந்து விட்டேன் வந்த இடத்தில் 'காமபித்து' தலைக்கேறி வாட்டுகின்றது ஆதலால் இன்றிரவுக்கு மட்டும் ஒருபெண் கொடுக்க மாட்டாயா? என்றார் அதுகேட்ட மன்னன் ஓ! போகப் புருஷரே! ஓரிரவுக்கு மட்டு மல்ல எக்காலத்திற்கும் உதவும்படிக்கு ஓர் எவ்வன மங்கையை மணம்புரிவிக்கின்றேனெனக் கேட்ட ஜங்கமர் சப்பனே! (பின்னால் தனக்குத் தகப்பனாகப் பனுவதைக் குறித்து கூறினார் போலும்) நானோ பரதேசி எனக்கு வேண்டும் ஓரிரவுக்கு மட்டு மிருந்தால் போதுமென்றார்

அதுகேட்ட மன்னன் ஏவலாட்களை ஏவி தாசிவீதியிலுள்ள பெண்களில் மிகுந்த பக்தியுடையப் பெண்ணொருத்தியைப் பார்த்து ஓரிரவுக்கு ஓர் ஜங்கமரின் ஆவலை தணிப்பதற்கு என்ன கேட்கின்றார்களோ! அதுபடி தருகின்றோம் என அழைத்து வாவென்றார். ஏவலாளியும் சென்று திரும்பி வந்து சுவாமி! ஒவ்வோர் வீட்டிலும் ஒருவரிருக்கின்றனர்கள் எங்கும் பார்த்தேன் ஒரு வீடாகிலும் காலியில்லை என்றான் அதைக் கேட்ட மன்னன் மந்திரியை நோக்கி அவர்கள் எது கேட்டாலும் கொடுப்ப-

தாக ஒப்புக்கொண்டு ஒரு மங்கையை அழைத்துவாவென்றனுப்பினர். மந்திரிபோய் திரும்பி வந்து மன்ன! அவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் உண்மை தவறமாட்டோமென்கிறார்கள் என்றான் அதுகேட்ட மன்னன் தாமே சென்று தன் ராஜ்யத்தை பூராவும் கொடுப்பதாகச் சொல்லியும் ஒருவரும் இசையாது சத்திய நெறியை தவறாது நிற்பதைக்கண்ட மன்னன் அரண் குறுகி ஆண்டிருந்த தம் பத்தினிகளி லொருவளாகிய சல்லமாதேவியிடம் கூறி துயருற்றான்

மன்னன் துயர் சகியாத மங்கையும் யோசித்து முடிவில் தாமே அவர் கருத்தை நிறைவேற்றுவதாக கூறக் கேட்ட மன்னன் மகிழ்ந்து பெண்ணே! நீபோய் மஞ்சத்திற்குறிய அலங்கிர்தம் புரிந்து ஆயத்தமாயிருவென பணித்து கொலு அண்டி ஜங்கமரை நோக்கி ஜங்கமரே! தங்கருத்தின் வண்ணம் ஒருமடவாரை நியமித்துள்ளோம் ஆகவே நீவிர இவ்வறையில் செல்லுக வென்று அழைத்துச் சென்று மஞ்சத்தி லமரச்செய் வெளிவந்து "சல்லமாதேவியை" அழைத்து அவளுக்கு சில வசனம் சொல்லி அங்கு விஜயம் செய்தார் அதுகண்ட மன்னன் பத்தியுடன் உபசரித்து வணங்கி நிற்க, நாதர் "புத்திர சந்தானத்துடன் மங்களகரமாக இருக்கக் கடவது" என ஆசி கூறி பின் வேந்தனை நோக்கி நீ இப்போது செய்யும் இவ்வறம் யாது காரணம் பற்றியென, மன்னன் சொல்லுவார் ஓ! தவசிரேட்டரே! எனக்கு தங்களாசிர்வாதத்தால் சகலவிதமான செல்வங்களிருந்தும் புத்திரச் செல்வமில்லாது போயிற்று அது பற்றியே இவ்வாறு நிகழ நேர்ந்ததெனக்கேட்ட நாதர் பல மதி புகச்சி விடைபெற்று திரு



வண்ணாமலையை நீங்கி கிளைப்போர்க்கருள் சுரக்கும் நீலகண்டன் வாழும் "கையிலை" யை நாடிச் சென்றார்.

கையிலையைச் சென்றதும் பரமசிவனையும், பார்வதியம்மையையும் வியாபாரப்பாடி துதித்து வணங்கினர். பரமனும் தேவியும் நாதருக்கு ஆசிர்கூறி உலக க்ஷேமத்தை விசாரித்தார் அதுதான் தகுசமயமென்று வல்லாள மகாராஜனின் குறையாட்டிற்கு இறங்கியும் அவன் செய்யும் சவுதத்தையும் வெகுவாய் புகழ்ந்தும் சொன்னார். அதுகேட்ட பார்வதி பரமசிவனை நோக்கி நமது பக்தர்களின் துன்பத்தினை நீக்கி அருள் பாலிக்கவேண்டுமென அருள் சுரந்து மொழிந்தனர். அது கேட்டு பரமசிவன் பெண்ணே! உமாதேவி! நீ யொன்றுக்கு அஞ்சல் வேண்டும் இப்போதே வல்லாள மகாராஜனிடம் போய் அவன் பக்தியை பரிசோதித்து அவன் இன்னிலை தவிர்த்து உன்னிய பதவி யளிப்போமென்று விடையளித்து, அளகாபுரிக்கு தலைவனாகிய குபேரனை மனதில் நினைக்களானார்

அதுபோதே அளகேசன் அவண் அணுகி சுவாமியையும் தேவியையும் வணங்கி அழைகியா மென்னவென்று வினவ, பரமன் சொல்லுவார் ஓ! அளகேசா பூலோகத்தில் திருவண்ணாமலை யென்னும் பதியிலும் வல்லாள மகாராஜனை சோதித்து ஆட்கொள்ள வேண்டும். ஆதலால் நீ எனது சீடராகவும் மற்றைய சிவகணங்களெல்லாம் பக்தகோடிகளாகவும், பரமொரு ஜங்கமராகவும் உருவம்மாறி சொல்ல வேண்டும் ஆதலாம் வேண்டிய அளவு திரவியங்களை எடுத்துக்கொண்டு புறப்படும் என்று கட்டளையிட்டார். அளகேசனும் மற்றைய சிவகணங்களும் அங்கு ஒருமிக்க ஈசன் ஜங்கமராகவும் குபேரன் அவரது சீடனாகவும், சிவகணங்களெல்லாம் ஆண்டிப் ப

தேசிகனாகவும் தோன்றித் திருவண்ணாமலை தாசி வீதியில் வந்தார்கள்.

* தாசி வீதியில் வந்ததும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு ஆண்டிகளையும் விட்டு அவர்க்குரிய கட்டணத்தையும் கொடுத்து விடும்.

---

# 26 - ஹேமமாலினி சரித்திரம்.

:*:

கேவேரியாகும் பட்டினத்தில் சாந்தா னென்றொரு வேலாளன் தனது இல்லாளாகிய ஹேமமாலினியோடு இல்லற தருமம் நடாத்தி வந்தான். இவர்களிருவரும் [illegible] வேடம் தரித்த யாவர்வந்து எது கேட்கினும் இல்லை யெனாது தங்களாலியன்றவரை தருமம் செய்து வந்தார்கள். தாங்கள் ஏழைக்குடும்பமாக இருந்தபோதிலும் அன்னதருமத்தை வெகு சிரேஷ்டமாகக் கருதி நடத்தி வந்தார்கள். அநேகமாயிவர்கள், பயிரிடுங் குடிகளேயன்றி யாதொரு தொழில் வர்த்தகம் செய்து வந்தவர்களல்ல.

இவர்கள் நெடுநாளாய் சந்ததியில்லாதவர்களாய் எல்லாம் வல்ல இறைவனை இடைவிடாது வேண்டி துதித்து வர, அவரது அதிக கிரகத்தால் ஒரு ஆண்மகவைப் பெற்றார்கள். அக்குழந்தையை அன்பு பாராட்டி நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாகவும், பொழுதொரு

* தாசி - என்றால் விபசாரியல்ல, தேவரடியாராகும். உண்மை யறியாதார் தேவடியாள் என்பர்.



மேனி நாளொரு வண்ணமாகவும் வளர்த்து வரும் மூவரும் சுகஜீவியாக வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறிருக்க தங்கள் அருமைக்குமாரனுக்கு சுமார் இரண்டு மூன்று வயது காலம் நேரும்போது சாந்தானென்பவனுக்கு ஜீவிய அந்தியகாலம் சமயம் வந்து விட்டது. அப்போது மனைவியார் தன் புருஷனை நோக்கி, சுவாமி! ஸ்திரீகளுக் கெல்லாம் புருஷனே தெய்வமென்று தொன்று தொட்டு சாஸ்திரங்கள் வழங்கி வருவதோடு, நானும் அவ்வாறே யொழுகி நாமிருவரும், மனோவாக்கு காயங்களில் காயபேதமே தவிர, மற்றபேத மின்றி இல்லறம் நடாத்தி வந்தோம். இதுகாறும், எனக்குத் துணையும், நாயகனும், பணிவிடையும், பக்தியும், இன்னும் கற்புக்கு வேண்டிய இகபர சாஸ்வதமும் நீரே யென்று எண்ணி நடந்து வந்தேன். நீரும் என்மீது கோபம், மனோவிகல்பம் என்பது ஒருபோதும் நினைத்ததே கிடையாது. நானும் அவ்வாறு கிஞ்சிற்றும் நடந்தவளல்ல வென்பது என் மனோசாக்ஷிக்கே சம்மதமாகும். இதுவரையிலும் நடந்தேறி வந்ததை முன்னிட்டு பேசுவதில் பயனென்? இப்போது நடப்பதும், இனி நடப்பதும், இனி நடக்கப் போவதும் முயற்கக் கருதுகிறேன்.

ஓ! என் பிராண தெய்வமே! என் முப்பொட்டும் நீரே முதல்வாயிருந்து, இப்போது இம்மண்ணாட்டை விட்டு விண்ணாடடைந்து மோக்ஷ பூமியில் வீற்றிருக்கச் சென்று விட்டால் உன்னை நம்பி இதுவரையில் பதிபக்தி நடத்தி வந்த என்கதி யெவ்வாறாய்ப்போவது? நான் எப்படி மோக்ஷ மடைவது? யானும் உன்னோடு வருவதற்கு உன்னமு வந்து உத்திரவு கொடுக்க வேண்டும், இதுவினை

யிலும் இணை பிரியாமலிருக்க நாம், இப்போது நீர் அங்
கும் யான் இங்கு மிருந்தாலெப்படி ? பதிவிரதாஸ்திரிகள்
பிராணன் புருஷனுக்கு முன்மோக்ஷத்திலிருந்து தன்நாய
கன் பிராணன் வருகையை எதிர்பார்த்திருந்து, வந்ததும்
அவருக்கு இப்பூமியில் எவ்வாறு பதிபக்தி செய்து வந்
தோமோ அதுபோலவே அவ்விடத்திலுஞ் செய்து
ஆனந்த முற்றிருப்பார்கள் என்று பதிவிரத தர்மம் முறை
யிடுகிறதல்லவா ? இன்னும் கணவர் உயிர் நீங்கியதும்,
உத்தமிகள் அவரோடு அக்கினியில் உடன் கட்டி யேறி
உயிர் நீத்து, கணவன் உயிரோடு தன் உயிரும் இவ்விடத்
தைப் போலவே இணைபிரியாது கூடச்சென்று மோக்ஷபூமி
யிற்போய் போக பாக்கியத்தை யடையவேண்டும். என்
பது வேதத்தின் விதியல்லவா ? இது உமக்குந் தெரிந்த
ஞானந்தானே ? என்று வேண்டினள்

இவ்வருமை வார்த்தைகளைக் கேட்ட சிவானந்தச்
செல்வ பக்த சிகாமணியாகிய நாயகன் மனைவியின் முகத்
தைப் பார்த்து, அவளது பதிபக்தியை வியந்தும், மனத்
துளே ஆசிகூறியும், இரங்கிய மனதினராய், ஆ! என் ஆரு
யிர் காதலி ! உண்மையில் நீ பதிவிரதையே ! பதிபக்தி
நெறி முறை தவறாத பத்தினியே ! நான் ஒப்புக்கொள்ளு
கிறேன். இன்னும் இந்த உலகமும் ஒப்புக் கொள்ளும்.
இதுவரையிலும் நீ செய்துவந்த பதிபக்தி ஸ்திரீகள் பொது
வில் செய்யவேண்டிய கடமையே, நீயும் அதுபோலவே
தான் செய்து வந்தாய், என்னுயிரோடு உன்னுயிரும் பிரி
யவேண்டியதே தான். அவை யனைத்தும் ஒப்புக்கொள்
ளுகிறேன். இப்போது உனக்கு தெய்வமாகிய நான்
சொல்கிறேன் கேள் என்று சொல்லுகிறான்.



பெண்ணே ! மோக்ஷத்திற்கு அதிகாரி நானல்ல,
நானுனக்குப் புருஷனல்ல, நானும் புருஷனல்ல ; நானும்
ஒரு பெண் ஜென்மமே ! இந்த உலகத்திலுள்ள சகல ஜீவ
ராசிகளும் ஸ்திரி ஜென்மமே யாகும் நமக்கெல்லாம் நாய
கனாக விளங்கப் பட்டவன் கடவுள் ஒருவரே யாம் நீயும்
நானும் இன்னும் நாமெல்லோரும் முடிவில் அந்த நாயக
னைத்தான் அடைய வேண்டும். அந்த நாயகன் தான்
லோக நாயகன் அவன்றான் போகநாயகன். அவன்றான்
ஏகநாயகன் அவன்றான் எள்ளுக்குள் எண்ணெய்போலும்,
பாலுக்குள் வெண்ணெய் போலும், உடலுக்குள் உயிர்
போலும், எனக்குள் என்னுயிராகவும், உனக்குள் உன்
னுயிராகவும் இருந்து விளங்கப்பட்டவன். அவனுக்கு
அவன்றான் மோக்ஷங்கொடுக்க அதிகாரமே தவிர, நான்
உனக்கு மோக்ஷங்கொடுக்க அருகனல்ல. இப்படி நான்
சொல்லி வரும்போது ஒருவாறு நீ கவனிக்கலாம். அதா
வது, மோக்ஷமென்பதும் நரகமென்பதும், அவருக்குள்
அவரே, அவராலேயே அடைய வேண்டுவதானால், நாம்
இதுவரையிலும் செய்து வந்த பதிபக்தி வீணே தானென்
றும், வேதத்தின் விதிமுறை பொய்தானென்றும், கருத
லாம் அப்படிக்கெல்லாம் கருதவும் படாது உலகில் உதி
த்தமானிட சரீரமுடைய புருஷர்களுக்கு தெய்வமே தெய்
வமென்றும், ஸ்திரிகளுக்கு நாயகனே தெய்வமென்றும்,
மூடர்களுக்கு கல்லே தெய்வமென்றும் செய்யே தெய்வ
மென்றும், நம்போன்ற மானிடர்களுக்கு மானிட வுரு
வமே எல்லோருக்கும் மானிட உருவமே தெய்வமென்
றும், மிருகாதிகட்கு மிருகாதி புருவமே தெய்வமென்றும்
மற்ற உருவ ஜீவராசிகட்கு மற்ற உருவமே தெய்வமென்று
முதலில் வழிபடு மார்க்கத்திற்கு ஆதியில் ஆன்றோர்களால்
நியமிக்கப் பட்டவைகளால் நிகழ்ந்து வந்து, பிறகே தான்

அதுவே அதுவாய் விளங்கி கோரிய போகபாக்கியத்தை யடையச் செய்யும், இதுவரை யான் சொல்லிவந்த தெல்லாம் உனக்குள்ளேயே இனி நன்கு விளங்கும் இப்போது நான் சொல்லி வருவதைக்கேள்! இதுவே உனக்கு உபதேசமாகும். அதாவது இன்று முதல் என்கட்டளைப்படி கேட்டு நடந்து மோக்ஷபூமியை யடையக் கடவாய்! அதாவது, எந்த ஒரு சமயத்திலும், எந்த ஒருபோதும் இதுவரையிலும் நாமிருவரும் ஒத்துமையாக எவ்வாறு சாது தரிசனமும், பசித்தோர்க்கு அன்னம் படையாதும் விரதமாகக் கொண்டு செய்து வந்தோமோ அதே போலவே நீயும் சிறிது நாள் செய்து அதனால் பரிபக்குவ மடைந்து உன்னுடைய கோரிக்கை நிறைவேறும் என்றான்.

கேட்ட நாயகி. நாயகன் உபதேச வார்த்தையே சற்குரு நாதன் உபதேசமாக பேற்று, மற்றும் வணங்கி, சுவாமி! ஆம் நாமிருவரும் ஏகமனதாக சாது தரிசனமும், பசித்தோர்க்கு அன்னமுமிட்டு வந்தோம். அவ்விரண்டினாலடையும் பூரணபலன் இன்னதென்றும், அதனால் பலனடைந்தவர்கள் இன்னவர்களென்றும் தெரியப்படுத்தப் படுத்த வேண்டுமென்று வேண்டினாள் அதைக்கேட்ட நாயகன் சொல்லத் தொடங்கினான். அதாவது,

---

கைமுறை பாக்கெட் வைத்தியம்.

இதில் வைத்திய பாகங்களெல்லாம் சுலபமாய் செய்யக்கூடியதாய் சுமார் 600-முறைகளுக்குக் குறையாமலடங்கி யிருக்கிறது. உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு கலிகோ பயின்டு செய்தது.

இதன் விலை ரூபா - 1.

விலாசம்.—பி-எஸ்-டி-எம். அண்டு சன், வேப்பேரி, மதராஸ்.



# 27 - பஞ்சபவானி சரித்திரம்.

—*?*—

ஒருகாலத்தில் கைலாயததில் ஒருநாள் உமாபதி முன்னிலையில் சென்று நின்று வணங்கி எழுந்து, சுவாமி! சாது தரிசனம் பாபவிமோசன மென்னும் வாக்கியம் உலகில் உலாவி வருகிறதே அதன் அனுபவம் எப்படி? அதனையெனக்குத் தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென வேண்டினார். அப்போது உமாயே வந்த நாரதமுனிவரை நோக்கித் திருவுள்ளமுவந்து, நீ சுருதி - யுகதி - அநுபவம் என்னும் மூன்றினில் முடிவாகிய அனுபவ ஞானத்தைக் கேட்கிறாய்! அவ்வாறே யாகட்டும், இடைவிடாது திரிலோக சஞ்சாரம் செய்து வருகிறாயல்லவா? அதுபோல் இப்போது போய் வருபபோது அங்கு நிகழ்வதை மறிவியாய்! எனச்சொல்லி யனுப்பினார்.

அவ்வார்த்தையைக்கேட்ட திரிலோகசஞ்சாரியாகிய நாரத பகவான் சுவாமி நாதனுக்குத் திருவடித் தெண்டு புறப்பட்டு வரலானார் அப்படி வரும்போது வழியில் ஒரு பெரு வெட்டாக வெளியான காட்டில், ஒரு கருவண்டானது காய்ந்த மலத்துண்டை யுருட்டிக் கொண்டு வருகிறது. அவ் வண்டானது இவரது திருக்கண்களுக்குத் தோற்றமாகியது. அதனை இது கருவண்டல்லவா! மலத்துணிக்கை உருட்டிக கொண்டு வருகிறதல்லவா! என்று நோக்கினார். அவ்வாறு இவர் விழியால் நோக்கிய மாத்திரத்தில் உயிருடன் வந்துக்கொண்டிருந்த கருவண்டானது உயிர் நீங்கி மாண்டு விட்டது அதைக்கண்ட நாரதர், ஓ தெய்வமே! நாம் சாது தரிசனம் பாபவிமோசனம்

என்பதைத் தெரிய வேண்டி வந்தோம், இப்போது நம்முடைய நோக்கம் தாக்கியதும் ஒரு ஜீவன் உயிர் நீங்கியதே! இதுதானோ சாது தரிசனம் பாபவிமோசனம் என்பது? என்னும் விசனமும் பரிதாபமுங் கொண்டு கைலாயததுக்குச் சென்று விட்டார்.

மறுபடியும் கைலையை நாடி பரமேஸ்வரனிடம் வணங்கி நமஸ்கரித்து, நடந்தவை யனைத்தும் விண்ணப்பித்தார். பாபகவறிதனை பரமபதியானவர் நாரதரை நோக்கி, முனி சிரேஷ்டா! நீ சொல்லியவை யெல்லாந் தெரிந்துக் கொண்டேன். இருக்கட்டும், இம்முறை போய் வருவாய் இப்போது நிகழ்வதும் காணுவாய்; கண்டு வருவாயென்று என்று கட்டளையிட்டனுப்ப, கேட்ட நாரதர் கைலாசபதியை வணங்கி விடைப் பெற்றுக் கொண்டு மறுபடியும் திரிலோக சஞ்சாரம் செய்யப் புறப்பட்டு விட்டார்.

அவ்வாறு கேட்ட நாரதர் பழயபடியே திரிலோக சஞ்சாரம் செய்து வரும்போது, ரொம்பவும் வெய்யலில் தாளாதவராய் ஒருமரத்தடியில் சற்று இளைப்பார வேண்டி அவ்விடம் அமர்ந்தார்; அப்போது அம்மரத்தின் மேலே இரண்டு புருக்குஞ்சுகள் ஒன்றோடொன்று விளையாடிக் கொண்டிருந்தது அதுகள் தங்கள் பாஷைகளினால் சிறிது வார்த்தை யாடிக்கொண்டிருந்தது. அதாவது, ஓ! அண்ணனாகிய ஆண் புருவே! நம்மை விட்டுப் போகும்போது, நமது தாய், ஓ குழந்தைகாள்! நீங்கள் இருவரும் நான் வரும் பரியந்தம் தனித்து வெளியே வாராதீர்கள். அப்படி வந்தால் சாதுக்களும் வருவார்; சண்டாளரும் வருவார்கள். வந்தவர்கள் சாதுக்களாயிருந்திடில் நமது பூர்வ



ஜென்ம பாகங்களெல்லாம் விமோசனமாகி விடும்; அவர்கள் சண்டாளர்களாயிருந்தால் நமது ஜீவனுக்கே முடிவு காலம் நேரிட்டு விடும் என்று சொல்லிப் போயதே! இதோ கீழே யாரோ ஒருவர் இருக்கிறாரே இவர் சாதுவோ யாரோ? என்று பேசிக்கொண்டதுகள். அதைக்கேட்ட நாரதர் யார் மேலே பேசுகிறது? யென்று அவைகளை உற்று நோக்கினார். இவரது நேத்திரப் பார்வை பட்டதும், அதில் பெண் புருக்குஞ்சு அவரெதிரே கீழே விழுந்து இறந்து விட்டது. அப்படி விழுந்திறந்த பெண் பிருக்குஞ்சை கவனிக்க நாரதர், ஆ! இது வென்ன பெருங் கோரமாக இருக்கிறது. முன்னே பார்த்தோம் நம்மால் ஒரு கருவண்டு இறந்து விட்டது; இப்போது பக்கத்தில் ஒரு புருக்குஞ்சு இறந்து விட்டது. நாம் கண்ட இரண்டு சமய வும்மனதுக்கு ரொம்பவும் கஷ்டத்தைக் கொடுக்கப் பட்டதாகவும், கஷ்டத்தை யடையப் பட்டதாகவுந் நேரிட்டதே, எல்லாம் இறைவன் செயலாகும்; இதை முற்றும் உணரவேண்டு மென்று மறுபடியும் கைலாயம் திரும்பி விட்டார்.

அவ்வாறு திரும்பிய நாரதமா முனிவர், தேவதேவனாகிய கைலாசபதியை நோக்கி, சுவாமி! நீர் சொல்லியபடியே உமது ஆக்ஞைப்படியே சென்று பார்த்து வந்ததில் இதுவரையிலும் இரண்டு தடவையும என் நோக்கால இரண்டு உயிர் பிரிந்ததே தவிர, மற்ற விசேஷமொன்றுங் கண்டதே யில்லை யென்றார். அதுகேட்ட சர்வேஸ்வரன், மற்றும் நாரதரை நோக்கி, ஐயா! நீ யொன்றும் சந்தேகிக்க வேண்டாம் இந்தமுறைக்கு வில்ஜோகி பட்டினம் என்று பட்டின முண்டு அங்கு ஒரு சத்தியவந்தன் என்னும் ஒரு அரசனுண்டு. அவனுக்கு ஒரு மனைவியுண்டு

அவள் இப்போது பூரண கர்ப்பமா யிருக்கிறாள். இப்போது இதே சமயம் அவள் பிரசவமாகப் போராள். அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும். அந்த விடத்துக்குப்போய் அக்குழந்தையைக் கேட்டால் அக்குழந்தை உன் சங்கையை விளக்கும் என்றார்.

அதைக்கேட்ட நாரதர், ஆண்டவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, அதிவிரை ஊரைவிட்டு, வெளிவந்து ஜோகி பட்டினம் வந்து, அந்த ராஜன் அரண்மனைக்குட்புகுந்து. அரசனை விளித்து சந்தித்தார். அரசனும் வந்திட்ட மகா தபசிரேஷ்டரை வணங்கி, தக்க ஆசனமிட்டு அமர்த்தி, சோடசோபசார நம்புரிந்து, தாங்கள் அடியேனை நாடி வந்தக்காரணம் யாது? எனக்கேட்க, நாரதரும் உன்னையாயின் இப்போது நாடிவந்த காரியம் ஒன்று, அதாவது, உன்னுடைய மனையாள் பிரசவவேதனைப் படுகிறாள். அவள் வயற்றில் ஒரு பெண் பிள்ளை ஜெனனமாகப்போகுது அக்குழந்தையின் பேர் பஞ்சபவானியாகும் அக்குழந்தையை ஜனனமாகும் போது ஒரு தாம்பாளத்தில் ஏந்தி என்னிடம் காண்பிக்க வேண்டியது, அதைப் பார்க்க வேண்டியதும், பேசவேண்டியதும் முக்கியமாக வேண்டி வந்தேனென்றார் கேட்ட அரசன் அவ்வாறே தங்கள் சித்தத்திற்கு சம்மதேயென்று ஒப்புக்கொண்டு உடனே இல்லாளுக்கும் பெண்மந்திரிக்கும் தெரியப்படுத்தி, அவ்வாறே அங்கு பிரசவவேதனை நிகழ்ந்திருப்பதுந் தெரிந்து, பிரசவமானதும், முனிவர் கட்டளைப்படி அக்குழந்தையை பொன் தாம்பாளத்தில் காட்டினார்கள்.

பொன் தாம்பாளத்திலிருக்கும் அந்த பஞ்சபவானியென்னும் பெண் குழந்தையானது வந்த நாரதமுனிவரை



நோக்கி, சுவாமி ! ஓ நாரதமா முனிவரே ! ஓ பாபரகித பரமபுருஷனே ! உனது பாதாரவிந்த கமலங்களுக்கு நமஸ்காரம் ; நமஸ்காரம் ! நீர் சர்வேஸ்வரக் கட்டளைப்படி சில சங்கைனியத் தெளிய வேண்டி இங்கு வந்தாய். இதோ விளக்குகிறேன் கேள் !

ஆதியில் நான் ஒருமானிடம் பெண் ஜெனனம். அந்த பெண் ஜெனனத்தில் ஒரு உத்தமபுருஷனுடைய மனைவியாகும். என் பெயர் பவானி, என்புருஷன் பெயர் பஞ்சநாதன் ஆயினும் நான் ஒரு தாசி வயற்றில் பிறந்த பெண். இருந்தபோதிலும் என் தாயார் தொழில் முறையை அனுசரிக்காது வெறுத்து என் இஷ்டப்படி நடந்துக்கொள்ள துணிந்துக் கொண்டு, என்னிஷ்டப்படியே பஞ்சநாதன் என்னும் புருஷனை நாயகனாக நியமித்துக் கொண்டேன். இது என் தாயாருக்குத் தெரிந்து என்னை விலக்கி விட்டாள்.

அதற்கொவ்வாது என் தாய் விலக்கி விட்டபோதிலும், என் விவேகத்தாலும், நான் வாசித்துவந்த சட்டதிட்ட நீதிகளாலும், ஜென்ம வாசனையாலே சாதுக்களைக் காணவேண்டுமென்ற ஆசையாலும், சாதுக்களைத் தரிசிப்பதாலும், சாதுக்களுக்கு பசிநோயை தணிப்பதாலும் நல்வழியேற்பட்ட என் பூரண அறிவின் சமர்த்தினால் கற்பிக்கணவழியே மொழுகி, என்னாயகனோடு சதிபதி வாழ்க்கை நடந்து வந்தேன். நான் நடந்த ஒரு பதிவிரதா தர்மம் எவ்வளவும் சிலாக்கியமானதாகவே யிருக்கும். ஆனால் என் நாயகன் மாத்திரம் என்னைக் கற்பரசியென்றே உறுதிகொண்டாரேயன்றி, மற்றவர்களெல்லாம் என்னை தாசி மகளென்றும், தாசிகளின் நடைபென்றுமே பெண்ணிவந்

தார்களாகும் நான் பதி பக்தி நடாத்தி, பரபுருஷ கமனம் வெறுத்து, இல்வாழ்க்கை நடத்து வந்த காலத்தில், சென்றதும் நிகழ்வதை முன்னிட்டு அனேக விகல்பங்களெல்லாம் நடக்கலாம்!

நாதா! இரதியையும் பழிக்கத்தக்க மிக்க ரூபலாவண்ய முடையவள் அதில் தாசி குலத்திலுதித்தவள். என்னைக் கண்டு மோகிக்காதவர்கள் உலகில் ஒருவருமே இல்லையென்றால் அப்போது நான் எவ்வளவு ரூபலாவண்யமாக விருப்பேன் தெரிந்துக் கொள்ளும். அத்தகைய ரூபலாவண்ணியத்தோடு இருந்தும், தாசிகள் நேசத்துவப்படி என்னைக் கருதுவார் பலர். நான் நடக்கும்போது என்னை பின்தொடருவாரும் பலர் என்னை அழைப்பாரும் பலர், என்னை வற்புறுத்து வாரும் பலர், என்னைக் கொஞ்ச வருவாறும் பலர், என்னைக்கூட வாரும் பலர், எனக்கு உபசாரம் கூற வருவாரும் பலர், என்னை உபசரிக்க வருவாறும் பலர், “மாதர்க்கு இதம்” என்பது போல இதமான வார்த்தையினால் எவ்விதமாகும் மயங்கிவிடுவா ரென்றால், நாதா தாசிகுலம்; அதிலும் விவேக சாதுர்யத்தால் பதிபக்தி யனுஷ்டிக்க வந்தவள்; இவர்கள் இடைவிடாது புகட்டும் காமாந்தகார தூண்டுதற்கு எப்படித்தான் மயங்காமலிருப்பேன்; நான் ஒருபோதும் இவைகட் கெல்லாம் மயங்கினவளல்ல இப்படியெல்லாம் என்புத்திக்கு எட்டியவரை பதிவிரதா தர்மத்தை நெறியோடு நடாத்தி வந்தேன். இவையனைத்துக்கும் என் மனமே சாக்ஷி இப்படியாக நடாத்தி வந்தேன்

இவையெல்லாம் ஒன்றும் பழுது படாது நடந்து வந்தும் ஒரு விஷயத்தில் மாத்திரம் நான் அபசாரப் பட்



டவளாகும். அதாவது என் நாயகன் மகா புண்ணியபுருஷன், தான் பசித்திருந்த போதிலும் பிறர் பசித்திருக்கக் காணார் அன்னமென்று வந்தவருக்கு இல்லையென்று கனவிலும் சொல்லார். தன்னால் இயன்ற மட்டும் பசியாற்றியே விடுவார். இவருக்கு எப்போதும் சாதுசங்கமே சாவகாசம் எனக்கும் அடிக்கடி சாது தரிசனம் பாபவிமோசனம் என்று சொல்லி வருவார். நானும் அவரோடு சகல கிருகதியங்களும் செய்து வந்தும் இடைவிடாது சாதுக்கள் வருவதால் அவர்களுக்கு அடிக்கடி அன்னம் பரிமாற நேருவதால் எனக்கு மாத்திரம் கொஞ்சம் சிரமையின் பொருட்டு கொஞ்சம் மனம் வெறுப்படையும். இதை முகக்குறிப்பினாலறிந்த என்னாயகனுக்கு மனதில் கொஞ்சம் கஷ்டமுண்டாகும் அதையும் என்னிடம் சொல்ல மாட்டார். நானும் கவனியாதுபோல் இருந்து விடுவேன். இப்படியிருக்க என்னாயகனுக்கு முன் நான் உயிர் துறந்து மோக்ஷலோக மடையாமல் நரகலோகத்திற்கு செல்ல வேண்டி என்னை எமபட்டாள் எமதர்மராஜனிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

அந்த எமதர்ம ராஜன் என்னைக்கண்டு, அடி பெண் பாவாய்! உன் புருஷன் மகா உத்தமசிரேஷ்டன். நீயும் மகா பதிவிரதைத்தான் அவன் சொற்படி நடந்து பதிபக்தி செய்து வந்ததும் சரியே! அவன் அன்னதான தர்மங்களும்போது உன் மனது சிறிது மாறுபட்டதினால், அவனுடைய பரிபூரண விரதத்திற்கு உன் மனம் சிறிது அபசாரம் பட்டு விட்டதால் நீ நரகத்தி லிடுபட்டே பிறகு மறுஜென்ம மெடுத்து, உன் நாயகனோடு கூட்டி வாழ்ந்து, அவன் இறந்த பிறகு அதே அன்னத்தில் பலநாள் ஈடுபட்டு அபசாரம் பட்ட புண்ணியம் பேற்றைப் பெற்று

அப்பால் இந்த பூமிக்கு வந்து நித்தியானந்த போகபாக்கியத்தை யடைய வேண்டும், ஆயினும் நீ சாது தரிசனம் செய்து வந்ததினால் அத்தகை நரகத்தை மீட்டப்பட்டதாகும். ஆகையால் பூமியில் இழிவான பலஜென்மமெடுத்து கடைசியில் புண்ணிய ஜென்மமாகிய மானிட ஜென்மமெடுத்து மேற்சொன்ன வாறு நடந்து அப்பால் இவ்விடம் வருவாயென நியமித்து என்னை ஒருவண்டாகப் பிறக்கும்படி செய்ய அவ்வாறே வந்து உலகில் கருவண்டாகப் பிறந்து ஒருமலத்துண்டை உருட்டிக் கொண்டு போகும்போது, அங்கு தங்களுடைய தரிசனத்தைச் செய்தேன் அந்த தங்கள் தரிசனத்தால் மல வண்டு ஜெனன பாப விமோசனமாகி உடனே ஒருபிராக்குஞ் சாகப் பிறந்தேன். அப்போதும் தங்கள் திவ்ய மகாபுண்ணிய தரிசனத்தைப் பெற்றதால் அந்த பற்பன ஜெனனமும் விமோசனமாகி இப்போது இந்த புண்ணிய ஜெனமாகிய பழய ஜெனனத்தை தங்களை தெரிசனை செய்தேன் என்று சொல்லியதும் உடனே மாயாவந்து சூழ்ந்துக் கொண்டது. அப்பால் சாதாரண உலக வாழ்க்கை குழந்தைகள் போல் குவா குவாவென்று அழலானது, உடனே நாதருக்கு சங்கை தெளிந்து சந்தோஷமுண்டாகி, அக்குழவிக்கு தீர்க்காயுளும் சுமங்கலியமும், யோகபாக்கியமும் உண்டாகும்படி ஆசீர்வாதம் செய்து போனார். அதன்பின் அந்த பஞ்சயவானி அவ்வரசன்பால் வளர்ந்து, தக்க பருவத்தில் கல்யாணம் செய்துக்கொண்டு, சதிபதி இருவரும் சாது தரிசனமும், அன்னதான தர்மமும் செய்து இகத்துக்குரிய சுகபோகத்தை யடை மருமையில் அழியாத மோக்ஷத்தை யடைந்தார்கள்.

---



# 28 - அன்னபூரணி சரித்திரம்.

:*:

வடமதுராபுரி பட்டனத்தில் வேளாள குலத்தில் அவதரித்த சிவநேசன் என்பவன் ஒருவனிருந்தான். அவன் தன்கற்பரசியாகிய இல்லாளோடு இல்வாழ்க்கை நடாத்தி வந்தான். அவனுக்கு தின உபாசனை காசி அன்ன பூர்னேஸ்வரி யாகும் அவனும் அவன் இல்லாளும் எப்போதும் இணைபிரியா மனத்தினர்களாகும். ஈஸ்வர தொண்டில் எப்போது சாதுகளை தரிசனம் செய்வதும், பசித்தோருக்கும் அன்னம் அளிப்பதுமே பெருவிரதமாக நடாத்தி வந்தார்கள்.

அப்போது அந்த அன்னபூர்ணேஸ்வரி கிருபா கடாக்ஷத்தின் ஒரு பெண்மகளைப் பெற்றார்கள். அந்த பெண் மணிக்கு தன் உபாசனதேவியாகிய அன்னபூரணியின் நாமத்தையே வைத்து அழைக்க லானார்கள். அந்தப் பெயர் அவளுக்கு வாய்க்கப் பெற்றது வளது அழகுக்கும் குணத்திற்கும் பொருத்தமாக புண்ணியவசமே யாம்.

இந்த அருமைச் செல்வியை அன்பும் ஆசையுமாக வளர்த்து வர அவளுக்கு வயது ஐந்தாகியது அப்போது அந்த அறிவில் சிறந்த அன்னபூரணி தந்தையை நோக்கி அய்யா! எனக்கு ஒரு நல்ல விவேகத்தை யாயெனக் கேட்க, தந்தையும் தன் குமாரத்தியின் விவேகத்திற்கும், அன்புக்கும், வழிபடு மார்க்கத்துக்கும் சந்தோஷம் அடைந்து, குழந்தாய்!

" அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி எவைக்கும்ஆற்றி

மனத்துளே பேதாமேதம்
  வஞ்சனை களவுசூது
சினத்தையும் தவிர்ப்பாகில்
  செய்தவம் பின்வேறுண்டோ
உனக்கிது உபதேசம்கண்டாய்"

என்பதாய், பசித்தோருக்கு அன்னமும், பரமசாது தரிசனமும் மறவாதே இதுவே! உனக்கு பெரிய விவேக போதமும், உபதேசமுமாகும் அதனால் நீ புருஷபோக பாக்கியமும், கற்புபோக பாக்கியமும், புத்திரபோக பாக்கியமும், மோக்ஷபோக பாக்கியமும் அடைவா யென்று சொல்லி,

" அன்னபூரணி சதாபூரணி
  சங்கரபிராண வல்லபே
தர்மார்த்தகாமமோக்ஷ சித்தியார்தம்
  இஷ்டகாமியார் சதசித்தியார்சதம்
ஞானவைராக்ய சித்தியார்த்தம்
  பிக்ஷாந்தேகிச பார்வதீ"

அன்ன பூரணியின் மகா மந்திரத்தையும் உபதேசித்தருளினார். "தந்தை சொன்மிக்க மந்திர மில்லை" யென்ற முதுமொழியபடி, தந்தையில் உபதேசம் கேட்ட அன்று தொட்டு அதுவழியிலே மனதை ஒருவழிப்படுத்தி நடந்து வந்தாள்.

நாளுக்கு நாள் அன்னபூரணி வளர்ச்சியுண்டாகி மங்கைப் பருவத்தை யடைந்தாள். உடனே தாய்தந்தை யிருவரும் அவளுக்குத் தக்க நாயகனைத்தேடி விவாகம் செய்துக் கொடுத்து, பல சீரும் அளித்து, பதிவிரதா தருமத்தையும் புகட்டி நாயகனோடு அனுப்பினர்.



அவளும் தாய் தந்தையால் நியமிக்கப்பட்ட நாயகனை எல்லாம் வல்ல இறைவனாக பேற்று, பதிவிர்தா தர்மம் வழுவாமற்படி இல்லறம் நடத்தி வந்தார்கள் சில நாள் சென்று இவர்களுக்கொரு ஆண்குழந்தையும் பிறந்தது இம்மூவரும் சில நாள் வாழ்ந்திருக்க அன்ன பூரணியின் நாயகன் அந்தியகால விதிப்படி மரணமடைந்து விட்டான். மனைவியாகிய அன்ன பூரணியும் அவருக்குரிய. ஈமக்கடனை முடித்து விட்டு, அன்று தொட்டு மஞ்சள் குங்குமம் விலக்கி, திருநீறு சாற்றி, ஒருபொழுதுண்டு தன்னாயகனையே வழிபடுமூர்த்த பரமேஸ்வரனாகி பூஜித்து ஒரு ஆண்மகனை காப்பாற்றி ஜீவித்துக் கொண்டிருந்தாள்.

இவர்கள் இப்படியிருக்க ஒரு நாள் கைலாயத்தின் கண்ணே சிறு தொண்டநாயனார், தாம் பக்தி வைராக்கியத்திற் சிறந்தவரென்றும், உலகின் கண் நான் ஒருவனே பிள்ளை அறுத்து சமையல் செய்து சாக்ஷாத் பரமேஸ்வரனுக்கே அமுது படைத்து, பக்தி வைக்கியத்தை ஜெயமுற்சியவன் என், பல பக்தர் குழாங்களோடு இறுமாப்படைந் திருந்தான்.

இவனது இறுமாப்பு வார்த்தையைக் கேட்ட பக்த குழாங்களெல்லாம் மனது வருத்த முடையவர்களாய் பரமபதியை நோக்கி விசன முற்றவர்களா யிருந்தார்கள். இவையனைத்துந் தெரிந்த எல்லாம் வல்ல எம்பெருமான் திருவுள்ளமு வந்து எழுந்தருளி, சிறுத்தொண்ட நாயனாரையும் அழைத்து, அன்பா! சிறுத்தொண்டா! நான் பூவுலகில், பக்த சிரோமணிகளைக் காணவேண்டியும், கண்டு திருவருள் புரியவும் போகிறேன் நீயும் என்னோடு வருவாயெனச் சொல்லி, தான் ஒருவிருந்த ஜங்கமராகவும,

சிறுத்தொண்டனை ஒரு சிஷ்ய ஜங்கமனாகவும் திருவுருக் கொண்டு அழைத்து, அன்ன பூரணி வீட்டுக்கு வந்தார்கள்.

அப்போது அன்னபூரணி யம்மையார் வந்த இரண்டு ஜங்கமரையும் அழைத்து, வந்தனை உபசாரம் செய்து, 'ஆ! இன்று நல்லநாள், இவ்வளவு விருத்த ஜங்கமரைக் கண்ட போதே சாக்ஷாத் பரமசிவனுடைய தரிசனமே யாகும். நானடைந்த பாக்கியமே பாக்கியம், சுவாமி! ஜடை முடி பரமேச்சுரனைப்போல் எழுந்தருளிய தேவரீருக்கு என்ன வேண்டும்? எங்குவந்தீர்! அடியாள்மீது இவ்வளவு கிருபை வைத்து எழுந்தருளியதும், யான் தரிசிக்க வாய்த்ததும், இந்த ஏழையடியாள் செய்த பாக்கியமே பாக்கியம்! அடியாள் இதுகாறும் செய்து வந்த புண்ணியமே புண்ணியம்! இன்று தான் கடைத்தேறினேன்! இன்றே என் பாபங்களெல்லாம் விமோசன மானது! இன்றே நான் மோக்ஷ பூமியை யடைந்தேன் எனப் பலவாறாகப் புகழ்ந்து மன தாரத்தோத் தரித்து தங்கள் வன்ன கோரிக்கை வேண்டி வந்தீர்கள் என்று வேண்டினாள்.

அப்போது கள்ளமில்லா உள்ளத்தில் எள்ளுக்குள் எண்ணெயைப்போல் இடைவிடாது நிர்த்தாண்டவம் புரியும் எனது ஆண்டவனே இப்போது கள்ள வேடங் கொண்டு, அன்னபூரணியின் மனதை சோதிக்கு மாறு வந்த ஜங்கமூர்த்திகள், அவ்வம்மையை நோக்கி, அம்மணி! உன்னைப் பார்த்தால் காசியில் திருக்கோயில் கொண்டெழுந்திருக்கும் அன்ன பூரணியீஸ்வரியைப்போல் விளங்குகின்றது! நாங்களோ! இவ்வழி வெறுத்து, துறவுபூண்டு தேச க்ஷேத்திர யாத்திரை செய்து வரப்பட்ட ஜங்கமர்க



ளாகும். நாங்கள் நெடுந்தூரம் கால் நடையாக யாத்திரை செய்து வருகிறோம்! இப்போது எங்களிருக்கும் பசிநோய் அதிக வருத்துகிறது, மானம்-குலம்-கல்வி-அறிவுடைமை-தானம்-தவம்-முயற்சி - தாளான்மை - தேனின் கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல், இப்பத்தும் பசிவந்திடப் பறந்துபோம், என்ற வாக்கியப்படி, எங்களுக்கு பசிநோயால், கால் தடுமாடுகிறது; சரீரம் வாடி துவளுகிறது: பிராணன் துடிக்கிறது, இதே சமயம் காலமும் அகாலமாக இருக்கிறது. ஆனதால் எங்கள் இருவருக்கும் போஜனம் அளிக்க வேண்டுமென்று கேட்டார்.

" கண்ணுதலாலயனோக்குங் கண்களேகண்கள்
கறைகண்டன்கோயில் புகும்கால்களேகால்கள்
பெண்ணொருபாகனைப்பணியுந் தலைகளேதலைகள்
பிஞ்சகனைப்பூசிக்குங் கைகளேகைகள்
பண்வன்றன்சீர்பாடும் நன்னாநன்னா
பான்சரிதையைக்கேட்கப்படும் செவிகளேசெவிகள்
அண்ணல்புலன்கழல்நினைக்கும் நெஞ்சமேநன்னெஞ்சம்
அவனடிக்கீழடிமைபுகும் அடிமையேஅடிமை. "

என்ற பேரானந்தக் கடலில் அழுந்தினவளாகி, ஆனந்த பரவச மடைந்து, சுவாமி! தேவரீர் இங்கணே எழுந்தருளியிருங்கள் இதோ அரைநொடியில் போஜன தயார் செய்து தங்கள் பசியை ஆற்றுகிறே னென்று சொல்லி, அவர்களை அமர்ந்திருக்கச்செய்து, அடிசில் புகுந்து, மனோ வாக்கு காயதிரிகரண சுத்தியோடு அறுசுவை கறியும், அமுதும் சமையல் செய்து வைத்து விட்டு, சுவாமிகளுக்கு வந்து எச்சரித்து, அவர்களை ஸ்நான அனுஷ்டானம் முதலியவைகளை முடித்துக் கொள்ளும்படி வேண்ட, அவர்

களும் ஜலந்தேடி ஸ்நானமும் பூஜாவிதி முடித்து வரப் போய் விட்டார்கள்.

இதற்குள் இவ்வம்மையாருக்கும் ஒரே அருமை ஆண் குழந்தையாகையாலும், அதிலும் சிறுவயதுடையவனாகையாலும், இன்னும் விதிவிலக்கு பயபக்தி தெரியாதவனாகையாலும், இப்போது நிகழும் விஷயங்களும் ஒன்றுமே தெரியாதவனாகையாலும், எப்போதும் போல் தனக்கும் தன் தாயிற்குமே சமையல் செய்வதென நினைத்தவனும், இன்று விசேஷமான கறியமுதுகள் இருக்கக் கண்டவனுமாகையால், தன் தாயிற்குத தெரியாமல் சமைத்து வைத்திருந்த கறியமுதுகளில் கிஞ்சிற்றெடுத்து தின்றுக்கொண்டிருந்தான், அதைக்கண்ட அன்னபூரணிக்கு அடங்காத கோபமுண்டாகி, அடா! சண்டாளா! ஜங்கமக் கடவுளுக்கு சமைத்து வைத்திருக்கும் போஜன கறிபதார்த்தங்களைச் சுவாமிக்கு படைக்கு முன், சேஷப்படுத்தி விட்டாயே! ஐயோ! அபசாரமாய் நேர்ந்ததே! இப்படியும் செய்யலாமா? வென்று கோபாவேசத்தோடு அருகே இருந்த உலக்கையை யெடுத்து மோதி ஒரே அடி அடித்தாள்.

இந்த அன்புடையாள் கோபாவேசத்தோடு அடித்த அடி அச்சிறுவன் தலையில் தாக்கி மண்டை உடைந்து உயிர் நீங்கியது. அதைக்கண்டதும் இருந்தாலும் இருக்கட்டும்! கடவுள் மஹேஸ்வர பூஜைக்கு யாதொரு அபசாரமும் நேராமலிருக்க வேண்டி அச்சிறுவனை ஒரு ஓலைப்பாயில் சுருட்டி வீட்டினுள் ஒருமூலையில் வைத்து விட்டு ஸ்நானத்திற்குச் சென்ற ஜங்கமர்கள் வருகையை எதிர்ப்பார்த்தவளா யிருந்தாள்.



இதற்குள் ஜங்கமர் இருவரும் ஸ்நானம் செய்து, அநுஷ்டானம் முடித்து வந்து சேர்ந்தார்கள் அந்த அம்மன் அவர்களை அழைத்து ஆசனத்தில் அமரச்செய்து, அறுசுவையோடு கூடிய அன்ன பதார்த்தங்களைப் படைத்து, தூபதீபங்காட்டி, அமுது செய்யும்படி வேண்டினாள். போஜனத்தில் உட்கார்ந்த பரமசிவ ஜங்கமர், அன்ன பூரணி அம்மன் வடித்த போஜனத்தையும், அவளது பக்தியையும், அவளுடைய அன்பின் பெருக்கையும், அவளுடைய கற்பின் லக்ஷணத்தையும், அவளுடைய பக்தி வைராக்யத்தையும் வியந்து புகழ்ந்து மகிழ்ந்து உள்ளமுவந்து சிறுத்தொண்ட நாயனாருக்குச் சுட்டிக்காட்டி, அவரை நாணச்செய்து, உடனே அன்னபூரணியை நோக்கி, அம்மணி! நாங்கள் முற்று முணர்ந்த பக்தர்களாகும். நாங்கள் பிள்ளை யில்லாதவர்கள் இட்ட அன்னம் புசிப்பதில்லை உனக்கு ஏதேனும் பிள்ளைக ளிருந்தால் எங்களுடன் புசிக்கச் செய்தால் புசிப்போம்; இல்லாவிடில் புசிக்க மாட்டோமென்று எழுந்திருக்க லானார்கள்.

இதனைக்கண்ட அன்ன பூரணிக்கு முன்னிலும் கோபம் அதிக முண்டாகி, ஆ! ஆ! இது யென்ன விந்தையாயிருக்கிறது? ஜங்கம மஹேஸ்வர விரதத்திற்கு பங்கம் நேரிடா வண்ணம் பிள்ளையையுங் கொன்று போட்டோம், இப்போது ஜங்கமரும் பிள்ளையில்லா வீட்டில் போஜனம் செய்ய மாட்டேனென்று போவதற்கு எத்தனை யிடுகிறார். அந்தோ! இருவிதத்திலும் அபசாரமடைய நேரிட்டதே! என்ன செய்வது? எல்லாம் இறைவன் சூதேயாகுமென்று, முன் பிள்ளையை அடித்த உலக்கையை எடுத்து வந்து, உயர நோக்கி, ஓ! ஜங்கமர்களே! உங்களுக்கு அன்னம் படைப்பதை முன்னிட்டு என் பிள்ளையையுங்

கொன்று போட்டேன். அப்படிக் கொன்று விட்டும் நீரும் இப்போது பிள்ளையில்லாவீட்டில் போஜனம் அருந்தேனென்று எழுந்திருக்கிறீர்கள் இரு விதத்திலும் எனக்கு மனோ வியாகூலத்தையும் அபசாரத்தையுமே ஏற்படுத்துகிறீர்கள், இனி உங்களையும் உங்கள் வார்த்தையையும் எதிர்பார்க்க மாட்டேன். எனது மனமும் உங்கள் எண்ணமும் எல்லாம் எல்லோருக்கும் இறைவனாகிய வள்ளலுக்கே தெரியும் இதோ இப்போது சாதாரணமாக போஜனம் அருந்துகிறீர்களா? இல்லாவிடில் என் மைந்தனைக் கொண்டதுபோல் உங்கள் இருவரை மண்டையையுடைத்துக் கொன்று போடுகிறேனென்று அடிக்கத் துணிந்து விட்டாள்.

அப்போது சர்வஜீவ தயாபரக் கருணாகரக் கடவுள் தமது பொய் வேடங்களை யெல்லாம் மறைத்து, இறந்த பிள்ளையை உயிர் பெறச்செய்து, காளகண்டம் - திரிநேதரம் - மான் - மழு - ஜடாதாரம் - உமா சமேதமாக இடப வாகனத்தின்மீது சேவை தந்து, அன்னபூரணி! உன்பாபங்களெல்லாம் இன்றோடு விமோசனமாகிவிட்டது. இன்னும் சிறிது காலம் நீயும் உன் குமாரனும் உலகிலிருந்து, உன் மகனுக்கு கல்யாணம் செய்து விட்டு, இகத்திலுள்ள போகபாக்கியங்களை யடைந்து பிறகு கைலாய மோக்ஷ லோகத்திற் வருவாயென்று சொல்லி கைலைச் சேர்ந்தார். அவர்களும் சுகமுடன் வாழ்ந்து அதுபோல் முத்தியை அடைந்தான்.

---



# 29 - ஜெகநாயகி சரித்திரம்.

—:*:—

ஹே! ஹேமமாலினி! இன்னமும் சொல்கிறேன். கேட்பாயாக. பாண்டியநாடு ஒரு சிற்றூரில் பந்ததாசன் என்று ஒரு கிருகஸ்த னிருந்தான் அவனுக்கும் பூர்வ புண்யமே ஒரு பெண்ணுருவாக அமையப் பெற்றவளும், கற்பில் அருந்ததிக்குச் சமானமானவளும், அழகில் ரதியையும் பழிக்கத் தக்க ஒரு மனைவியுண்டு அவள் பெயர் ஜெகநாயகி யாகும்.

இந்த புண்ணியவதி வாழ்க்கைப்பட்ட நாளிலிருந்து ஒருநாளும் ஒருபோதும் ஒருசமயமும் சந்தோஷத்தை அடைந்தவளே யல்ல. ஏனெனில், அவன் இளமையிலேயே சாது சங்க சாவகாசமா யிருந்ததினால் அவன், அச்சார்பிலேயே அதிக பற்றுடையவனாய் விட்டான் உலகவாழ்க்கைக்கு கல்யாணம் செய்துக் கொண்டானே யொழிய அவ்விஷயத்தில் கொஞ்சமும் பற்றுதல கொண்டவனல்ல காலையில் நித்திரை விட்டு எழுந்ததும் தனது காலக்கடனை முடித்துக் கொண்டு போஜனாதிகளுக்கு வேண்டியவைகளை சம்பாதித்து மனைவியிடம் கொடுத்து விட்டு பரதேசி சாது இவர்கள் சாவகாசத்திற்குப் போய் விடுவான் மற்ற ஜாசத்திற்கும், இன்ப சுகத்திற்கும், மனைவியைக் கருதுபவனல்ல. அதோடு தான் கொடுத்த அளவுக்கும், தான் சொல்லிய கட்டளைக்கும் தானே தெரியாது கட்டுப்படாமல் பரிகாலமா யிருந்தால் தன்னோடு வரும்போதும் பரதேசிகளை யழைத்து போஜன மிடும்படி சொல்லுவான் தனக்கிருந்தாலும் இல்லாவிட்டாலும் போட்டுத் தான் தொலைக்க வேண்டும், அதோடு போய்விட்டதா? இல்லை

இல்லை அவர்காளிலும் விழச்சொல்லுவான், விழுந்துதான தீரவேண்டும். இன்னும் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யச் சொல்லுவான்; செய்துதானாக வேண்டும் அவர்களெதிரில் இழிவுச் சொற்களால் பேசுவான். யீனமானமின்றி பேசுவான், ஒரு சமயம் யாதொரு குற்றமுமின்றி அடிப்பான்; அதையும் படத்தான வேண்டும். இப்படி தனது காலத்தை சிலபோது கழித்து வந்தாள். இவை யனைத்துக்கும் தன்னாயகன் மீது வெறுப்படைந்தவ ளல்ல.

இன்னும் அவன் செய்யும் தீங்கும், அடாத காரியமும் இவள் குற்றமாகக் கருதினவளல்ல. மற்றும் நமது கடவுள் எந்தபோது நல்லவிவேகத்தைக் கொடுப்பாரோ! அவர் எப்போது என்மீது பட்சம் பாராட்டுவாரோ! எப்போத இருவரும் சந்தோஷகரமாக இல்வாழ்க்கை நடத்திவருவோம்! என்று தன்மனத்து சதா சிந்தனைச் செய்துகொண்டிருப்பாள். தான் பதிவிரதா லக்ஷணத்தை இளமையிலேயே படித்தும் கேட்டும் இருப்பதால் வேறு விஷயமான வழிகளில் மனத்தை அவள் செலுத்துவதில்லை. இனியேனும் கடவுள் கிருபை செய்வார். நம்புருஷனோடு அன்புற்று வாழலாம். எப்போது கடவுளுககுக் கிருபை யுண்டாகுமோ வென்று எதிர்பார்த்தவளாகவே மேனவியா கூலத்தோடு உடன் படா இல்வாழ்க்கை நடாத்தி வந்தாள்.

இவ்வித வியாகூல சிந்தையோடு இருந்துக்கொண்டே இரவும் பகலும் சர்வேஸ்வரனை நோக்கி, ஓ! ஜெகரக்ஷகா! நான் பிறந்து விவேகம் விளங்கியதி லிருந்து இது பரியந்தம் ஸ்திரிகளுக்குரிய பதிவிரதா சட்டத்திற்கும், விரோதமாக எது ஒன்றும் நடந்தவளல்லவே? எனக்கு, ஏன் இவ்வாறு துன்பத்தைபே நடந்துவர வைத்தாய், உலகின்கண்ணே ஒரு ஸ்திரியானவள் ஒருபுருஷனை வதுவைசெய்துக் கொள்வது எதற்கு? தன்னை யாது காப்பதற்கும், தான் பகிர்முக அந்த முக ஆனந்தத்தை யடைவதற்கும், பிறகு நரகமெய்தாமல் மோக்ஷத்தை யடைவதற்கு மல்லவோ? அப்படிக்கில்லாமல் நானடையும் இன்பமெல்லாம் துன்பமே யாம். சுவாமி! இனியேனும கிருபைசெய்யவார்? என் நாயகனுக்கு விவேகத்தைக் கொடுக்காயா? என்னோடு கூடிக்குலாவச் செய்பாயா? இருவரும் மனஒற்றுமை இல்லற தருமம் நடத்தவையாயா? விவாகமான நான் முதல் பெண்களுக்குரிய எது சுகமும் அறியாது இன்பசுகமெல்லாம் துன்ப சுகமே அனுபவிக்கிறேனே!



உலகமோ! இன்றைக் கிருப்பவர் நாளை யிருப்பார்களென்று நிச்சயிக்கக் கூடவில்லையே, ஏன் இந்தப் பாழுஞ் ஜெனனத்தைப் படைத்தாய்! ஓ! தெய்வமே? தேவரீரால் ஏற்பட்ட பதிவிரதா சட்ட முதல் சர்வவிதியையும் பொய்க்குக் காரணமாக தோன்றுகிறதே யன்றி உண்மைக்கு வர வில்லையே! இது வரையிலும் எது வேண்டியும், எது செய்தும் ஒன்றும் பயன் பட வில்லையே! இனி இத்தகைய வாழ்க்கையிலிருந்து மனோவியாதி யடைவதைக் காட்டிலும் உயிர் நீத்துக்கொள்வதே நல்ல வழியாகும் எனத்தீர்மானிப்பாள்.

இதுபோல பலநாளும் இவள் கடவுளை நோக்கி முறையிட்டும், இவளது கோரிக்கை ஒன்றுமே நிறைவேறவேயில்லை அதனால் அவன் நடந்து வரும் பதிவிரதா தர்மத்தையும், தான் செய்யும் பிரார்த்தனையும், கடவுள் என்னும் மதப்பொருள் உண்டென்பதையும், இவையனைத்தும்

பொய்யென்றே தீர்மானித்தாளே யொழிய உண்மையென்ற நம்பிக்கையை விடத் துணிந்து விட்டாள். தன் நாயகனும் பழயபடியே பண்டார பரதேசி சாது சாவகாச நடத்தையி லிருக்கிறானே யொழிய, கொஞ்சமும் வழிபட்டு, மனைவியை நேசித்து சுகவாழ்க்கைக்கு ஈடுபட்டவனல்ல, என் செய்வாள் பாமம்! நாம் உள்ளபடியே பதிவிரதா தர்மத்தை யுடையவளானால், ஏர் பிடிப்பவன் என்ன செய்வான் பானை பிடிப்பவள் பாக்கியம் என்பதாய் எல்லாம் நான் அடையவேண்டுவது நன்மையும் சந்தோஷமும் இன்பமுந் தானே! இத்தகைய எது பயனும் அடையாது சதா துக்கப் படுவதைக் காட்டிலும் நமது பிராணனை மாய்த்துக் கொள்வதே உத்தமமெனத் தீர்மானித்துக் கொண்டு ஒரு தனியிடத்தில் வந்து பிராணனை பிரிக்க முயலுகிறாள்.

இதற்குள் திடீரென யாரோ ஒருவர் அம்மா! உன் புருஷன் இறந்து விட்டான்! இறந்து விட்டான் என்ற ஒரு பெரிய சபதம் கேட்டது. அப்போது கழுத்தில் சுருக்கிட்டு அதில் தலையை மாட்டி இருக்கி தொங்கவிட்ட கயிறு படீரென இரு துண்டாய் அறுந்துவிட்டது. போகப் போகும் ஜெகநாயகியின் உயிர் தப்பிவிட்டது உடனே புருஷன் இறந்து விட்டான்; உன் புருஷன் இறந்து விட்டான் என்ற சபதம் திடும்பிரவேசமாக காதில்கேழ்க்கவே, ஓ! நம்புருஷன் றானோவென்று வெளியே வந்து விசாரிக்கலானாள்; விசாரித்ததில் உண்மையில் தன் புருஷனே இறந்தது எனத் தெரிந்துக் கொண்டாள். ஆ! தெய்வமே! நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தல்லவா? பாவி நானிறந்து நாயகனிருக்கப் படாதா? என் பதிவிரதா தர்ம அநுஷ்டானமும், மாங்கல்ய தர்மம் அடைய வேண்



டிய பலன் இது தானா? என்று பதிவிரதா தருமத்தையும், தெய்வத்தையும் நிந்திக்கலானாள் இதற்குள் சதிபதி பாசம் வந்து ஒட்டிக்கொள்ளவே தான் நடக்கத் துணிந்ததையும், எல்லாம் வல்ல கடவுள் செயலால் இப்போது 'ஒன்றை நினைக்கி லது வொழிந்திட்டொன்றாகும்' 'ஒன்றை நினையா முன் வந்து நிற்கினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்,' என்பதையும் அறவே மறந்தவளாகி, தற்செயலாய் இறந்த நாயகனைக் தெரிந்து அழுதாள், புரண்டாள், துக்கித்தாள், இனி நமது கதி தானென் னென்று எங்கினாள், இதற்குள் உலக வழக்கப்படி இறந்தவனைச்செய்யும் சடங்குகளைச் செய்து சுடலைக்கு தூக்கிக் கொண்டு போகலானார்கள்.

சுற்றத்தார்களும் மற்றவர்களும் சபத்தையிடு காட்டிற்குக் கொண்டு போகிறார்கள் சபம் முன்னே போகி சிறிது தூரத்திற்குப் பின்னே துக்க சாகரத்தோடு ஜெகநாயகி போகிறாள்; போகும்போது இடையே வழியில் ஒரு பெரு மகா சாதுவைக் கண்டு விட்டாள். நடந்தது நடந்தேறட்டும், நடப்பதும் நடக்கட்டும்; இனியேனும் பெரும் பலனை அநுபவிக்க தேடவேண்டு மல்லவா வென்றெண்ணி, அந்த சாதுமகா புருஷனை வணங்கி நமஸ்கரித்து எழுந்து நின்றாள் எழுந்து நின்ற கற்பரசியை சாது புருஷன் நோக்கி, அம்மா! பதிவிரதை பதிவிரதையே! மனதில் இன்னும் சங்கை வையாதே, இன்று முதல் நீ நிறை மாங்கல்யமாக இருக்கக் கடவாய் என்றார். தேவோ மனுரூபாணாம் என, கடவுட் கிருபை சாது மூல்யமாய் உண்டாகி இறந்தவன் பாடையினின்றெழுந்து, அவனும் யாவரும் விருக்க சாது விடம் வந்து வணங்கி போற்றினான்.

சாது இருவருக்கும் நீதிகளைப் புகட்டி, இன்புற இணக்கி ஆசிகூறி சென்றார் இவளுடைய பதிபக்தியால் இறந்த புருஷன் எழுந்ததோடு,முன்திப வழி மூர்க்கமூடம் முதலியவை நீங்கி சற்புருஷனாகி இருவரும் இல்லறம் நடாத்தி அந்தியத்தில் மோக்ஷமடைந்தார்கள். ஹே! ஹேம மாலினி! என் பிராணச்சேதம் செய்துக் கொள்ளுகிறாய், வேண்டாம் வேண்டாம், இன்னும் உனக்குள்ள ஆயுள்படி இருந்து நெறி முறை தவறாது நடந்து மோக்ஷமடைவாய் என்று உயிர் விட்டான் இவை யனைத்தும் கேட்டிருந்த ஹேம மாலினி, புருஷன் ஆவி நீங்கியதும், ஆ நாயகா! என்று அவன் மேல் சாய இவளுடைய ஆவியும் நீங்கி விட்டது ஆகம வேத புராண இதிகாச விபாசப்படி இரண்டு ஆவியும் கற்பதனி நாயகனுடைய இடபாரூட தரிசனங் கொண்டு, தேவர்கள் புஷ்பமாரி பொழியவும், பதிவிரதைகளும் மற்றோர்களும் கொண்டாடும்படி சிவானந்த செல்வப்பூமியின் பேற்றை யடைந்தார்கள்.

---

# 30 - பூம்பாவை சரித்திரம்.

—*:*—

திருமைலாப்பூரிலே வைசியர் குலத்திலே சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்தவரும், பரசமயங்களை யாற்றல் வேண்டும் என்னு சிந்தையுள்ளவரும், பெருஞ் செல்வரும் ஆகிய சிவநேச னென்பவர் ஒருவர் உளர். அவர் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஞானப்பால் உண்டமையும், உலகம் உய்யும் பொருட்டுத் திருப்பதிகங்களிலே ஆருகதத்தையும், பௌத்தத்தையும், இழித்துரைத் தலை



யும் சிவனடியார்கள் சொல்லைக்கேட்டு மனமிக மகிழ்ந்து அவருடைய திருவடிகளிலே பேரன்புடையாராகி, அநேகராத்திரம் அவருடைய திருவருட்டிறங்களையே பேசக் கேட்பலாகிய தொழிலின ராயினர். அவர் மகா ஐஸ்வரியமும் கீர்த்தியும் உடையவ ராயினும் பிள்ளைப் பேறு இன்மையால் மிக்க கவலையுற்று, சிவபூஜை அடியார்க்கு ஜைகள் செய்து ஒரு பெண் பிள்ளையைப் பெற்றார். அப்பெண் செந்தாமரை ஆசனியாகிய இலக்குமிபோல மகா சௌந்தர்யம் புடைய ளாதலால் அவளுக்கும் பூம்பாவை என்னும் பெயர் கொடுக்கப் பட்டது

அவளுக்கும் பெதும்பைப் பருவம் வந்தபின் தந்தையார் அவளுடைய குணாதிசயங்களைக் கண்டு வியப்புற்று மனமகிழ்ந்து இவளை விவாகம் செய்பவரே என்னுடைய அளவிறந்த திரவியங்களுக்கு உரியவர் என்றார் அன்னாட்களிலே திருஞான சம்பந்தப் பிள்ளையார் பாண்டி நாட்டிற் சென்று செய்தருளிய திருவருட்டிறங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள் வந்து சிவநேசருக்குச் சொன்னார்கள்.

சிவநேசர் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, அவர்கள் எல்லாருக்கும் அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து, பிள்ளையாரைத் திக்கு நோக்கி நமஸ்கரித்து எழுந்து நின்று தம்முடைய சுற்றத்தார்கள் சமஸ்தரும் கேட்க அடியேன் என்னுடைய புத்திரியாகிய பூம்பாவையையும் எனது திரவியங்களையும் என்னையும் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளுக்குக் கொடுத்து விட்டேன் என்று சொல்லி அத்தியந்த ஆனந்த மடைந்தார்.

ஒருநாள் பூம்பாவை சேடியரோடு கன்னி காமாடத்துக்குப் பக்கத்தில் இருக்கிற பூஞ்சோலையிற் சென்று பூக்கொய்யும் பொழுது ஒரு பாம்பு மாதவிப் பந்தலிலே மறைந்துவந்து அவளுடைய விரலிலே காளி காளாத்திரிய மன்யமதூதி என்னும் நாலு தந்தங்களும் எலும்பிலே தாவக்கடித்து நஞ்சை யுருத்துமேலே படத்தை விரித்து நின்றாடி அடங்கிற்று

பூம்பாவை மயங்கி விழ சேடியர்கள் அச்சுற்று அவளைத்தாங்கி கன்னிகா மாடத்தினுள்ளே கொண்டுபோனார்கள். சிவநேசர் சுற்றத்தாரோடு மனங்கலங்கி அழுதார் விஷ வைத்தியர்கள் அநேகர் தனித்தனியே மந்திரயான பாவங்கள் செய்தும், எண்ணிறந்த ஔதங்களைப் பிரயோகித்தும் விஷம் நீங்காமல் ஏழுவேகமும் முறையே பொங்கித் தலைக்கொண்டது, ஆவி தங்குதற்கு உரிய குறிகள் இல்லாமையால் விஷவை சதிமார்கள் கைவிட, சுற்றத்தார்கள் அவள் மேல் விழுந்து அலறி அழுதார்கள். சிவநேசர் ஒருவாறு தெளிந்து இந்த விஷத்தை நீக்கினவர்களுக்கு என்னுடைய அளவிறந்த திரவியங்களைக் கொடுப்பேன் என்று பறை அறைவித்தார் மூன்றுநாள் அளவும் அரசரிடத்துள்ளோர் முதலாகிய மந்திரவாதிகள் சமஸ்தரும் வந்து தம் செய்கையினாலே தீராமையால் திரும்பி விட்டார்கள்

சிவநேசர் அது கண்டு மயங்கி பின்பு இவளைப் பிள்ளையாருக்கு என்று சொல்லியதினால் நான் துன்புற வேண்டுவதில்லை. என்று துன்பம் நீங்கி பிள்ளையார் வருமளவும் இவ்வுடலை தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் சேமித்து வைப்பேனென்று துணிந்து, அப்படியே தகனம் செய்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் இட்டு, கன்னிகாமாடத்திலே வஸ்திரம் சாத்தி, ஆபரணம் அணிந்து, பஞ்சணைமேல் வைத்தார், தினந்தோறும் தவறாமல் மஞ்சனம்-மாலை-சந்தனம்-அன்னம்-விளக்கு முதலியவைகளை அமைத்தார். யாவரும் வியப்புற்றார்கள்.



இப்படி நிகழும் நாளிலே பிள்ளையார் திருக்கூட்டத்தோடு திருவொற்றியூரில் வந்து, சுவாமி தரிசனம் செய்துக் கொண்டு இருக்கின்றார் என்று அவ்வூரார்கள் யாவர் வந்து சிவநேசருக்குச் சொன்னார்கள். அவர் அவர்கள் எல்லாருக்கும் வஸ்திரங்களையும் பொன்களையும் கொடுத்து, பெருங்களிப்புடையராகி திருவொற்றியூர் வரைக்கும் நடைப் பந்தலிட்டு, வஸ்திரங்களால் விதானித்து, கமுகுகளும் வாழைகளும் நாட்டி, தோரணங்கள் நிறைத்து, கொடிகள் கட்டி, மாலைகள் தூக்கி, அலங்கரிப்பித்தார். பின்பு திருவொற்றியூரிற் சென்று திருஞான சம்பந்தப் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்குவேனென்று எழுந்து அம்மைலாப்பூரில் இருக்கின்ற சிவனடியார்களும் உடன் செல்லச் சென்று, திருவொற்றியூருக்குச் சமீபித்தார், அப்போது பிள்ளையாரும் திருவொற்றியூரை அகன்று மைலாப்பூரை நோக்கி அடியார் கூட்டத்தோடு எழுந்தருளி வந்தார்.

சிவநேசரும் சிவனடியார்களும் அடியார் திருக்கூட்டத்தைத் தூரத்திலே கண்டு, சிவ குமாரராகிய திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி வருகிறார் என்று அளவில்லாத மகிழ்ச்சி கொண்டு விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையார் அவர்களை எதிர் தொழுது, சிவநேசருடைய செய்கையை அடியார்கள் சொல்லக் கேட்டு மயிலாப்பூரையடைந்தார்.

சிவநேசரிடத்து நிகழ்ந்ததை திருவுள்ளத் தடைத்து, அவருடைய கருத்தை முற்றுவித்தற்கும், சமணரும் பௌத்தரும் ஆகிய புறச்சமயிகளுடைய இழிப்புரைகளை ஒழித்தற்கும் திருவுளங் கொண்டு, கபாலீச்சரம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து பரமசிவனை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்துக் கொண்டு, கோயிலுக்குப் புறத்திலே வந்து சிவநேசரை நோக்கி, உம்முடைய மகளினது எலும்பை நிறைத்த குடத்தைக் கோயிற் புறத்திற் றிருவாயிலே கொண்டு வாரும் என்று அருளிச் செய்தார்

சிவநேசர் பெருங்களிப் புடையவராகி விழுந்து நமஸ்கரித்து எழுந்து தம்முடைய வீட்டை அடைந்து, கன்னிகாமாடத்திலே புகுந்து, வெந்த சாம்பலும் எலும்பும் நிறைந்த குடத்தை எடுத்து மூடுகின்ற இரத்தினச் சிவிகையினுள்ளே வைத்து சேடியர்கள் சூழ்ந்து சொல்லும்படி எடுப்பித்துக் கொண்டுவந்து, கோபுரத்துக்கு எதிரே சிவிகையை நீக்கி, அக்குடத்தை எடுத்து சுவாமிக்கு அபிமுகத்திலே வைத்து நமஸ்காரம் பண்ணினார். மைலாப்பூரில் இருக்கிறவர்களும் மற்றை ஊர்களில் உள்ளவர்களும், சமணர் முதலாகிய புறச்சமயிகளும் பார்க்கும் பொருட்டு பக்கத்திலே வந்து சூழ்ந்தார்கள். தேவர்கள் முதலியோர் ஆகாயத்திலே வந்து நெருங்கினார்கள். பசுகரணமின்றிச் சிவகரணமுடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், சர்வான்மாக்களுக்கும் உறுதி பயப்பித்தற் பொருட்டு அடியார் திருக்கூட்டம் பக்கத்திலே தம்மைச் சூழ்ந்து வரும்படி கோபுர வாயிலின் நேரேவந்து, பூம்பாவையினது அஸ்தியிருக்கின்ற மட் குடத்தைக் கண்டு சுத்த சாட்குண்ய சொரூபியாகிய பரமசிவனுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்து, இப்பூமியிலே இறந்த



வர்களுடைய எலும்பைப் பின்னும் நன்னெறிப் படுத்த, அந்நன்மை அவ்வெலும்போடு தொடர்ச்சி யாகுமென்று அருளுக்கினாலே பூம்பாவாய்! என்று விளித்தது; பூமியிலே மானுடப்பிறவி எடுத்தவர்கள் பெறும் பயன் அன்படனே பரமசிவனுடைய அடியார்களை அமுது செய்வித்தலும், தரிசித்து ஆனந்தம் அடைதலுமே என்பது சத்தியமாகையால் நீ இவ்வுலகோர் முன் வருவாய் என்று,

"மட்டிட்ட புன்னையங்கா னன்மடயிலைக்
கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா
ஒட்டிட்டபண்பினுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதே போதியோ பூம்பாவாய்."

"கானமர்சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
தேனமர்பூம்பாவைப் பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடு வாழ்வாரே."

என்னும் திருப்பதிகத்தை எடுத்தருளினார். அதிலே அருளிச் செய்யப்பட்ட "போதியோ" என்னும் திரிவாக்கிய அமிர்தம் அவ்வங்கத்திலே பொருந்த அது குடத்தினுள்ளே சரீரமாய்ப் பரிணமித்தது.

பூம்பாவை யம்மையார் முதற்பாட்டிலே வடிவு பெற்று, வேறெட்டுப் பாட்டிலே பன்னிரண்டு வயதடைந்து குடத்தினுள் அடங்கி யிருந்தனள் பின்பு பின்னையார் சமணர்களும் பௌத்தர்களும், இச் செய்கையை யேற்ற தில்லையென்று எடுத்துச் சொலவார்கள் என்னுங் கருத்தினால் பத்தாந் திருப்பாட்டை அருளிச் செய்தார். அப்பொழுது பூம்பாவை தன் கைவெளியே தோன்றக் குடம் உடைந்து எழுந்தார்கள் .

அங்ஙனம் எழுந்து நின்ற பூம்பாவையைக் கண்டவர்கள் எல்லாரும் அற்புதம் எய்தினார்கள் சிவனடியார்கள் எல்லாரும் ஹர ஹர என்று சொல்லும் ஓசை மிக்கோங்கிற்று தேவர்களும் முனிவர்களும் திருவருட் சிறப்பைநோக்கி புஷ்பமாரி பொழிந்தார்கள். பூமியில் உள்ளவர்கள் இது எங்கள் பரமசிவனுடைய பெருங்கருணையே என்று கைகள் சிரசின்மேல் ஏறிக்குவிய ஆனந்த பாராயணராய் வீழ்ந்தார்கள். அவ்வற்புதத்தைக் கண்ட சமணர் முதலிய புறச்சமயிகள் எல்லாரும் ஏங்கித் தள்ளாடி விழுந்தார்கள். எண்ணில்லாத வயதுள்ள பிரமதேவர் தம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமையினிடத்தே அவளினது அழகின் வெள்ளத்தை நான்கு முகத்தினாலே கண்டார். பதினாறு வயதுள்ள திருஞான சம்பந்த சுவாமிகளோ, அவளினும் பார்க்க மிக்க சௌந்தரியத்தையுடைய தம்மாலே படைக்கப்பட்ட பூம்பாவையினிடத்தே பரமசிவனது பெருங்கருணை வெள்ளத்தை ஆயிர முகத்தினாலே கண்டார். பூம்பாவையைக் கண்ட தந்தையாராகிய சிவநேசர் பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்தார். பூம்பாவை பரமசிவனை வணங்கி, பின்பு பிள்ளையாரை வணங்கி நமஸ்கரித்து எழுந்து நின்றாள்

பிள்ளையார் சிவநேசரை நோக்கி இனி உம்முடைய புத்திரியை வீட்டிற்குக் கொண்டுபோம் என்று திருவாய் மலர்ந்தருளினார், சிவநேசர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கித் துதித்து, சுவாமி! அடியேன் அருமையாகப் பெற்ற இப்புத்திரியைத் தேவரீர் திருமணஞ் செய்தருளல் வேண்டும் என்று பிரார்த்திக்க, பிள்ளையார் அவரை நோக்கி, நீர் பெண் விஷயத்தினால் இறந்த பின் நாம் சர்வான்மாக்களும் உய்யும்படி அவர்களுக்குப் பரமசிவனது



திருவருண் மகிமை விளங்கும் பொருட்டு உற்பவித்தமையால் இவ்வார்த்தை தகாது என்று மறுத்தருளினார்.

அதுகேட்டுச் சிவநேசரும் அவர் பந்துக்களும் மயங்கி பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து அழ, பிள்ளையார் அவர்களுடைய பெருந்துயரம் தணியும் பொருட்டு வேதாகமத் துணிவை அவர்களுக்கு எடுத்து போதித்தருளினார். அப்பால் திருஞான சம்பந்த சுவாமிகள் கோயிலுக்கு கோயிலுக்கு எழுந்தருளி புறம்போந்து வீற்றிருந்தார். சிவநேசர் பூம்பாவையை வேறொருவருக்கும் விவாகம் செய்துக் கொடுப்பதில்லையென்று சொல்லிக் கொண்டுபோய் கன்னிகாமாடத்தில் வைத்தார் அம்மையாரும் பரமசிவனை திரிகரண சுத்தியுடன் பக்திபூண்டு சிவானந்த பெருவாழ்வை அடைந்தாள்.

---

# 31 = கமலினியார் சரித்திரம்.

ஸ்ரீ கைலாசகிரியில் பார்வதிதேவியோடு வீற்றிருக்கும் பரமசிவத்துக்கு தரிக்கும் பொருட்டு புஷ்பங்களைக் கொய்து வர ஆலால சுந்தரர் நந்தவனத்துக்குப் போனார். போனபோது பார்வதி தேவியாருக்குத் தரிக்கும் பொருட்டு அந்த நந்தவனத்திலே புஷ்பங்கொய்துக் கொண்டு நின்ற அவருடைய சேடிகளாகிய அனிந்திதை கமலினி என்னும் பெயர்களையுடைய பெண்களிருவரையுங் கண்டு, அவர்களின் மேல் ஆசைவைத்தார். அவர்களும் ஆலால சுந்தரரைக் கண்டு அவர்மேல் ஆசைக் கொண்டார்கள்.

பின்பு ஒரு பிரகாரம் மனதைத் திரும்பி, புஷ்பங்களைக் கொய்துக் கொண்டு, ஆலால சுந்தரர் சுவாமி சந்நிதானத்துக்கும், சேடியர்கள் தேவி சந்நிதானத்துக்கும் திரும்பி விட்டார்கள்.

அப்பொழுது சமஸ்த ஆன்மாக்களிடத்திலும் வியாபித்திருந்து அந்த ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயங்களினாலே செய்கின்ற கர்மங்களை யறிந்து, அந்த கர்மங்களுக்கேற்ற பலன்களைப் பூட்டி, அக்கர்மங்களைத் தொலைப்பிக்கின்ற காருண்யஸ்வரூபியாகிய கடவுளானவர் ஆலால சுந்தரரை நோக்கி, நீ பெண்கள் மேல் இச்சைக் கொண்டபடியால் தக்ஷிணபூமியிலே மானுட தேகம் எடுத்துப் பிறந்து, அந்தப் பெண்களோடும் புணர்ந்து இன்பம் அனுபவிப்பாய் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அதைக் கேட்ட ஆலால சுந்தரர் மனங்கலங்கி, சந்நிதானத்திலே சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி எழுந்து நின்று அஞ்சலியஸ்தராகி, சுவாமி! தேவரீருடைய அருமைத் திருவடிகளைப் பிரிதற்கு ஏதுவாகிய கொடும்பாவத்தைச் செய்தவனாகிய சிறியேன் மயக்கம் பொருந்திய மனிதப் பிறப்பை யெடுத்து, செய்ய வேண்டியது இன்னது என்றும், நீக்க வேண்டியது இன்னது என்றும் அறியாமல் பிரபஞ்ச வாழ்க்கையிலே மயங்கும்போது, தேவரீர் வெளிப்பட்டு வந்து அடியேனைத் தடுத்து ஆட்கொண்டருளவேண்டும், என்று பிரார்த்திக்க வேண்டுவார். வேண்டியவைகளை ஈந்தருளும் கடவுளும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருளினார். தேவியாரும் அனிந்திதை கமலினி என்னும் இருவருக்கும் இதுபோலவே திருவாய் மலர்ந்தருள மூவரும் பூமியிலே மானிட அவதாரம் செய்தார்கள்.



பார்வதி தேவியாருடைய கட்டளைப்படி கமலினி என்பவள் திருவாரூரிலே உருத்திர கணிகையர் குலத்திலே பிறந்து பரவை யாரென்ற பெயரைப் பெற்றும் பெரும் பருவம் அடைந்திருந்தார். அவரும் தினந்தோறும் பாங்கிமாரோடு கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் பண்ணி வருவார்.

அந்த பரவையார் ஒருநாள் சுவாமி தரிசனம் பண்ணப் போம்போது முன் கைலாயத்தில் சுவாமியின் கட்டளைப்படி வந்த ஆலால சுந்தரனார் திருநாவலூரென்னுந் திருப்பதியிலே ஆதி சைவபிராமண குலத்திலே சடையனாரென்னுஞ் சிவாசாரியாருக்கு அவருடைய மனைவியாராகிய கற்பிலே சிறந்த இசைஞானியார் என்பவரிடத்தே பிறந்து, நம்பி ஆரூரன் என்னும் நாமகரணம் பெற்று, விவாக பருவமடைந்து, விவாகத்தின் போது சுவாமியால் தடுத்தாட் கொள்ளப்பட்டு, திவ்ய திருப்பதிகள் பாடி, ஸ்தலயாத்திரை செய்துக் கொண்டு வரும்போது அப்போது திருவாரூரிலே சுவாமி தரிசனம் செய்யும் பொருட்டுப் பரிசனங்களோடு வந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருவருட் கூட்ட அந்தப் பரவை யாரைக் கண்டு ஆசைக் கொண்டு நின்றார். பரவையாரும் சுந்தரமூர்த்தியைக் கண்டு ஆசைக்கொண்டு பின் சுவாமி தரிசனம் பண்ண வேண்டுமென்னும் விருப்பமானது தம்மை அவ்வாசையினின்றும் நீக்கித் தன் வசமாக்கிக் கொண்டு கோயிலின் உள்ளே செலுத்த சென்றார்

சுந்தர மூர்த்தி நாயனார் அது கண்டு, என் மனதைக் கவர்ந்து சென்ற அதிக சௌந்தர்ய முள்ள இந்தப் பெண் யார்? என்று வினவ, அங்கு நின்றவர்கள் இவர் உருத்திர

கன்னிபரிகையில் ஒருவர் ; இவர் பெயர் பரவையார் என்றார்கள். அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனாரோ கோயிலினுள்ளே போனார். அதற்கு முன் பரவையார் பிரதக்ஷணஞ் செய்து சுவாமியை நமஸ்காரம் பண்ணித் துதித்துக் கொண்டு சந்நிதியினின்றும் புறப்பட்டார். சுந்தரமூர்த்திநாயனார் சுவாமி சந்நிதானத்திற் சென்று பரவையார் மேல் வைத்த பேராசையால் அவரைச் சேரவேண்டிச் சுவாமியினது திருவடிகளை வணங்கிக் கொண்டு புறப்பட்டு பரவையாரைத் தேடி தேவாசிரியன் என்னும் பெயரையுடைய ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்து வன்மீகநாதர் பரவையாரை எனக்குத் தந்தருளுவார் என்று நினைத்துக் கொண்டு அங்கிருக்க சூரியன் அஸ்தமயனமாயிற்று.

முன்னே சுவாமி ! தரிசனஞ்செய்து கொண்டு புறப்பட்ட பரவையார், சுந்தர மூர்த்தியினிடத்தில் தனியே சென்ற தமது மனதை ஒருவகையாக வலிந்து தன் வசப்படுத்தி அதிக மயக்கத்தோடு தமது மாளிகையையடைந்து பூவணையில் இருந்து, தம்மருகிருந்த பாங்கியை நோக்கி, நாம் சுவாமி தரிசனஞ் செய்யப் போனபோது வழியில் எதிராக வந்தவர் யார்? என்று கேட்க, அவள் அவர் பிரம விஷ்ணுக்களும் தேடிப்பறியாத சமானநீதராகிய கடவுளே வலியவந்து ஆட்கொள்ளப்பெற்ற ஆதி சைவராகிய சுந்தரமூர்த்தி யென்றாள் அதுகேட்ட பரவையார் நமது ஆண்டவருக்கு உரிய அடியவரோ என்று சொலலி சுந்தரமூர்த்தி மேல் முன்வைத்த ஆசை மென்மேலும் அதிகரிக்க சயனத்தின் மேல் விழுந்து புலம்பினாள்.

அப்பொழுது கடவுளானவர் பரவையாரைச் சுந்தரமூர்த்திக்கு விவாகம் செய்துக் கொடுக்கும்படி அடியார்



களுக்குக் கட்டளையிட்டு, சுந்தர மூர்த்தியிடஞ் சென்று உனக்குப் பரவையை விவாகம் செய்து தருமப்படி நம்முடைய அடியார்களுக்கு ஆஞ்ஞாபித்தோம் என்று அருளிச் செய்து, பரவையாரிடத்திலும் போய் உனக்கும் சுந்தரமூர்த்திக்கும் விவாகம் நடக்கும் என்று சொல்லியருளினார். மற்றுநாள் உதய காலத்திலே சிவ பக்தர்கள் எல்லாரும் கூடிவந்து சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் பரவையாரை விதிப்படி விவாகஞ் செய்துக் கொடுத்தார்கள்.

இவ்வாறு திருவாரூரிலே தினந்தோறும் திரிகாலத்திலும் அன்பினோடு சுவாமி தரிசனம் செய்துக்கொண்டு பரவையாரோடு வாழ்ந்திருக்குங் காலத்திலே, சுந்தரமூர்த்தி நாயனாரால் நெல் மலை முதலானதுகள் பெற்று இன்புற்றிருக்கையில் தனக்கு பொன் வேண்டி நாயனாரைக் கேட்க அவரும் தான் ஸ்தலங்கள்தோறும் தேவாரம்பாடி சுவாமி தரிசனம் செய்து வரும்போது பழமலை நாதரைப் பாடி தமக்குப் பொருள் வேண்டிவந்த கருத்தை மனத்திற் கொண்ட குறிப்போடு வணங்கித் தொழுது பாடியருளினார்.

அப்போது சுவாமி ! அவருக்குப் பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, சுந்தரமூர்த்தி நாயனார் வணங்கி நின்று, சுவாமி ! தேவரீர் தந்தருளிய இந்தப்பொன்னெல்லாம் திருவாரூரிலே உள்ளவர்கள் அதிசயிக்கும்படி அங்கேவரச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்போது சுவாமியுடைய திருவருளினாலே, சுந்தரனே ! நீ இந்தப்பொன் எல்லாவற்றையும் மணிமுத்தா நதியிலேயிட்டுத் திருவாரூர் குளத்திலேபோய் எடுத்துக் கொள்ளென்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அதைக்கேட்ட சுந்தர மூர்த்திநாயனார். மச்சம் வெட்டி வைத்துக்கொண்டு

பொன்முழுந்தையும் மணிமுத்தாநதியிலே புகவிட்டு மற்ற க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூர் வந்தடைந்தார்.

அங்கு சுவாமி ! தரிசனம் செய்துக்கொண்டு பரவையாரோடு கூடியிருக்கும் நாளில் ஒருநாள் பரவையாரை நோக்கி, எனக்கு திருமுதுகுன்றர் தந்தருளிய பொன்னை மணிமுத்தா நதியிலே புகவிட்டு வந்தேன் ; இப்போது இந்தஸ்தலத்திலே இருக்கின்ற கோயிலுக்கு மேற்றிசையிலுள்ள குளத்திலே போய் அவருடைய அருளினாலே எடுத்துக் கொண்டு வருவோம் வா என்றார் பரவையார் அதைக் கேட்டு இது என்ன அதிசயம் என்று சொல்லி புன்னகை செய்ய சுந்தரர், பெண்ணே ! நமது கடவுளுடைய திருவருளினாலே பொன் முழுதும் குளத்திலே எடுத்து உனக்குத் தருகிறேன் ; இது சத்தியம் என்று சொல்லி, பரவையாரும் கூடவர கோயிலிலே பிரவேசித்து வான்மீகநாதனை வணங்கிக் கொண்டு கோயிலை வலம் வந்து, மேற்றிசையிலிருக்கிற திருக்குளத்தை யடைந்து அதன்படிக்கீழ்க் கரையிலே போய் பரவையாரை நிறுத்தி, சுவாமியை வணங்கி குளத்திலே யிறங்கி அங்கே தடவினார். அப்போது பரமசிவன் சுந்தர மூர்த்தியைக் கொண்டு திருப்பதிகம் பாடுவிக்க வேண்டுமென்னுந் திருவிளையாட்டினாலே பொன்னை அக்குளத்திலே வருவியாதொழிந்தருள, பரவையார், " ஆற்றிலே இட்டுக் குளத்திலே தேடுகிறீரா " என்றார். அது கேட்ட சுந்தர மூர்த்தி நாயனார், சுவாமி ! தேவரீர் முன் அருளிச் செய்தபடியே பொன்னைத் தருமென்று திருமுதுகுன்றர்மேல் திருப்பதிகம்பாடி யருளினார்.



பின்பு பரமசிவனுடைய திருவருளினால் வந்தெழுந்த பொற்றிரளை யெடுத்து கரையிலேற்றி, அந்தப் பொன்னையும், முன் கொண்டுவந்த மச்சத்தையும் உரைப்பித்து, மச்சத்திலும் பார்க்க இது உரை தாழ்ந்தது கண்டு பின்னும் கடவுளைப் பாடினார். பாடியபோது கடவுளானவர் உரை தாழாது அருள் செய்ய, சுந்தரர் மனமகிழ்ந்து, பொற்குவைகளை மாட்டிற் சுமத்தி, பரவையாரோடு வீட்டுக்கு அனுப்பி, கோயிலிலே போய்ச் சுவாமியை வணங்கி, வீட்டுக்குப்போய் பரவையாருடன் இன்புற்று வாழ்ந்திருந்தார்.

---

# 32 - அனிந்திதையார் சரித்திரம்.

—*:*—

கைலாசகிரியிலே சுந்தர மூர்த்தி சுவாமிகளின் மேல் ஆசைவைத்த சேடியர்கள் இருவரில் அனிந்திதையார் என்பவர் ஞாயிறு என்னும் ஊரிலே இருக்கும் வேளாளரிற் சிறந்தோங்கிய ஞாயிறு கிழவர் என்பவருக்கும் புத்திரியாராய்த் திருவவதாரஞ் செய்து சங்கிலியார் என்னும் பெயரைப் பெற்று, உமாதேவியாருடைய திருவடிகளிலே மிகுந்த பத்தியுடையவராய் இருந்தார். அவர் பெதும்பைப்பருவ மடைந்தது கண்டு, தந்தையாராகிய ஞாயிறு கிழவர் தம்முடைய மனைவியாரை நோக்கி, நம்முடைய புத்திரி நம்முடைய வம்சத்தில் ஸ்திரீகளெல்லாரிலும் பார்க்க அதிக சௌந்தரியமும் நற்குணமும் உடையவளாய் இருக்கின்றாள் அவளுக்கு விவாகம் செய்துக் கொடுக்குங் காலமாயிற்று ; இதற்கு என்ன செய்வோம்

என்று சொல்ல, மனைவியார் அவளுடைய சௌந்தரியத்துக்கும் குணத்துக்கும் இசைய ஒரு புருஷனைத் தெரிந்து விவாகம் செய்துகொடும் என்றார்.

அதைக்கேட்டுக் கொண்டிருந்த சங்கிலியார், இவர்கள் பேசும் வார்த்தை எனக்கும் பொருந்தும் வார்த்தையன்று நானோ நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருவருளைப் பெற்ற ஒருவருக்கு மனைவியாவதற்கு உரியேன்; இப்படியன்றி மற்றெப்படி விளையுமோ தெரியேன் என்று நினைந்து, அச்சங்கொண்டு, அறிவுமயங்கி, மிகச்சோகித்து நிலத்திலே விழுந்தார். சமீபத்தில் தந்தையாரும் தாயாரும் அதைக் கண்டு பதை பதைத்து அவரை யெடுத்து ஏங்கிய மனத்தை யுடையவர்களாகி, இவளுக்கு நிகழ்ந்தது யாதோவெனப் பயந்து, தாங்கிப் பனிநீர் தெளித்துத் தடவி அவளுக்குச்சோகம் நீங்கியபின், அவளைப்பார்த்து மகளே! உனக்கு நிகழ்ந்தது என்னைக்குறித்து நீங்கள் பேசியது எனக்கு இசையாது. நானோ பரமசிவனது திருவருளைப் பெற்ற ஒருவருக்கு மனைவியாதற்குரியேன்; நான் இனிமேல் திருவொற்றியூரையடைந்து சிவனது திருவருளிற் செல்லுவேனென்றார்.

அதைக்கேட்ட தந்தை தாயாரிருவரும் சோகமும், அச்சமும், அதிசயமும் உடையவர்களாகி, அந்தச் சங்கிலியார் சொல்லிய வார்த்தையை மறைத்து ஒழுகலானார்கள்; ஒழுகும் நாட்களில், அவர்களுடைய குலத்துக்கு ஒப்பாகிய குலத்தில் உள்ள ஒருவன், நிகழ்ந்த அந்தச் சங்கதியை அறியாதவனாகி, சங்கிலியார் பேரில் விருப்பங்கொண்டு அவருடைய தந்தையார் இடத்திலே கலியாணம் பேசும்பொருட்டுச் சிலரை யனுப்பினான், அனுப்பப்பட்ட அவர்



கள் அத்தந்தையாரிடத்திற் சென்று பேச, அது கேட்டு தந்தையார் நிகழ்ந்த சங்கதியைச் சொல்லுதல் தகுதியன்று என்று நினைந்து, வேறோர் உபாயத்தினால் அனுப்பி விட்டார். அவர்கள் திரும்பிப்போய்ச் சேர்ந்தவுடனே, அவர்களை அனுப்பினவன் அவர்களோடு இறந்து போனான்.

அதைச் சங்கிலியாருடைய தந்தை தாயார் கேள்வியுற்று மனமயங்கி, உய்யவேண்டுமென்கிற நினைவுடையவர்கள் சங்கிலியார் பட்சத்திலே பேசத் தகாத வார்த்தையைப் பேசார்கள். என்பதை உலகம் அறியும்படிச்செய்த திருவருளைக் கண்டு, அதனை யாவர்க்கும் உள்ளபடிச் சொல்லி மிகப்பயந்து, இனி நாங்கள் இவளெண்ணத்தின்படியே இவரைச் சிவ புண்ணியஞ்செய்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்று துணிந்து, தங்கள் உறவாரோடு சங்கிலியாரைப் பார்த்து, நீர் திருவொற்றியூரை அடைந்து கன்னி மாடத்திலிருந்து பரமசிவனைத் தொழுவை என வுரைத்து அங்கழைத்துச் சென்று, கோயிலிலே பிரவேசித்து தரிசனஞ் செய்து, கன்னிமாட மமைத்து அதில் அவரை இருத்தி விடைக்கொண்டு மீண்டனர்கள்.

சங்கிலியாரும் பிரதிதினமும் கோயிலுக்குச் சென்று பூமாலை தொடுக்கும் மண்டபத்தில் திரையிட்டிருக்கு ஓரிடத்திலிருந்து பூமாலைத் தொடுத்து சுவாமிக்கு சாத்துபடி செய்து ஆண்டவன் திருவிளையாடலினை புன்னி அவளுடைய பக்தியி லீடுபட்டவரா யிருந்தார்.

இவ்வாறிருக்க ஓர் நாள் சுந்தரமூர்த்தி நாயனார் கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனஞ்செய்துக் கொண்டு அடியார்கள் செய்யும் திருத்தொண்டைப் பார்ப்பவராகி

புஷ்ப மண்டபத்தினுட் பிரவேசிக்க அங்கு சங்கிலியார் இருப்பதைக் கண்டு அவர்மீது ஆசையுற்று அவண் மீண்டு அங்கிருந்த பெண்மணியாரென்று வினவ. அருகிருந்தோர் அவர் பரமசிவனுக்குத் திருப்பணி புரியும் "சங்கிலி" யார் என மறுமொழி பகர்ந்தனர். அதுகேட்டு, "சுந்தரனார்" கோயிலினுட் சென்று சுவாமியை வணங்கி சங்கிலியாரை தமக்கு தந்தருளும்படி வேண்டி புறத்தே போய் ஓரிடத்தே யிருக்க "பானு குடதிசை" போந்தான் அன்றிரவு சுவாமி அவர் சொற்பனத்திலே சென்று "சங்கிலியை" நமக்கு தருவம். எனப்பணித்தருளி அதுபோதே கன்னிமாடத்துள்ள சங்கிலியின் சொர்ப்பனத்திலே சென்று சங்கிலி! நம் பக்தனான சுந்தரன் உம்மீது மிகுந்த ஆவலுற்றிருக்கின்றான். ஆதலால் நீ அவனை அடைய என சங்கிலி சுவாமி! தங்கட்டளைப்படியே செய்வேன் ஆயின், அவர் திருவாரூரினிடத்தே வசிக்கின்றார். என்றாள். அதுகேட்ட சுவாமி பின்னே! அவன் உனைப்பிரியேனென உறுதி கூறுவன் என பணிந்து சுந்தரன்பாற் சென்று சுந்தர! சங்கிலிபாற் சென்று நங்கருத்தை உரைத்தோம் அவன் ! அவளைப் பிரியேனென உறுதி கூறின் உடன் படுவதாக உரைத்தனள் என சுந்தரன் சுவாமியை வணங்கி சுவாமி உறுதி கூறுங்கால் நீர் ஆலயத்தை விடுத்து "திருமகிழ் மரத்தினடியில் இருத்தல் வேண்டுமென்று சொல்ல கடவுள் இசைந்து சங்கிலிபாற்சென்று "சங்கிலி" நம் தோழனான சுந்தரன் உறுதிமொழிகூற உடன்பட்டிருக்கின்றான். அதுபோது நாம் மகிழ்மரத்தினடியி லிருப்போம் அங்கடைந்து உறுதிமொழி பெறுவென பணிந்து மறைந்தருளினார்.



"சங்கிலியார்" நித்திரைவாராது ஈசனது அருளைக்கண்டு அவனை மனதார வணங்கி அருகிருந்த பாங்கியை எழுப்பி சொற்பனத்தில் நடந்தவற்றைக் கூறி கடவுளை வணங்கினாள். சங்கிலியார் சேடியருடன் சந்நிதிக்குச் சென்று திருப்பள்ளி எழுச்சிக்கு புஷ்பம் தொடுக்க சேடியுடன் கோவிலுக்கு செல்ல அங்கு "சங்கிலி" யின் வரவை எதிர்நோக்கியிருந்த சுந்தரனார் தமக்கு ஈசன் சொற்பனத்தில் சாதித்ததை கூறியருள, சங்கிலியார் எதிர் மொழி கூறாது நாணடைந்து கோயிலுக்குள் புக, சுந்தரன் பின் தொடர்ந்து உறுதிமொழி கூற சுவாமி சந்நதானஞ் செல்வோம வருகவென்றழைக்க "சங்கிலி" யால் விஷயமறிந்த சேடியர் சுவாமி! இதன் பொருட்டு தேவரீர் சிவ சந்நதானத்தில் உறுதி கூறுதல் தகாதென்றார்கள் அதுகேட்ட சுந்தரர் சிவன் செயலறியாது, பெண்ணே! வேறெங்கு * உறுதி கூறல் வேண்டுமென. சேடியர் மகிழ மரத்தின்கீழ் உறுதி கூறில் போதுமென சுந்தரனார். சம்மதித்து அனைவரும், அங்கடைந்தனர்.

---

## 33 = சக்குபாய் சரித்திரம்.

—*—

கிருஷ்ணா நதிக்கரையோரம் வேளை நாட்டிலே பரம சாதுவான "பத்மநாப ராவ்" வேதியருக்கு மகா உத்தமியான 'ருக்குமா' பாய் என்ற இல்லக் கிழத்தியும் குடும்ப பாரம் என்னும் சகடத்தை இனிது நடாத்தி வந்தனர் பகவத் கடாக்ஷத்தினால இருவருக்கும் ஓர் பெண் மகவு

---

* உறுதி - சத்தியம் - உண்மை - சபதம்.

ஜெனித்தது. அதற்கு செல்வபெயராக 'சக்கு' என நாமகரணஞ்சூட்டி வளர்க்கலானார்கள். நாளடைவில் "சக்குபாய்" என அழைக்கப்பட்டு வந்தாள். சக்குபாய்க்கு வயது ஐந்து ஆனதும் தனவயதொத்த இளஞ்சிறுமியர்களுடன் விளையாடிக்கொண்டே கிருஷ்ணா நதிக்கருகில் செல்ல, பாண்டுரங்கன் பிராமண வடிவந்தாங்கி மந்திர உபதேசஞ் செய்து செல்ல, சக்குபாயும் அம்மந்திரத்தை இடைவிடாது பஜித்தபடியே சுகத்துடன் வாலைப்பருவத்தை யடைந்தாள்.

காவீரபுரத்தில் சுந்தரராவ் எனும் வேதியருக்கு சுனாபாய் என்ற மனைவியும், கிருஷ்ணாஜி என்ற ஓர் பிள்ளையும் உண்டு. கிருஷ்ணாஜிராவுக்கு வதுவை செய்யக் கருதி, சுந்தரராவ், சுனாபாய், கிருஷ்ணாஜி ராவ் ஆக மூவருமாய் பலதேசங்களைத்துந் திரிந்து பெண் கிடைக்காததால் தன் நகரம் செல்லக் கருதி இடையிலுள்ள ஊர்களில் விசாரிக்கத் துடங்கி, கிருஷ்ணா நதிக்கரையோரமுள்ள கிவளாட்டிலே விசாரிக்க பத்மநாபராவிடத்தில் பெண்ணிருப்பதாகத் தெரிந்து அங்குபோய் பத்மநாபராவைக் கண்டு விஜாரித்து தன் மகன் கிருஷ்ணாஜி ராவுக்கு அவர் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டார். பத்மநாபராவும் அம்மொழியைக் கேட்டு அவரிடம் சம்மந்தம் செய்ய சம்மதித்து தன் மகள் சக்குபாயைக் கொடுப்பதாக வாக்களித்து சர்வமங்கள கரத்துடன் கிருஷ்ணாஜிராவுக்கும், சக்குபாய்க்கும் வெகு விமரிசையுடன் விவாகம் நடைப்பெற்றது.

விவாகம் செய்ததும் சக்குபாயும், சுந்தரராவும், சுனாபாயும், கிருஷ்ணாஜிராவும் காவீரபுரத்திற்கு செல்ல ஆயத்



தமானார்கள். அதுகண்ட பத்மநாபராவும் தம் மகளுக்குரிய சீதனம் முதலியவைகளை யீந்து வழிகூட்டி அனுப்பினார். சுந்தரராவும், சுனாபாயும் எத்தகையாளர் எனில், ஐயமென்போரை அடித்தலைவர்கள், பசியுடனிருப்பவர்கள் பார்க்க புசிக்கப் பட்டவர்கள். தம் முறவினர், உற்றார்களையும் நாட விட்டார்கள். இத்தகைய குணாளர்களிட்டையில் சக்குபாய் ஸ்ரீராம பஜனைச்செய்தும், பண்டரி நாதனை ஸ்மரித்தும் இல்லறம் நடாத்துவதானாள். அவள் தான் பாகஞ்செய்ய ஏற்பட்ட அடுப்பே திருக்கோவிலாகவும், அதனுடன் உண்டாகும் கட்டையின் சுடரே தீபமாகவும், அந்நெருப்பு கணங்களே ஸ்ரீபாண்டுரங்கனாகவும், பாகஞ் செய்வதிலுண்டாகும், ஓசையே சகல மேளவாத்தியங்களாகவும், தான் வைத்திடும் சிறு கட்டைதுணுக்குகளே திருத்துளாயாகவும் பாவித்து பஜனைச் செய்துக்கொண்டு ஆனந்தத்திலிருப்பாள்.

இவ்வாறாக சக்குபாயனவள் தனது பக்தி நிலையினின்று தவராது, தேகம் மட்டும் பதியினுடைய பதார்த்தம் இல்லறத்திற்கும், ஆன்மா மட்டும். பாண்டுரங்கனது பாதாரத்திலும் வைத்து தன்னிந்திரியங்களை கிரகத்தில் பரிசரியாதி பணிகளை செய்துக்கொண்டு வருவதைக் கண்ணுற்ற மாமன் மாமியார், 'பர்த்தா' இம்மூவரும் இவளுடைய செய்கையினை பிரதிதினமுங் கண்டு சகியாது ஆகாராதிகூட குறைத்தும், கஷ்டங்கள் அதிகமாகக் கொடுத்தும், அவர் மனதை அதில் செலுத்தாது, பாண்டுரங்கனது தியானத்தில் மனது பரவசமுற்று இருக்கக்கண்ட மாமி, மாமனார் அவன்மீது பலபுகார் சொல்லி வைத்து சபித்து இம்சிக்க, மாதர் சிரோன்மணியான சக்குபாய்

மனச்சோர் வின்றி எல்லாம் பாண்டுரங்கனின் திருவிளையாடலென எண்ணி பகவத்தியானத்தில பதிந்திருந்தாள்.

அவளுக்கு மாமி, மாமனார்கள் செய்யும் இன்னதனையுணர்ந்தா அன்னிய மாதர்கள் யாவரும் கண்டு மனங்கசிந்து அவளை நோக்கி நீயுமுன் ஜன்மநாடே கரத காரணமேனென வினவ அதுகேட்ட 'சக்குபாய்' மனங்கசிந்து கண்ணீர் பெருக என தருந் தாய் தந்தையருக்கு என்னைதிசுதர்க விருப்பதால் எனின் மறந்தனர் போலும் என்பதிலிருத்தி பகவத்தியானத்தி லாழ்ந்தி பண்டரிக்கு போகுவதை யறிந்த மாமன், மாமியார்கள் தன் மகனுக்கு செதியறிவிக்க கிருஷ்ணஜிராவ் துரிதமாகச் சென்று அழைத்து வந்து வைத்தும், அடித்தும் ஓர் கம்பத்தில் தாம்புக்கொண்டு பிணைத்தனர். "சக்குபாய்" யாதொரு சிந்தனையுஞ் செய்யாது பண்டரி நாதனை நோக்கி பலவிதமாக துதித்து தோத்திரம் செய்துக்கொண் டிருப்பதை யறிந்த பண்டரிநாதன், மனவருத்தங்களையறிந்த பிராட்டியார் ஏன் இவ்வாறாக வருத்தங்கொண்ட காரணமென்னவென்று கேட்க பண்டரி நாதர் பிராட்டியை நோக்கி, பெண்ணே ! காவீர நகரத்தில் பக்தியில் மிகுந்த "சக்குபாய்க்கு துன்பங்கள் நேர்ந்தன ஆதலால் இதுவேதே சென்று அவளை ரக்ஷிக்க வேண்டியது நமது கடமை ஆகவே நான் சென்று வருகுறேனென்று புறப்பட்டார்.

அவ்வனம் புறப்பட்ட பண்டரிநாதர் ஓர் அழகிய இளவஞ்சி உருவந்தாங்கிற சக்குபாயை அணுகி அவளின் பிணிப்பை நீக்கி தேறுதல் சொல்லி அவளை பண்டரிக்கு பிரயாணப்படுத்தி தாம் அப்பிணைப்பில் பக்குவமாக பிணைத்துக் கொண்டார். என்னே ! "தொண்டர் தம்



பெருமைச் சொல்லவும் பெரிதே !" எனும் வாக்கியத்தை நன்கு மெய்ப்பித்து காட்டுகின்றது. கேவலம் பக்தியின் செய்கையை யார் தாம் விளங்கக் கூறுவார். உலகரக்ஷகனான நாரதனே தம் பக்தரை காக்கும் பொருட்டு தாம் அம்பின் பிணைப்பில் தான் கட்டுண்டார். பக்தியை விட உயர்வை என்று உலகிலில்லையென்பது இதனால் ஊர்ஜிதப் படுகிறதல்லவா ?

தன்னை பிணைப்பி னின்று விடுத்து பண்டரிக்கு போகப் பிரயாணப் படுத்திய அப்பெண் மணிக்கு சக்குபாய் அனந்த வந்தனைப் புரிந்து அவ்விரவிலேயே மனமஞ்சாது பகவத்தியானத்துடனே காடு, வனங்களைக் கடந்து பண்டரி க்ஷேத்திரத்தை யடைந்து ஆங்காங்கு பஜனலங்கிருமாய் பகவத்தியானஞ் செய்துக் கொண்டிருக்கும் பக்த கோடிகளுக்கு வந்தனைப் புரிந்து பீமா நதியில் ஸ்நானம் செய்து சந்நிதியி லுட்பிரவேசித்து பாண்டுரங்கனது கமல மலரிதனைக் காத்தாற்பற்றி பக்தி எனும் நீரால் அபிடேகஞ் செய்து அன்பெனும் மலர் தூவி அர்ச்சித்து அன்பொழுக ஆநந்த பாஷ்யம் பெருக, ஸ்ரீமந்நாராயணனை தோத்திரம் புரிந்து இனி நான் பெற்றபேறு போதும் இனி இவ்வுடல் வேண்டேன் என உறுதிப்படுத்தி தன்னுயிரை பாண்டுரங்கனின் பாதத்தில் காணிக்கையாக அர்ப்பணம் செய்தாள். அது கண்ட அர்ச்சகர் அச்சவத்தை எடுத்து அதற்குறிய விதிப்படி "தகன கிரியை" செய்தானதும் காவீரபுரத்து வேதியர்கள் சக்குபாய் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களை எடுத்துக்கொண்டு சக்குபாயின் புக்ககத்திற்கு பிரயாணப் பட்டார்கள்.

பண்டரிநாதன் பண்டரியி லில்லாதது கண்டு பக்த கோடிகளெல்லாம் துயருற்றிருக்க பிராட்டியறிந்து பக-

வான் சக்குபாய் வீட்டிருக்கின்றார். சக்குபாய் உயிர் பெற்றெழுந்தாலொழிய அவர் இவண் அணுகலாது ஆகவே பீமாநதியிலுள்ள அவளது அத்திகளைக் கொண்டு வந்து சந்நிதியில் வைத்து உயிர்ப்பியும். அவ்வஸ்துகளுக்கு அடையாளமானது, அதை எடுத்து செவியில் வைத்தால் அது ரங்கா ரங்கா என்று சப்திக்கும் என்று ஆவேச ரூபியாக பணித்து ஏகினர். அவ்வாறே அவ்வத்திகளை யெல்லாம் ஒருங்கே சேர்த்து பகவத்கோஷ்டிகளும் பரிசுத்த மனதுடனே பண்டரி நாதனைகள் தோத்திரம் புரிய கல்லைப் பெண்ணாக்கிய ஸ்ரீமந்நாராயணன் அவ்வத்திகளை பெண்ணுருவாக்கி யருளினர்.

பிராட்டியாரின் கிருபா கடாக்ஷத்தைப் பெற்று [illegible]த்தின் குளத்தருகே செல்ல அங்கு, மாயா சக்குவானவள் வந்து நீர் குடத்தை சக்குவின் கையில் தந்து பண்டரிக்குபோய் ஸ்ரீ மந்நாராயணனைக் கட்டி வந்தித் தனையோ வென, அவ்வாறே தங்களாசீர்வாதத்தால் கண்டவந்தித் தேனென, அம்மாயா சக்குபாய் சொல்லுகிறாள், ஓ சக்குவே! நீ சென்ற பின் எனக்கு களையேற்பட மாமன் மாமிகள் பிணைப்பை நீக்கி களையாற்றி என்னை நீ எனக் கருதி விட்டு பணிவிளை புரிய கட்டளை யிட்டனர், நீபோய் வந்தது நல்லதாயிற்று நான்போய் வருகிறேன் என்று சொல்லி சக்குபாயிடம் விடைப்பெற்று மீண்டனர்.

அத்திகளை எடுத்துவந்த வேதியர்கள் காவீரபுரம்வந்து சுந்தரராவிடமும் சுளுபாயிடமும் கொடுத்து விஷயத்தை சொல்லக்கேட்ட இருவரும் சக்குபாயை யழைத்து உண்மையுணர்ந்து சக்குபாயின் ஆதியோடந்தம்வரையில் நடந்தவைக்கேட்டு பகவத் ஞானம் பிறந்து உள்ள சொத்துக்க



ளனைத்தும் விநியோகப்படுத்து அனைவரும் பிரயாணப் பட்டு பண்டரிக்குச் சென்று பீமா நதியில் மூழ்கி பக்த கோடிகளுக்கு வந்தனைப்புரிந்து திருக்கோயிலுள் பிரவேசித்து கடவுள் பதத்தைப் பிடித்து.

"பொன்னிசூழரங்கமேய பூவைவண்ணமாயகேள்
என்னதாவியென்னும் வல்வினையினுட்கொழுந்தெழுந்
தன்னபாதமென்னநின்ற வெண்சுடர்க்கொழுமலர்
மன்னவந்துபூண்டுவாட்ட மின்றியெங்குநின்றதே."

என பலவாறு பஜித்து நின்றார்கள்.

பண்டரி நாதர் இவர் மனதை சோதிக்கக் கருதி வாளாவிருந்தனர். அதுபோது 'பக்த சக்குபாய்' சுந்தரராவ், சுளுபாய், கிருஷ்ணாஜிராவ் ஆக நால்வரும் பலவாறு பகவத் சங்கற்பத்தை புகழ்ந்து வணங்கி ஆனந்த பாஷ்யம் பெருக மனங்கசிந் துருகஸ்தோத்திரம் புரிந்தார்கள்

அதுபோது பக்தர்களுக் கெளியனும், பாற்கடற்று யின்றவனும், துஷ்ட நிக்ரஹ இஷ்டபரி பலனனும், பக்தியென்னும் வலைபிற்சிக்குண்டு தொண்டர்கள் வேண்வன, அருளுவ வனுமாகிய பரந்தாமன் பிராட்டி சமேதனாக காக்ஷியளித்து, ஏ! பக்த சிரோன்மணிகளே? நீவிர் யாவரும் பெறுதற்கரிய பேரின்ப வெள்ளமாகிய அமுதினை யுண்டு சாலோக - சாரூப - சாமீப - சாயுஜ்ய - என்னும் நான்கினும் சிறந்த சாயுஜ்ய பதவியை அடைந்து சதா நம்மையறிந்து சந்தோஷமாக இருங்கள் எனபணித்து மறைந் தருளினர்

அதுகண்ட 'பக்த சக்குபாய்' சுந்தரராவ், சுளுபாய், கிருஷ்ணாஜிராவ், அனைவரும் ஆண்டவன் காக்ஷியை கண்

னாரக் கண்டு மனமாற துதித்து எல்லாம் வல்ல இறைவனது கருணா கடாக்ஷத்தினால் பெறுதற்கரிய பேரின்ப வீட்டை யடைந்து தசாவதார லீலா விநோதனாகிய ஸ்ரீமந் நாராயணனது நாமசங்கீர்த்தனங்களை பஜித்து ஆனந்த சாகரத்தில் மூழ்கினர்.

---

# 34 - திருவெண் காட்டு நங்கை சரித்திரம்.

———:*:———

சோழமண்டலத்திலே திருச்செங்காட்டாங் குடியிலே ஆமாசதியர் குலத்திலே பரஞ்சோதியா ரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆயுள்வேதங்களிலும், படைக்கலத் தொழில்களிலும், குதிரையேற்றம் யானையேற்றங்களிலும் மிகச் சிறந்தவர், வேதாகமங்களை, மெய்ப்பொருளை யறிதல் வேண்டுமென்னும் அவாவினோடு திருவருளை முன்னிட்டுப் பரிட்சித்தமையால் பரமசிவனே மெய்க்கடவுள் என்னும், அவருடைய திருவடிகளை யடைதலே முத்தி நெறி யென்றும் தெளிந்து, அவருடைய திருவடிகளையும் அவரோகதி என்று நம் இடைவிடாது அன்பினோடு தியானிப்பவர். சிவனடியார்களுக்குஎக்காலமும் திருத்தொண்டு செய்பவர். அவர் அரசனிடத்திலே அனுக்கிரகராகி, அவன் பொருட்டு யானை செலுத்திக்கொண்டு சென்று, அவனோடு மாறுபட்ட பல அரசர்களை வென்று, அவர்கள் தேசங்களைக் கைப்பற்றி அவனால் நன்கு மதிக்கப் பட்டவர்.

ஒரு முறை உத்தர தேசத்திலே வாதாவி எனனும் நகரத்திற் சென்று, அதனை வென்று, பலவகை இரத்தினங்



களும் நிதிக்குவைகளும், யானை கூட்டங்களும், குதிரைக் கூட்டங்களும், அரசனுக்கு முன் கொண்டுவந்தார். அது கண்டு அரசன், அவருடைய யானையேற்றத்தின் வலிமையை அதிசயித்துப் புகழ்ந்து பேச, அவரை யறிந்த மந்திரிகள் அரசனை நோக்கி, மகாராஜரே! இவர் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்கையால் இவ்வுலகத்திலே இவருக்கு எதிராவார் ஒருவருமில்லை யென்றார்கள்.

அரசன் அதைக்கேட்டு அஞ்சி நடு நடுங்கி, இரண்டு கண்களிலும் சோக பாஷ்பஞ்சொரிய, இவர் எங்கள் கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை உணராது கொடிய போர் முனையிலே விட்டிருந்தேன்; ஐயையோ! இது எவ்வளவு கொடிய பாவம்? என்று சொல்லி, பின்பு பரஞ்சோதியாரை நோக்கி, சுவாமி! இக்குற்றத்தைப் பொருத்தருள் வேண்டுமென்று பிரார்த்தித்து நமஸ்கரித்தான். பரஞ்சோதியார் தம்மை நமஸ்கரித்தற்கு முன் தாம் அவனை நமஸ்கரித்து, மகாராஜரே! நான் உனது உரிமைத் தொழிற்கு அடுத்த திறத்தைச் செய்வேன்; அதனாலே என்ன தீங்கு யென்றார். அரசன் அவருக்கு நிறைந்த நிதிக்குவைகளையும், விருத்திகளையும் கொடுத்து, நீர் உம்முடைய நிலைமையை நான் அறியா வண்ணம் நடத்திக் கொண்டு வந்தீர். இனி என் மனக் கருத்திற்கு இசைந்து எனக்குப் பணிசெய்தலை யொழித்து, நீர் விரும்பியவாறே சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் வெளிப்படத் திருத்தொண்டு செய்யும் என்று விடைக் கொடுத்தான்.

பரஞ்சோதியார் விடைப் பெற்றுக்கொண்டு தம்முடைய திருப்பதியிற் சென்று, கணபதீச்சரத்தில் வீற்றிருக்

கின்ற கடவுளை வணங்கி, அவருக்குத் திருத்தொண்டுகளை வழுவாது செய்வாராயினர். திருவெண்காட்டு நங்கையாரென்னும் மங்கையாரோடு கூடி இல்லறத்தில் வாழ்ந்திருந்து, நாடோறும் முன்னே சிவனடியார்களை திருவமுது செய்வித்து பின் தாம் உண்பார், சிவனடியார்களை மிகுந்த அன்பினோடு வழிபட்டு அவர்கள் திருமுன்பே மிகச் சிறியராய் ஒழுகின்றமையால் அவருக்குச் சிறுத்தொண்டர் என்னும் பெயர் கொடுக்கப் பட்டது.

கணபதீச்சுரருடைய திருவருளினாலே அவருக்குத் திருவெண் காட்டு நங்கையாரிடத்திலே சீராளதேவர் என்னும் புத்திரர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்து வயதிலே வித்தியாரம்பஞ் செய்வித்தார் அந்நாளிலே அத்திருப்பதிக்கு எழுந்தருளி வந்த திருஞான சம்பந்தப் பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து, அவரை வணங்கித் துதித்து. அவருடைய திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப் பெற்றார்.

பரமசிவன் சிறுத்தொண்ட நாயனாருடைய மெய்யன்பையும், திருவெண் காட்டு நங்கையாருடைய மெய்யன்பையும், உகர்ந்தருளுதற்குத் திருவுளங் கொண்டு, உட்சமயங்கள் ஆறனுள் ஒன்றாகிய வைரவத்துக்கு உரிய திருவேடங் கொண்டு கைலாசத்தினின்றும் நீங்கி திருச்செங்காட்டாங்குடியை யடைந்து, சிறுத்தொண்ட நாயனாருடைய வீட்டு வாயிலிற் சென்று சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கின்றாரோ? என்று வினவ, தாதியாராகிய சந்தன நங்கையார் முன் வந்து வணங்கி, சுவாமி! அவர் சிவனடியார்களைத் தேடிப் புறத்தே போய் விட்டார். தேவரீர் உள்ளே எழுந்தருளும் என்றார். அதற்கு வைரவர் பெண்கள் இருக்கு



மிடத்தில் நாம் தனியே புகோம் என்று அருளிச்செய்ய, திருவெண் காட்டு நங்கையார் அதைக்கேட்டு இவ்வடியவர்போய் விடுவார், போலும் என்று பயந்து விரைந்து வந்து, சுவாமி! அடியேனுடைய நாயகர் எப்போதும் சிவனடியாரை அமுது செய்விப்பவர் இன்றைக்கு ஒருவரையுங் காணாமையால் தேடிப் போயினர். தேவரீருடைய திருவேடத்தைக் கண்டாராகில் மிக மகிழ்வர் இப்பொழுதே வந்து விடுவார் எழுந்தருளியிரும் என்று விண்ணப்பஞ்செய்ய, வைரவர் நாம் உத்தரதேசத்திலுள்ளோம். சிறுத்தொண்டரைக் காணவந்தோம், எப்படியும் அவர் இல்லாதபோது நாம் இங்கே இரோம், கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தி மரத்தின் கீழ் இருக்கின்றோம், அவர் வந்த மாத்திரத்தே அவருக்குத் தெரிவியுங்கள் என்று சொல்லி திருவாத்தியை அணைந்து அதன்கீழ் இருந்தருளினார்.

சிறுத்தொண்ட நாயனார் சிவனடியார்களைத் தேடி எங்குங் காணாது வீட்டுக்குத் திரும்பிவந்து மனைவியாருக்குச் சொல்லித் துக்கித்தார். மனைவியார் உத்தரதேச வாசியாகிய ஒரு வைரவர் இங்கு வந்து நாங்கள் இங்கே யெழுந்தருளியிருக்கும்படி சொல்ல, அது கேளாது கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தியின் கீழேபோய் இருக்கின்றனர் என்றார்.

உடனே சிறுத்தொண்டர் மிக விருப்பத்தோடு விரைந்து சென்று அவரைக்கண்டு வணங்கிநிற்க. அவர், பெரிய சிறுத்தொண்டர் நீரோ என்று திருவாய் மலர்ந்தருளினார். சிறுத்தொண்டர் அவரை வணங்கி, சுவாமி! சிவனடியார்கள் தங்கள் கருணை மேலீட்டினாலே அடியேனையே

அப்படி அருளிச் செய்வார்கள். அது நிற்க, இன்றை கருத்திருவமுது செய்வித்தற்குச் சிவனடியார்களைத் தேடியும் கண்டிலேன் இப்போது அடியேன் செய்த புண்ணியத்தினாலே தேவரீரைக் கண்டேன். தேவரீர் அடியேன் வீட்டுக்கு எழுந்தருளி திரு அமுது செய்ய வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்ய, வைரவர் அன்பரே! நாம் உத்தர தேசத்தில் உள்ளோம்; உம்மைக்காண வந்தோம்; நம்மை அமுது செய்விக்க உம்மால் முடியாது; அது மிக அருமையென்றார்.

அப்போது சிறுத்தொண்டர் தேவரீர் அமுது செய்யும் இயல்பை அருளிசசெய்யும்; சீக்கிரமாக பாகம் பண்ணிவிட்டேன்: சிவனடியார்கள் தலைப்பட்டின் தேடுதற்கு அரியனவும் எளியனவாம் என்று சொல்ல வைரவர் நாம் ஆறுமாசத்துக்கு ஒருமுறை பசுவைக்கொன்று உண்போம், அதற்கு உரியநாளும் இந்நாளே யாம். அப்படியூட்டுதல் உம்மாலியலா தென்றார்.

அதற்கு சிறுத்தொண்டர், மிக நன்று! அடியேன் அனேகம் பசுக்களை யுடையேன், தேவரீருக்குப் பிரீதியாய பசு இன்னதென்று அருளிச்செய்வீராகில் அடியேன் விரைந்து சென்று பாகம் பண்ணுவித்து காலந் தாழ்க்காமல் வருவேன் என்று சொல்ல, வைரவர் நாம் உண்பது நரபசு, அது ஐந்து வயதினை யுடையதாயும், அவயவப்பழுதில்லாததாயும், ஒருகுடிக்குத்தான் ஒன்றேபிள்ளையாயும் இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட சிறுவனை மனமகிழ்ச்சியோடு தனைப்பிடிக்கத் தந்தை அரிதல்வேண்டும். இப்படி சமைக்கப்பட்ட கறியே நாம் இட்டு உண்பேன் என்றார். சிறுத்தொண்டர் தேவரீர் அமுது செய்வீராகில் அடியே



னுக்கு இதுவும் அரிதன்று என்று சொல்லி, அவரை வணங்கி விடைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போயினார்.

சிறுத்தொண்டருடைய வரவை நோக்கி நின்ற மனைவியார் அவருடைய மலர்ந்த முகத்தைக் கண்டு அவரை வணங்கி, அடியாருடைய செய்கையை வினவி. அவர் மனைவியாரை நோக்கி ஒரு குடிக்கு ஒரே சிறுவனாகிய ஐந்து வயசு உடையனுமாய், அவயம் பழுதில்லாதவனுமாய் இருக்கும் பிள்ளையை மனமகிழ்ச்சியோடு தாய் பிடிக்கத் தந்தை யரிந்து சமைத்தால் அமுது செய்வதற்கு உடன்பட்டன ரென்றார்.

அப்பொழுது மனைவியார் அவ்வடியவர் விரும்பியபடி அமுது செய்விக்கும் பொருட்டு ஒரு குடிக்கு ஒருவனாஞ் சிறுவனைப் பெறுவாறு எங்ஙனமென்று சொல்லி, சிறுத்தொண்டர், பிராண நாயகியே! இத்தினத்துச் சிறுவரை வேண்டிய திரவியங்களைக் கொடுத்தால் தருவாருளராயினும் நேர் நின்று அச்சிறுவனை அரியத்துணியுந் தந்தையாரோர இல்லை இனித்தாழாமல் நாம் பெற்ற சிறுவனையே அழைப்போம் என்றார்.

அதற்கு மனைவியார் இசைந்து எங்களைக் காக்கும் பொருட்டு அவதரித்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தினின்றும் அழைத்து வாருமென்று சொல்ல, சிறுத்தொண்டர் மன மகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்துக்கு விரைந்துசென்று தம்முடைய புதல்வராகிய சீராள தேவரை எடுத்துத் தோள்மேல் வைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தார். மனைவியார் எதிர் வந்து புதல்வனை வாங்கி திருமஞ்

னம் ஆட்டி கோலஞ்செய்து நாயகர் கையிற்கொடுத்தார். அவர் அடுக்களையிற் செல்லாது உலகத்தவர்கள் அறியா வண்ணம் ஓர் மறைவிடத்திற் கொண்டுபோனார். அந்தப் பிள்ளையைப் பெற்ற தாயார் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டு வந்தார் தந்தையார் புதல்வரையெடுத்து அவருடைய தலையைப் பிடிக்க, தாயார் அப்புதல்வருடைய இரண்டு கால்களையும் தம்முடைய மடியிலே பிடுக்கி அவர் கைகள் இரண்டையும் தம்முடைய கைகளினாலே பிடிக்க, அப்புதல்வர் தம்முடைய தந்தை தாயார்மிக மகிழ்கின்றனர் என்று மகிழ்ந்து நகை செய்ய, தந்தை தாயார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினாலே அவருடைய தலையை அரிதலாகிய அரிய செய்கையைச் செய்தார். அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாதென்று கழித்து அதனை மறைத்து நீக்கும் பொருட்டு சந்தனநங்கையார் கையில் கொடுத்து மற்றை புறப்புகளின் இறைச்சிகள் எல்லாவற்றையும் அறுத்துப்பாகம் பண்ணி, வேறு கறிகளும் அமைத்து, சோறும் சமைத்து நாயகருக்குத் தெரிவித்தார்.

நாயகராகிய சிறுத்தொண்டர் பெருங்களிப்புடையராகி, விரைந்து சென்று திருவாத்திப்பின்கீழ் இருந்த வைரவரை வணங்கி, சுவாமி! தேவர் பிரியப்படி பாகம் பண்ணுவித்தேன். எழுந்தருளிவந்து திருவமுது செய்தருளல் வேண்டும். என்று விண்ணப்பஞ்செய்து அவரை வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், ஆசனத்திலிருக்க, அவருடைய திருவடிகளை ஜலத்தினால் விளக்கி அந்த தீர்த்தத்தை தங்கள் சிரசின் மேலே தெளித்து, விடெங்கும் புரோட்சித்து, தூபதீபங்களாலே அருச்சித்து வணங்கினர். மனைவியாராகிய வெண்காட்டு நங்கையார் பரிகலந்திருத்தி, அன்னமுங் கறியமுதும் படைத்தார். வைரவர் அதைப்பார்த்து



நாம் சொல்லிய முறையே கொன்ற பசவினது உறுப்புகள் எலலா வற்றையும் பாகம் பண்ணினீரா? என்று வினவ, திருவெண் காட்டு நங்கையார் தலை இறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து விட்டோமென்றார். வைரவர் அதுவும் நாம் உண்பதென்றார். அது கேட்டு சிறுத்தொண்டர் மனைவியாரோடும் திகைத்து அயர, சந்தன நங்கையார் நான் அத்தலை இறைச்சியை அடியவர் அமுது செய்யும் பொழுது நினைக்கவரும் என்று முன்னமே பாகம் பண்ணிவைத்தேன் என்று எடுத்துக் கொடுக்க, திருவெண் காட்டு நங்கையார் முகமலர்ந்து வாங்கிப் படைத்தார்.

அதன் பின் வைரவர் சிறுத்தொண்டரை நோக்கி நாம் தனியே உண்ணோம். சிவனடியார்களைக் கொண்டுவாரும் என்று அருளிச்செய்ய சிறுத்தொண்டர் ஏங்கி, ஐயோ! அடியவர் திருவமுது செய்தற்கு இடையூறு இதுவே என்றுநினைந்து வீட்டுக்குப் புறத்திலேபோய் சிவனடியார்களைத் தேடிக்காணாது துக்கத்தோடு வந்து வைரவரை வணங்கி சுவாமி! சிவனடியார்களைக் காணேன்; அடியேன் திருநீறு இடுவார்களைக் காணேன்; அடியேன் திருநீறு இடுவாரைக் கண்டு அன்னங் கொடுப்பேன் என்று விண்ணப்பஞ்செய்ய, வைரவர் சிறுத்தொண்டரை நோக்கி உம்மைப் போலத் திருநீறு இட்டார் உளரோ நீர் இருந்து உண்ணுமென்றுசொல்லி, பின் வெண்காட்டு நங்கையாரைநோக்கி, இவருக்குச் சோறுங், கறியும், படையும் என்று அருளிச் செய்ய அவளும் படைத்தார்.

சிறுத்தொண்டர் வைரவரை ஊட்டவேண்டி உண்ணப் புகலும் வைரவர் தடுத்தருளி ஆறுமாசத்துக்கு ஒரு

முறை உண்ணுகின்ற நாம் உண்ணுமளவும் தரியாமல் எப்பொழுதும் உண்கின்ற நீர்முன் உண்பது என் உம்முடன் உண்ணும் பொருட்டு உமக்குப்புத்திரன் உண்டேல் அழையும் என்றார். சிறுத்தொண்டர் இப்போது அவன் உதவான் என்று சொல்ல, வைரவர் அவன் வந்தாற்றான் நாம் உண்பேம்; தேடியழையும் என்றார். சிறுத்தொண்டர் தெரியாது எழுந்து மனைவியாரோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலே போய் 'புதல்வனே வா! என்று' அழைக்க, மனைவியாரும் நாயகரது பணியில் நிற்பாராகில், சீராளனே! சிவனடியார் அடியேங்கள் உய்யும் பொருட்டு உடனுண்ண உன்னை அழைக்கின்றார், "வா" என்று அழைத்தார். அப்பொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினாலே பள்ளிக்கூடத்தினின்று ஓடி வருபவர்போல வந்தார்.

தாயார் அவரை எடுத்துத் தழுவி நாயகர் கையிற் கொடுக்க, அவர் இனிச்சிவனடியார் அமுது செய்யப்பெற்றேம் என்று மனமிக மகிழ்ந்து அப்புதல்வரை விரைவிற் கொண்டு அடியவரை அமுது செய்வித்தற்கு உள்ளே வந்தார். அதற்குமுன் வைரவர் மறைந்தருள சிறுத்தொண்டரும் திருவெண்காட்டு நங்கையும் அவரைக் காணாமையால் மனங்கலங்கித் திகைத்து விழுந்தார்கள். கலத்திலே இறைச்சிக் கறிக்காணாமையால் அச்சமுற்றார்கள். வைரவர் அடியேங்கள் உய்யும் பொருட்டுத் திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனரோ என்று தேடிமயக்கங் கொண்டு புறத்திற் செல்ல அச்சிறுத்தொண்டர் செய்தது நிஷேதானுட்டானமாயினும் அவர் சிவானந்தானுபவ மேலிட்டு நிற்கையால், கருவிகரணங்கள் தற்போதச் சிவிப்பாய் எழுந்து செய்தமைப் பற்றி அதனை விதானுட்டானமாகவே கொண்டருளிய பரமசிவன் அரிபிரமேந்திராதி தேவர்



கள் முதலாயினோர் சேவிக்க உமாதேவியாரோடும், சுப்பிரமண்ணிய சுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினார். சிறுத்தொண்டரும் திருவெண்காட்டு நங்கையாரும், சீராளதேவரும், தாதியாரும் ஆகிய நால்வரும் அவர்களைத் தரிசித்து ஆனந்த அருவி சொரிய என்பும் மனமும் நெக்கு நெக்குருக பரவசமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்று தோத்திரம் பண்ணினார்கள். பின்பு பரமசிவனும் பார்வதியாரும் சுப்பிரமண்ணிய சுவாமியும் அவர்கள் நால்வரையும் தங்களை எக்காலமும் பிரியாது வணங்கும் பேரின்பத்தை உகர்ந்துக் கொண்டு இருக்கும் பொருட்டு உடன்கொண்டு திருக்கைலாசத்தை யடைந்தார்கள்.

---

## 35 வந்தியம்மையார் சரித்திரம்.

—*∘*—

தெய்வத் தன்மை வாய்ந்த வந்தியம்மையானவள் சிவபக்தியில் மிகுந்தவள், பரோபகார சிந்தையும், ஜீவகாருண்யமும், சிவனடியார்களை யேனும் பக்தியும். அமைந்து சதா தெய்வச் சிந்தனை புரியும் தன்மைவாய்ந்தவள் பிட்டு சுடுவதும், அதனாலாய ஊதியத்தைக் கொண்டு அடியார்க் கிட்டு புசிப்பதுமாக இருந்தாள் ஆனால் அவள் விருத்தாப்பிய விதவையாவள். அவ்வம்மையின் மேன்மையை எடுத்தோது மோமெனில் இச்சிறு புத்தகம் போதாவென விடுத்தனம்.

இவ்வாறு வந்தியம்மையானவள் மதுரையம்பதியிலே பிட்டு விற்று ஜீவித்துக் கொண்டிருக்கும்போது, வைகைக்

கரை உடைய மன்னன் கரையடைத்துப் பார்த்து முடியாததால் அறிந்து மன்னன் ஊரில் உள்ள யாவர்களும் ஒவ்வொரு ஆள் அனுப்பவேண்டுமென்று பறைபறைவித்தான்.

இவ்வாறு மன்னன் விட்ட கட்டளைப்படி ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆளை அனுப்பினார்கள். அதுபோது நம் வந்தியம்மையாரின் பாகப்படிக்கு ஆள் கிடைக்காததால் அம்மையார் மன்னனால் தண்டனை யடையவேண்டி வருமேயென்று மனவருத்த முற்றுகூடலம்பதி லரசனாகிய சிவபெருமானை தொழுது வணங்கினார் இதுகாலம் பிட்டு விற்று ஜீவனஞ்செய்துக் கொண்டுவந்த எனக்கு இதுபோது மன்னவனது கட்டளைப்படிக்கு நடக்காமையால் துன்பம் வந்து விளைந்ததே என் செய்கேன், ஈசனே எனக்கு ஒருவரும் துணையுமில்லை, சுற்றமுமில்லை அனாதியாகவுள்ள எனக்கு இத்துன்பம் சேர்ந்ததே ஈசாவென, ஆண்டவனிரு கமலபதத்தை யுன்னி வருந்தலாயினார். பக்தர் கருணாதயா மூர்த்தியாகிய பரமசிவனானவர். பக்தியிற் சிறந்த வந்தியம்மையின் துயரை சகியாதவராகி அரையில் ஓர் பழைய துணியொன்றை சுற்றி, ஓர் கூடையை தூக்கி வந்தியிருப்பிடத்திற்கு வந்து கூலி ஆள்! கூலி ஆள்! எனக் கூவினார். அதுகேட்ட வந்தியம்மை விரைந்தெழுந்துவந்து அக்கூலியாளை அழைப்பித்து அன்புக் கொண்ட மனத்தினராய் எனக்கு கட்டளையிட்டபடி என் பாகத்திற்கு அளந்த கரையை யடைத்து தருவையோ வென்று வினவினார். அதுகேட்ட கூலியான்! உங்கருத்தின்படி வேலை செய்கின்றேன். அப்படி செய்வதற்கு கூலியாது தருவை என்றான்.



* அம்மொழிகேட்ட வந்தியம்மையார் உனக்கு கூலியாக உதிர்ந்த பிட்டு தருவேனென கூலியாள் பசியாக இருப்பதால் உதிர்ந்த பிட்டினையளியும் அதை புசித்துக் களைப் பாறி பின் உன்னுடைய பாகக்கரையை கட்டுவேன் என்றான். அப்படியே உதிர்ந்த பிட்டினை கொடுக்க கூலியான் அன்புடன் புசித்து தாய் தந்தையின்றி கூலியாளாக வந்த எனக்கு யான் கொண்ட இளைப்பை யாற்றினை இனி உன்னுடைய வேலையை பூர்த்தி செய்குவேனென எழுந்து வைகைக்கரை யடைந்தார் அங்கு மேலதிகாரியிடம் சென்று "வந்தியாள்" வந்தேனென்று ஏட்டில் பதிவு செய்வித்து வைகைக்கரை யடைப்பான் வேண்டிய மண் வெட்டிக் கொண்டு மண்ணை வெட்டி கூடையில் வைப்பதும், அதிக பாரமாக இருக்கின்றதென கீழே கொட்டுவதும், மீண்டும் கொஞ்சமாக எடுத்து வைப்பார் சிம்மாடு கீழே விழும்படி செய்வார் மீண்டும் சுமை பிறக்கி வைத்து சிம்மாட்டை எடுத்து சரிபடுத்தி சுமையை தலைமீது வைப்பதும், எடுத்து போய் கரை சரியும்படிக்கு மேலே கொட்டுவதுமாக சில முறைசெய்து அதனால் ஏற்பட்ட களைப்பினார். ஓர் விருக்ஷத்தினடியின் போய் கூடையை கீழே வைத்து சிம்மாட்டையும் அதன்மேல்வை துயிலலாழ்ந்தார்.

மீண்டும் துயில் நீங்கு மண்ணை வெட்டுவதும், குவிப்பதும், மிதிப்பதும், பித்துக்கொண்டவன் போன்று பாடுவதும், ஆடுவதுமாக இருந்து வேலைசெய்து இளைத்தவர் போன்று களைத்து வந்தியம்மையாரிடம் சென்று அவரிடம் பிட்டைத் தின்று களிப்படைவார். மீண்டும் வந்து மண்ணை வெட்டி தலையிற் சுமந்து பிறர் அடைக்கப்பட்டு-

* கூடலாம்பதி - மதுரை.

ருக்கும் கரைசரியும் வண்ணம் அதைக்கொட்டுவார், களைத்தவர் போன்று வந்து கரைகள் அடைக்கப்பட்டு வருகின்றன, எனக்கு அதிக பசியாக விருக்கின்றது ஆகையால் பிட்டிடு வென்பார் வந்தி யம்மையாரும் உதிர்ந்த பிட்டினை யீவர், அவரும் அதை அன்புடன் புசிப்பார் புசித்த பின்னெழுந்து கரையடைக்க செல்லுவார். மண்ணை வெட்டி வாரி எடுத்து போம்போது இடறி விழுவார், விழுந்து எழுந்து அம்மண்ணை கூடையிலெடுத்து பிறர் கட்டப்பட்டுள்ள அணையின்மீது கொட்டுவார் அதுபோதும் தவறி ஜலத்தில் விழுவர் விழுந்து ஜலத்தில் நீந்துவார், நீந்திகரையடைந்து திரேகத்திலுள்ள யீரம்போக்கி மீண்டும் மண்ணைவெட்டி எடுத்து தூக்கி மீண்டும் ஜலத்தில் விழ்ந்து கரையேற வேண்டி மரத்துண்டைத் தாங்கி கரையேறுவார் மீண்டும் வந்தியம்மையாரிடம் உதிர்ந்த பிட்டினை வாங்கி புசித்து வைகை மீள்வார்.

மண்ணை வெட்டி கரை அடைப்பதும் ஆளோட்டியைக் கண்டு சிறிப்பதும், இரு கைகளையும் தாங்கிய வண்ணம் நிற்பார் 'ஆளோட்டி' அவரவர் அடைத்த அடைப்பை கணக்கிட்டு பார்க்க அனைவருடைய பங்கும் அடைத்திருப்பதையும், வந்தி யம்மையாரின் பாகம் அடைபடா திருப்பதை கண்டு கோபமூண்டு வந்தியம்மையாருடைய ஆள் யாரென்று விஜாரித்து, அருகிற்சென்று அடே! இங்கு வந்தவர்களெல்லாம் அவரவர்களுடைய பங்குகளெல்லாம் அடைப்பட்டிருக்கின்றது. வந்தியின் பங்கு மட்டும் அடைபடாதிருப்பதேன் என வினவினன். வந்தியின் ஆளாயிருந்த கடவுள் பேசாதிருத்தலைக் கண்டு மீண்டும் வினவ, பித்தனுக் கொண்டான்போல் இருக்கும் இவன் பித்துக்கொண்டவனோ அல்லது உன் மத்தங்



கொண்டவனோ? அன்றி வந்தியை எய்க்கவந்த எந்தனோ! ஆடலப்பாடலையும் பார்க்கில் சங்கீத புலவனோ? நாட்டிய நிபுணனோ! இவனைப் பார்த்தால் கஷ்டமான வேலையை செய்யாதவன் என்பதை இவனுடைய திரேகமே தெரிவிக்கின்றது; யார் பெற்ற மகனோ? தெரியவில்லை மன்மதனும் மயங்கும்படியான அழகுவாய்ந்த இவனை கூலியாளாக அமைத்தவளாரோ? தாய் தந்தை யற்றவனோ கூலி வேலையை ஒப்புக்கொண்டு தானே கணக்கில் பதியச்சொன்னான். வேலையை செய்யாமலும் சொல்வதைக் கேளாமலும் அழுத்தமான மனமுடையவனுமாக இருக்கின்றான் இவன் விஷயத்தைச் சொல்லுவேனோ மென்று சென்றார்கள்.

அவ்வாறு அரசன் பாற்சென்று வேந்தே! எல்லோருடைய பங்கும் அடைப்பட்டிருக்கிறது வந்தியின் பாகம் மட்டும் அடைபட வில்லை. மன்மதனை தோற்கும் எழிலமைந்த ஒருவன் வந்தி ஆளென அங்கு வந்து பதிவு செய்து மன்னர் மகன் போன்று களிப்புடன் ஆடுவதும், பாடுவதுமாக வேலை மேல் கருத்தின்றி யிருக்கின்றான். அவனது அழகைப்பார்க்க பார்க்க அவனை அடிக்கவும் மன மில்லை, என பணித்தனர். அம்மொழி கேட்ட மன்னர்பிரான் நாம் போய்ப் பார்ப்போம் என்று மந்திரிமாரோடு எழுந்து வைகையை நோக்கி புறப்பட்டனர். வைகையடைந்ததும் மன்னன் ஆளோட்டியைவிளித்து அடைபடா திருந்ததைப் பார்த்து இது யார் பங்கென்றார். ஆளோட்டி இது வந்தியங்கென, வந்தியின் ஆள் யார் அவனைக்கொண்டு வாவென ஆளோட்டி மன்னன் சினத்தைக் கண்டஞ்சி ஒவ்வொருவருடைய உள்ளந்தோறும் ஒளிந்திருக்கும் கள்வனாகிய சிவபிரானாகிய வந்தி ஆளைப் பிடித்திழுத்து மன்னர் முன் விடுத்தனன்.

வந்தியான் இவன் தான் என்று ஆளோட்டியால் தம்முன் விடுத்த ஆளைக்கண்ட மன்னன் வெகுண்டு தம் கையிற் பிரம்பைக் கொண்டு ஓங்கி முதுகில் தாக்கினன். உலக ரக்ஷகனும், பார்வதி நாயகனும், பக்தர்கள் வேண்டுவன அளிக்கு வன்னலும் முதற்தெய்வமுமாகிய பரமசிவன் மன்னன் கைப்பிரம்பிற்ற ணடியுண்டு மண்ணைவாரி கூடையுடன் வைகைக் கரையில் கொட்டி மறைந்தருளினர்.

மகிழ மரத்தினருகிற் சென்று சங்கிலியார் காணும்படி மகிழ மரத்தை மூன்று முறை வலஞ்செய்து உன்னை நான் பிரியேனென்று சபதம் செய்து கொடுத்தார். அது கண்டு " சங்கிலியார் " மனங்கலங்கி கடவுளுடைய கட்டளையால் பாவியேன் இதைக் கண்டேன் என துக்கித்து ஒரு புறத்திலே மறைந்து நின்றார் சுந்தரர் சபதம் முடிந்ததும் கடவுளை வணங்கி தன் ஜாகையடைந்தார். சங்கிலியார் புஷ்பமாலை புனைந்து சாத்திரக் கடவுளை வணங்கி பெழுந்து புலருமுன் கன்னிமாட மடைந்தனர், அவ்விரவிற்றானே திருவொற்றியூரிலிருக்கு தமது தொண்டர்கள் கனவில் தோன்றி நமது அடியனை சுந்தரனுக்கு சங்கிலியை மணஞ்செய்வியும் என்றுரைத்து மறைந்தருளினர். அவர்கள் அவ்வாறே மற்றநாளில் அவ்வூரிலுள்ள சமஸ்த ஜனங்களோடு சங்கிலியை சுந்தரருக்கு விவாகம் செய்துக் கொடுத்தார்கள். சுந்தரரும் சங்கிலியாரோடு அவ்வூரிலே வாழ்ந்திருந்தார்.

இவ்வாறு திருவாரூரிலிருக்கின்ற வீதி விடங்கப் பெருமானுக்கு. வசந்தோற்சவ காலம் சமீபித்ததை யறிந்து, வான்மீக நாதரை இவ்வளவு காலம் மறைந்திருந்தேனே என்று துக்கித்து அவர்மீது திருப்பதிகம் பாடினர். பின்னர் ஓர் நாள் அவரை நினைந்து திருவாரூர் போகக்கருதி ஆலயத்துள்ளே புகுந்து சுவாமி தரிசனஞ்செய்து திருவொற்றியூரை நீங்கினர். அவ்வாறு நீங்கவே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அவர் சபதம் தவறியதால் இரண்டு கண்களும் மறைந்தன அப்போது சுந்தரர் திகைத்து சபதம் தவறியதால் எனக்கு இது நேர்ந்தது என்று நினைந்து கடவுளைப் பாடினர். அதுபோதும் கண் தெரியாதமையால் திருவாரூருக்கு போகவேண்டுமென்னும் பேரவாவினலும் சிலர் முன்னே வழிகாட்டிக் கொண்டு செலல, திருமுல்லைவாயிலுக்குப் போய், சுவாமியை வணங்கி பாடி, வெண்பாக்கத்தை யடைந்து பதிகம்பாடி ஊன்றுக்கோல் பெற்று, மீண்டு திருவாலங்காடடைந்து, வணங்கி பாடி திருவூறலிற் சென்று, கஞ்சியையடைந்து காமாக்ஷியம்மையையும், ஏகாம்பரநாதரையும் வணங்கி பாடி துதித்து, இடக்கண்ணைப் பெற்று அங்கு சிலநாள் இருந்து பின் தென் றிருவாலூருக்குச்சென்று வணங்கி பதிகம்பாடினர். அங்கிருந்து பலத் திருப்பதிகளை அடைந்து பதிகம்பாடி திருவொத்திக்குப்போய் சுவாமியை வணங்கி, அடியேன் மேல் பொருந்திய நோய் நீங்கவருள் செய்யும்படி வேண்ட சுவாமி ! இக்கோயிலுட் வடபுரத்திலிருக்கும் குளத்தில் முழுகிலும் நோய் தீர்ப்பாயென அவ்வாறே முழுகி நோய் நீங்கி, கடவுளை வணங்கி பதிகம்பாடி, திருக்கைக் கிளை போய் சுவாமியை வணங்கி வலக்கண்ணைப்பெற்று பதிகம் பாடி வணங்கினர்.



சுந்தரர் கோவிலுக்கு போகும் முன் அவருடைய பரிசனங்களிற் சிலர் பரவையார் வீட்டுக்குப்போக அப்பரவையார் சுந்தரர் திருவொற்றியூரிலே சங்கிலியை மணந்த சேதி கேள்வி யுற்று துக்கமும் துயரமும் கொண்டிருந்

யாவரும் தம் வடுபடா உடம்பினிற் பட்ட வடுத்தழும்பை ஒவ்வொருவருக்கும் காட்டிக் காட்டி மயங்கலானார்கள்.

இது இவ்வாறிருக்க பாண்டியனால் அடிபுண்ட தேவன் தமது திறத்தினை காட்டவேண்டி ஒருகூடை மண்ணை எடுத்துக் கொட்டிக் கரையை உயர்த்தி விட்டு சென்றனர். அதை பாது "வந்தியம்மை"யின் மனைநாடி மந்திரி மன்னன் முதலியவர்கள் சென்றார்கள்.

அரசனாலும், மற்றை பேராலும் விஷயத்தை யறிந்த "வந்தியம்மையார்" அன்பின் பெருக்கால் கண்களில் நீரொழுக இருகையுங் கூப்பி வணங்கித் தொழுதார். அது போது சராசரமும் தன்னுடைக்கி கார்க்கும் சிவபெருமான் விமானமொன்றனுப்பி, "அம்மையே! நீவா" எனவும் தேவர்களாலும் புஷ்பமாரி பொழியவும், சங்கீத வாத்யம் முழக்கவும், துந்துபி முழக்கவும், அவ்விமானத்திலேறி சிவனருளைப் பெற்றோர் மேவி சதானந்தத்தை படையும் சிவபுரமாகிய கைலாயத்தைச் சேர்ந்து நித்தியானந்தம் அடைந்தார்

---

# 36 - சுபத்திரை சரித்திரம்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானால் வடக்கடலில் "துவாரகை" என்றொரு பட்டணம் உண்டு பண்ணி அதில் நந்தகோபர் வசுதேவர், பலராமர், கிருஷ்ணன், யசோதை, தேவகி, ரோகணி, ருக்குமணி, சத்தியபாமா, மற்றுமுள்ள யாதவர்கள், பலராமருக்கு அப்பட்டினத்தை பட்டங் கட்டி



வாழ்ந்து வந்தார்கள். நந்தகோபருக்கும், ரோகணிக்கும் சுபத்திரை, என்றொரு பெண் உண்டு அவளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தார்கள்.

சுபத்திரையும் நாளுக்கு நாள் வளர் பிறை சந்திரன் போல் வளர்ந்து மங்கை பருவமடைந்தாள். அவளுக்குச் செய்ய வேண்டிய சுப சடங்குகள் அனைத்தும் குறைவின்றிச் செய்து முடித்து கன்னிகா மாடத்திலிருக்கச் செய்தார்கள். இவ்வாறு இருக்கும் நாளில் சுபத்திரையானவள், குந்தியின் மைந்தர்கள் ஐவர்களில் நடுவோனாகிய பார்த்திபனது அழகையும், வீரதீர பராக்கிரமத்தையும், கேள்வியுற்று அவனை தன் கணவனாக அமைக்க வேண்டும் என்று சதா கடவுளை நினைந்து வருந்திக் கொண்டிருந்தாள்.

குந்தியின் மைந்தனான பார்த்திபன், அந்தணர்கள் பசுக்களை கவர்ந்துபோன சோரர்களை வதைத்து தம் பசுக்களை மீட்டு தரும்படி வேண்ட, தம் காண்டீபத்தை எடுக்க உட் புகுந்து வில்லை எடுத்து வரும்போது, தருமமூர்த்தியும், பாஞ்சாலியும் சயனித்திருப்பதைக் கண்டு மனம் பதைத்து, ஹா! கடவுளே இக்காக்ஷியைக் காண என்ன பாவம் செய்தேனோ! என்மனம் வருந்தி சென்று வேதியர் ஆவுகளை கவர்ந்துச்சென்ற சோரர்களை வதைத்து ஆவுகளைமீட்டு அந்தணர் வசம் ஒப்புவித்து தாம் தீர்த்த யாத்திரைச் செய்ய புறப்பட்டு விட்டார்.

தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்ட பார்த்திபன் வெகு புண்ணிய க்ஷேத்திரங்களை யடைந்து அந்தந்த க்ஷேத்திரத்தின் கண் அமர்ந்துள்ள கடவுளை வணங்கியும்,

பல நதிகளில் மூழ்கியும், அறி பெரியார்களைத் தெரிசித்தும் வரும்போது, துவாரகையில் பலராமருக்கும், கிருஷ்ணனுக்கும் தங்கையாகிய "சுபத்திரையின்" அழகையும், ஒழுக்கமும் கேழ்விப்பட்டிருந்தது ஞாபகம் வரவே அவளைப்போய்ப் பார்க்க வேண்டுமென்னும் பேராரவலால் யோசனை ஏதும் விளங்காது அன்றிரவெல்லாம் துயிலின்றி வருத்த மடைந்தான்.

தாம் தீர்த்த யாத்திரைக்கு புறப்படும்போது தரித்த சந்யாசி வேடந்தான் அவளைப் பார்ப்பதற்கு பொருந்தியவை என மனந்தேறி அவ்வேடத்துடன் துவாரகைச் சென்று அங்கு ஒருவருக்கும் தெரியாத யாசகம் செய்துக் கொண்டு போனால், அந்தரூப சௌந்தரியான சுபத்திரையைக் கண்டு களிக்கலாம் என்றுன்னி ஓர் மரத்தடியினிலமர்ந்து மைத்துனனாகிய கிருஷ்ணனை மனதில் தியானித்தவண்ண மிருந்தான். அதுபோது மழையும் விடாது பெய்துக் கொண்டிருந்தது.

சத்திய பாமையுடன் இருந்த பாண்டவர் சகாய புருஷனை கிருஷ்ணன் குலுங்க குலுங்க நகைத்ததைக்கண்ட சத்திய பாமை அவரை நோக்கி சுவாமி! இருந்தாற்போலிருந்து ஏதுவின்றி சிரித்ததேன்? சொல்லுவீராகில் அதைக் கேட்டு சந்தோஷ மடைவேனென்று கேட்டான்.

கிருஷ்ணன்:—சத்திய பாமா! ஏதுவின்றி நகைக்கவில்லை. ஏது விருந்து தான் நகைத்தேன். அதேதென்றால் எனது அத்தை யம்மாளின் புத்திரர் ஐவர்களில் நடுவோனாகிய "வில் விஜயன்" என்னும் "பார்த்திபன்" நம் குழந்தை "சுபத்திரையின்" மாட்டு காதற் வலையிற்



பட்டு துன்புற்று வருந்தி நம்மை நினைக்கின்றான் இதுதான் நான் நகைத்ததற்கு காரணம்.

சத்திய பாமா:—பிராண வல்லபரே! இப்போது அந்த "பார்த்திப ராஜன்" எவ்விடத்திலிருந்துக் கொண்டு வருந்துகின்றார்.

கிருஷ்ணன்:—சத்திய பாமா! துவாரகையி னருகிலோர் ஆலமரத்தில் இருக்கின்றான் நான் போய்ச் சீக்கிரமாக வந்து விடுகின்றேன்.

சத்திய பாமா:—பிராண நாயகரே! இங்கவர் வர வேண்டிய காரண மென்ன?

கிருஷ்ணன்:—பெண்ணே! தீர்த்த யாத்திரைக்குச் சென்று வரும் மார்க்கத்தில் நம் சுபத்திரையின் ஞாபகம் வரவே இவ்விடத்திற்கு வந்துள்ளான்.

சத்திய பாமா:—பிராணேசா! நானும் அப்பார்த்திபரைப் பார்க்க ஆவலுற்றிருக்கின்றேன் ஆதலால் நானும் வரலாமோ?

கிருஷ்ணன்:—அப்படியே வாவென்றழைத்துக் கொண்டு பார்த்திபனிருக்கும் இடத்தை யணுகி, ஓ! பார்த்திபா! எதுக்கு நீ இந்த சந்யாசி வேடந் தரித்தாய்? என்று வினவ பார்த்திபன் நடந்த விஷயாதிகளை ஆதியோடந்தமாக எடுத்துச் சொன்னான். கேட்ட கிருஷ்ணனும், சத்திய பாமையும், அதுகேட்டு ஆனந்தமடைந்து, அருகிலிருக்கும் பர்வத (வைரவ பர்வதத்தில்) அழைத்துப்போய் அவனிருக்கைக்கு வேண்டிய சௌகரியப் படுத்தி உணவாதிகளும் சித்தப்படுத்தி போஜன மருந்தச்செய்து க்ஷேம சேதிகளை விசாரித்து விடைப் பெற்றுக் கொண்டு அவ

ருக்கு காலந்தாழாது தக்க போஜனாதிகள் கொடுத்து வாருங்க ளென்று ஆட்களுக்கு கட்டளையிட்டு சத்தியபாமையும் கிருஷ்ணனும் தம் இல்லம் வந்து சேர்ந்தார்கள்.

கிருஷ்ணனின் உத்திரவு படிக்கு வைரவ பர்வதத்தில் பார்த்திபன் இருக்கும்போது அம்மலையில் வருடந்தோறும் நடக்கும் திருவிழாவிற்காக ஓர் நாள் அருகிலுள்ள ஊரார் அனைவரும் அங்குவந்து திருவிழா நடந்தபின் அவரவரும் தானதருமங்கள் செய்துக் கொண்டிருந்தார்கள். பலராமர், கிருஷ்ணன் அனைவரும் அங்குவந்து அவரவரும் காரியங்களை முடித்துக்கொண்டிருக்கும்போது, இவர்களை விட்டு கிருஷ்ணன் பார்த்திப சந்நியாசியை வணங்கினான். அது கண்டு அனைவரும் பார்த்திபனை வணங்கினார்கள். அங்கே திருவிழாவிற்காக அலங்காரத்துடன் வந்திருந்த சுபத்திரையைக் கண்ட பார்த்திபன் காம விகார மடைந்ததைக் கண்டு, ஓ! தபசிரேட்டரே! பொன், மண், பெண் என்னும் மூன்றினுடைய ஆசையுந் தவிர்த்து காடடைந்து தவம்புரிய வேண்டிய நீர் நாட்டினிலிருக்கும் கன்னியரைக் கண்டு "காமமீறியது" போலத் தெரிகிறது. அவ்வாறு நீ கண்டு காமுற்ற அக்கன்னிகை எனது தங்கை சுபத்திரையாகும். அவள் மீது உமக்கு அன்புண்டானால் சொல்லும். நான் என்பெரியோரிடம் சொல்லி முடித்து வைக்கின்றேன் என்றார்.

அவ்வார்த்தையைக் கேட்ட பார்த்திபன் "பழம் நழுவிபாலில் விழுந்தது" போலவும், "சற்கரை பந்தலில் தேன்மாரி பெய்தது" போலவும் மனம் மகிழ்ந்து கிருஷ்ணனை நோக்கி? ஹோ! கிருஷ்ணா! அந்த ரூபசுந்தரியான சுபத்



திரையின் பொருட்டே இங்குவந்தே னென்பது உமக்குத் தெரியாததல்ல, தபசிரேட்டர்களால் போற்றப்படும் திரிகால ஞானிகளும் அவளைக் கண்ட மாத்திரத்தில் மோகமென்னும் கடலில் விழுந்து விடுவார்களே! அத்தகையாளைக் கண்டு நான் காதலித்தது எப்படி பிசகும். ஆகையால் தேவரீர் தயைவைத்து எனக்கு அவள் மனைவியாக்குவிப்பீரானால் அதைவிட நான் உலகத்தில் அடையவேண்டியது என்ன விருக்கிறது, உன்னருளிருக்கின் முடியாதகாரியம் ஒன்றும் இல்லை. ஆகையால் தேவரீரே! இதை முடித்து வைத்தல் வேண்டும் என்று வணங்கினான்.

அப்போது அவன் பால் இறக்கங்கொண்டு கிருஷ்ணன் அவனை நோக்கி? ஓ! பார்த்திபா! உன்னிஷ்டப்படி முடியவேண்டுமானால் நான் சொல்லுவதுபோல் நீ ஒப்புக் கொள்ள வேண்டும். க்ஷத்திரியருக்குரியது பெண்ணை வலிய அழைத்துபோதல் ஆதலால் அதற்குத் தக்க சமயமிருக்கிறது அதுபரியந்தம் நீ இங்கே இருக்கவேண்டும் இந்த விஷயம் ஒருவருக்கும் தெரியப்படாது, ஜாக்கிரதையாக இரும் என்று சொல்லிவிட்டு எல்லோரோடும் கூடிக்கொண்டு துவாரகையை யடைந்தார். இவ்விடத்தில் பார்த்திபன் சுபத்திரையின் மேற்கொண்ட காதலால் அவளையே சதா நினைந்துக் கொண்டு வருந்திக் கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்கும்போது ஒருநாள் கிருஷ்ணன் வேட்டைக்குச் சென்றிருக்கும்போது, பலராமர் தன் சகாக்களுடன் வேடிக்கை பார்த்தமாக ரைவத பர்வதத்திற்குச் சென்று ஓர் பாறை மீதமர்ந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது அங்கிருக்கும் பார்த்திப சந்யாசியைக் கண்டு அவரிடம் சென்று வணங்கி நின்றார்கள். அது

கண்ட சந்யாசி ஆசிகூறி அமரும்படிக்கூற அனைவரும் அமர்ந்து தாம் இருப்பிடம் எதுவென்று சந்யாசியைக் கேட்க, சந்யாசி அவர்களை நோக்கி நாம் இருப்பது புவனமெங்கும். தீர்த்த யாத்திரைக்கு வந்த விடத்தில் மழையானதால் இங்கு தங்கி யிருக்கின்றோம். என கூறினர்கள் அது கேட்டு பலராமர், தாம் சென்று தெரிசித்து வந்த க்ஷேத்திரங்கள் யாவை? அவைகளின் பெருமைகளையும் சொல்லென, அவர் சொல்லக்கேட்டு சந்தோஷமடைந்து, இவர் மகா உத்தமர் இவர் இங்கு மழையால் வருந்துகின்றார். இவரை நம் நகரத்திற் கழைத்துப்போய் எந்த விடத்தில் இருக்கச் செய்யலாம், என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது வேட்டையாடச் சென்ற கிருஷ்ணனும் அங்கு வந்து சேர்ந்தான்.

பலராமர் தம் கருத்தைக் கிருஷ்ணனிடம் சொன்னார். அதுகேட்ட கிருஷ்ணன், ஓ! அண்ணா தங்களுக்கு தெரியாத விஷயம் ஒன்றும் நான் சொல்லப் போவதில்லை இக்காலத்தில் சந்யாசிகளை நம்பலாகாது. துறவியாக வேடந் தரித்து அண்டி பொருளையோ! அல்லது, பெண்ணையோ கவர்ந்து போகின்றார்கள். அல்லாமலும் இவர் வாலிப சந்யாசியாக இருக்கின்றார். அது தான் எனக்குச் சந்தேகம் சிறியவனை நான் தங்கட்கு புத்தி போதிப்பதாகக் கருதி என்மீதுக் கோபிக்கப்படாது, என்று தன்மேல் பழியில்லாதபடிக்கு பதமாகச் சொன்னார்.

அதைக்கேட்ட பலராமர் தம்பி! கிருஷ்ணா! இவரை பார்ப்பதே, அத்தகையாளர்களைப்போல் தோன்றவில்லை. படித்தவராகவும், சாந்த முள்ளவராகவும், கபடற்றவர்களும், தோன்றுகின்றது ஆதலால் இவரை அழைத்துப்



போய் சுபத்திரை யிருக்கும் கன்னிகாமாடத்தி லிருத்தி சுபத்திரையால் பணிவிடைசெய்வித்துக் கொண்டிருந்தால் அவரிஷ்டமான போது போவார் என்று சொல்ல கிருஷ்ணனும் சம்மத மில்லாதவர்போல் சம்மதித்தார். பிறகு அனைவரும் பார்த்திபனை கள்ளச் சந்யாசை துவாரகைக்கு அழைத்து சுபத்திராதேவியின் கன்னிகாமாடத்தி லிருத்தி அவருக்கு வேண்டி பணிவிடைகளை சுபத்திராதேவியினால் செய்விக்கச்செய்து யாதொரு குறைவன்றி நடாத்திவந்தனர். கபட சந்யாசியான பார்த்திபனும், சுபத்திரையால் செய்யும் பணிவிடைகளை யேற்று அவளின் நடையையும் எழிலையும் கண்டு காமுற்று மனம் நைந்து கண்ணனைத் துதித்த வண்ண மிருந்தார்.

ஒருநாள் சுபத்திரை சந்யாசிக்கு உண வெடுத்துப் போகும் போது அவரிடத்தில் விஜயனுக்குரிய சில அடையாளங்களைக் கண்டு சந்தேகங் கொண்டிருந்தாள் சதா பார்த்திபனையே மணக்க வேண்டுமென்று அதை முடித்தருளும்படி லக்ஷ்மியை வேண்டி வணங்கி வந்தாள். இவ்வாறிருக்கும்போது ஒருநாள் உணவு கொண்டு போய் சந்யாசிக்கு படைத்து அவர் புசித்த பின் அவரை நோக்கி, சுவாமி! தாம் க்ஷேத்திர தரிசனத்தின் பொருட்டு உலக யாத்திரை செய்தவராயிற்றே குரு தேசத்தில் எனது அத்தையை கண்டிருப்பீரே! அவர் க்ஷேமமாக யிருக்கின்றாளா? அவள் மைந்தர்கள் ஐவரும் க்ஷேமமா யிருக்கின்றார்களா? நடுவோராகிய பார்த்திபர் தீர்த்தயாத்திரை போயிருப்பதாகக் கேழ்விப்பட்டேன் அவரை வழியிலெங்கிலும் சந்தித்தீரா வென்றுக் கேட்டாள்

அதுக்கேட்ட சந்யாசி சுபத்திரையின் வார்த்தையில் அவளுக்கு தன்பால்பிரிய மிருப்பதை யறிந்து மன

மகிழ்ந்து, ஓ! பெண்கள் நாயகமே? குந்தியம்மை யாரும், அவர் மக்கள் நால்வரும் க்ஷேமமாக இருக்கிறார்கள். நடு வேனாகிய பார்த்திபன் தீர்த்த யாத்திரைக்குச்சென்றவன் இன்னும் அவன் தேசம் போகவில்லை அவன் துவாரகை யிலே கன்னிகாமாடத்தில் ஒருவருக்குத் தெரியாமலிருக் கின்றான். அவனை நீ!பிரதிதினமும் பார்த்திருந்தும் தெரிந் துக் கொள்ள வில்லையே, நான் தான் அர்ஜுனனை பார்த் திபன் உன்பொருட்டே இக்கோலத்துடன் இங்குவந்தேன் என்று சொல்லக் கேட்ட சுபத்திரை நாணி, வெட்கி தலை யை தன் பெருவிரலினால் கின அவனை நோக்கி, அடி பூங் கொடி போல் வாளே! என்று இதம்பேசி காந்தர்வ முறைப்படி இருவரும் தம்பதியானார்கள்.

இதை யறிந்த கிருஷ்ணன் தேவேந்திரனை யழைப் பித்து பலராமருக்கு தெரியாமல், ருக்குமணி? சத்திய பாமையை வைத்துக் கொண்டு ரகஸியமாக பார்த்திப னுக்கு சுபத்திரையை மணஞ்செய்துக் கொடுத்தார். பின்பு கிருஷ்ணனுடைய உத்திரவு படிக்கு பார்த்திபன் சுபத்திரையிடம் தம் பிரயாணத்தைத் தெரியப் படுத்தி னான்.

கற்பே! ஓ ருருவாக அமைந்த சுபத்ரை தன் கண வன் சொற்படியாவும் சத்தப்படுத்தி கிருஷ்ணனால் தயா ரிருக்கப்பட்ட ரதத்திலேறி கடிவாளத்தை கரத்திற் பிடித் தாள் அது அறிந்த பார்த்தன் ரதத்தின்மீ தாரோகணிக்க "கற்கரசி" யாகிய சுபத்திரை ரதத்தை ஓட்டிச்சென் றான். இதை யறிந்த ஊர் ஜனங்கள் எவனோ ஒரு சந்யாசி சுபத்திரையை அபகரித்து போகின்றா னென்று சொல்ல பலராமர் உடனே சேனைகளைத் திரட்டி யுத்தம் செய்யப்



போகுப்படி வீரர்கட்கு கட்டளையிட அவர்கள் சென்று பார்த்தனுடன் யுத்தம் செய்து தோல்வியுற்று துவாரகை யடைந்தார்கள்.

பின்பு பார்த்தன் சுபத்திரையை ரதத்தோத இந்திரப் பிரஸ்தத்திற்கு ஒட்டும்படி செய்து இருவரும் இந்திரபிரஸ் தம்போய்ச் சேர்ந்தார்கள் பலராமரின் கோபத்தை கிரு ஷ்ணன் தணித்து சுபத்திரைக்குச் செய்யவேண்டிய சீர் வரிசைகளைச் சரிவரச்செய்து சந்தோஷ மடைந்தார்கள். "பார்த்திபனும், சுபத்திரையும்" பூவும் நாரும் போல வும், பாலும் நீரும் போலவும், இன்பசாகரத்தில் மூழ்கி இனிது வாழ்வதாயினர் சுபத்திரைக்கு தன் எண்ணம் கை கூட்டினதும், இவற்றைக்கு கடவுளாகிய கண்ணன் கூடவிருந்து உதவியதும், எதனாலென்றால் கற்பின் மகி மையே யாம். சகோதரிகளே! கற்புடைய ஒவ்வொரு வருக்கும் கடவுள் துணைசெய்து இறுதியில் நற்பயனை அடைவார்கள் ஆதலால் ஒவ்வொரு சகோதரிகளும் கற் பின் மகத்துவங்களையறிந்து அந்நீதி தவராது கற்புடைய காரிகை என்று நல்லப்பெயர் இருக்கும்படியாகக் கேட் டுக் கொள்ளுகிறேன்.

---

## 37 - சிந்தாமணி யம்மன் சரித்திரம்.

——*8*——

மதுரைமாநகரிலே வர்த்தகத் தொழில் புரிந்து பிரக் யாதி யடைந்திருந்த "தனபதி" என்னும் ஒரு வணிகர்

இருந்தார் அவருக்கு "சசிலை" எனும் மகா உத்தமியாகிய மனைவியுடன் இல்லறத்தை இனிது நடாத்தி வந்தார். இவர்களுக்கு புத்திர பாக்கிய மில்லாததால் அவர் தம் தமக்கையின் சிந்தாமணி, மகனை தனக்கு மகனாக்கிக் கொண்டார், இவ்வாறிருக்கும்போது மனைவியினால் ஆசை மேலிட்டால் தன் தங்கையின் மீது, விரோதமுண்டாயிற்று அதுபோது தனபதியின் தங்கை சிந்தாமணி, அண்ணனை நோக்கி உனக்கேனிந்த கர்வம் பிள்ளை பேற்ற 'மலடு' என் பிள்ளையினாலல்லவோ? இகபலப் பயனையு மடைவாய் என்று இழித்துரைக்கலுற்றாள். அது கேட்ட வணிகர் பெரிது நாணி அடுத்த ஆண்டிலாவது பிள்ளைபேற்றை யடைவதற்கு தவஞ்செய்வேனென, உரைத்து தவஞ்செய்வான் வேண்டி தன் பெருஞ்செல்வ மனைத்தும் தன் மருமகனுக்கு உரிமையாக்கி விட்டு தன்னரும் மனைவியுடன் இல்லறங் கடந்தனர்.

"தனபதி" வணிகனால் அளிக்கப்பெற்ற திரவியத்தை அவர் தங்கையும், சிந்தாமணி? மருகனும் வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள் தனபதி வணிகனார் வராததை யறிந்த "தனபதி" வணிகனாரின் தாய்மார்கள், அவனது பொருள்களனைத்தும் கைப்பற்றினார்கள், இதை யிழந்த "தாயும் மகனும்" தமக்கு ஒருவரும் திக்கில்லாததால் கூடற்பதி நாயகனாகிய எம்பெருமானைத் தவிர வேறு திக்கில்லாததால் அவனையே துணையென அவனை சரணித்து திருக்கோயிலினுட் சென்று அவரை நோக்கி? எம்பெருமானே! தாயும் தந்தையுமான பராபரனே! நீயே எங்களுக்கு துணைவன் என்று அழுது வணங்கி தொழுதாள்.



* எனது மைந்தனை தமக்கு மகவில்லாததால் எல்லோரும் காணும்படி தன் மகனாகக் கொண்டு அன்றைய தினமே காணி, மனை, மனை, மற்றைய எல்லாப் பொருள்களையும் என் அண்ணன் என் மகனுக்கு உரிமைப் படுத்தி விட்டு தவஞ்செய்ய போய் விட்டார் அப்பொருளை அவர் தாயகத்தார் எங்களிடம் இருந்து கைப்பற்றிக்கொண்டார்கள். நீயல்லாமல் வேறு துணையில்லை நானொருத்தி இவன் ஒருவன் அதிலும் கருத்தறியாத சிறுவன் வேறு துணைவர்களில்லை, அருட்பெருங்கடலே! எங்கும் வியாபித்திருக்கும் நீயறியாததென்ன வென்று பூமி மிசை வீழ்ந்தாள். அதுபோது அவளுக்கு சிறுதுயில் அடைந்தாள். மாது சிறு துயில்கொண்ட அளவில எம்பெருமான் அவர்சொற்பனத்தில் தோன்றி மாதே! நீ பொழுது புலர்ந்ததும் அரசனிடம்சென்று நீதி கேட்கும்படி கூறில் அதுகால் அங்கு நாம் வந்து வழக்குத் தீர்ப்போம் என பணித்து மறைந்தருளினர். அவ்வுரையைக்கேட்ட சிந்தாமணி விழித்தெழுந்து ஆறு மற்றவர்களுக்கு தெய்வந்தான் சகாயம் என்று சொல்லும் சொல்லானது மெய்யே யாகும். என ஈசனைப் பணிந்து வணங்கி தம் குமாரனுடன் கன்னில் போய் சேர்ந்தார்கள்.

அவ்வாறு சென்றவள் பொழுது புலர்ந்ததும் அரசன் மனை புக்கி தம் பொருளை தம்பதிகள் கவர்ந்தார்கள். அப்பொருளை எமக்கு மீட்டு தரும்படியாக வேண்டிக் கேட்டாள் அதை புணர்ந்த தாயாதிகள் இழிவான வார்த்தைகளைச்சொல்லி வைத்தார்கள். அவளையும், அவன் மைந்தனையும் அடித்தார்கள் இவ்வாறு நடந்ததை அம்மாது

* இகபரம் - இம்மை - மறுமை தாய்மார் - பங்காளி வகையார்?

நியாய சபையின்போய் கூறி முறை யிட்டாள். எவலாலருடன் போய் மறித்தலை களத்திற் கூட்டி நீதி மன்னம் குறுகினர்.

உமாபதி பாகனாகிய பரமசிவனானவர் "தனபதி வணிகன்" போன்று ஒருவித மாறுபாடும் ஏற்படாமல் நியாய சபையை அணுகி, "அரசன் இங்கு இல்லையோ சொல்லுங்கள்! அறிவா லமைந்த முதியோர்க ளிங்கில்லையோ. சொல்லுங்கள்! நீதிநிலை தவராத அரசனது ஆட்சி யுங்கோல் கொடுமையானதோ! குற்றமற்ற வேதங்களால் போற்றப்படும் கடவுளும் இல்லையோ! உயிருள்ள தருமம் எங்கு போய் ஒளித்ததோ சொல்லுங்கள்" என்று கூறிய வண்ணம் நியாய சபையை சார்ந்தார்.

"தனபதி" வடிவு கொண்டு வந்த சிவ பெருமானைக் கண்ட வஞ்சக தாயாதிகள் உண்மையான "தனபதி வணிக" ரென்றெண்ணி மனச்சோர் வுற்று பயங்கொண்டு முன்னே நியாயமின்றி அநியாயமாக செய்த காரியத்தை நினைந்து உள்ளத்தில் அச்சத்தாலும், நாணமாகிய வெட்கத்தாலும் அமிழ்ந்தினார்கள். மாமனாக வந்த சிவபெருமான் தம் மருமகனையும், தம் தங்கையையும் நோக்கி நீங்கள் இக்கெதிக்கோ? ஆளா! நீர்கள், என துக்கிக்க மருகனாகிய குமாரனும், அவன் தாயும், வணிகனாக வந்த கடவுளடியில் விழ்ந்தார்கள் அப்போது அவர்களை எடுத்து தேற்றி மருகனை நோக்கி, பரமசிவனார், சங்கு, சக்கரம், கதாகட்க, கோதண்டம் என்னும் பஞ்சாயுத வடிவ மாகச்செய்த ஆபரணத்தை மார்பினில் காணோம்! சிறு சிலம்பு காலிற் காணோம்! தோளில் அணியும் வாகுவலயம் காணோம்! முகத்தில் அணிந்து அசையும் சுட்டிகாணோம்!



காதில் அணியும் குழைகளைக் காணோம்! வெறும் உடல் மட்டும் இருக்கக் கண்டேன் இவைகளை வஞ்சகர்கள் கவர்ந்தார்களோ! என தங்கை "சிந்தாமணி" அழுது புலம்புவதைக் கேட்டும் வழக்கு நம்பால் ஜெயமடையும் துயருற வேண்டும்.

வணிக வேடந் தாங்கிய எம்பெருமான் நீதி சபையினரை நோக்கி எமது வழக்கையும் எமக்கு பகைவராய் வந்தவர்களின் வழக்கையும் ஆராய்ந்து தெரிந்து உரையுங்கள் என்று சொன்னதைக் கேட்ட பகைவர் நடு நடுங்கி? இவர் தனபதி வணிகர் அல்ல என்று யானையின் தோலைப் போர்த்த பெருமானைச் சொல்ல அவர், அவர் வம்சத்தாரின் அவரவர் குடிப்பெயரையும் ஆஸ்திகளையும், தந்தை தாய், மாமன், மாமி, உறவினர் அவர்களை யீன்றோர் அவர்களைப் பெற்றோர். மைந்தர்கள், உடன் பிறந்தார்கள், மற்ற உரவினர்கள் முதலியவர்களின் குணங்களையும், அவரவர் செய்கைகளையும் வழுவா வண்ணம் கூறியருளினர்.

தனபதி வணிகவேடந் தாங்கிய எம்பெருமானாகிய உமாமகேஸ்வரன் குடிபெயரையும் கோத்திரப் பெயரையும் உறவினர் பெயர்களையும் சொல்லக்கேட்ட ஆன்றோர்கள், அச்சபையின் கண்ணுள்ள பாவற்றுளும் இவரே தனபதி வணிகர், இவரின் தாயாதிகள் இட்டவழக்கு வழுக்குடையது என, வஞ்சகமுடைய தாயாதிகள் மனபீதியடைந்து, ஒருவன் வீட்டுக்குப் போய் வருகின்றேன், என்றும், மற்றவன் குளத்திற்குப்போய் வருவே னென்னும், இவ்வாறு ஒவ்வொருவரும் சாக்குப் போக்குச் சொல்லி விலக்கவும் அக்கூட்டம் சின்னாழியில் சிதைந்துப் போயிற்று. அவ்வாறு அவ்வஞ்சகர் கூட்டம் சிதைந்தது போக நின்ற மந்

னவரும் நீதி சபையிருந்தவர்களின் முன்னிலையில் தனபதி வணிகர் கொடுத்த திரவிய மனைத்தும், 'தத்துப் புத்திரன்' ஆகிய மருமகனுக்கு எழுதி வாங்கி சிவபெருமானனவர் தம் திருக்கோயிலை யடைந்தார்.

வணிக சிறுவனுக்காக அவன் மாதுலனாகிய தனபதி வணிகனாக சிவ பெருமானே வந்து வழக்குத் தீர்த்ததை யறிந்த அரசன் அக்கோயிலை பொன்னினால் புதுக்கினான்.

கலி நிலைத்துறை.

பூதநாயகன் பூரணசுந்தரப்புத்தேள்
பாதசேகரன்வரகுண பாண்டியன்புயத்தி
லோதநீருலகின்பொறை சுமக்கவைத்தும்பர்
நாதர்சேவடித்தாமரை நகைநிழலடைந்தார்.

---

## 38 - ரேணுகையம்மன் சரித்திரம்.

—***—

மகா தபசிரேட்டராகிய "ஜமதக்னி" முனிவருக்கு "ரேணுகா" என்னும் மனைவியும், பரசுராமன் என்னும் ஒரு மகனும் உண்டு. "ரேணுகாதேவி" யோ!

"கொழுநன் றுண்டபின் னுகர்கொள்கையும்
விழிதுயின்றபின் றுஞ்சலுமென்றுயில்
எழுதலற்குமுன் னெழுதலுமேயன்றோ
பழுதில்கற்புடை பாவையர்செய்கையே."

என்னும் கற்பிலக் கணத்திற்கு ஒரு சிறிதும் வழுவாது தன்னாயகன் சொற்கடவாது அவரது பாதசேவையே,



கடவுட் சேவையாகவும், அவரது சொற்களே! நான் மறை வேத வாக்கியங்களாகவும், அவரது இருக்கையே சொற்க லோகமாகவும், அவருண்ட எச்சிலைத் தேவாம்ருதமாகவும் பாவித்து "பதிவிரதா லக்ஷணங்" தாழாது நடந்து வருவதாயினர்.

"ஜமதக்னி முனிவர்" அதிகாலையில் எழுந்து காலைக் கடனை முடித்து பூஜைக்கு போவதற்குள் "ரேணுகா தேவி" அவர் விழிப்பற்கு முன் விழித்தெழுந்து கணவனை வணங்கி, ஜலக்கரை யடைந்து, ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டானம் புரிந்து கணவனை கருத்திலுன்னி ஜலத்தில் இரங்கி தன் கரத்தால் கோடு கிழித்தவுடன் ஜலம் கட்டி விடும் அதைக் கொண்டுவந்து கணவனார் பூஜைக்கு சுத்தப்படுத்தி அவரை வணங்கி விடைப்பெற்று இல்லற கிருத்தியங்களை புரிய செல்வான்.

முனிவரும் அந்த ஜலத்தினால் பூஜை முடித்து வருவதற்குள் போஜனம் சித்தப்படுத்தி அவருண்ணபின் அவ்வெச்சில் இலையில் தாம் அருந்துவாள், இவ்வாறு "ஜமதக்னி" முனிவரும், "ரேணுகாதேவி" யும் உடலும் உயிரும் போலவும், பூவும் நாரும் போலவும், பாலும் நீரும் போலவும், அன்றில் பேடையைப் போலவும் இருந்து வந்தார்.

" தாயினிற் சிறந்த தெய்வம்இலை ; உயர்
தந்தை தன்னில்
ஏயநற் குருவும் இல்லை ; எனின், மற்று
இவர்கள் தாளில்
தூய்மலர் தூவி, நாளும் தொழுதிடும்
அறிஞர் தாமே,

ஆய்கதிர் பரப்பும் பொன்னாட்டு
அமரராய் இனிது வாழ்வார்."

—(கூர்ம புராணம்)

"ஈன்றதாயினை, ஈன்று எடுத்து
இருபுயத்து அணைக்கும்
ஆன்ற தந்தையை, அந்நதை செய்து
அகன்று போய் அடவி
தோன்றி, மாதவம் தொடங்கினோர்
இவர்களைத் தொல்லை
மூன்று தேவரும் முனிவுற நிரயம்
உற்று இழிவார்."

— (உபதேச காண்டம்)

என்னும் ஆன்றோர் வாக்கியத்தை நன் குணர்ந்து, தாய் தந்தையரின் வாக்குக்கு ஒரு சிறிதும் வழுவாது இவனே புத்திரன் என்று மகிழ்ந்துரை கூறும்படி நடந்துவந்தான். ஜமதக்னி முனிவருக்கும், ரேணுகா தேவிக்கும் பிறந்த "பரசுராமன்" என்னும் உத்தம புதல்வன், இவ்வளவு, சிறப்பினையுடைய புத்திரனை யீன்றதாய், தந்தையான்றோ, உத்தம பெற்றோர்களாவார்.

இவ்வாறுள்ள நாளில் வழக்கப்படி தன்பர்த்த எழு முன்னெழுந்து நதிக்கரைச் சென்று காலைக்கடன்முடித்து ஸ்நானஞ் செய்து, அநுஷ்டானாதிகள் முடித்து, பர்த்தாவின் பூஜைக்கு வேண்டும் ஜலம் திரட்ட ஜலத்தில் இறங்கி ஜலத்தை நோக்க, அதுபோது ஆகாயத்தினிடமாக மேக மண்டலத்திலே, "கார்த்தவீரியர்ஜுனன்" செல்லும் அச்சாயல் ஜலத்தில் தோன்றிற்று அதைக்கண்ட ரேணுகாதேவி, "இத்தகைய சுந்தரபுருஷன் உலகிலிருக்கின்



றானே!" என்று ஆச்சரியப்பட்டாள். உடனே அவளது மனம் வேறு விஷயாதியால ஊன்றியதால், இதுகாறும் 'கற்பின் மகத்துவத்தால்' திரண்டு வரும் ஜலம், அன்று திரளாது போயிற்று. அதுகண்ட "ரேணுகாதேவி" மனம் பதைத்து உடல் நடுங்கி ஹே! கடவுளே! இதுகாறும் திரண்டுவந்த ஜலம் இன்று திரளவில்லையே! ஹே! கருணாகர மூர்த்தியே! நான் ஒருவித குற்றமும் புரியவில்லையே! தேவர்களை இன்னா மொழிந்தேனோ? அல்லது; மாதவத்தினர்களை புண்பட செய்தேனோ? அல்லது; அதிதிகளுக்கு பிச்சையிடா தொழிந்தேனோ? அல்லது கற்புள்ள மாதரைக் கடிந்துரைத்தேனோ? ஹே! அநாத ரக்ஷகா! யான் ஒருவித குற்றமும் செய்யவில்லையே! கணவனுரை கடந்தேனோ? அல்லது அவர் பதம் மறந்தேனோ? இல்லை! இல்லை!

"தெய்வந்தொழாஅள் கணவனைத்தொழுவள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் ஆன்றோர் வாக்கியம் பிரகாரம் கணவரே தெய்வமாக அல்லவோ பாவிக்கின்றேன். ஹே! தயாள மூர்த்தியே, ஒன்றும் தெரியவில்லையே எனவருந்தி துயருற்று பூஜைக்கு ஜலங்கொணராது இல்லம் நாடினாள்.

துயில் விழித்த "ஜமதக்னி" முனிவரும் காலைக் கடன் முடித்து ஸ்நானாதி கருமம் முடித்து பூஜைக்கு ஜலங் கொண்டு வரச்சென்ற ரேணுகாதேவியை எதிர் பார்த்தவண்ணமிருந்தார் ரேணுகாவும் வெறுங்கையுடன் வந்து முனிவரைத்தொழுது தான் நதிக்கரைக்குச் சென்று காலைக் கடன் முடித்து ஸ்நானம் செய்து கடவுளைத் தொழுது ஜலந்திரட்டும்போது ஜலம் திரளாதிருந்ததைக்கூறி கார்த்த

வீரியார் யற்ஜுனனைக் கண்டு அதிசயத்ததை மட்டும் மறைத்துப் போட்டான்.

இவ்வாறுரைத்த ரேணுகையின் வார்த்தையைக் கேட்ட ஜமதக்னி முனிவர் "ஞானதிருட்டி" யினால் * அங்கு நடந்த எல்லா விஷயங்களையும் அறிந்து கண்கள் சிவக்க கோபம் பிறந்து உனக்கு சாபமிடப்போகின்றேன் உன் கருத்தென்னவென, ரேணுகாதேவியும் பர்த்தாவின் வாக்குக்கு எதிர்வாக்கு கூறாது தங்கள் சித்தப்படிக்குச் செய்யலாமென, உடனே தன் புத்திரனாகிய பரசுராமனை யழைத்து பிள்ளாய்! இதோ! இருக்கும் உன் தாயைச் "சிரச்சேதம்" செய்துவா வென்று சொல்ல, பரசுராமர் மனம் கலங்கி தேறி, "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்னும் வாக்கியத்திற் கேற்ப தன் தாயை அழைத்துப் போய், "சிரச்சேதம்" செய்து தந்தை ஜமதக்னி முனிவரிடம் வந்து, அவரையணிந்து தங்கட்டளையை நிறைவேற்றி விட்டேன் என முனிவர் மைந்தனின் பக்தியைக் கண்டு பரம சந்தோஷங் கொண்டு மைந்த! நீ வேண்டும் வரத்தைக் கேள் கொடுக்கின்றோம். என பரசுராமன் தந்தையை வணங்கி தந்தாய்! என் தாயை எழுப்பித் தந்தருளல் வேண்டும் என இறைஞ்சி நின்றான்.

அது கேட்ட ஜமதக்னி முனிவர் மகனுடைய மாதுர் பக்தி, பக்தியை எண்ணி மகிழ்ச்சி செய்து, பரசுராமனது வார்த்தை தெருவண்ணம் அவ்வாறே எழுப்பி தந்தார். ரேணுகையின் கற்பின் மருத்துவமும், தெய்வ பக்தியும் சிறந்திருந்ததால் அவர்கள் பின்னால் "ரேணுகா பரமேஸ்வரி" யாக எல்லோராலும் போற்றப்பட்டு வருகிறாள்.

* திருட்டி - பார்வை.



# 39-கற்பரசியம்மையார் சரித்திரம்.

:*:

"மன்னிய வேளாண் டொண்மையி னசைமாறர்
வருமையா லுணவு மிகமறந்து வைகி
யன்னருகன் னிருண் மழைபிலுண்டி வேண்டியும்பர்
பிரானனை யவயலுழுது வித்துஞ்
செங்கென் முளையமுது மனையலக் காலாக்கிச்
சிறுபயிரின் கரியமுது திருந்தச் செய்து
பன்னலரு முனைவருந்தற் கெழுந்த சோதி
பரலோக முழுதாண்ட பான்மை யாரே"

இளையான் குடி என்னும் ஊரின் கண்ணே! வேளாளர் குலத்திலே, எத்தொழிலினுஞ் சிறப்புற்றோங்கும் கிருஷி கர்மத்தால் வரும் குற்ற மற்ற அளவிறந்த பாக்கியத்தையும், சிவனடியார்கள் மேல் நீங்காத முழு அன்புக்கொண்ட சித்தமும் உடையவராகிய மாறனார், என்பவர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் தம் கிருகத்திற்கு சிவனடியார்கள் எந்த வருணத்தைச் சார்ந்தவராயினும், உண்மையாகிய அன்பினோடு, அவர்களை எதிர்க்கொண்டு அழைத்து வந்து இன்சொற்களைச் சொல்லி வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் பாதப்பிரக்ஷாலனம் பண்ணி, ஆஸனத்தி லிருக்கச்செய்து சைவாகம விதிப்படிக்கு அருச்சித்து, பின்பு இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, கசப்பு, என்னும் அறுசுவைகளை யுடையனவாய் நக்கல், பருகல், உண்டல், தின்னல் என்னும் நான்கிற்கும் விஷயமாகவுள்ள உணவுகளை அவரவர்கள் இஷ்டப்படிக்கு அமுது செய்விப்பார்.

இப்படி தினந்தோறும் மகேசுர பூஜை பண்ணுதலாகிய சிவ புண்ணியத்தினாலே ஐஸ்வரியம் அபிவிருத்தியாக அவர் அளகாபுரிக்கு அரசனாகிய குபேரனைப்போல் வாழ்ந்து வந்தார்.

"மாறனார்" மனைவி "கற்பாசி" யாரும், நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கும் அணிகலனாகவும், பர்த்தாவின் அன்பே தெய்வத் திருவருளாகவும், அவர் வாக்கியமே வேதவாக்கியமாகவும் அவரது எச்சிலே தேவாமிர்தமாகவும், பர்த்தாவே தெய்வமாகவும், அவரது பணியே, திருத்தொண்டாகவும் பாவித்து, பர்த்தாவின் வார்த்தைக்கு எதிர் மொழி பகராமல அவரிஷ்டப்போல் அவரின் குறிப்பறிந்து அத்தொழில் செய்து முடித்தலே கருமமாகக் கொண்டவள்.

அத்தகைய மனைவியை ஒருவன் அடைய வேண்டுமானால் எவ்வளவோ புண்ணியம் செய்யவேண்டும் அவ்வாறு புண்ணிய வசமின்றி ஒருக்காலும் அத்தகைய உத்தமப் பெண்கள் மனைவியாக அமைவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசிப்பது போலும், முடியுமே யல்லாது கைகூடுவதில்லையென நாம் திட்டமாகத் துணிந்துச் சொல்லுவோம். "மாறனாரின்" புண்ணிய வசமே அவருக்கு அத்தகைய புண்ணியவதி மனைவியாக மொய்ந்தாள். என் அவரின் 'தேவதா பக்தி' அவரை எங்ஙனம் கைவிடும். ஒருக்காலும் விடாது அவரது உண்மை பக்தியையும், அவரது சிவத்தொண்டின் நேர்மையும் கண்ட சிவபெருமானே அத்தகைய மனைவியை அவருக்கு அமைத்தார் போலும்.

கற்பிற் சிறந்த 'கற்பாசி' யாருடன் மாறன் நாயனார். இச்சரதந்திலிருந்து பரமசிவன் மெய்த்தொண்டர்



களுக்குத் திருத்தொண்டு செய்வதும், அமுது படைப்பதும் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வரும் நாளில், சிருட்டி, திதி, சம்ஹாரம் என்னும் முத்தொழிற்கு கர்த்தாவும், லக்ஷ்மி பிராட்டியாரின் கொழுநனும், உலகத்தை மூன்றடியா லளந்தவனும், ஆதிசேஷ சயனனுமாகிய ஸ்ரீமந்நாராயணனும், அவரது திருத்தொப்பூழ் வழியாக கொடியினிடமாக ஜெனித்தவரும், சரஸ்வதி தேவியின் நாயகனும் சிருட்டித் தொழிலில் அமைக்கப் பட்டவனுமாகிய பிர்மதேவனும, தேடிக்காணாத செம்பொற்சோதியாகிய பரமசிவன், அம்மாறனார், இந்தச் செல்வம் வந்த காலத்திலன்றி வறுமை வந்த காலத்திலும் இச்செய்கையை தவாரது செய்ய வல்லவர் என்பதையும் தாம் நல்லோர்களுக்கு வறுமையைக் கொடுத்தல் அவரவர்கள் நன்மையின் பொருட்டே என்பதையும், அந்நன்மை இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள் புண்ணியஞ்செய்த நமக்குக்கடவுள் இடர் செய்தாரே என்று அவரை நோதல் பழுதாம் என்பதையும், பிறர்க்கு தெரிவித்து உய்க்கும் பொருட்டுத் திருவுளங்கொண்டு, அந்த மாறனாரிடத்திலுள்ள செல்வங்களெல்லாம் நாளுக்கு நாள் குறைந்து வறுமை வந்தணுகும்படி யருள் செய்தார்.

சிவ பெருமான் திருவருள்படிக்கு செல்வமெல்லாம் நாளுக்கு நாள் குறையவும், மகேசுர பூஜையிலே தாம் வைத்த அன்பானது ஒரு சிறிதும் குறைந்த பாடில்லை. தம்மிடத்திலுள்ள வீடு, மனை, நிலம் முதலியவைகளை விற்றும், தம்மையும் விற்று இறுக்கத்தக்க அவ்வளவு கடன்களையும் வாங்கியும் முன்போலவே தாம் செய்யும் திருப்பணியாகிய "மகேசுர பூஜையை" வழுவாது பக்தியுடன் தம்பதி யிருவரும் மன மொத்து நடத்தி வந்தார்கள்.

மழை காலத்திலே ஒருநாள் இடைவிடாது மழை பெய்துக் கொண்டேயிருந்தது அன்று மாறநாயனார் இரவு நெடுநேரம் வரையிலும் எதிர்ப்பார்த்திருந்தும் ஒருவருடைய உதவியும் இல்லாமல் பகற்முழுவதும் போஜனஞ் செய்யாமல் இருந்ததால் பசிதாளாது வீட்டின் கதவைத் தாளிட்டு தம்பதியிருவரும் சிவபெருமானை வணங்கி துதித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, திரிபுரத்தை நகைத் தெரித்தவனும், மார்க்கண்டனுக்காக எமனை யுதைத்தவனும், வணிகமைந்தனுக்காக மாமனாகவந்து வழக்குத் தீர்த்தவனும், வந்தியம்மையார் பொருட்டு மண் சுமந்து பிரம்பினால் அடியுண்டவனும், சுந்தரமூர்த்தி சுவாமியை, மணப்பந்தலில் தடுத்தாண்டவனும்,இன்னும் அநேக தொண்டர்களுக்கு வேண்டுவன, அளித்து ரக்ஷித்து பெருதற்கரிய பேரின்பவீட்டையீபவனும, சாக்ஷாத் லோக மாதாவாகிய உமாபரமேஸ்வரியின் சமேதனனு மாகிய சிவபெருமான் நாயனாரின் அன்பையும், கற்பாசியின் கற்பின் வன்மையும் பக்தியையும், சோதிப்பான் வேண்டி சைவ வேடந்தாங்கி மாறனாரின் இல்லமடைந்து, தாளிடப்பட்டிருக்கும் கதவைத் தம் திருக்கரத்தாற் தொட்டு தட்டி மாறநாயனை அழைத்தார்.

தம் பெயரைச் சொல்லி கதவைத் தட்டுவதை யறிந்த மாறனார் விரைந்தெழுந்து வந்து, தாள் திறந்து பார்க்கவந்தவர் சைவராக இருந்தமைக் கண்டு சந்தோஷம் வீட்டினுள்ளழைத்துச் சென்று ஆசனமிட்டு அமரச்செய்து, அவர்மேல் பட்டிருந்த மழை ஜலத்தை துணிக்கொண்டு துடைத்து, அவருள் இருப்பதற் கிடங்கொடுத்து, அமுது



படைக்க வேண்டுமென மனங்கொண்டு, தம்மனைவியாகிய கற்பாசியாரை நோக்கி, பெண்ணே ! இச்சைவர் மிகுந்த பசியினால் வாடி க்ஷணத்திருக்கின்றார், ஆகையால் நமக்கு முன்னமே, போஜனத்திற்கு ஒன்று மில்லையாயினும், இவருக்கு எப்படியும் அமுது படைக்க வேண்டும் என்னசெய்வது என்றார்

அது கேட்டு "கற்பிலக்கணமே !" ஓருருவாகத் திரண்டு வந்த கற்பாசியாரும், தம் நாயகனை நோக்கி நாயகனே ! நம் வீட்டில் ஒரு பதார்த்தமும் இல்லை. அயலாரிடம் கேட்டால் அவர்கள இனி கொடுத்துதவ மாட்டார்கள், இப்போதே வெகு நேரமாகி விட்டது அரிசிக்கடன் கேட்க போவதற்கும், வேறிடமில்லை. பாவியாகிய நான் என் செய்வேன் ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன். அவ்வாறு செய்தாலசைவருக்கு அமுதூட்டமுடியும் என்று சொல்ல, மாறனார், அதுகேட்டு பெண்ணே! அந்த யோசனையைச் சொல்லென்று சொல்ல கற்பாசியார் சொல்லுவார்.

ஓ ! எனது பிராண வல்லவா ! இன்று பகற்காலத்தில் வயலில் விதைக்கப்பட்ட நாத்தால் புன்னமே முளை கொண்டிருக்கின்ற நெல்லை வாரிக்கொண்டு வந்தால் இயன்றபடி சாதம் சமைத்து அமுதூட்டலாம். இதுவேயன்றி வேறு வழியில்லை, என்று சொல்லி துக்கித்தார்.

கற்பாசியாரின் மொழியைக்கேட்ட மாறனார், மனமகிழ்ச்சிக் கொண்டு மழை யிடை விடாது, மொழிகின்ற மகா அந்தகாரமாகிய அந்த அர்த்தராத்திரியிலேயே ஒரு பெருங்கட்டையைத் தலைமேல் கவிழ்த்துக்கொண்டு காலினாலே தடவி குறி வழியே தம்முடைய வயலுக்குச்சென்று

என்று துதித்து வணங்கி நின்றார்கள். அப்போது பரம சிவன் அன்பர்களே! உங்கள் பக்திக்கு மெச்சினோம்! கற்பரசியாரே! நுந்தம் கற்பிற்கு மனங்களித்தோம் மாசற்ற நீங்களிருவரும் நம்முடைய பதத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருமென்று சொல்லி மறைந்தருளினார். மாறனாரும் மனைவி, கற்பரசியாரும் அடைதற்கரிய பேரின்ப வீட்டை யடைந்து இனிது வாழ்ந்தார்கள்.

---

## 40 - வணிகமாது சரித்திரம்.

---:*:---

மதுரையம்பதி யருகிலுள்ள ஒரு நகரத்தில் ஈஸ்வர பக்தியும், ஜீவகாருண்யமும், தர்மச்சிந்தையும் தெய்வ வழிப்பாடும் ஓர் உருவாய் அமைந்தவரும், திரண்ட திரவிய முடையவருமான ஓர் வணிகன் இருந்தான். அவனுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களை தன்னகத்தே நீங்கவிட்டது, "தெய்வந் தொழா ஆள் கொழுநனைத் தொழுவள் பெய்யெனப் பெய்யும் மழை" எனும் நாயனார் வாக்குக்கு ஒரு சிறிதும் தவாற நடக்கை யமைந்த உத்தம மனைவி இருந்தாள்.

இத்தகைய மேன்மை பொருந்திய சதி - பதி இருவரும் நதியும், மதனும் போலும், காரும் பூவும் போலும், பாலும் நீரும் போலும் ஒருமித்து இல்லற கருமத்தை இனிது நடாத்தி வந்தனராயினும், நெஞ்சளவில் ஓர் மித இன்னல் வாய்ந்த வண்ணமிருந்தது, அது யாதெனின் புத்திரபாக்கிய மின்மையே யாம். அளவிறந்த செல்வ மிருக்



தும் தனக்கு பின் அதை அடைதற் பொருட்டும், தம் சந்ததி விர்த்தியாவதின் பொருட்டும், தமக்கு மக விலா விடில் "புத்திரனில்லாதார்க்கு புதனெனும் நரகம் சிக்கும்" என்னும் கருத்தினாலும் மனம் மிகவாடி பலவித மான தர்மங்களைச் செய்து ஆண்டவனருளினால் ஓர் பெண் மகவையீன்றெடுத்தனர்.

அப்பெண் மகவை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக வளர்த்து வந்தானாயினும் தன்மகவை மூதூர் தன் மருகனுக்கு கொடுப்பதாக சுற்றத்தார் பலரின் முன்பாக உறுதிமொழி பகர்ந்தான். இவ்வாறு பல நாட் கழிந்தன. இவ்வாறுள்ள நாளையில் அவ்வணிகன் ஊழ்வினைப் பயனாக இவ்வுலகை நீத்து விண்ணுடைடந்தான். புருஷன் இறந்துபட்டதை யறிந்த மனைவி தானும் தன் பர்த்தாவுடன் உடன் கட்டையேற உன்னி உயிர் நீத்தாள். இது கண்ட அப்பெண் தாய் தந்தை இருவரும் மாண்டதைக்காண மனமிக வருந்தி துக்கசாகரத்தில் ஆழ்ந்தினள் கிளைஞர் அனைவரும் ஒன்றுகூடி அவர்கட்கு செய்ய வேண்டிய ஈமக்கடனனைத்தும் செய்து முடித்து, மூதூரிலுள்ள வணிகனது மருகற்கு தெரிவிப்பதின் பொருட்டு ஓலை விடுத்தனர்.

தம் மாமனும், மாமியும் இறந்தொழிந்தனர் என்று அறிந்த மருகன் தடாலெனத்தரையில் வீழ்ந்து புரண்டு விம்மி விம்மி அழுதவண்ண மிருந்தான், இதுகண்ட அவன் சுற்றத்தார்கள் அவனைத் தேற்றினார்கள். சுற்றத்தாரால் தேற்றப்பட்ட 'மருகன்' எழுந்து தன் மாமனார் வாழும் ஊர்க்கு போகத் தீர்மானஞ்செய்து மதுரையை விட்டு நீங்கிய மாமனாரின் பதிக்குச்சென்று அங்குள சுற்றத்தா

...னை விசாரித்து தன்மாமனாரின் மனைக்குப் புகுந்து அங்கிருந்த மாமன் மகளைத்தேற்றி அங்கு சிலகாலம் இருந்து வந்தான்

சின்னாட்குப் பின்னர் தன் மாமனது பொருள்களைத் தும் தன்வயமாக்கி அவ்வனிதையை தன்னூருக்கு அழைத்துப்போய் தம் சுற்றத்தாரறிய விவாகம் செய்துக்கொள்வேன் என்று சொல்லி பிரயாணப்பட்டான் அது அறிந்த சுற்றத்தாரும் மற்றோரும் அவனையும், அப்பெண்ணையும், வழிவிட்டு வரப்புறப்பட்டு போனார்கள் தன்னை வழிவிட வந்தவர்களை நோக்கி நீவிர் விடைப் பெற்றுக்கொள்ளுங்களென, அவரவரும் விடைப்பெற்று மீண்டனர். வணிகனும், வனிதையும் பரிசனத்துடன் திருமருகன் யடைந்தார்கள். அப்போது சூரியன் குடதிசை யடைந்தது அது கண்ட வணிகன் அவ்வூர் கோயிலில் தங்கி போஜனாதிகள் முடித்து துயிலும் பொருட்டு வணிகன் கோவில்பாடி பொன்றில் தலையை வைத்து துயில் போந்தான். அது போது கொடுமையான விஷத்தையுடைய சர்பமானது அவனைக் கடிக்க அவ்விஷம் தலைக்கேற அவனுயிர் நீத்தான்.

அவ்வாறு கொடுவிட நாகத்தால் கடிக்கப்பட்டு விஷந் தலைக்கேறி இறந்துண்டதை யறிந்த அம்மங்கை நல்லாள் தனக்கு நாயகனாகப்பட்டவன் இறந்தொழிந்ததைப் பார்க்க சகியாதவளாய் மனங்கதறி கீழே புரண்டழுதாள் மீண்டும் எழுந்து கைகளை முறித்துக் கொண்டும், தலையில் அடித்துக்கொண்டும், மார்பில் அறைந்துக் கொண்டு அழுது மூர்ச்சித்துப் போனாள், அதுகண்ட பாங்கிமார், அவளுக்கு களை தெளிய வைத்தபோது சிறிது சுவாசம்



வரத் தலைப்பட்டது மீண்டும் தலைமயிர் அலங்கோலமாக விழ்வதுந் தெரியாமல் என்னையகனே! வணிகர் குலத்திலுதித்த மன்னா! சொர்க்கத்திலுள்ள மாதரை அடைதற்கோ, அல்லது, அளகாபுரி மாதர்களை யடைவதற்கோ அல்லது உன்னைக் கடித்த நாகன் பதியாகிய நாகலோகத்திலுள்ள மாதரை அடைதற்கோ, என்னுயிர் தலைவ! என்னை இந்நாட்டில் விடுத்து வஞ்சித்து போயினையோ! அல்லது; வானுலகிலிருக்கும் உனது மாமன், மாமியைகாண் பதன் பொருட்டு போயினையோ! அவ்வாறாயின் எனையுமழைத்தும் சென்றால், எனது தாய் தந்தையர்களையும் கண்களினாலே பார்க்க மாட்டேனோ! என்னையும் இங்கு விட்டாய் பரிசனங்களையும் விட்டு பிரிந்தனையே!

உன்னருமை மாமன் இறந்ததும் உன் மாமியாகிய என் தாய் உயிரை யிழந்தாள் நீர் இறந்தும் நும்மனையாளாகிய நானிருப்பது எவ்வாறாக்கும்? எனக்குத் தலைவனாகிய தாம் சென்றபின் நானிருந்தும், இல்லாததும் ஒன்றேயல்லவா! என்றும் இறைவனை வேண்டியும் பலவாறாக, அழுகலுற்றாள்.

* அதுகளை சீர்காழி ஞானசம்பந்த பெருமானார் சிவக்ஷேத்திரங்களை தரிசனஞ் செய்து பாடி அவ்வூரிலே ஓர் மடத்திலே தங்கியிருந்தார் அப்போது வணிக மாது அழுகுரல்கேட்டு அது என்ன அழுகுரலோ போய்ப்பார்த்து வாருங்களென்று ஒருவரை அனுப்ப, அவ்வாள் போய்ப் பார்த்து அங்கிருக்கும் கோலத்தைப் பார்க்க சகியாது திருஞான சம்பந்தரிடம் பகர அவர் அங்ஙனமே எழுந்து கோயிலினருகில் வந்தும், அக்கன்னிகையை நோக்கி, கன்

---

* குடதிசை - மேற்கு

ணிகையே! நீ யார்? இவன் நிகழ்ந்ததென்ன! நீ இவ்வாறு புலம்புவதேன் என்று வினவ, அக்கன்னிகை அவரை வணங்கி தன் வரலாற்றினை முழுதுங் கூறினள். அது கேட்ட திருஞான சம்பந்தர் திருமகள் கடவுளை நோக்கி?

"சடையாயெனுமால் சரணீயெனுமால்
விடையாயெனுமால் வெருவாவிழுமான்
மடையார்குவளைப் பலரும்மருக
லுடையாய்தகுமோ விவளுண்மெலிவே"

எனத்திருப் பதிகம் பாடினர். உடனே கொடு விஷத்தால் தாக்குண்ட வணிகனுக்கு விடம் நீங்கி துயில்கொண்டவன்போல் எழுந்தான் அது கண்டு யாவரும் திருஞான சம்பந்தரை துதித்து வணங்கினர்கள் வணிகனும் அவரை வணங்கினன் அதுபோது திருஞான சம்பந்த பெருமாநாயனர் அவ்வணிகனை நோக்கி, இம்மங்கையை மணஞ்செய்துக் கொண்டுபோ! என்றார். அதைக்கேட்ட வணிகன் சுவாமி! இங்கு எனது சுற்றத்தாரின்றி எவ்வாறு மண முடித்தல் கூடுமென, திருஞான சம்பந்தர் இப்பெண் பிறந்தபோதே இவளை உனக்கு கொடுப்பதாக உன்மாமன் வாக்குறுதி செய்தது யாவருக்கும் தெரியும் அல்லாமலும், இங்கிருக்கும், "வன்னியுங் கிணறும் லிங்கமும் சாக்ஷி" யிருக்கிறபடியால் எம்முரைகடவாது மணம் முடித்துக் கொள் என, அவ்வணிகனும் ஒப்புக்கொள்ள திருஞான சம்பந்த மூர்த்திகளே முதன்மையாக நின்று விவாகஞ்செய்வித்து ஆசிகூறி சென்றார் வணிகனும் தன் மனைவியாளுடன் பரிசனம் சூழப் புறப்பட்டான்.

அவ்வாறு திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளிடம் விடைப்பெற்று மதுரைக்கு சமீபத்திலுள்ள மூதுருக்குச்



சென்று தன் மாமன் மகளை திருமணம் செய்த விபரத்தை கேள்வியுற்ற சுற்றத்தார் யாவரும் களிக்கும்படியாக இல்லற வாழ்க்கையை நடாத்தி தன்மாமன் திரவியமும், தம் திரவியமும் சேர்த்து வாணியம் செய்து கீர்த்தியுடன் வாழ்ந்து வரும் நாளில் மூத்தமனைட்டிக்கு ஒருபிள்ளையும், நம் "கதா நாயகி" யாகிய இளைய மனைட்டிக்கு ஓர் பிள்ளையும் உண்டு. இருவர்களும் வீதியில் சென்று விளையாடுவார்கள்.

இவ்வாறிருக்கும்போது, முந்திய மனைவியின் மைந்தன் ஓர் நாள் சிற்றங்கொண்டு அடித்தான். அதனால் இளையாள் மூத்தாள் மைந்தனைச் சீறி வைதாள். அது தாளாது மூத்தவள் இளையவளை எந்தவூரோ? எந்த சாதியோ? யாருடைய மகளோ! யாவருங்காண ஓமம் வர்த்தி மாங்கல்ய தாரணம் செய்யப்பட்டவளா? இல்லையே என் நாயகன் மீது ஆசைக்கொண்டு வந்த தாசியாகிய உனக்கு வாயும், வீறும் ஏன் அவ்வாறு சாக்ஷிகள் உண்டாகில் எடுத்துரை என்று ஏசினள்.

மூத்த மனைவியானவள் சொன்ன சொற்களைக்கேட்ட இளைய மனைவியானவள் நாணத்தால் கவ்வப்பட்டு சொல்லுகின்றாள் அன்று அரவத்தால் இறக்கப்பட்டது உயிர்ப்பித்து தந்த திருஞான சம்பந்த மூர்த்திகள் அருளியபடிக்கு "வன்னியும்,கிணறும்,லிங்கமும்" சான்று இருக்கின்றது என்றாள். அவ்வாறாயின் எமக்கு நிரூபிக்க வேண்டும் என்றாள் மற்றாள், அப்படியே ஆகட்டுமென்று இளையாள் உரைத்து கடவுளை நோக்கி வருந்தி துதித்து அழுது சந்நிதித்தப்போய் முறையிட்டாள் மறுநாள் மூத்தாளும் சுற்றத்தாரும் சூழ திருக்கோவிலுக்குள் சென்

கிருஷ்ணன் சொல்லுவார், ஓ! அண்ணா! முன்னமே, நமது தங்கை சுபத்திரையின் மகனை அபிமன்புக்கு அளிப்பதாக வாக்குறுதி செய்திருக்கின்றீரே, அவரைக் குறுதி பங்கப்படுத்தலாகுமா? ஒருவனுடைய செல்வசெருக்கை அபகீர்த்தியுடையவனுக்கு கொடுப்பதைக் காட்டிலும், வித்தையிலும் புத்தியிலும் மேம்பட்ட ஒரு நித்திய தரித்திரனுக்குக் கொடுப்பதுமேல் அதைக்காட்டிலும் நான் வேறென்ன சொல்ல முடியும். அவ்வாறு சொல்லினும் உம்மதிக்கு பதியா உம்மிஷ்டப்படியே செய்யும் என்று சொல்ல பலராமர் சீற்றமடைந்து, கிருஷ்ணா? நீ இவ்வாறுரைத்தல் தகுதியல்ல இனி கொலுக்கூடத்தில் வர வேண்டுமென்று சொன்னதைக் கேட்ட கிருஷ்ணர் இனி நான் வரவில்லை, எல்லாம் பகவத் சங்கற்படி நடக்குமேயல்லாத, உம்மிஷ்டப்படியும், என்னிஷ்டப்படியும், ஒருபோதும் நடைவாது என்று சொல்லிக் கொலுக்கூடத்தை விட்டகன்றனன்.

பலராமரும், சகுனியிடம் துரியோதிரனுடைய புத்திரன் லக்குமணனுக்கு தன் மகள் வத்ஸலாவைக் கொடுப்பதாக வாக்குறுதி செய்துக் கொடுத்தார், உறுதியைப் பெற்ற சகுனியும் மனச் சந்தோஷமுற்று விடைப்பெற்று தம்பதியை யடைந்தார். இங்கு நடந்த விஷாபாரதிகளைத்து யறிந்த கிருஷ்ணன் பிராமண வடிவந்தாங்கி சுபத்திரை யாம் சென்றார். வந்த பிராமணரைக் கண்ட சுபத்திரையானவள் உபசரித்து தாம் எந்தவூர் எங்கு செல்லுகின்றீரென அவ்வேதியர் சொல்லுவார், ஓ! அம்மா! துவாரகையில் பலராமனின் மகள் வத்ஸலா தேவியை, துரியோதிர மகாராஜனுக்கு, மணம் முடிப்பதாகச் சொல்லக்



கேட்டு அங்கு போன்றேன். என்று சொல்லி விடைப் பெற்று சென்றார்.

அதைக்கேட்ட சுபத்திரை மனம்பதைத்து தமையன் வாக்குறுதியை யிழந்தன, எண்ணி விசனித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் வேட்டையாடச் சென்ற, அபிமன்புதாயின் விசனத்திற்கு காரணத்தை யறிந்து, ரதத்தைத் தயாரித்து தாயை துணைக்கொண்டு தாய் ரதசாரத்தியஞ் செய்ய அபிமப்புரதா ரோகனைப் ரதத்தை நடத்தினார்கள்.

வாயுவேகத்தை விட மனோவேகமாக ரதம் செல்லத் தொடங்கியது. அப்போது சுபத்திரையானவள் அபிமன்புவை நோக்கி, மைந்த! இப்பாதையாக ரதத்தை விடுத்தால் துவாரகை யடைவதற்கு நான்கு நாட்கள் செல்லும் விவாகத்திற்கோ இரண்டு நாட்களிருக்கின்ற ஆகையால் ரதத்தை குறுக்காக விடுத்தால் இரண்டு நாளையில் போய்ச் சேரலாம், என்று சொல்லக்கேட்ட அபிமன்பு, அப்படியே ரதத்தை விடுமென்று சொல்லி வில்லை, அஸ்திரம் தொடுத்து மரம், செடி, மலை முதலியவைகளை வெட்டி வீழ்த்தி பாதை யுண்ட ரதத்தை நடதினார்கள். இவ்வாறு அநேக காடுவனாந்திரங்களைக் கடந்து ரதம் இடும்பை வனத்தில் புகுந்தது.

இடும்பை வனத்திலுள்ள அரக்கர்கள் யாரோ ஒர் மானிடச் சிறுவன் ரதாரோகனாகவும், ஒருபெண்பால் ரதசாரதியாகவும், அஞ்சாது நம் இடும்பை வனத்தில் வருகின்றார்கள். இவர்களைச் சும்மா விடுவது தகாதென்று, கத்திக் கேடயம் முதலிய ஆயுதங்கொண்டு யுத்தத்திற்கு

ஷய தேறுதல் கூறி கிருஷ்ணன் கடாக்ஷத்தில் கடோற்கஜனை, உயிர்ப்பிக்க செய்தான். தாயால் விஷயமறிந்த, கடோற்கஜன் அபிமன்புவை கட்டித் தழுவி தம்பி! தெரியாமற் செய்த பிழையை கவனிக்க வேண்டும், என்று சொல்லி சுபத்திரையை வணங்கினான். சுபத்திரை அவனுக்கு ஆசிகூறி பின்னும் சொல்லுவாள்.

ஓ! மைந்தா? வீண்கால தாமதம் செய்வதால் பிரயோஜனமில்லை உடனே துவாரைக்கு புறப்பட வேண்டுமென்று சகல விஷயமும் விபரமாகச் சொன்னாள் அதுகேட்ட கடோற்கஜன், கோபாந்தகாரனாகி, ஓ! அந்த பலராமன் வச்சலையை துரியன் மகன் லக்ஷுமணனுக்கு விவாகம் செய்துக் கொடுப்பதை நான் அறிகின்றேனெனச் சிறி மாயா சக்தியினால் சுபத்திரையையும் அபிமன்புவையும் அநேக ராக்கதர்களையும் ஆகாய மார்க்கமாகக் கொண்டு தெய்வ மலையில் சேர்த்து அச்சேதியை கிருஷ்ணனுக்குத் தெரிவித்தான் அதைக்கேட்ட கிருஷ்ணன் மனச்சந்தோஷமடைந்து வத்ஸலாவை தெய்வ மலைக்கு கொண்டுபோ! அங்கு நான் வந்து விவாகத்தை முடித்து வைக்கின்றேன். என்றார், உடனே மாயா சக்தியால் வத்ஸலாவை தெய்வ மலைக்கு எடுத்துப்போய் சுபத்திரையிடம் ஒப்புவிக்க, அங்கு கிருஷ்ணன் ருக்மணி, சத்யபாமா சமேதராகவந்து, தேவேந்திரனை யழைத்து தேவர்கள் ரிஷிகள் முன்னிலையில் அபிமன்புவிற்கும், வத்ஸலா தேவிக்கும் விவாகத்தை நடத்தி வைத்தார்

துவாரகையில் விவாகத்திற்காக சகல விதமான ஏற்பாடுகளும் முடிந்தது. மறுநாள் விவாகம் முடியவேண்டியது தான் பாக்கி, அப்போது கடோற்கஜன்! ராக்கதர்



களை ஆடையாபரணங்களாக செய்வித்து, 'மாயா பஜார்" சொப்பனிட்டு துரியோதினாதிகளின் ஆடையாபரணங்களைக் கவர்ந்து ராக்கதர்களால் தயாரிக்கப்பட்ட ஆடை ஆபரணங்களை அவர்களுக்கு அணிவிக்க செய்து விவாகம் செய்யும் தருவாயில் தான் வத்ஸலா வேடந்தரித்து அந்தப்புரத்தி லிருந்தான்

விவாகத்திற்காக ஓமம் வளர்த்தி சர்வசடங்குகளும் செய்துக் கொண்டிருக்கும் போது மாயா வத்ஸலா அரசன் விடுதியிற் சென்று அங்கு அளவற்றிருக்கும் அன்னதி வகைகளை புசித்து முன்போல வத்ஸலாரூப மடைந்தான். மணமகனும், மணமகளும் ஓமாக்கினியி னெதிரில் அமர்த்தி சடங்குகள் செய்து மாங்கல்யம் தரிக்கும்போது கடோற்கஜன் தன் சுயரூபங்கொண்டு ஆடையாபரணமாயிருந்த ராக்கதர்களை பழய ரூபமாக்கி துரியோதனாதிகட்கு இம்சை விளைவித்து ஆகாயமார்க்கமாகச் சென்று தெய்வ மலையை அடைந்து நடந்த சங்கதிகளை சுபத்திரை அபிமன்பு, வத்ஸலா மூவரிடமும் சொன்னான்.

விவாக விடுதியில் மானமிழந்த துரியோனாதிகள் யாருடனும் சொல்லாமல் தம்மூர்போய்ச் சேர்ந்தார்கள். பின்னால் பலராமர் மனங்கலங்கி கிருஷ்ணனை யழைத்து சங்கதியைச்சொல்லி துக்கித்தார் அவரும் இவருடன் கலந்து துக்கங்கொண்டாடி நமக்கு இது விஷயமாக ஒன்றும் தெரியாதென்று சொல்லி விட்டார் பின்பு நாரதரால் விஷயத்தையறிந்த பலராமர் கோபமூண்டு யுத்தத்திற்கு ஆயத்தமானார்

அதை யறிந்த கிருஷ்ணன் அவருக்கு வேண்டிய சமாதானங்களைச் சொல்லி தெய்வ மலையிலிருக்கும் சுபத்

கிடக்கும் நெல்லைப் பொறுக்கி ஒருபிடியானதும் அதை தன் மனைவியிடம் கொண்டுவந்து கொடுப்பார். அவ்வம்மையார் அதை அன்புடன் வாங்கி அதை உரலிற்போட்டுக் குத்தி உமி நீக்கி அந்தப்பிடி தானியத்தில் நிறைய ஜலத்தை விட்டு கஞ்சி செய்து, இருபாகமாக்கி ஒரு பாகத்தை அதிதிகளுக்கிட்டு மற்றோர் பாகத்தை இருபத்தொன்பது பேரும் புசிப்பார்கள். அக்கஞ்சி அக்குழந்தைகளுக்கு கால் வயிறு கூட காணாததால் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு அழுவார்கள் சுசீலை அவர்களை அன்புடன் அழைத்து, கண்ணீரைத் துடைத்து. முத்தங்கொடுத்து, அவர்களுக்குத் தேறுதல் சொல்லி யனுப்புவாள். இப்படி யிருக்க சுசீலை ஓர்நாள் தனது மக்கள் பசியால் படும் பாட்டை காண சகியாதவளாய் கணவனைநாடி முகம் வாடி அவர் திருவடிகளை நமஸ்கரித்து அதிக தாழ்மையுடன் சொல்லத் தொடங்கினாள்.

ஓ! என் பிராணபதியே! நமது குழந்தைகள் படுங் கஷ்டத்தைப்பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. குழந்தைகளின் கஷ்டத்தை நீக்குவது பெற்றோர் கடமையன்றோ? நாமோ தரித்திர நிலைமையில் இருக்கிறோம் தயை செய்து தாங்கள் யாசகம்செய்து சிறிது பொருள்கொண்டு வந்தால் நமது குழந்தைகளின் வறுமை நோய் நீங்கும், என்றாள் சுசீலை அதை செவியுற்ற சுதர்மர், பெண்ணே! சகல ஜீவராசிகளையும் ரக்ஷிக்க பரந்தாமன் ஒருவனிருக்க, இக்குழந்தைகளைக் காப்பாற்ற என்னால்முடியுமா? மேலும் பரந்தாமனை பஜிப்பதை விட்டு யாசகமா செய்ய என்றார். அதைக்கேட்ட சுசீலை அதிக பயபக்தியுடன் தன் கணவனை நோக்கி! என்னுருயிரே தாங்கள் கூறுவது நியாயமே யாயினும் பிறரை ரட்சிக்கும் பொருட்டு யாசகம் செய்தல் ஓர்



உபகாரமன்றோ என்றாள். உடனே சுதர்மா தன் மனைவியை நோக்கி, பெண்ணே யங்கே யான் யாரிடம் சென்று யாசிப்பது என்றார். சுசீலை அதைக்கேட்டதும் அதிகச் சந்தோஷங் கொண்டு நாதா! தாங்கள் யாரிடமும் யாசகம் செய்ய வேண்டாம். தாங்கள் பால்ய நண்பரான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் செல்லுங்கள், அவர் நமது வறுமை நோயை அகற்றுவார் என்றாள். பெண்ணே! குரு தெய்வம் அரசன் பக்தர்கள் முதலியோர்களைக் காணவு தென்றால் வெறுங் கையோடு செல்லலாகாது, என்று பலநூல்களில் சொல்லி யிருக்கின்றது அப்படி யிருக்க சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபகவானை வெறுங்கையோடு சென்று எவ்வாறு காண்பேன் என்றார். தன் மணாளன் கோறிய வாறே தான் ஏதாகிலும் சேகரித்துக் கொடுப்பதாக வாக்களித்து விட்டு விடைப்பெறறுக் கொண்டாள். அன்று முதல் அவள் தன் நாயகன் கொண்டுவரும்படி நெல்லில் தன் பாகமாகிய நாலைந்து நெற்களைச்சேர்த்து வைத்து ஒருபிடி நெல்லான உடனே அதை பக்தியுடன் வறுத்து அவலாக யிடித்து அதை கிழிந்த ஒரு பழங்கந்தையில் பத்திரமாக முடிந்து தன் நாயகனிடம் கொடுத்து துவாரகைக்குச் சென்று வரவேண்டு மென்று வேண்டிக் கொண்டாள். சுதர்மர் அதை வாங்கிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு துவாரகைக்குப் புறப்பட்டார்

அவர் பகவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டே காடு, மலை, வனம் வனாந்திரங் களைக்கடந்து, லவணக்கடலை யடைந்து, ஓடக்காரனிடம் இதமொழிகளைப் பேசி, அவனுதவியால் அக்கரையை யடைந்தார். அங்கு மணிமுடி தரித்த மன்னர்களெல்லாம் பகவானைத் தரிசிக்கும்பொருட்டு அநேக நாட்களாக காத்துக்கொண் டிருப்பதையும்.

கண்டார். பிறகு அவர் அதிக சிரமப்பட்டு அக்கூட்டத்தினை யெல்லாம் கடந்து, துவாரகா பாலர்களைக் கண்டு, அவர்கள் அனுமதியின் பேரில் மாளிகையினுள் நுழைந்தார். அங்கு அநேக கோபிகா ஸ்திரீகள் புடைசூழ நவரத்தின மயமாகிய அம்சதூளிகா மஞ்சத்தில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் ராதா ருக்மணி சமேதனாய் வீற்றிருப்பதைக் கண்டார். இதற்குள் இவரது வரவை யறிந்த பகவான் எதிர் கொண்டுவந்து, அழைத்துச் சென்று, அன்புடன் உபசரித்து, அறு சுவை அன்னத்தை ஊட்டி தனது சயனத்தில் அவரை சயனிக்கச் செய்து, அவர் பாதங்களைப் பிடித்து சிரம பரிகாரஞ்செய்து எழுப்பி உட்காரவைத்து க்ஷேமலாபங்களை விசாரிக்கலானார். தாங்கள் அநேக நாட்களுக்குப் பிறகு வந்தீரே எனக்கென்ன கொண்டுவந்தீர் என்று சொல்லிக்கொண்டே அவர் கக்கத்திலிருந்த மூட்டையை எடுத்து அவிழ்த்து அதில் சிறிது அவலை எடுத்து அன்புடன் புசித்து சுசீலையின் இஷ்டப்படி சம்பத்துண்டாகு மாறு அவ்வுத்தமியை வாழ்த்தினார்.

மற்ற அவலை அங்கிருந்தவர்கள் சந்தோஷத்துடன் புசித்தார்கள் பிறகு பகவான் அவருக்கு விடைகொடுத்தனுப்பி விட்டார். சுதர்மர் பகவானை தரிசித்த சந்தோஷத்தினால் தான் கோறிய வந்த திரவியத்தைக் கேட்கமறந்து தன் ஊருக்குத் திரும்பினார். பகவான் கடாக்ஷத்தின் பயனாக அவர் வந்துக்கொண்டிருக்கும் வழியிலேயே அவரது கிழிந்த வேஷ்டி பட்டு பீதாம்பரமாகவும் அவரது மெலிந்த தேகம் திடகாத்திரத்துடனும், அவர் கழுத்தில் அணிந்திருந்த துளசி மாலை நவரத்தின மாலையாகவும் மாறியது. சுதர்மர் தனது குக்கிராமத்தை யடைந்து வீடு தெரியாமல் அலைந்துக் கொண்டிருக்கும்போது தனது



மனைவியினால் அனுப்பப்பட்ட தோழிவந்து அவரை அழைத்துச் சென்றாள். அவரது குடிசை வீடு குபேரன் மாளிகை போல் காணப்பட்டது அவரைக் கண்டதும் சுசீலை அவரது பாதங்களை நமஸ்கரித்துக் கொண்டு அவரை வீட்டினுள் அழைத்துச் சென்றாள்.

சுதர்மர் தன் வீடு முழுமையும் சொர்ணமயமா யிருப்பதைக் கண்டு அதிக கோபங்கொண்டு தன் பத்தினியை நோக்கி, பெண்ணே நீ விரும்பிய வாறே பகவான் சம்பத்தைக் கொடுத்தார், நீயும் உன் குழந்தைகளும் சுகமாக சம்பத்தை யனுபவித்துக் கொண்டிருங்கள், நான் எங்கேனும் ஒருவனத்திற்குச் சென்று பகவத்தியானம் செய்துக் கொண்டிருக்கிறேன் என்றார். உடனே சுசீலை, சுவாமி! பொருளை எனக்காக வேண்டினவளல்ல, குழந்தைகளுக்காக வேண்டினேன், அவர்கள் இச்சம்பத்தை யனுபவிக்கட்டும், நான் உம்முடன் வருகிறேனென்று தானும் வனத்திற்குப் புரப்பட்டாள். பிறகு இருவரும் ஒருவனத்திற்குச் சென்று அங்கு ஒரு பர்னசாலை யமைத்து அதில் பகவத்தியானம் செய்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் ஓர்நாள் பகவான் கெருடவாகன ரூடராக இவர்களுக்கு காட்சி தந்து, ஓ! பக்த சிரோன்மணிகளே! நீங்கள் அநேக நாட்களாக தரித்திரத்தால் கஷ்டப்பட்டதால் சில நாளைக்கு நான் கொடுத்திருக்கும் சம்பத்தை யனுபவித்து விட்டு பிறகு மோக்ஷ சாம்பிராச்சிய பதவியை யடைவீர்களென வாழ்த்தி மாயமாய் மறைந்து போனார். பகவான் கட்டளைப்படியே அவர்கள் சிலகாலம் சகல சம்பத்துக்களையும் அனுபவித்து விட்டு பிறகு சதிபதிகளிருவரும் மோக்ஷத்தை அடைந்தார்கள்.

# 43 - சந்தியாவளி சரித்திரம்.

—*°*—

மாளவ தேசத்தை சுதேச மகாராஜனென்பான் ஆட்சி செய்துக் கொண்டுவந்தான், அவனது மனைவியின் பெயர் மங்களவதி! அவர்களுக்கு சந்தியாவளி! என்றோர் பெண்ணுண்டு, அவள் அதிக ரூபலாவண்ய முள்ளவள். இம்மண்ணுலகில் அழகுக்கு அவளுக்கு இணையானவர் ஒருவருமில்லை. அவள் அழகில் சிறந்து விளங்கியது போல் சகல சாஸ்திரங்களிலும் சிறந்து விளங்கினாள். அவள் பருவமடைந்த பின்பு பாங்கியர்களுடன் கன்னியாமாடத்தில் காலங்கழிக்கலானாள், சுதேச மகாராஜன் எந்த அரசகுமாரன் தந்தை, தாய், குரு, தெய்வம் முதலியவர்களிடத்தில் பக்தியும் அண்டினவர்களை ஆதரிப்பவனுமாயிருக்கிறானோ? அவனுக்கு என் புதல்வியை மணம் செய்விக்க நிச்சயித்திருக்கிறேனென்று தன் மந்திரிகளிடம் தெரிவித்தான். அதைக்கேட்ட முதல் மந்திரி அரசனை நோக்கி, அரசே! விதர்ப்பதேசத்து மன்னனான சுகரனுக்கு ருக்குமாங்தன் என்று ஓர் புதல்வனிருக்கிறான். அவனுக்கு தாங்கள் கூறிய சகல குணங்களும் பொருந்தியிருக்கிறது, அவன் தங்கள் புத்திரியை விவாகம் செய்துக் கொள்வானாகில் தாங்கள் சகல விதத்திலும் பாக்கிய சாலியே என்றான். பிறகு அம்மந்திரி சித்திரககாரர்களைக் கொண்டு சந்திராவளியைப் போல் சித்திரப்படமொன்றெழுதி, அதைத் தூதர் மூலம் விதர்ப்ப மன்னனுக்கு அனுப்பினான். சுகரன் அதைத் தன் புதல்வன் ருகமாங்கதனிடம் கொடுத்தான். அவன் அப்படத்தைப் பார்த்தும் மோகித்துக் கீழே விழுந்தான். அன்று முதல் சந்திராவளியின்மீது ஏக்கங் கொண்டான். அதை யறிந்த சுகரன் தன்மகன் ருக்மாங்கதனுக்கு சந்தியாவளியை மணம் செய்விக்க சகல ஏற்பாடுகளும் செய்தான் விதர்ப்பதேசத்திலேயே ஓர் சுப முகூர்த்தத்தில் ருக்மாங்கதனுக்கும் சந்தியாவளிக்கும் திருமணம் நடந்தது சுதேச மகாராஜன் தன் மகளுக்கும் மருமகனுக்கும் வேண்டிய சீதனங்களைக் கொடுத்தனுப்பினான் சந்தியாவளி தன் மாமன் மாமியை தன் தந்தை தாயைப்போலும் தன் கணவனைத் தெய்வம் போலும் பாவித்து வந்தாள் இப்படியிருக்கையில் சில நாட்களுக்குப் பின்பு ருக்மாங்கதன் தாய் தந்தையர் உயிர் நீத்தனர். அவன் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கிரியைகளை முடித்துப் பின்னர் தான் ராஜ்யபாரத்தை ஏற்றுக் கொண்டான். மனுநீதி தவறாமல் செங்கோல்செலுத்திவந்தான் சந்தியாவளி தன் நாயகனுக்குத் தொண்டு செய்தலே தான் நற்கதியடையும் மார்க்கமெனத் தெரிந்து தன் கணவனுக்குப் பணிவிடை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள் ருக்மாங்கதன் இவள் ஒருவள் நமக்கு மனைவியாயிருப்பதால் அதிகப் பிரியமாயிருக்கிறாள். நமக்குப் பல பத்தினிகளிருந்தால் அப்பொழுது இவள் எப்படி நடந்துக் கொள்வாளோ? அதைப்பார்க்க வேண்டுமென்று ஒரே முகூர்த்தத்தில் தொண்ணூற்றி யொன்பது கன்னிகைகளை மணம் செய்துக் கொண்டான்.



சந்தியாவளியைக் கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை ஆனால் சந்தியாவளியோ முன்னிலும் அதிக அன்பாய் தன் கணவனை உபசரிக்கலானாள், அதைக்கண்ட ருக்மாங்கதன் அவளது கற்பை மெச்சி அவளைப் புகழ்ந்தான். அப்பொழுது சந்தியாவளி உத்தமஸ்திரீக்கு தன் பதியே கடவுள் என்று சொன்னாள். அவள் தனது மனைவிகள் நினை-

தோறும் மலர் சூட்டிக் கொள்ளும் பொருட்டு ஒரு நந்தவன மமைத்து அதற்கு காவல்காரர்களை நியமித்தான். அதில் தினந்தோறும் அநேக நறு மலர்கள் புஷ்பித்துக் கொண்டிருந்தன. ஜாபாலிமா முனிவர் அவ்வனத்திற்கு அருகாமையில் ஆசிரம மொன்று கட்டிக்கொண்டு அங்கு தவம் செய்துக் கொண்டிருந்தார்.

இப்படி யிருக்கையில் தெய்வலோகத்திலிருந்து அப்ஸரஸ்திரீகள் வந்து பகவானை பூஜிப்பதற்காக அந்த நந்தவனத்திலிருந்த புஷ்பங்களைத் தினந்தோறும் பறித்துக் கொண்டுபோயிருந்தார்கள் நாளுக்கு நாள் புஷ்பங்கள் குறைந்துக்கொண்டே வந்ததால் ராஜபத்தினிகள் அரசனிடம் முறையிட்டனர் அரசன் அத்திருட்டை மூன்று தினங்களுக்குள் கண்டு பிடிக்கும்படி காவலர்க்கு கட்டளையிட்டான் காவலர்கள் எவ்வளவோ ஜாக்கிரதையாக பார்த்தும் திருட்டை கண்டு பிடிக்க முடியவில்லை. ஜாபாலிமா முனிவர் ஒருவர் தவிர அங்கு அருகில் வேறு யாருமில்லாததால் புஷ்பங்கள் காணமற் போனதற்கு அவர் தான் காரணமாயிருக்கக் கூடுமென்று அவரை அரசனிடம் கொண்டுபோய் விடுத்தனர் அம்முனிவர் அப்ஸரஸ்திரீகள் புஷ்பங்களைக் களவாடிக் கொண்டுபோகிறார்களென்றும், கோம்மட்டி விரையை விதைத்து வைத்தால் அவர்கள் மீண்டும் தெய்வலோகம் செல்ல முடியாதென்றும் உரைத்தார்.

அரசன் அவ்வாறே செய்தான். வழக்கப்படி வந்த ஓர் அப்ஸரஸ்திரீ அக்கோம்மட்டி கொடி பட்டதும் மீண்டும் தெய்வலோகம் செல்ல முடியாமல் நின்றிருந்தாள் ருக்மாங்கதன் தனது ஏகாதசி விரதபலனை அவளுக்குத்



தத்தம் செய்தான், அதனால் அவள் தெய்வலோகத்தை அடைந்தாள். ஏகாதசி விரத மகத்துவத்தைக் கண்ட அரசனும் அவனது பிரஜைகளும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்தனர். அவனது ஆளுகைக்கு உட்பட்ட அனைவரும் நூறு வயதளவும் சுகமாயிருந்து பிறகு மோக்ஷத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். அதனால் எமபுரம் பாழடைந்தது. உடனே எமதர்மன் பிரம்மதேவனிடம் முறையிட்டான். பிரம்மதேவன் ஓர் அதிக சௌந்தர்ய முள்ள கன்னிகையை சிருஷ்டித்து அவளுக்கு ஜெகன் மோகனாங்கி என்று பெயரிட்டு அவளுக்கு சில கட்டளையிட்டு மந்தாகிரி சாரலில்போயிருக்கும்படி ஆஞ்ஞாபித்தார் ஜெகன் மோகனாங்கி மந்தாகிரி சாரலுக்கு வந்து வீணாகானம் செய்துக் கொண்டிருந்தாள்.

பிரம்மதேவன் மாய்கையினால் அநேக துஷ்டமிருகங்கள் ருக்மாங்கதன் குடிகளிட்ட பயிர்களை நாசஞ்செய்யவாரம்பித்தன. அம்மிருகங்களை வேட்டையாடும் பொருட்டு அரசன் தன் பரிவாரங்களுடன் காட்டிற்குச் சென்றான். வேட்டையாடும்போது அரசன் தன் பரிவாரங்களை எல்லாம் பிரிந்து தன்னந் தனியே மந்தாகிரி சாரலை யடைந்தான் அங்கே வீணாகானம் செய்துக் கொண்டிருந்த ஜெகன் மோகனாங்கியைக் கண்டு அவள்மீது மோகம் கொண்டான். ஜெகன் மோகனாங்கி தான் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கும் அரசகுமாரனையே மணப்பதென்றும், பிறகு தான் மணந்துக்கொள்ளும் புருஷன் தான் வேண்டும் போது தனக்கு ஒருவரம் கொடுப்பதாக வாக்களிக்க வேண்டுமென்றும் தெரிவித்தாள். அதற்கு ருக்மாங்கதன் தான் ஏகாதசிவிரதம் அனுஷ்டிப்பவனென்

றும் அவள் கோரியவாறு வரங்கொடுப்பதாகவும் வாக்களித்தான்.

அதையறிந்த சந்தியாவளி பல மன்னர்களுக்கும் மணவோலை யனுப்பி அவ்விருவருக்கும் திருமணத்தை முடித்தான். அரசனும் ஜெகன் மோகனாங்கியும் ஒரு தனி அரண்மனையில் சரச சல்லாபமாக காலங்கழித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் ருக்மாங்கதன் ஜெகன்மோகனாங்கியைத் தழுவிக்கொள்ள சமீபித்தபோது வீதியில் நாளையதினம் தசமி திதி என்று தண்டோரா போட்ட சத்தங்கேட்டது. அதைக்கேட்ட அரசன் அவளைவிட்டு ஒரு தனியிடம சென்று பகவத்தியானம் செய்ய ஆரம்பித்தான். அவளும் விடாது அரசனைப் பின்தொடர்ந்து, அரசே! எனது விரகதாபத்தை தணிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அன்று விரதத்தினமாகையால் அதைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் செய்வதாக அரசன் தெரிவித்தான். உடனே ஜெகன் மோகனாங்கி அவனது புதல்வன் தர்மாங்கதன் சிரசை தனக்கு வெட்டிக் கொடுத்து தனது வார்த்தைப் பூர்த்திச் செய்ய வேண்டுமென்றாள். அதைக்கேட்ட அரசன் இடியோசைக் கேட்ட நாகம்போல் கதிகலங்கிப் போனான்.

நெடுநேரமாகியும் தசமி மண்டபத்திற்கு அரசன் வாராததால் அதன் காரணத்தையறிந்து வருமாறு தர்மாங்கதன் தன் தாய் சந்தியாவளியை யனுப்பினான். அவள் அந்தப் புரத்திற்குச் சென்று அங்கு நடந்த விருத்தாந்தங்களையறிந்து வந்து தன் மைந்தனிடம் தெரிவித்தாள். உடனே தர்மாங்கதன் தன் தந்தையிடம் சென்று தண்டனிட்டு, பிதாவே! தாங்கள் சற்றும் அஞ்சவேண்டாம்,



தாங்கள் என் சிரசைக்கொய்து சிற்றன்னையிடம் கொடுப்பதால் தங்கள் வாக்கை நிறைவேற்றினவராவீர், மேலும் நான் ஏகாதசியன்று பிராணனை விட்டால் மோக்ஷமடைவேன் என்றான். தனது மைந்தன் வார்த்தைகளைக்கேட்ட பிறகு ருக்மாங்கதனுக்கு தைரியமுண்டாகி, சந்தியாவளியைத் தன் மகனைப்பிடித்துக் கொள்ளச் சொல்லி தனது வாளாயுதத்தால் ஓங்கி வெட்டினான் அது புஷ்பமாலையாக விழுந்தது இரண்டாம் முறைவாளை ஓங்கினதும் பகவான் பிரசன்னமாகி, ருக்மாங்கதா! உனது சத்தியத்திற்கும் உன் மனைவியின் கற்பிற்கும், உன் மைந்தன் அருங்குணத்திற்கும் மெச்சினேன். அதோ வருகிற விமானத்தில் நீங்கள் மூவரும் ஏறி வைகுந்த பதவியை யடையுங்கள் என்று சொல்லி மறைந்தார்.

---

# 44 - சந்திரமதி சரித்திரம்.

———:*:———

அயோத்திமாநகரை சூரிய வம்சத்திலுதித்த அரிச்சந்திர மகாராஜன் சத்தியவாக்குத் தவறாமல் அரசாண்டுக் கொண்டிருந்தான் அவனுக்கு சந்திரமதி என்று ஒரு மனைவியும் லோகிதாசன் என்று ஒரு புதல்வனுமுண்டு, ஓர் நாள் தேவேந்திரன் தன் சபையிலுள்ள முனிவர்களை நோக்கி, ஓ! முனிவர்களே! பூலோகத்தில் சத்தியந் தவறாத புண்ணியவான் எவனேனு முண்டோ என்றான். அதற்கு வசிஷ்டர் பூலோகத்தில் அரிச்சந்திரன் ஒருவனே சத்தியந் தவறாதவன் என்றார் உடனே விசுவாமித்திரர் எழுந்து பூலோகத்தில் அப்படிக் கொருவரு மில்லை, அரிச்

சந்திரனும் பொய் சொல்பவனே என்றார். பிறகு இரு முனிவர்களுக்கும் வாக்கு வாதம் உண்டாகி விசுவாமித்திரர் தான் பூலோகத்திற்குச் சென்று எப்படியாவது அரிச்சந்திரனை பொய் சொல்லும்படி செய்வதாக சபதம் செய்தார்.

சிலகாலங் கழித்த பிறகு ஒருநாள் விஸ்வாமித்திரர் அரிச்சந்திரனிடம் சென்று தான் ஓர் யாகமியற்றப்போவதாகவும் அதற்கு ஒருவன் யானை மீதேறி ஒரு கல்லை உயரவெறிந்தால் எவ்வளவு உயரம் போகுமோ அவ்வளவு திரவியம் வேண்டும் என்றார். அதற்கு அவ்வரசன் அவ்வாறே கொடுப்பதாக சந்தோஷமாக வாக்களித்தான் உடனே விசுவாமித்திரர் தனக்கு வேண்டும்போது வாங்கிக்கொள்வதாகச் சொல்லி விட்டு தனது ஆஸ்மரத்திற்குச் சென்றார். சில நாளைக்குப் பிறகு விஸ்வாமித்திரர் தனது சீடனை நக்ஷத்ரகனை அழைத்து அரிச்சந்திரனிடம் சென்று அவன் கொடுப்பதாக சொன்ன திரவியத்தை வாங்கிக் கொண்டு வரும்படி சொன்னார். குருவின் கட்டளைப் படியே நக்ஷத்ரகன் அரிச்சந்திரனிடம் சென்று தனது குருவுக்கு சேரவேண்டிய திரவியத்தைக் கொடுக்கும்படி கேட்டான். உடனே! அரிச்சந்திரன் தன் பொக்கிஷ சாலையிலுள்ள திரவியங்களை எல்லாம் தான் கூறியது போல் கொடுத்தான்.

அதற்கவன் இது நீ கொடுக்க வேண்டிய தொகைக்கு வட்டியாயிற்று, அசல் தொகை எங்கே என்றான். பிறகு அரசன் தனது வாகனங்களையும் ஆபரணங்களையும் விற்றுக் கொடுத்தான், அப்பொழுதும் அவன் அதுவும் வட்டியாயிற்று அசல் தொகை எங்கே என்றான். தனது கட-



னைத் தீர்க்க வழிகாணாத அரிச்சந்திரன் தன் பத்தினியுடனும் மைந்தனுடனும் காசி நகரத்திற்குச் சென்று அங்கு தனது மனைவியை விலை கூறினான். அப்பொழுது கால கௌசிகன் என்னும் பிராம்மணன் அவன் கூறிய விலையைத் தான் கொடுப்பதாகச் சொன்னான். அரிச்சந்திரன் கால கௌசிகனிடம் தான் கூறின தொகையைப் பெற்றுக் கொண்டு அவனிடம் தன் பெண்ஜாதியை ஒப்புவித்தான். அப்பொழுதும் நக்ஷத்ரகன் கொடுத்த பொருள் போதாதென்று குறை கூறினான், அதற்கு அரிச்சந்திரன் அவ்வூர் சுடலைக்குத் தலைவனான வீரதாசனுக்குத்தான் அடிமையாகி பொருளை வாங்கி நக்ஷத்ரகனிடம் கொடுத்தனுப்பினான். பிறகு அரிச்சந்திரன் வீரதாசன் கட்டளைப்படி தான் சுடலையைக் காத்துக்கொண்டிருந்தான். கால கௌசிகனுக்கு அடிமைப்பட்ட சந்திரமதி அவனுக்கும் அவன் மனைவி காலகண்டிக்கும் அவர்களிட்ட இழிவான வேலைகளை யெல்லாம் சந்தோஷமாக செய்துக் கொண்டு தன் மைந்தனுடன் காலங்கழித்துக் கொண்டு வந்தான்.

இப்படி யிருக்கையில் ஓர் நாள் மாலை லோகிதாசன் அவ்வூர் பிராமண சிறுவர்களுடன்கூடி தர்ப்பைக் கொய்ய காட்டிற்குச் சென்றான் அங்கு அவனை பாம்பு கடித்ததால் விஷம் தலைக்கேறி மரண மடைந்தான் அவனுடன் சென்ற பிராம்மண சிறுவர்கள் அச்செய்தியைச் சந்திரமதியிடம் தெரிவித்தார்கள உடனே அவன் பிரலாபித்துக் கொண்டு தன் மகனை தகனம் செய்ய கால கௌசிகனை விடை கேட்டான். அதற்கவன் கடும் சினங்கொண்டு அவளை ஏசி பிறகுவீட்டு வேலைகளெல்லாம் முடித்த பிறகு இரவில் சென்று தகனம் செய்து விட்டு பொழுது விடியுமுன் வரவேண்டுமென்று உத்திரவிட்டான். அவ்வாறே

அவன் வீட்டு வேலைகளையெல்லாம் முடித்து விட்டு நடு ராத்திரியில் காட்டிற்குச் சென்றாள் அங்கு அழுதுக் கொண்டே அநேக நேரம் தேடி கடைசியாக தன் மைந்தன் பிரேதத்தைக் கண்டு பிடித்தாள். அதை தகனம் செய்வதற்காக சுடலையில் எறிந்துக் கொண்டிருந்த கட்டைகளை யெல்லாம் சேகரித்து புத்திரசோக மிகுதியால் அழுதுக் கொண்டே கொள்ளி வைக்கப் போனாள். அவளது அழு குரலைக் கேட்ட அரிச்சந்திரன் அவ்விடத்தை யடைந்து, எனது எஜமானன் கட்டளைப்படி கால்பணம் கொடுக்காமல் நடு ராத்திரியில் திருட்டுத்தனமாக பிணம் சுடவந்த கள்ளி என்று சொல்லிக் கொண்டே அப்பிரேதத்தைக் காலால் உதைத்தான். அப்போது சந்திரமதி ஐயா! நான் அரிச்சந்திர மகாராஜன் மனைவி, பிரேதமாயிருக்கும் இப் பாலகன் எங்கள் குழந்தை, அவர் விஸ்வாமித்திரருக்கு வாக்களித்தபடி கொடுக்க திரவிய மில்லாததால் எங்களை கால கௌசிக னென்னும் பிராமணனுக்கு அடிமையாக்கினார் என்றாள்.

பிரேதமாயிருக்கும் இப்பாலகன் தர்ப்பைக் கொய்ய கானகம் வந்தான். தர்ப்பை கொய்யும் பொழுது அரவம் தீண்டி மாண்டான். இப்பிரேதத்தைச் சுட என்னிடம் ஒரு காசு மில்லை. ஆகையால் இப்பிரேதத்தை தகனம் செய்ய தயவு செய்து தாங்கள் உத்திரவளிக்க வேண்டும என்றாள். அதற்கு அரிச்சந்திரன், ஓ! மாதே! உன் கழுத்திலிருக்கும் தாலியை யாகிலும் விற்றுக்கொடு என்றான். தன்மாங்கலியம் தன் கணவன் கண்ணுக் கல்லாமல் மற்றவர் கண்களுக்குப் புலப்படாததால் அவன் தன் கணவனே என்று நிச்சயித்துக்கொண்டாள், ஓ! பிராணபதி என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள்.



அரிச்சந்திரன் எவ்விதத்திலாகிலும் கால்பணத்தைக் கொடுத்துத் தன் பிணத்தைச் சுட வேண்டுமென்றான். அவள் அப்பிரேதத்தை தூக்கிக் கொண்டு பிராமணன் வீட்டுக்கு வந்துக் கொண்டிருக்கையில், காசிராஜன் குழந்தையைக் கொன்று அதன்மீதிருந்த ஆபரணங்களைக் களவாடிக் கொண்டு வந்த ஓர் கள்வன் சந்திரமதியிடம் நல்ல வசனங்கூறி அவளிடத்தில் அவ்வாபரணங்களைக்கொடுத்து விட்டுப் போய் விட்டான்

காசிராஜன் தன் குழந்தை இறந்ததைக் கேள்வியுற்று குழந்தையைக் கொன்ற பாதகனைக் கண்டு பிடிக்கும்படி தன் காவலர்க்கு கட்டளை யிட்டான். அவர்கள் தேடிக் கொண்டு வருகையில் சந்திரமதியினிடம் களவுபோன பொருள்கள் இருக்கண்டு அவளை அரசனிடங் கொண்டு போய் நிறுத்தினார்கள். அரசன் அப்பாதகியை சிரசாக்கினை செய்யும்படி வீரதாசனுக்குக் கட்டளை யிட்டான். அவன் அவளை அச்சந்திரனிடம் விட்டு அவளை சிரசாக்கினைச் செய்யும்படி உத்திரவிட்டான். அரிச்சந்திரன் சந்திரமதியை சிரசாக்கினைச்செய்ய வாளை ஓங்கினான் அது மலர் மாலையாக விழுந்தது மற்றும் ஓர் முறை வாளை ஓங்கினான். அப்போது விஸ்வாமித்திரர் தோன்றி, ஓ! அரிச்சந்திரா போதும் நிறுத்து பெண் பிள்ளையைக் கொல்வது பஞ்சமா பாதகமல்லவா? இப்போதாகிலும் என் வார்த்தையைக் கேள், ஏன திரு அழகிய பெண்களை உனக்கு மணம் செய்விக்கிறேன். உன்னாட்டை உனக்குக்கொடுத்து விடுகிறேன் என்றார், அரிச்சந்திரன் தன் எஜமான் கட்டளையை மீற முடியாது, என்று சொல்லி மறுபடியும் வாளை ஓங்கினான், அப்போது சிவபெருமான் பிரசன்னமாகி

லோகிதாசனை உயிர்பெறச்செய்து, அரிச்சந்திரா! உன் சத்தியத்திற்கும் உன் மனைவியின் கற்பிற்கும் மெச்சினேன் என்று சொல்லி மறைந்தார்.

---

# 45 - லோபாமுத்திரையின் சரித்திரம்.

---

விதர்ப்பதேசத் தரசனுக்கு லோபாமுத்திரை என்னொரு பெண்ணிருந்தாள், அவள் பூமகளே! பூலோகத்தில் ஜனித்ததுபோல் அவ்வளவு அழகாயிருந்தாள் அவளுக்கு சகல நற்குணங்களும் ஒருங்கே பொருந்தியிருந்தன. அவள் சகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாள், அவள் புத்த வயதை அடைந்த பிறகு தனது தோழிமார்களுடன் அந்தப்புரத்தில் சத் விஷயங்களை கேட்டுக் கொண்டு காலங்கழித்துக் கொண்டு வந்தாள், இப்படியிருக்கையில் ஓர் நாள் அகஸ்தியமா முனிவர் அரசன் சபைக்கு வந்தார், அவரைக்கண்ட அரசன் அவரை அன்புடன் அழைத்து ஓர் ஆசனத்திலிருக்கச் செய்து, ஓ! முனிவரே! அடியேனால் யாது காரியம் ஆகவேண்டுமென்று அதிக வணக்கமாக கேட்டான், அதற்கு அம்முனிவர் ஓர் விஷயத்தை நாடி உம்மிடம் வந்தேன் என்றார். அதைக்கேட்ட அரசன், முனிவரே! விஷயத்தைத் தெரிவியும் அப்படியே உமது கோரிக்கையை நிறைவேற்றுகின்றேன் என்றான் அதைக்கேட்ட அகஸ்திய முனிவர் அதிக சந்தோஷங்கொண்டு, அரசனே! ஓர்நாள் எனது பிதுர் தேவதைகள் என் முன் தோன்றி அப்பா! நீ பிரம்



மாச்சாரியா யிருப்பதால் நாங்கள் புண்ணியலோகம்போக முடியாமலிருக்கிறது. ஆகையால் நீ விவாகம் செய்துக் கொண்டால் நாங்கள் புண்ணிய லோகம்செல்ல ஏதுவாயிருக்கும் என்று சொல்லி மறைந்து போனார்கள். அவர்கள் சொல்படி நான் விவாகம் செய்துகொண்டு இல்லற தர்மம் நடத்த உத்தேசித்திருப்பதால் உன் மகளை விவாகம் செய்துக் கொள்ளும் நோக்கத்துடன் இங்குவந்தேன் ஆகையால் நீ வாக்களித்தபிரகாரம் லோபாமுத்திரையை எனக்கு விவாகம் செய்விக்க வேண்டும் என்றார்.

அதைக கேட்ட அரசன் அதிககோபங் கொண்டு எனது அருந்தவப் புதல்வியை ஓர் ஏழை கிழப் பிராமணனுக்காக விவாகம் செய்து கொடுப்பது என்று தனது மந்திரிகளிடம் சொன்னான் மந்திரிகள் அரசனை நோக்கி ஓ! அரசே! அவரது மகிமையை நீங்கள் அறியீர்கள். அவர் மகா தபோநிதி அவர் கோபங்கொண்டால் உங்கள் குலத்துககே நாச முண்டாகும், என்றார்கள். இவ்வரலாற்றை எல்லாங்கேட்ட லோபா முத்திரை தந்தையிடம் வந்து அவரை நமஸ்கரித்து, பிதாவே, நம்முடைய புண்ணிய வசத்தாலே அவரே நம்மை நாடி வந்திருககிறார், அவரைக் கண்டாலே மகா புண்ணிய புருஷர்போல் தோன்றுகிறது, மேலும் தாங்கள் தங்கள் வாக்கை நிறைவேற்றா விட்டால் தாங்கள் பாபத்துக குள்ளாவீர்கள். முனிவர் சினங்கொண்டு சபித்தாலோ நமது குலமே நாசமாய் போகுமென்றான். அரசன் அவளது விருப்பத்தின்படியே அவளை அகஸ்திய முனிவருககு விவாகம் செய்து வைத்தான், லோபாமுத்திரை தன் கணவனை கடவுள்போல் பாவித்து அவருககுத் தொண்டுகள் புரிந்து வந்தாள்.

ஓர் நாள் அகஸ்தியர் தன் மனைவியை நோக்கி, பெண்ணே! என் தாகந்தீர எனக்கு பசும்பால் கொடுக்க உன்னால் முடியுமா வென்றார். அதற்கவள் சுவாமி! தங்களுக்கு வேண்டுமளவு பசுவின்பாலை கொடுக்க என்னாலாகுமா! என்று சொல்லி ஒரு பாத்திரத்தில் பசுவின் பாலை விட்டு தன் கணவனது பாதங்களை மனதில் வைத்து கடவுளை தியானித்து அதை தன் புருஷன்கையில் கொடுத்தாள் அதை அவர் குடிக்கக் குடிக்க குறையாமல் நிறைந்துகொண்டே யிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்

இப்படி யிருக்கையில் ஓர் நாள் அகஸ்தியர் தான் வானப்பிரஸ்தம்போக வேண்டுமென்று தனது மனைவியிடம் தெரிவித்தார். அதைக்கேட்ட லோபா முத்திரை அதிக சந்தோஷங்கொண்டு தனது ஆபரணங்களை களைந்து விட்டு மரவுரி தரித்து அவருடன் சென்றாள் அம்முனிவர் அவளை அழைத்துக்கொண்டு தனது ஆசிரமத்துக்குவந்து சந்தோஷமாக காலங்கழித்துக் கொண்டிருந்தார் இவ்வாறு இருக்கையில் அவள் கருதரித்து ஓர் சற்புத்திரனைப் பெற்றெடுத்தாள், அதற்காக அவர்கள் முனிவர்களுக்கெல்லாம் ஓர் விருந்து நடத்தினார்கள், விருந்துண்ண முனிவர்களெல்லாம் அம்மாதின் உத்தம குணங்களுக்கு மெச்சி குழந்தையை ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

ஓர் நாள் விபுலனென்ற முனிவர் தனது பத்தினி விமலாங்கியுடன் அகஸ்தியர் ஆஸ்ரமத்திற்கு வந்தார்கள். அகஸ்தியரும லோபா முத்திரையும் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள். அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் விமலாங்கி, லோபா முத்திரையை நோக்கி, யாராவது இரவல் கேட்பார்களென்று நீ உனது ஆபரணங்களை களைந்து வைத்திருக்கிறாய், என்றாள் அதற்கு லோபா முத்திரை அப்படிக் கொன்றுமில்லையம்மா! உமக்கிஷ்டமான ஆபரணங்களைக்கேளும் தருகிறேன் என்றாள். விமலாங்கி உனது ஆபரணங்களெல்லாம் எனக்கு வேண்டுமென்று கேட்டாள் லோபா முத்திரை அவளை அழைத்துக்கொண்டு ஒரு மரத்தினருகில் வந்து, இதோ இந்த மரத்தில் என் ஆபரணங்கள் பூராவும் மாட்டி வைத்திருக்கிறேனென்றாள். விமலாங்கி லோபாமுத்திரையின் ஆபரணங்கள் மரத்திலிருப்பதைக் கண்டு அதிசயித்தாள் பிறகு சில நாள் லோபா முத்திரை இல்லறத்திலிருந்து பிறகு மோக்ஷமடைந்தாள்.



# 46. பிரபாவதி சரித்திரம்.

அநேக ஆண்டுகளுக்கு முன் பாடலீபுரத்தைச் சந்திரசேகரன் என்னும் அரசன் அரசாட்சி செலுத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு பிரபாவதி என்றொரு குமாரத்தியுண்டு. அவள் அழகில் சிறந்து விளங்கினாள் கல்வி கேள்விகளில் நல்ல தேர்ச்சிப் பெற்றிருந்தாள். அவள் மங்கைப் பருவமடைந்ததும் சந்திரசேகரன் தன் புதல்வியை நோக்கி, குழந்தாய் நீ எப்பேர்ப்பட்ட கணவனை மணக்க விரும்புகிறாய், என்றான். அதற்கவள் தந்தையே. எனக்கு விவாகமே வேண்டாம், நான் சத் விஷயத்தில் காலங்கழித்து மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடைய விரும்புகிறேன் என்றாள், அதைக்கேட்ட அரசன் இடியோசைக்கேட்ட நாகம் போல் கதிகலங்கினான், ஐயோ! நமக்கிருக்கும் ஏகபுத்தி

ரிகரு விவாகம் செய்து பார்க்க கொடுத்து வைக்க வில்லையே என்று மனங்கலங்கினன், அதே வியாகூலத்தால் வாட்டமுற்றிருந்தான்.

இவ்வாறு இருக்கையில் ஓர் நாள் நாதர் சந்திரசேகரன் சபையை யடைந்தார் அப்போது அவன் தனது சஞ்சலத்தை அவரிடம் தெரிவித்தான் அதைக் கேட்ட நாதர் பிரபாவதியின் அந்தப் புரத்திற்குச் சென்றார். பிரபாவதி அவரை நமஸ்கரித்து அவரை ஓர் ஆசனத்தில் இருக்கச்செய்தாள். நாதர் பிரபாவதியை நோக்கி, பெண்ணே எல்லா ஆஸ்ரமங்களைவிட இல்லறமே மேன்மை யுடையது, பெண்கள் தங்களது கணவன்மாரை தெய்வமாக பாவித்து அதன்படி நடந்து வந்தால் அவர்கள் மோக்ஷலோகத்தை யடைவார்கள். ஆகையால் நீயும் சீக்கிரத்தில் மணம் செய்துகொண்டு நற்கதியடைய பிரயத்தனப்படு என்றார். அதற்கு பிரபாவதி எவனொருவன் சகல சாஸ்திரங்களைக் கற்றவனாகவும் சதா தேச சஞ்சாரம்செய்துகொண்டிருக்கிறானோ! அவனையே மணம் புரிவேன் என்றாள் அப்பொழுது மகத தேசத்து ராஜகுமாரன் பாடலீபுரத்திற்கு வந்திருந்தான் அவன் சகல சாஸ்திரங்களையும் கற்றவன், தேச சஞ்சாரம் செய்வதில் பிரியமுள்ளவன், அவன் அவ்வூர் ஜனங்களால் பிரபாவதியின் சவிஸ்தாரத்தை தெரிந்துகொண்டு அரசனிடம் சென்று தனது எண்ணத்தை தெரிவித்தான். அவ்வரச குமாரன் பெயர் சித்திரகான் அரசன் தன்மகள் கோரியவாறு வரனிருப்பதைக் கண்டு சந்தோஷங் கொண்டு அவனுக்கு பிரபாவதியை மணம் செய்வித்தான், அவள் தன் கணவனை தனக்கு தெய்வமெனமதித்து அவனுக்கு தொண்டு புரிந்து வந்தாள்.



இவ்வாறு இருக்கையில் ஓர் நாள் சித்திரகரன் தனது தேசத்துக்குப் போக வேண்டுமென்று தனது பத்தினியிடம் தெரிவித்தான். பிறகு இருவரும் இரு குதிரைகளின் மீதேறி மகத தேசத்தை நோக்கி காட்டு மார்க்கமாக போய்க் கொண்டிருந்தார்கள். அஸ்தமனமான வுடன் இருட்டி விட்டபடியால் தாங்கள் இருவரும் இளைப்பாறிக் காட்டில் ஓர் மரத்தின்கீழ் சயனித்துக் கொண்டார்கள். நடு நிசியில் சித்திரகான் எழுந்து அவளைப் பரிக்ஷிக்கும் பொருட்டு மெல்லிய குரலில் மும்முறையழைத்தான். அவள் அயர்ந்து நித்திரைச் செய்துக் கொண்டிருந்ததால் அதற்கு பதிலுரைக்க வில்லை. அவன் அதை ஒரு குற்றமாக வெண்ணி அவளுக்குத் தெரியாமல் தனது குதிரை மீதேறி தனது தேசத்திற்குச் சென்றான் பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் விழித்துக்கொண்ட பிரபாவதி தன் கணவனைக்காணாது கானகமுழுதும் தேடியலைந்தாள் பிறகு, தனது புரவியின் மீதேர்ந்து மகதநாட்டை நோக்கி போய்க் கொண்டிருக்கையில் சில கள்வர்கள் அவளது ஆபரணங்களைக் களவாட அவளை யணுகினார்கள், அவள் தன் நாயகனைத் தியானித்துக் கொண்டே தனது மாங்கல்யத்தை அவர்கள் மீதெறிந்தாள், அதினின்றும் அக்னி உண்டாகி அவர்களை எரித்து விட்டு, மீண்டும் அவள் கழுத்தில்வந்து சேர்ந்தது, அவள் போய்க் கொண்டிருந்த மார்க்கத்தில் ஒரு முனிவரை சந்தித்து தனது வரலாற்றை அவரிடம் கூறினள். அவர் அவளுக்கு ஆசிகூறி தனது ஆஸ்ரமத்தில் வைத்து ரக்ஷித்துக்கொண்டிருந்தார்.

மகதநாட்டை யடைந்த சித்திரகான் தான் பிரபாவதியை விட்டுப் பிரிந்து வந்த செய்தியை தனது தாய் தந்தையர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அவன் மீது

சினங்கொண்டு அவனைக்கடிந்து பேசினார்கள், சித்திரை கரன் தான் செய்த தகாத காரியத்தை நினைத்து அதே ஏக்கத்தினால் பைத்தியக்காரனாக அலைந்து கொண்டிருந்தான். சில நாட்களுக்குப் பிறகு பிரபாவதி தான் மகத தேசம் செல்ல முனிவரை விடை கேட்டாள், அவர் அவளுக்கு மார்க்கத்தில் யாதொரு தீங்கும் நேராதிருக்க மந்திர உபதேசஞ்செய்து விடைக் கொடுத்து அனுப்பினார். பிறகு அவள் மகத தேசத்தை யடைந்து, மகதநாட்டை வேற்றரசன் அரசாள்வதையும் தன் நாயகன் பித்தம் பிடித்து திரிவதையும் அறிந்துக் கொண்டாள், உடனே அவள் பிரணவ மந்திரத்தை ஜபிக்க அதனால் அநேக யுத்தவீரர்கள் ஆயுதங்களுடன் தோன்றினார்கள். அதைக்கண்ட அரசன் எதிரி எவனோ தன்மீது படையெடுப்பதாக எண்ணி அவ்வூரை விட்டு ஓடிவிட்டான். அதன் பின்பு பிரபாவதி தன் மாமியைக்கண்டு தனது வரலாற்றைத் தெரிவித்தாள், அவள் பிரபாவதியின் உத்தம குணங்களுக்கு மெச்சி அதி சந்தோஷங் கொண்டாள் கடைசியாக அவள் பித்தங் கொண்டு திரிந்துக்கொண்டிருந்த தனது கணவனைக்கண்டு தனது கற்பின் மகிமையினால் அவனது பித்தத்தைத் தெளிவித்து சிலகாலம் அவனுடன் சந்தோஷமாக வாழ்ந்திருந்து கடைசியாக மோக்ஷ லோகத்தை யடைந்தாள்.

---

## 47 - பத்மாவதி சரித்திரம்.

—*:*—

ஜெகந்நாத க்ஷேத்திரத்தில் ஜெய தேவர் என்று ஒரு பிராமணோத்தமர் இருந்தார். அவர் சகலகலையும் கற்றவர், தெய்வபக்தியில் சிறந்தவர், அவருக்கு பத்மாவதி என்று



ஒருமனைவி யுண்டு பத்மாவதி தன் கணவனையே கடவுளாக பாவித்து அவருக்கு தொண்டு புரிந்து வந்தாள், அவர்களுக்குள்ள திரவியங்களை எல்லாம் அதிதிகளுக்கு அன்னமிடுவதிலேயே செலவழித்தார்கள் அவர்களிடமுள்ள பொருள்களெல்லாம் போன பின்பு ஜெயதேவர் பிக்ஷையெடுத்துக் கொண்டுவந்து தன் பத்தினியிடம் கொடுப்பார் பத்மாவதி அதை அறுசுவையுடன் சமைத்து தன் கணவனுக்கும் அதிதிகளுக்கும் அன்புடன் அமுதளிப்பாள், இப்படி இவர்கள் வாழ்நாட்களை நடத்திக்கொண்டு வருகையில் பத்மாவதியின் தந்தை தன் மகளைக்காண வந்தார், அவள் தன் தந்தைக்கு அன்னமிட்டு வெற்றிலை பாக்கு கொடுத்து அவரை வழிகூட்டி யனுப்ப வெளியில் சென்றாள். அது வரையில் நிஷ்டையிலிருந்த ஜெயதேவர் நிஷ்டைக் கலைந்து வெளியில் வந்தார். அங்கு ஒருவர்த்தகன் அவரைக் கண்டு அவரை அழைத்துக் கொண்டு தன் ஊருக்குப்போய் விட்டான். அவன் அவரை சிலநாள் தன்னுடன் வைத்திருந்து வேண்டிய திரவியங்களைகொடுத்து அவரை ஓர் ரதத்தின்மீதேற்றி அவரை அவர் ஊரில் பத்திரமாக விட்டு வரும்படி தன்னாட்களுக்கு கட்டளையிட்டு அனுப்பினான்.

அவர் காட்டு மார்க்கமாக வந்துக்கொண்டிருக்கையில் சில திருடர்கள்வந்து பொருள்களை எல்லாம் களவாடியது மன்றி அவர்களை துன்பப்படுத்தினார்கள், துணையாக வந்தவர்கள் எல்லாம் பயந்து ஓடி விட்டார்கள். ஜெயதேவர்கள் கள்ளர்கள் ரதத்தையும் எடுத்துக் கொள்ளட்டுமென்று ரதத்தை விட்டிறங்கி நடந்துபோக வாரம்பித்தார். அதைக்கண்ட திருடர்கள் அவரைப் பிடித்துக் கொண்டு வந்து அவரது கைகால்களை வெட்டி விட்டு

அவரை ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டு போய்விட்டார்கள் அவர் அதுவும் தனது விதியின் பயனென்று எண்ணி அக்கிணற்றுக்குள் பகவானைத் தோத்திரம் செய்துகொண்டிருந்தார், நிஷ்டையிலிருந்த தன் கணவரைக் காணாத பத்மாவதி பற்பல விதமாக புலம்பி ஊரெங்கும் தேடி அவரைக் காணாமையால் அதே ஏக்கத்துடனிருந்தாள், அவள் பிதா, அம்மா! வருந்தாதே அவர் எங்கேனும் மலைக்குகைகளில் தவம் செய்துக் கொண்டிருப்பார், இன்னும் சில நாளைக்குள் வந்து விடுவார் என்று தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்படி இருக்கையில் ஓர் நாள் கிரவுஞ்சராஜன் காட்டில் வேட்டையாடி விட்டு தாகம் தணித்துக் கொள்ளும் பொருட்டுஜெயதேவரிருந்த பாழுங்கிணற்றையடைந்தான் கிணற்றினுள் ஜெயதேவரிருப்பதைக் கண்ட கிரவுஞ்சராஜன் மனம் திடுக்கிட்டு தன் ஆட்களைவிட்டு அவரை வெளிப்படுத்தினான், பிறகு அரசன் அவர் அவ்வாறு அங்கு இருக்கவேண்டிய காரணமென்னவென்று அவரைக்கேட்டான். அவர் தன் விதியின் பயனை தான் அநுபவிப்பதாக பதிலுரைத்தார், அவர் ஓர் பக்தசிரோன்மணி எனத் தெரிந்ததும் அரசன் அவரை மிகவும் பணிவுடன் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அறுபட்ட அவரது அங்கங்களுக்கு சிகிச்சை செய்து அவரை மிகவும் பயபக்தியுடன் போற்றி வந்தான். ஓர் நாள் அரசன் ஜெயதேவரை நோக்கி, சுவாமி! முக்தியடையும் மார்க்கம் ஏது என்று கேட்டான் அதற்கு அவர் என்போல் இல்லறத்திலிருப்பதே முக்தியடையும் மார்க்கம் என்றார். அரசன் சுவாமி! தாங்கள் இல்லறவாசியா, ஆனால் தங்கள் பத்னி எங்கே என்று கேட்டான். அப்போது அவர் தன்வரலாற்றை எல்லாங் கூறினார்.



அதைக்கேட்ட அரசன் சந்தோஷங் கொண்டு ஆடையாபரணங்களைக் கொடுத்து தனது மந்திரிகளையும் சில தாதிகளையும் அனுப்பி பத்மாவதியை பயபக்தியுடன் பல்லக்கில் அழைத்து வரும்படிச் சொன்னான். அவர்கள் ஜெகந்நாத க்ஷேத்திரத்தை யடைந்து பத்மாவதியைக் கண்டு செய்தியைத் தெரிவித்தார்கள், அவள் அதைக் கேள்வியுற்றதும் அதிக ஆனந்தங்கொண்டு தன் நாயகன் பாத கமலங்களை மனதில் தியானித்துக்கொண்டு நடக்கத் தொடங்கினாள், அவர்கள் அவளைக் கட்டாயப் படுத்தி பல்லக்கில் அமரச்செய்து அரசன் முன் கொண்டு வந்தார்கள்.

அவள் ஜெயதேவரைக் கண்டதும், அவரை வலம் வந்து அவர் பாதங்களை நமஸ்கரித்துக் கொண்டாள் அவரது கை கால்கள் அறுபட்டிருப்பதைக் கண்டு மனந்திடுக்கிட்டு, தங்களுக்கு இப்பாதகத்தைப் புரிந்த பாவி நரகத்திற்கு செல்ல மாட்டானா! என்று கதறினாள். ஜெயதேவர் அவள் அவ்வாறு சொல்ல வொட்டாமல் தடுத்து என் கர்மத்தை நான் அநுபவித்தே தீரவேண்டும். அதற்காக ஒருவரையும் தூஷிக்காதே என்றார் கடவுள் கட்டளையின்றி ஒன்றும் நடவாது என்றார், ஓர் நாள் ஜெயதேவருக்கு தீங்கிழைத்த பாதகர்கள் பக்திமான்களைபோல் வேடந் தரித்துக்கொண்டு அரசனிடம் வந்தார்கள், கிரவுஞ்சராஜன் அவர்களை அன்புடன் வரவேற்று சில நாட்கள் வரையில் தன்னுடன் வைத்திருந்து பிறகு அவர்களை ஓர் ரதத்தின் மீதேற்றி அநேக திரவியங்களைக்கொடுத்து அவர்களை வழிவிட்டு வரும்படி தன் காவலரை அனுப்பினான், அவர்கள் ஓர்காட்டின் மார்க்கமாய் போய்க்கொண்டிருக்கும் போது அப்போலிசாதுக்கள் ஜெயதேவரைப்பற்றி தூஷ

னையாகப் பேசினார்கள் உடனே பூமி படீரென வெடித்து அக்கள்ளர்களும் அந்த திரவியமும் பாதாலத்தில் அமிழ்ந்துப் போனார்கள். அதைக்கண்ட காவலர்கள் அதிக பயங்கொண்டு ஓடோடியும் வந்து அரசனிடம் நடந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

அதைக் கேள்வியுற்ற ஜெயதேவர் அதிக வருத்தங்கொண்டு அரசனை அழைத்துக்கொண்டு அவர்கள் மாண்ட இடத்திற்குச் சென்று தன் பிராணனை விட எத்தனித்தார். அரசனும் அவருடன் தனது உயிரை மாய்த்துக் கொள்ள நிச்சயித்தான். அப்போது சிவபிரான் பார்வதி சமேதராக வந்து கள்ளர்களை எழுப்பி ஜெயதேவரையும் அரசனையும் வாழ்த்தி மறைந்தருளினார், பிறகு ஜெயதேவரும் அரசனும் அதிக சந்தோஷத்துடன் நாட்டை நோக்கி வந்துக் கொண்டிருந்தார்கள்.

இஃது இவ்வாறிருக்க அரண்மனையில் கிரௌஞ்சராசன் பத்னி, பத்மாவதியை அடைந்து, அவளைப்பணிந்து, அம்மணி! எனக்கு நன்மார்க்கத்தை போதிக்க வேண்டுமென்று வேண்டினாள். அதைக்கேட்ட பத்மாவதி அதிக சந்தோஷங் கொண்டு, அவளுக்கு ஆசிகூறி, அம்மா! உலகத்தில் பெண்களுக்கு பதியே தெய்வம், கணவனுக்குத் தொண்டு செய்தலே சிறந்த பூஜை, பதியின் சொல்லைக் கடவாமல் நடத்தலே பரகதியடையும் மார்க்கம். ஆகையால் பெண்களுக்கு பூஷணமாயுள்ள கற்பை அதிக ஜாக்கிரதையாக காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அம்மா! இன்னும் கேள், கணவனிறந்தான் என்று கேள்விப்பட்டதும் உயிர் விடுபவள் உத்தமஸ்திரி, கணவனிறந்த பிறகு உடன்கட்டி யேறுபவள் மத்திமஸ்திரி, கணவனிறந்தும் உயிருடனிருப்பவள் அதமஸ்திரி என்றாள். அதைக்கேட்ட பத்



மாவதி நகைத்து, அம்மா! கணவனிறந்தால் அவனுடன் உயிர் விடுவது யாவராலும் ஆகாத காரியம் என்று சொல்லிவிட்டு தன் அந்தப்புரத்தை அடைந்து பத்மாவதி கூறியவற்றை எல்லாம் தன் தோழிகளிடம் சொல்லி பரிகாசஞ் செய்துக் கொண்டிருந்தாள். வேந்தன் மனைவி பத்மாவதியின் கற்பை பரீக்ஷிக்க வெண்ணி, தனது தாதிகளை நோக்கி, நீங்கள் ஒருபக்ஷியைக் கொன்று அதன் உதிரத்தில் ஒருவஸ்திரத்தை நனைத்து அதை பத்மாவதியிடங் காட்டி காட்டில் ஜெயதேவரை புலி கொன்று விட்டதென்று கூறுங்கள், என்று சொன்னாள், தாதிகள் முதலில் அப்படி செய்ய சம்மதிக்க வில்லை யானாலும், அரசியின் கோபத்துக்கு அஞ்சி அப்படியே செய்ய தீர்மானித்தார்கள்.

பிறகு அரசி பத்மாவதியினிடம் சென்று, அம்மணி, காட்டிற்குச்சென்ற அரசன்மீதும் ஜெயதேவர் மீதும் ஒரு புலி பாய்ந்ததாம், அதன் உண்மையையறிந்துவர சிலரை யனுப்பி இருக்கிறேன். அவர்கள் கதி என்ன வாயிற்றோ தெரியவில்லை என்று சொன்னாள். அதைக் கேட்டதும் பத்மாவதி துக்க கடலில் ஆழ்ந்தாள். சிறிது நேரத்திற் கெல்லாம் சில தாதிகள் உதிரம் நனைந்த ஒருவஸ்திரத்தை பத்மாவதியிடம் காட்டி, அம்மா! காட்டில் ஜெயதேவரை புலி கொன்று விட்டது என்றார்கள். உடனே பதமாவதி தரையில் விழுந்து புரண்டு ஓ! வென்று பிரலாபித்து தன் நாயகன் பாத கமலங்களை மனதில் தியானித்து பிராணனை விட்டாள், அவளது பிராணன் ஜோதி மயமாக ஆகாயத்தை யடைந்தது. அதைக்கண்ட நகரவாசிகள் அதிசய முற்றார்கள். அரசி, பத்தினியைக் கொன்ற பாதகியாய் விட்டேன் என்று நிலத்தில் மூர்ச்சையாய் விழுந்தாள். தாதிகள் அவளைத் தேற்றி எழுப்பினார்கள். அரசி விஷ

ரூண்டு உயிரை மாய்த்துக் கொள்ள எத்தனித்தாள். அதைக்கண்ட தாதிகள் அம்மா! வேண்டாம், ஜெயதேவ சுவாமிகள் வந்ததும் அவரிடம் உண்மையை உரைத்து பணிவாக வேண்டிக் கொண்டால், பத்மாவதியை எழுப்ப அவராலாகும் என்றார்கள். பிறகு அரசி பத்மாவதியின் பிரேதத்தைப் பத்திரமாக ஓர் அரையில் அடக்கம் செய்து வைத்திருந்தாள்.

இப்படியிருக்கையில் கிரவுஞ்சராஜன் ஜெயதேவருடன் ரதத்தின்மீதமர்ந்து தன் நாட்டினுள் பிரவேசித்தான். நகரவாசிகளின் முகம் வாட்ட முற்றிருப்பதைக் கண்டான். தனது நகரமே குதூகலமின்றி பாழடைந்தது போல் தோன்றியது. அரசன் அதிவிரைவாக அரண்மனையையடைந்து விஷயத்தை விசாரித்தான். பத்மாவதி பிராணனை விட்டாளென்றும் அதற்குக் காரணம் தனது மனைவி என்றும் தெரிந்துக் கொண்டான். அரசன் ஐயோ! உத்தமியைக் கொன்ற பாதகம் என்னைச் சூழ்ந்துக் கொண்டதே என்று, ஓ! வென அலரி கீழே விழுந்து மூர்ச்சையானான். அதைக்கண்ட பத்மாவதி மனங்கலங்கி ஜெயதேவ சுவாமிகளின் பாதங்களில் விழுந்து நடந்தவற்றைக் கூறி தன்னைக் காப்பாற்றும்படி மன்றாடினாள். தானிறந்ததாக கேள்விப் பட்டதும், பத்மாவதி பிராணனை விட்டாளென்றும், அவள் பிராணன் ஜோதி மயமாய் போயிற்றென்றும் கேள்விப்பட்ட ஜெயதேவர் தனது பத்தினியின் பிரிவாற்றாமைக்காக அதிக துக்கப்பட்டார். மூர்ச்சைத் தெளிந்ததும் அரசன் வாளை கையிலேந்திக்கொண்டு முகத்தில் தீப் பொறிபறக்க தன்மனைவியின் தலைமயிரைப் பிடித்திழுத்து, அடி! பத்தினியைக் கொன்ற பஞ்சமாபாதகி, உன்னைத்



துண்டந் துண்டமாகவெட்டி விட்டு நானும் மடிகிறேன், என்று வாளை ஓங்கினான்.

அந்த பத்மாவதி ஜெயதேவரை இறுகப் பிடித்துக் கொண்டு, சுவாமி! அடியாள் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கலாகாதா? பத்மாவதியை எழுப்பி எங்களை ரக்ஷிக்கலாகாதா, என்று அழுதாள்? அப்போது ஜெயதேவர் அரசனை நோக்கி, வேந்தனே? அவசரப்பட வேண்டாம், அவள் விதிமுடிந்து மாண்டால் அதற்கு யார் என்செய்வது, எல்லாம் கடவுள் கட்டளையின்படி நடக்கும். ஆகலால் கோபத்தைவிட்டு பத்மாவதியை அடக்கம்செய்ய ஏற்பாடு செய்ய என்றார். அரசன் சுவாமி! நாங்கள் பாவிகள் நான் இப்பாதகியைத் துண்டந் துண்டமாக வெட்டி விட்டு நானும் மடிகிறேன், தயவு செய்து தாங்கள் எங்களை அடக்கம் செய்ய வேண்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டே தன் மனைவியை வெட்ட வாளை ஓங்கினான். அவள் ஜெயதேவ சுவாமிகளே! அடியாள் உமக்கபயம் என்று அலறினாள். அதைத் தடுக்கும் பொருட்டு ஜெயதேவர் அதிக பரபரப்புடன் எழுந்திருக்க முயன்றார் அப்போது ஜெயதேவருக்கு பழையபடி கை கால்கள் வந்துவிட்டது. அவர் விரைந்தோடி அரசன் கரங்களைப் பற்றிக் கொண்டு இதென்ன விபரீதமென்று கடவுளைத் தோத்திரம் செய்தார். அப்போது மகாவிஷ்ணு லக்ஷ்மி சமேதராய்ப் பிரசன்னமாய், ஜெயதேவரை நோக்கி, உனக்கு என்னவரம் வேண்டும் என்றார். ஜெயதேவர் சுவாமி! என்னையும் இவ்வரசனையும் ஆட்கொள்ள வேண்டுமென்று அவர் பாதங்களில் பணிந்தார் அப்போது பகவான் ஜெயதேவரை நோக்கி, ஓ பக்தா! பத்மாவதியை எழுப்ப உன்னாலாகாதா! நான் என்னும் அகங்காரம் கூடாதென்று

என்னை அழைத்தாய், இப்பொழுது பத்மாவதியை எழுப்பிவிடவா அல்லது அரசனுக்கு சிரஞ்சீவி பட்டங்கொடுக்கட்டுமா என்றார் அரசன் என் தாயை எழுப்பவதே சிலாக்கியமென்று தொழுதான், பகவான் பத்மாவதி! எழுந்திரு என்றார் பத்மாவதி நித்திரை நீங்கி எழுந்தவள் போல வந்து தன்நாயகனை நமஸ்கரித்துக் கொண்டாள். தன் கணவனுக்கு பழையபடி கைகால்க விருப்பதைக் கண்டு ஆனந்தங்கொண்டு பகவானைத் துதிசெய்தாள் பகவான் அம்மூவரையும் ஆசிர்வதித்து மறைந்தருளினர். பின்பு பத்மாவதி சிலகாலம் தன் கணவனுடன் வாழ்ந்திருந்து மோக்ஷலோகத்தை யடைந்தாள்.

---

# 48 - புஷ்பவேணி சரித்திரம்.

—*:*—

சோழ தேசத்திற்குப் பிரதான பட்டணமாகிய காஞ்சிபுரத்தை புஷ்பரதன் என்னும் அரசன் மனுநீதி தவறாமல் அரசாட்சிசெய்துக்கொண்டிருந்தான் அவ்வரசனுக்கு அநேக நாட்களாக குழந்தை யில்லாமலிருந்து, கடைசியாக அவனும் அவன் மனைவியும் செய்த தவப்பயனை ஓர் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை அதிக செல்வாக்காக வளர்த்து அதற்கு புஷ்பவேணி என்று நாமகரணமிட்டார்கள். அவள் அழகில் மிகுந்திருந்தாள், வேத சாஸ்திரங்களில் தேர்ச்சிப் பெற்றிருந்தாள் அவள் யௌவனப் பருவமடைந்ததும் சந்தோஷமாக அந்தப் புரத்தில் காலங்கழித்துக் கொண்டிருந்தாள். இவ்வாறு இருக்கையில் ஓர் நாள் ஓர் முனிவர் அரசன் சபையை யடைந்தார். அரசன் அவருக்குத் தக்க மரியாதைகள் செய்து அவரை



தனது புதல்வி இருக்கும் அந்தப்புரத்திற்கு அனுப்பினன், அவள் அவரை நமஸ்கரித்து அவருக்குப்பலவித உபசாரனைகள் செய்து, சுவாமி! அடியாளுக்கு பதிவிரதா தர்மத்தை உபதேசித்தருள வேண்டுமென்றாள். அவரும் அதற்கிணங்கி குழந்தாய், மண்ணுலகில் பெண்களுக்கு கணவனே கண் கண்ட தெய்வம், கணவனுக்குத் தொண்டு புரிவதால் ஆத்மஞானம் உண்டாகும், இல்லற தர்மத்தைச் சரிவர நடத்தினல் மோக்ஷம் எளிதில் சித்திக்கும் என்றார். புஷ்பரதன் மகளுக்கு விவாகம் செய்விக்க வேணடி பலதேசங்களின் ராஜகுமாரர்களின் உருவப்படங்களை வரவழைத்து தன் புதல்விபிடம் கொடுத்தான். அவள் அப்படங்களை எல்லாம் பார்த்து விட்டு கடைசியாக மாளவதேசத்து இளவரசன் படத்தைப் பார்த்ததும காதல் கொண்டாள். அதை யறிந்த அவள் தந்தை ஓர் சுபமுகூர்த்தத்தை நியமித்து மணவோலை எழுதி அதைத் தன் தூதரிடங்கொடுத்து மாளவதேசத்து மன்னனுக்கு அனுப்பினன் அம்மன்னன் அச்சுப செய்தியை தன் மைந்தன் சுப்பிரகாசனுக்குத் தெரிவித்தான் அதைக்கேட்ட சுப்பிரகாசன் தன் தந்தையை நோக்கி, பிதாவே! மும்மூர்த்திகளே தங்கள் மனைவியை விட்டுப் பிரிந்தால் தங்களுக்கு அவமானம் உண்டாகும் என்ற பயத்தினுல், பிரம்மா தன் மனைவியை வாக்கிலும், பரமசிவன் ஜடாபாரத்திலும், மகாவிஷ்ணு தனது மார்பிலும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அப்படியிருக்க இம்மண்ணுலகில் பதிவிரதையைக் காண்பதரிது, ஆகையால் எனக்கு விவாகம் வேண்டாம் என்று சொல்லி மந்திரி குமாரனுகிய நீதிமானை தன்னுடன் அழைத்துக் கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான். மாளவ மன்னன் நடந்த செய்தியை புஷ்பரதனுக்குத்தெரிவித்தான். அதிக விசனத்துடன் புஷ்பரதன் அதைத் தன்

குமாரத்திக்கு அறிவித்தான். உடனே ! அவன் தன் தாய் தந்தையர்களை வணங்கி ! தயவு செய்து தாங்கள் எனக்கு விடைக் கொடுத்தனுப்புங்கள் ? நான் சென்று என் நாயகனைத் தேடிக்கொண்டு வருகிறேன் என்றாள் அவர் என்ன தடுத்தபோதிலும் கேளாமல் கடைசியாக அவர்கள் உத்திரவைப் பெற்றுக்கொண்டு சில சேனைகளுடன் வடதிசையை நோக்கிச் சென்றாள்.

கானகம் சென்ற இளவரசனும் மந்திரி குமாரனும் அசலனென்னும் ஒரு முனிவரை யடுத்து, அவருக்குத் தொண்டுகள் புரிந்துக்கொண்டு அவரிடம் ஞானோபதேசம் பெற்றுக்கொண்டு வந்தார்கள். ஓர் நாள் அம்முனிவர் சுப்பிரகாசனை நோக்கி ? அப்பா ! நீ உன் நாட்டை நாடிச் செல் சீக்கிரத்தில் உனக்கு ஒரு பதிவிரதா சிரோன்மணி மனைவியாக வாய்ப்பாள், என்று ஆசிகூறி யனுப்பினார். அவன் தன் குருவின் கட்டளைப்படி தன் தோழனுடன் தன் தேசத்திற்குப் புறப்பட்டான். கானகத்தின் மார்க்கமாக வந்துக்கொண்டிருக்கும்போது இருட்டி விட்டபடியால் அவர்கள் அங்குள்ள கனிவர்க்கங்களைத் தின்று பசியாறி ஒரு ஆலமரத்தடியில் நித்திரைச் செய்தார்கள். நடுநிசியில் நாகமொன்று சீறிக்கொண்டு வருவதை மந்திரி குமாரன் கண்டு சுப்பிரகாசனை எழுப்பினான். அவர்கள் அதை வெட்டும் பொருட்டு தங்கள் வாளை யுருவினார்கள். அப்போது அந்நாகம் மின்னல் போய் பிரகாசித்தது, அதைக்கண்டதும் அவர்கள் மதிமயங்கி நின்று விட்டார்கள், சீறிக்கொண்டு வந்த நாகம் அரசகுமாரனைக் கடித்து விட்டு விஷத்தைக் கக்கி விட்டு மாயமாய் மறைந்தது. சர்ப்பம் கடித்ததும் அரசிளங்குமாரன் சவமாய் மண்மீது சாய்ந்தான், இறந்து விட்ட தனது தோழனைப் பார்த்துப் பார்த்து நீதிமான் அழுது பிரலாபித்துக் கொண்டிருந்



தான். அப்போது சுப்பிரகாசனைத் தேடிக்கொண்டு வரும் புஷ்பவேணி பலவிடங்களில் தேடியும் தன் நாயகனைக் காணாமையால் அக்காட்டு மார்க்கமாகவந்துக் கொண்டிருக்கும்போது அழுதுக்கொண்டிருந்த நீதிமானைச் சந்தித்து விஷயம் என்னவென்று வினவினாள், அவன் நடந்த விஷயங்களைத் தெரிவித்தான், உடனே புஷ்பவேணி அச்சவத்தின் மீது விழுந்து புரண்டு அழுதாள், நீதிமான் அவளைத் தேற்றி, அம்மா ! நீ இறந்துவிட்ட இந்த அரசகுமாரனுக்காக அழவேண்டிய காரணமென்ன ? உனக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டான, அவள் ஆதியோடந்தமாக எல்லா விஷயங்களையும் சொன்னாள, அவன் அவளது கற்பின் திறத்தைக் கண்டு ஆச்சரியங் கொண்டான், பிறகு அவள் ஓர் அக்னி குண்டம் வளர்த்தி அதில் சவத்தைக் கிடத்தி தானும் அதில் விழப்போனாள், அப்போது மும்மூர்த்திகளும் பிரசன்னமாகி, அவளை அக்னியில் விழாமல் தடுத்து, அம்மா ! உன் பதிபக்தியைக்கண்டு மெச்சினோம், என்று சொல்லி சுப்பிரகாசனையும் எழுப்பி அவர்களுக்கு ஆசிகூறி மறைந்தார்கள் !

பிறகு அம்மூவரும் அசலமா முனிவரிடம் சென்று அவரை வணங்கி அவரது விடைப் பெற்றுக் கொண்டு சோழதேசத்துக்குப் புறப்பட்டார்கள புஷ்பரதன் அதிக ஆனந்தங்கொண்டு அவர்களை அன்புடன் வரவேற்று அச்செய்தியை மாளவ மன்னனுக்குத் தெரிவித்தான், அவன் அச்செய்தியைக் கேட்டதும் பரமானந்தமடைந்து தன் பரிவாரங்களுடன சோழதேசத்துக்கு வந்தான், ஓர் நல்ல சுபமுகூர்த்தத்தில் சுப்பிரகாசனுக்கும், புஷ்பவேணிக்கும் விவாகம் நடந்தது, புஷ்பவேணி பதிசொல் தவறாமல் இல்-

றத்தை நடத்திக் கொண்டிருந்து பிறகு பேரின்ப பதவியை யடைந்தாள்.

---

# 49 - சுந்தராதேவியின் சரித்திரம்.

கங்கா க்ஷேத்திரத்தில் கபீர் என்று ஒருபக்த ரிருந்தார், அவருக்கு அதிக ரூபலாவண்யமுள்ள சுந்தராதேவி என்று மனையுண்டு, அவர் வஸ்திரம் நெய்து விற்று ஜீவனம் செய்பவர், அவருக்கிருந்த சொல்ப திரவியத்தையும் அடியார்களுக்கு அன்ன மிடுவதில் செலவழித்தார், ஓர்நாள் வஸ்திரம விற்பனையாகதால் பட்டினியா யிருந்துக் கொண்டு பகவத்தியானம் செய்துக் கொண்டிருந்தார், அப்போது பகவான் கபீரைசோதிக்க வெண்ணங்கொண்டு ஆயிரம் ரிஷிகளை பக்தகோஷ்டிகளாக செய்துக் கொண்டு தான் அவர்களுக்குத் தலைவராகி சுந்தரா தேவியினிடம் வந்து, அம்மணி! நாங்கள் காலையிலிருந்து பசியால் வாடுகிறோம், ஆகையால் இப்போது அன்னமிட்டு எங்கள் பசியையாற்ற வேண்டும் என்றார், அவள் அவர்களை வணங்கி அவர்களை உட்காரவைத்துவிட்டு தன் கணவனிடம்சென்று செய்தியைத் தெரிவித்தாள், அதைக் கேட்டதும் கபீர் ஆனந்தங்கொண்டு விரைந்தோடிவந்து சாதுக்களுக்குத் தெண்டனிட்டு, தயவுசெய்து சற்றுப் பொறுத்திருங்கள், என்று சொல்லி விட்டு தன் மனைவியிடம் வந்து, பெண்ணே! நம்மிடமோ, ஓர் காசுமில்லை இப்பொழுது இந்தச் சாதுக்களின் பசிப்பிணியை எவ்வாறுற்றுவது என்றார், சுந்தராதேவி, சுவாமி! தங்களுக்குத் தெரியாமல் அடியாள் என்ன வைத்திருக்கிறேன் இவர்கள் பசியை அகற்ற ஒரே ஒருவழியுண்டு, அதென்னவென்றால் கடைத்தெருவிலுள்ள



ஒருவர்த்தகன் என்மீது இச்சைக் கொண்டிருக்கிறான், தாங்கள் என்னை அவனிடம் சேர்ப்பித்தால் அவன் இந்த சாதுக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக்கொடுப்பான், அதைக்கொண்டு இவர்கள பசியை நீக்கலாம் என்றாள், அதைக்கேட்ட கபீர் அதிக ஆனந்தங்கொண்டு, அடி! என் இடரைத் தீர்க்கவந்த இன்பவல்லி! நீ சொல்லியது போல் செய்தாலன்றி நாம் இச் சாதுக்களுக்கு அன்னமிட முடியாது, சீக்கிரம்வா நாம் அந்த வர்த்தகனைக் காணலா மென்றார், அவள் அவரை அழைத்துக்கொண்டு அவ்வர்த்தகனிருக்கு மிடம் அழைத்துச் சென்றாள்.

கபீர் அவ்வர்த்தகனை நோக்கி, ஐயா! தாங்கள் இதோ நிற்கும் என் மனைவியின்மீது இச்சைக்கொண் டிருப்பதாக தெரிகிறது, இப்போது என்னிடம் ஆயிரம் சாதுக்கள் வந்திருக்கிறார்கள், தாங்கள் தயவுசெய்து அவர்களுக்கு வேண்டிய உணவுப பொருள்களைக் கொடுத்தால் தங்களிஷ்டப்படி இவளைத் தாங்கள ஓர் இரவு வைத்திருக்கலாமென்றார், அதைக்கேட்ட வர்த்தகன் உள்ளம் பூரித்து அதற்கிசைந்து ஆயிரம் சாதுக்களுக்கு வேண்டிய உணவுப் பொருளகளை கபீரிடம் கொடுத்தான், கபீர் தன் மனைவியை நோக்கி, பெண்ணே! சாதுக்களுக்கு உணவு அளித்து உதவிய இவ்வுத்தமர் இஷ்டம்போல் இன்றிரவு இவருடன் இருந்து வருவாய் என்று கட்டளையிட்டுச் சென்றார், கபீர் அதி விரைவாக வீட்டையடைந்து பசியுட னிருக்கும் ஆயிரம் சாதுக்களுக்கும் அமுதூட்டி அவர்கள் பசியைப் போக்கினார், வர்த்தகன் காமாந்தகாரகனாகிய பள்ளியறையை அலங்கரித்து தானும் அலங்கரித்துக்கொண்டு சுந்தராதேவியுடன் பள்ளியறைக்குச் சென்று கதவைத்தாளிட்டுக் கொண்டான், அவன் காமவிகாரம் கொண்டு, சுந்தராதேவியை நோக்கி, என் கண்ணே! ஏன் நிற்கின்றாய், சீக்கிரத்தில்

இப்பஞ்சணையின்மீ தமர்ந்து என் மோகவிடாய்த் தீர்ப்பாய் என்றான். அப்போது பகவான் அவ்வூர் கொத்தவால் வடிவுடன்வந்து பள்ளியறையின் கதவை எட்டி உதைத்து அடே திருடா, பரஸ்திரீகமனஞ் செய்யும் பாதகா, கதவைத்திறவென்றார், வர்த்தகன் நடு நடுங்கி சுந்தராதேவியை கட்டிலின்கீழ் ஒளித்துவைத்து கதவைத்திறந்து பார்த்தான். ஒருவருங் காணவில்லை. மறுபடியும் கதவை மூடி சுந்தராதேவியை நெருங்கினான், பகவான் முன்போலவே அதிக சப்தத்துடன் கதவைத் தட்டினார், அவன மறுபடியுங் கதவைத்திறந்து யாரையுங் காணாமையால் நாலா பக்கங்களிலும் பார்த்து விட்டு கதவைத் தாளிட்டுக் கொண்டு மோக விகாரங்கொண்டு சுந்தராதேவியை ஆலிங்கனம் செய்யப்போனான். அப்போது கொத்தவால் கோலத்துடன் வந்த பகவான் கதவைப்படிரெனத்திறந்துக் கொண்டு வர்த்தகன்மீது பாய்ந்து, அடே பாதகா! அறிவில்லா மூர்க்கா பரஸ்திரீயை இச்சிக்கும் துன்மார்க்கா! சாதுவின் தாரம் தாய்க்கு சமானமல்லவா! என்று சொல்லிக்கொண்டே அவனை நன்றாக புடைத்து அவனை மூர்ச்சையாக விழும்படிச்செய்து, சுந்தராதேவியை அழைத்துக் கொண்டுபோய் கபீர் வீட்டினுள் விட்டு காற்று மழை அடிக்கச் செய்து தான் மறைந்து போனார்.

அப்போது சாதுக்களுக்குப் பணிவிடைச் செய்துக் கொண்டிருந்த கபீர் தன் மனைவியைக் கண்டு, கோபங் கொண்டு, அடி கள்ளி! என்ன காரியம் செய்தாய் வர்த்தகனை ஏமாற்றி வந்து விட்டாயே, என்வாக்கை பொய் ஆக்கினையே என்றார் சுந்தரா தேவி நடந்த வரலாற்றைச் சொன்னாள். அவர் அதிக கோபங்கொண்டு தன்மனைவியை அழைத்துக்கொண்டு கொத்தவாலிடம் சென்று நான் சம்



மதித்து என் மனைவியை ஒருவனுக்கு கொடுக்க அதை நீ! தடுக்க உனக்கென்ன அதிகாரம் என்றார் கொத்தவால் அதிகம் பயந்து, சுவாமி நான் ஒருபாவமு மறியேன் என்றான் கபீர் அவனை அழைத்துக் கொண்டு வர்த்தகனிடம் சென்றார். கொத்தவாலைக் கண்டதும் வர்த்தகன் நடு நடுங்கினான், கபீர் அது கொத்தவால் செய்த காரியம் தான் என்று எண்ணி கோபங்கொண்டு அவன் மண்டையைப் பிளக்க தன் கையிலிருந்த தடியை ஓங்கினார், அப்போது மகாவிஷ்ணு பிரசன்னமாகி, ஓ! கபீர் தாசனே! வர்த்தகனை அடித்தவன் அவனல்ல, நானே ஆகையால் என்னை அடியுமென்று முதுகைக் காட்டினார், பகவானைக் கண்ட கபீர், அவர் பாதங்களில் பணிந்து, சுவாமி! அடியேனுக்காக இக்கோலங் கொண்டு வர்த்தகனை அடித்தீரோ! சாதுக்களுக்கு உணவளித்த வர்த்தகனை அடித்தது தர்மமோ! என்றார். அதற்கு பகவான் அவன் கற்பரசியான சுந்தரா தேவியை ஆலிங்கனம் செய்திருந்தால் சாம்பலாய் போயிருப்பான். நீ! ஆண் பிள்ளை அல்லவா! உன் மனைவியைப் பிறர்க்கு கொடுக்கலாகுமோ மானமில்லையா என்றார் கபீர், சுவாமி! நான் நீ என்ற பேதத்தை வென்று உமது அருளைப்பெற்றவர்களுக்கு ஈனம் மானம் ஏது என்றார். பிறகு பகவான் அவர்களுக்கு ஆசிகூறி மறைந்து போனார். வர்த்தகன் சுந்தராதேவியின் பாதங்களில் பணிந்து, அம்மணி! அடியேன் தெரியாமல்செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று மன்றாடினான். சுந்தராதேவி கபீரிடம் சென்று அவ்வர்த்தகனை ஆட்கொள்ளும்படி வேண்டிக் கொண்டான், அவர் அவன் பரம பக்தனாகும்படி ஆசீர்வதித்தார், பிறகு கபீர் தன் மனைவியுடன் வீட்டையடைந்தபோது பகவான் முனிவர்களுடன் பிரசன்னமாயிருப்பதைக் கண்டு, ஆனந்தங் கொண்டார், பகவான், ஓ!

பக்தர்களே! உங்களது இல்லற தர்மத்தை சோதிக்க இக்கோலங் கொண்டு வந்தேன் என்று சொல்லி மாயமாய் மறைந்தார். பிறகு சுந்தர தேவி தன் கணவனது திருவடிகளைத் துதிசெய்துக் கொண்டிருந்து கடைசியாக மோக்ஷ மடைந்தாள்.

---

# 50 - மீராபாயின் சரித்திரம்.

—*—

அநேக ஆண்டுகளுக்கு முன் உதயபுரமென்னும் பட்டணத்தை ராவணு! என்னும் அரசன் அரசாட்சி செலுத்திக் கொண்டிருந்தான், அவ்வரசனுக்கு சியாமளாதேவி என்று ஒரு உத்தம பத்தினி வாய்த்தாள். அவள் பதிபக்தியில் சிறந்தவள். ஏழைகளிடத்தில் இரக்க முள்ளவள் அதிதிகளை ஆதரிப்பதில் ஆனந்த முடையவள் கடவுளருளால் அவளுக்கு ஓர்பெண் குழந்தைப் பிறந்தது. தாய் தந்தையர்கள் அதிக சந்தோஷங்கொண்டு பலவித தான தர்மங்கள் செய்து அக்குழந்தைக்கு மீராபாய் என்று நாமகரண மிட்டார்கள், அக்குழந்தை வயதில் வளர்ந்ததைப்போல் அழகிலும் வளர்ந்துக்கொண்டே வந்தது, சகல சாஸ்திரங்களையும் கற்று தேர்ச்சியடைந்திருந்தது அக்குழந்தை தன் தந்தை ஆராதித்து வந்த கிருஷ்ண விக்ரகத்தை தினந்தோறும் தரிசிப்பதும், பகவந்நாம சங்கீர்த்தனைகளைப் பாடுவதுமாக காலங்கழித்துக் கொண்டுவந்தது, இப்படி இருந்து வருகையில் மீராபாய் பருவமடைந்தாள், அப்பொழுது தான் கிருஷ்ணபகவானை யன்றி மற்றொருவரை



யும் மணம் புரிவதில்லை, என்று மனதில் உறுதி செய்துக் கொண்டாள், இதை யறியாத அரசி தனது குமாரத்திக்கு தக்கவரனைத்தேடி விவாகம் செய்து பார்க்கவேண்டுமென்று அரசனிடம் தெரிவித்தாள். அவன் அவள் அழகுக்கேற்ற மணாளனைத்தேடி சீக்கிரத்தில் மணம் செய்விக்கிறேன் என்றான், அதைக்கேட்ட மீராபாய் தந்தையை நோக்கி, பிதாவே! எனக்கு மணம் வேண்டாம். நான் பகவத்தியானம் செய்துக்கொண்டு காலங்கழிக்கப் போகிறேன் என்றாள், அவ்வார்த்தையைக்கேட்ட அவளது தாய் தந்தையர்கள், குழந்தாய்! நீயோ எங்களுக்கு ஏகபுத்திரி, ஆகையால் எங்கள் மனம்போல் மணஞ்செய்துக் கொண்டு எங்களுக்கு மகிழ்ச்சி யுண்டாக்கு வாயாக, என்றார்கள்.

அதற்கவள் தந்தையை நோக்கி, பிதாவே! முன்னமே நான் கிருஷ்ண பரமாத்மாவை மனத்தால் மணம் செய்துக் கொண்டேன் ஆகையால் எனக்கு வேறு விவாகம் வேண்டாம், மனதில் ஒருவரை கணவனாக ஏற்றுக் கொண்ட பிறகு மற்றொருவரை விவாகம் செய்துக் கொள்வது கற்புடையவர்கள் செய்கையல்ல, என்றாள், ராவணு! குழந்தாய நீ புகல்வது மிகவும் விந்தையா யிருக்கிறது. இக்கலியுகத்தில் பகவான் வந்து எவ்வாறு உன்னை மணம் செய்துக்கொள்ள முடியும், ஆகையால் நீ உன் வைராக்கியத்தை விட்டு எங்கள் சொல்படி ஓர் ராஜகுமாரனை மணம் புரிந்துக்கொண்டு சுகமாயிரு என்றான், தந்தையின் சொல்லைக்கேட்டதும் மீராபாய் கோபங்கொண்டு, பிதாவே! நான் முன்னமே கிருஷ்ண பகவானை மணம் செய்துக் கொண்டேன் என்று தெரிவிக்கிறபோது, தாங்கள் மீண்டும் என்னை ஒரு அரசகுமாரனை மணம்புரிந்துக் கொள்ளச் சொல்வது, பாபமல்லவா! அதனால் நான் கற்பழிந்தவளா

கேளு! என்றாள், அவளது தாய்தந்தையர்கள் எவ்வளவோ சொல்லியும் மீராபாய் ஒரே வைராக்கியமா யிருந்தாள்.

பிறகு மீராபாய் அரசன் ஆராதித்துவந்த கிருஷ்ண விக்கிரகத்தை தனது அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டு தினந்தோறும் அதற்கு திருமஞ்சனம் செய்து, அலங்கரித்து, நைவேத்தியம் செய்து பகவான் நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டுவந்தாள் சிற்சில சமயங்களில் ஆனந்தப் பெருக்கால் தன்னை மறந்து ஆடுவாள் அதைக் கண்ணுற்ற சில மூட சிகாமணிகள் அவளைப்பற்றி கேவலமாக பேசத் தொடங்கினார்கள்.

அது அரசன் செவிக்கெட்டியது, அதனால் அரசன் தனது குமாரத்தியின் செய்கை தனக்கு அவமானத்தை புண்டாக்குகிறதென எண்ணி, மீராபாய்க்கு விஷம் கலந்த அன்னம் கொடுக்கும்படி, தனது மனைவிக்கு கட்டளை இட்டான், அவள் தன்பதியின் சொல்படி விஷமிட்ட அன்னத்தை மீராபாயை உண்ணச் சொன்னாள், அவள் பகவானது பாதாரவிந்தங்களை வணங்கி அவரது திருநாமங்களை பலவிதமாக தோத்திரம் செய்து அன்னைகொடுத்த விஷங்கலந்த பிரசாதத்தை அவருக்கு அர்ப்பணம் செய்து அதை சந்தோஷத்துடன் புசித்தாள், அப்போது கிருஷ்ணபகவான் அவளது கற்புக்கும், அவளது பக்தி வைராக்கியத்திற்கும் மெச்சி, அவள் உட்கொண்ட விஷத்தின் சாரத்தைத் தான் ஏற்றுக் கொண்டு நீலநிறமாக விளங்கினார். சியாமளா தேவி தான் கண்ட அதிசயத்தை மன்னனுக்கு அறிவித்தாள். மன்னன் விரைந்தோடி வந்து, அவ்வதிசயத்தைக் கண்டு ஆனந்தங் கொண்டு, அடியேன் செய்த குற்றத்திற்காக மன்னிக்க



வேண்டும் என்று கடவுளைப் பணிந்து, குழந்தாய்! உன்னால் நாங்கள் கடவுளைத் தரிசிக்கும் பாக்கியம் ஏற்பட்டது என்றார்.

அதற்கு மீராபாய், தந்தையே! தங்களால் எனக்கு அவரது கிருபை ஏற்பட்டது என்றாள மன்னன், நீலநிறம்மாறி பழையபடி சொர்ண விக்கிரகமாக செய்ய வேண்டுமென்று தன் மகளை வேண்டினான். மீராபாய் தன் தந்தையின் வேண்டு கோள்படி ஆகவேண்டு மென்று கடவுளைப் பிரார்த்தித்தாள், பகவான் அவள் பக்திக்கும் கற்புக்கும் இரக்கங்கொண்டு நீலநிறத்தை மாற்றிக்கொண்டு பழைய சொர்ண விக்கிரகமாக மாறினார், அதைக்கண்ட எல்லோரும் மீராபாயின் கற்புக்கு அதிசயங் கொண்டார்கள். மீராபாய் இவ்வாறு பகவத்தியானம் செய்துக் கொண்டிருந்து கடைசியாக பரமபத பதவியை யடைந்தாள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்திரீ பக்த லீலாம்ருதம் என்னும்

50 - பதிவிரதைகள் சரித்திரம்

முற்றிற்று.

18 - சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# ஆரிய

# அனுபோகவயித்தியம்

## பிர்ம்மரகசியம்,

## 8-காண்டம் சேர்ந்தது விலை ரூபா-4.

இந்த 8-காண்டம் அனுபோக வைத்தியம் பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஆயுர் வேதங்களில், கைபாகம், செய்பாகம், தீக்ஷபாகத்துடன், பாட்டன் தலை முறையிலிருந்தும் எம்மிட வரையிலும் ஒவ்வொரு முறைகளும் கையாண்டு கைகண்டதுகளையெல்லாம் ஒன்றுதிரட்டி உலகோபகாரமாக அநேகர் வேண்டுகோளுக்கிரங்கி மிக்க சிரமத்துடன் வெளியிட்டதாகும். இதில் வைத்தியம் வைத்தியர் லக்ஷணம் வைத்தியர்கள் முக்கியமாக தெரிந்துக் கொள்ளவேண்டிய விஷயங்கள், ஔஷத பதார்த்த குணகுணம், மருந்து சுத்திகள், மருந்து முறிவுகள், 4448 - வியாதியும், வியாதிவரு மூலமும் பரிகாரமும் வேண்டிய பொழும் சூரணம், லேகியம், கிருதம், பஸ்பம் சுன்னம், கட்டு, எண்ணெய், தைலங்களும் இன்னும் மருந்துகளின் பாகமும் இடைக்குறிப்பும், புட நிட்டமும், அரைப்பு கணக்கும் அளவின் பிரமாணமும் செய்பாகமும், உணபாகமும், பத்திய விதியும் பரிகார நெறியும் இவைகள் யாவும் உயர்ந்த தாளில் அச்சிட்டு புல் கலிகோ பயிண்டு செய்து விக்கிரயஞ் செய்து வரப்படுகிறது. வைத்தியர்களுக்கும் மற்றவர்களும் இந்நூல் ஒன்று இருந்தால் வேறு வைத்திய புஸ்தகம் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. எல்லோரும் எளிதில் வாங்கி பலனடைய ஒவ்வொரு காண்டமாகவும், எட்டு காண்டம் ஒரே கட்டடமாகவும் விற்று வருகிறதாகும்.

---

எமது விலாசம்: [illegible] ...ல். டி. எம். அண்டு, ஸன்ஸ்,
வேப்பேரி [illegible], மதராஸ்.

220877